# இளைஞர் இலக்கணம்

## முதற் புத்தகம்

### (சிறப்புப் பகுதி)

முதல் மூன்று பாரங்களுக்கு உரியது

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கனார்,

M.A., L.T., M.O.L., Ph.D.

தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

1954

காபிரைட்]

[விலை அணா 14

முதற் பதிப்பு—1953
நான்காம் பதிப்பு—ஜூலை, 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 7-7-1954
lement to Part I-B, Page, 3]

Kaboer Printing Works, Madras (2615)

# முகவுரை

இளைஞர் இலக்கணம் என்னும் பெயருடன் வெளிவரும் இவ்விலக்கண நூல் முதல் மூன்று படிவங்களில் சிறப்புத் தமிழ் கற்கும் மாணவர்க்கென்று எழுதப் பெற்றது. அம்மாணவர்க்கே சிறப்பு முறையில் இலக்கணம் கற்பித்தல் வேண்டும் என்பது பாடத்திட்டத்தின் விதி. ஆதலின், அதற்கென்று அமைக்கப்பெற்ற பாட இயலை (Syllabus) உளங்கொண்டே இந்நூல் எழுதப்பெற்றது.

மாணவர்க்கு நன்கு தெரிந்த உதாரணங்களைக் கொண்டே, மிக எளிய நடையில், இலக்கணச் செய்திகள் இதன்கண் விளக்கப்பெற்றுள்ளன. பண்பட்ட ஆசிரியர்கள் பாராட்டிப் பேசும்—முதலில் உதாரணங்களைக் கொடுத்து அவற்றிலிருந்து விதிகளை அறியும்–முறையில் (Inductive method) இந்நூற் செய்திகள் தெளிவாக வரையப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதியிலும், சில அதிகாரங்களில் இடையிலும் இறுதியிலும் பயிற்சிகள் தரப் பெற்றுள்ளன. இவையன்றி, ஒவ்வொரு படிவத்தின் ஈற்றிலும் தேர்வுக்குரிய வினாக்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றை மாணவர் மதித்துச் செய்வாராயின், இலக்கண அறிவு நிரம்பப் பெறுவர்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை

## முதற் படிவம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | எழுத்துக்கள்— | |
| 1. | ஒலி எழுத்து, வரி எழுத்து ... | 1 |
| 2. | ஒலி எழுத்து வகைகள் ... | 2 |
| 3. | ஒலி வேறுபாடும், பொருள் வேறுபாடும் (1) ர, ற; (2) ந, ன, ண; (3) ல, ள, ழ. ... | 4 |
| II. | சொல் ஆக்கம்— | |
| 1. | வினைப்பகுதி ... | 9 |
| 2. | பெயர்ப்பகுதி ... | 10 |
| III. | தொடர் ஆக்கம்— | |
| 1. | தமிழ்த் தொடர்களில் பிறமொழிச் சொற்கள் ... | 11 |
| 2. | வழூஉச் சொற்களும் திருத்தமும் ... | 13 |
| IV. | சொல்— | |
| 1. | பெயர்ச் சொல் ... | 15 |
| 2. | வினைச்சொல் ... | 16 |
| 3. | எண்ணுப் பெயர்கள் ... | 18 |
| 4. | அடைமொழி ... | 19 |
| 5. | சொல்லின் பொருள் இடத்திற்கேற்ப மாறுதல் ... | 20 |
| 6. | ஒரு பொருள் பல சொற்கள் —பொருளில் நுட்பமாக வேறுபடுதல் ... | 21 |
| V. | புணர்ச்சி ... | 23 |
| VI. | நிறுத்தற் குறிகள் ... | 26 |
| | தேர்வுக்குரிய வினாக்கள் ... | 29 |

# இரண்டாம் படிவம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | எழுத்துக்கள்— | | |
| 1. | குறில், நெடில் | ... | 31 |
| 2. | மெய்யெழுத்துக்களின் வகை | ... | 32 |
| II. | சொல்லாக்கம்— | | |
| 1. | விகுதி | ... | 33 |
| 2. | இடைநிலை | ... | 35 |
| III. | சொல்— | | |
| 1. | செந்தமிழ்—கொடுந்தமிழ் | ... | 37 |
| 2, | வழு—வழுவமைதி | ... | 38 |
| 3. | சில வழுஉச் சொற்களும் திருத்தமும் | ... | 40 |
| 4. | குறிப்புப் பெயர்கள் | ... | 42 |
| 5. | வினைச்சொல் | ... | 43 |
| 6. | காலம் | ... | 44 |
| 7. | திணை | ... | 46 |
| 8. | பால் | ... | 46 |
| 9. | எண் | ... | 47 |
| 10. | இடம் | ... | 47 |
| 11. | வேற்றுமை | ... | 48 |
| 12. | சொல் இலக்கணம் கூறுதல் | ... | 50 |
| IV. | புணர்ச்சி | ... | 52 |
| V. | அணி— | | |
| 1. | உவமையணி | ... | 57 |
| 2. | உருவக அணி | ... | 58 |
| VI. | நிறுத்தற் குறிகள் | ... | 60 |
| | தேர்வுக்குரிய வினாக்கள் | ... | 61 |

# மூன்றும் படிவம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | எழுத்துக்கள்— | | |
| 1. | உயிர்ப்பு எழுத்துக்கள் | ... | 64 |
| 2. | ஒலிப்பு எழுத்துக்கள் | ... | 64 |
| 3. | மூக்குவழி ஒலிக்கும் எழுத்துக்கள் | ... | 64 |
| 4. | வாய்வழி ஒலிக்கும் எழுத்துக்கள் | ... | 64 |
| 5. | அலகு பிரித்து எழுதுதல் | ... | 65 |
| 6. | ஒரே எழுத்துச் சொல்லில் வரும் இடத்திற்கு ஏற்ப ஒலி மாறுதல் | ... | 65 |
| II. | சொல்— | | |
| 1. | சுட்டு—வினு | ... | 66 |
| 2. | இடுகுறிப் பெயர், காரணப் பெயர் | ... | 67 |
| 3. | வழூஉச் சொற்களும், திருத்தமும் | ... | 68 |
| 4. | ஒரு பொருள் தரும் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல் | ... | 69 |
| 5. | முக்கால இடைநிலைகள் | ... | 70 |
| 6. | இடைச்சொல் | ... | 71 |
| 7. | உரிச்சொல் | ... | 72 |
| 8. | சாரியைகள் | ... | 74 |
| 9. | ஆகுபெயர் | ... | 75 |
| 10. | வெளிப்படை, குறிப்பு | ... | 75 |
| 11. | இயல்பு வழக்கு | ... | 76 |
| 12. | தகுதி வழக்கு | ... | 77 |
| III. | தொடர் ஆக்கம்— | | |
| 1. | தொகைநிலை—தொகாநிலை | ... | 78 |
| 2. | தொகைநிலைத் தொடர்கள் | ... | 78 |
| 3. | தொகாநிலைத் தொடர்கள் | ... | 80 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| IV. | புணர்ச்சி— | ... | 81 |
| | குற்றியலுகரப் புணர்ச்சி | ... | 83 |
| V. | அணிகள்— | | |
| | 1. தற்குறிப்பேற்ற அணி | ... | 88 |
| | 2. இயல்பு நவிற்சி அணி | ... | 88 |
| | 3. உயர்வு நவிற்சி அணி | ... | 89 |
| | 4. முரண் தொடை அணி | ... | 89 |
| VI. | நிறுத்தற் குறிகள்— | | |
| | 1. கோடு இடுதல் | ... | 89 |
| | 2. இடைப்பிற வைப்புக் குறிகள் | ... | 90 |
| | 3. பிறைக்குறிகள் | ... | 91 |
| | தேர்வுக்குரிய வினாக்கள் | ... | 93 |

# இளைஞர் இலக்கணம்

## முதற் படிவம்

## I. எழுத்துக்கள்

### 1. ஒலி எழுத்து, வரி எழுத்து

மழை பெய்யும்பொழுது ஓசை உண்டாகிறது. காற்று வீசும்பொழுதும் ஒலி உண்டாகிறது. பறவைகளும், விலங்குகளும் ஒலி செய்கின்றன. மக்கள் பேசும்பொழுதும் ஒலி உண்டாகிறது.

காற்றின் ஒலியில், மழையின் ஒலியில், பறவைகளும் விலங்குகளும் செய்யும் ஒலியில் பொருள் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் மக்கள் பேசும் ஒலியில் பொருள் இருப்பது நமக்குத் தெரிகிறது. அந்த ஒலியை நாம் எழுத முடிகிறது. அதனால் மக்கள் பேசுவது எழுத்து வடிவம் பெறத் தகுதி உடையதாகிறது. அது வெறும் ஒலியேயாயினும், எழுத்து வடிவம் பெற்றது. எனவே, அது **ஒலி எழுத்து** எனப்படும்.

இவ்வொலியெழுத்து ஏட்டில் எழுதப்படுமாயின் **வரி எழுத்து** என்று பெயர் பெறும். அஃதாவது, காதினால் கேட்கப்படும் எழுத்து ஒலி எழுத்து; கண்ணால் காணும்படி எழுதப்படுவது வரி எழுத்து.

## 2. ஒலி எழுத்து வகைகள்

1. **உயிரெழுத்து :** நமது உயிர், மெய்யின் (உடம்பின்) உதவியில்லாமல் தானே இயங்க வல்லது. அதுபோலவே வேறோர் எழுத்தின் உதவியில்லாமல் தாமே இயங்கவல்ல எழுத்துக்கள் **உயிர் எழுத்துக்கள்** எனப்படும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—உயிர் எழுத்துக்கள் 12.

2. **மெய்யெழுத்து :** நமது மெய் (உடல்) உயிரின் உதவியில்லாமல் தானே இயங்காது. அது போலவே மேலேசொல்லப்பட்ட உயிர் எழுத்துக்களின் உதவியில்லாமல் இயங்கமுடியாத எழுத்துக்கள் **மெய்யெழுத்துக்கள்** எனப்படும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—மெய்யெழுத்துக்கள் 18.

இவற்றை உச்சரித்துப் பாருங்கள். இவை முறையே 'இக்', 'இங்', 'இச்' என்றே உச்சரிக்கப் படுவதைக் காண்க.

3. **உயிர்மெய் எழுத்து :** க என்னும் எழுத்தில் க் என்னும் ஒலியும் அ என்னும் ஒலியும் சேர்ந்து இருக்கின்றன. அதாவது, க (க்+அ)—இது க் என்னும் மெய்யும் அ என்னும் உயிரும் கூடிப் பிறந்த எழுத்து. இவ்வாறு 12 உயிர்களும் பதினெட்டு மெய் களோடும் சேர, (18×12) 216 உயிர்மெய் எழுத்துக்கள் பிறக்கின்றன.

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ—12. இவ்வாறு உண்டாகும் உயிர்மெய் எழுத்துக்கள் 216.

**4. ஆய்த எழுத்து :** ஃ இவ்வாறு மூன்றுபுள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து. அது அஃது, இஃது, எஃது—என்றாற்போலச் சொல்லின் இடையில் வரும். இவற்றை நினைவில் வையுங்கள்.

[தமிழ் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை ?

| | | |
|---|---|---|
| (i) | உயிர் எழுத்துக்கள் | 12 |
| (ii) | மெய்யெழுத்துக்கள் | 18 |
| (iii) | உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |
| (iv) | ஆய்த எழுத்து | 1 |

ஆகத் தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247.]

### பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள உயிர், மெய், உயிர்மெய், ஆய்த எழுத்துக்களைக் கீழே காட்டப்பட்டுள்ள கட்டத்தில் எடுத்து எழுதுக :—

(1) *இஃது உன்னத மதுரை மாநகரம்.*

(2) *முருகன் கண்ணனுக்கு அண்ணனு ?*

(3) *நான் யார் என்பது உனக்குத் தெரியும்.*

| உயிர் எழுத்துக்கள் | மெய் எழுத்துக்கள் | உயிர்மெய் எழுத்துக்கள் | ஆய்த எழுத்துக்கள் |
|---|---|---|---|
| | | | |

## 3. ஒலி வேறுபாடும், பொருள் வேறுபாடும்

### (1) ர, ற



1. அரம், மரம்—இவற்றிலுள்ள ரகத்தை உச்சரியுங்கள். மேல் வாயை நாவின் நுனி தடவ, ர பிறக்கும்.



2. அறம், பறவை—இவற்றில் வந்துள்ள றகரத்தை உச்சரியுங்கள். மேல் வாயை நாவின் நுனி மிகப் பொருந்த, ற பிறக்கும்.

இவ்வாறு பிறப்பில் இவை வேறுபடுவதால் உச்சரிப்பிலும் வேறுபடுகின்றன. பலர் இதனை உணராமல் இரண்டையும் ஒன்றுபோலவே பிழைபட உச்சரிக்கின்றனர். அது தவறு. இவை உச்சரிப்பில் வேறுபடுதல் போலவே பொருளிலும் வேறுபடும். சில உதாரணங்களைக் கீழே கவனியுங்கள் :

| | ர | ற |
|---|---|---|
| 1. | அரம் - ஒரு கருவி | அறம் - தருமம் |
| 2. | அரை - பாதி | அறை - வீட்டின் பகுதி |
| 3. | இரை - உணவு | இறை - தலைமை, வரி |
| 4. | கரி - யானை | கறி - பதார்த்தம் |
| 5. | கரை - அணை | கறை - அழுக்கு |
| 6. | குரவர் - ஆசிரியர், பெரியார் | குறவர் - ஒரு சாதியார் |

| | ர | ற |
|---|---|---|
| 7. | கூரிய - கூர்மையான | கூறிய - சொன்ன |
| 8. | திரை - அலை | திறை - கப்பம் |
| 9. | பரவை - கடல் | பறவை - பட்சி |
| 10. | பிரை - மோர்த்துளி | பிறை - சந்திரன் |
| 11. | மரம் - விருட்சம் | மறம் - வீரம் |
| 12. | மாரி - மழை | மாறி - வேறுபட்டு |
| 13. | விரல் - (கை, கால்) விரல் | விறல் - வலிமை, திறமை |

### பயிற்சி

பிழைகளைத் திருத்தி எழுதுக :—

1. கடையில் அறம் விற்கப்படுகிறது.
2. நால்வகைப் படைகளுள் கறிப்படை ஒன்று.
3. இவன் ஒரு சிறந்த மரவன்.
4. இந்த வீட்டில் இது பெரிய அரை.
5. வானத்தில் பரவைகள் பறக்கின்றன.
6. இது கூறிய வாள்.
7. இவர் எங்கள் குறவர்.
8. என் விறல் வீங்கி இருக்கிறது.

## (2) ந, ன, ண

இம் மூன்றும் முன் சொன்னவாறே பிள்ளைகளால் தவறாக உச்சரிக்கப்படுகின்றன.



1. நகம், கந்தன்—இவற்றில் வந்துள்ள நகரத்தை உச்சரித்துப் பாருங்கள். மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்த, ந பிறக்கும் இது பந்து, சொந்தம் எனத் தகரத்திற்குப் பிறகு எழுதப்படுவதால் தந்நகரம் எனப்படும்.

இவை மூன்றும் இவ்வாறு உச்சரிப்பில் வேறுபடுதல் போலவே பொருளிலும் வேறுபடும். கீழ்வரும் உதாரணங்களை நன்கு உச்சரியுங்கள்; பொருள் வேறுபாட்டையும் நன்கு உணருங்கள்.

| ல | ள | ழ |
|---|---|---|
| 1. அலை—அலைதல் | அளை—பிசை | அழை—கூப்பிடு |
| 2. அலகு—பறவையின் மூக்கு | அளகு—பெட்டைக்கோழி | அழகு—வனப்பு |
| 3. கலை—ஆடை | களை—நீக்கு, களைப்பு | கழை—கரும்பு, மூங்கில் |
| 4. காலி—ஒன்றும் இல்லாதது | காளி—ஒரு பெண் தெய்வம். | காழி—ஓர் ஊர் (சீகாழி) |
| 5. கிலி—அச்சம். | கிளி—ஒரு வகைப் பறவை | கிழி—துண்டு |
| 6. தலை—உறுப்பு | தளை—கட்டு | தழை—செழி |
| 7. வலி—வலிமை, நோதல் | வளி—காற்று | வழி—பாதை |
| 8. விலை | விளை—பயிராக்கு | விழை—விரும்பு |

## பயிற்சி

பிழைகளைத் திருத்தி எழுதுக :—

1. மாலை வேலையில் கண்று பல்லத்தில் விலுந்தது.
2. வறதன் விலுந்து விலுந்து சிறித்தாண்.
3. பூடாலை விலை என்ன ?
4. செண்ணையில் நன்ள மலை பெய்தது.
5. வயளில் காலை ஏர் உளுகிறது.
6. அவண் வயளின் போட வேண்டுங் தலையை தழைமேல் கொண்டு போனான்.
7. கிழி அளகாண பரவை அன்னவா ?
8. வான் பலபல வென்று மின்னுகிறது; அவன் வளவள வென்று பேசினான்.

## II. சொல் ஆக்கம்

1. ஆ (பசு), கிளி, மரம்—இவ்வாறு ஓர் எழுத்தோ, இரண்டு முதலிய எழுத்துக்களோ சேர்ந்து ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் எனப்படும்.

2. (1) ஆ (பசு), கிளி, மரம்—என ஒன்றன் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல்.

(2) வந்தான், வந்த—என ஒன்றன் வினையைக் குறிப்பது வினைச் சொல்.

இவ்வாறு சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் முதலாகப் பலவகைப்படும்.

### 1. வினைப் பகுதி

போ—என்று நாம் ஏவினால் ஒருவன் போகிறான்.

வா—என்று நாம் ஏவினால் ஒருவன் வருகிறான்.

எனவே 'போகிறான்' என்னும் சொல்லில் உள்ள போ என்னும் முதற் சொல் பகுதி எனப்படும். இதனுடன் காலம் காட்டும் உறுப்பும் கருத்தாவை உணர்த்தும் உறுப்பும், வேறு சில உறுப்புக்களும் சேர்ந்தே போகிறான், போனான், போவான், வருகிறான், வந்தான், வருவான் என்று சொற்கள் ஆக்கப்படுகின்றன.

| | பகுதி | முக்கால வினைச்சொற்கள் |
|---|---|---|
| 1. | நட | நடந்தன, நடக்கின்றன, நடக்கும். |
| 2. | வா | வந்தான், வருகிறான், வருவான். |
| 3. | நில் | நின்றான், நிற்கிறான், நிற்பான். |

4. படி படித்தார், படிக்கிறார், படிப்பார்.
5. ஓடு ஓடினது, ஓடுகிறது, ஓடும்.
6. தேடு தேடினான், தேடுகிறான், தேடுவான்.
7. விளை விளைந்தது, விளைகின்றது, விளையும்.
8. வீழ் வீழ்ந்தாள், வீழ்கிறாள், வீழ்வாள்.

## 2. பெயர்ப் பகுதி

நட, உண், பார் முதலிய வினைப் பகுதிகள் போல, சில பெயர்ச் சொற்களிலும் பகுதிகள் உண்டு. கண் என்னும் பகுதியிலிருந்து கண்ணன் என்னும் பெயர்ச் சொல்லும், மன் என்னும் பகுதியிலிருந்து மன்னன் என்னும் பெயர்ச் சொல்லும் ஆக்கப் பட்டவை. இவ்வாறே பல பெயர்ப் பகுதிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க.

| | பகுதி | பெயர்ச்சொல் |
|---|---|---|
| 1. | மன் (நிலைபெறு) | மன்னன் |
| 2. | அரசு | அரசன் |
| 3. | பாண் | பாணன் |
| 4. | இல் (வீடு) | இல்லாள் |
| 5. | மனை (வீடு) | மனைவி |
| 6. | வலை | வலைஞன் |
| 7. | உழவு | உழவன் |
| 8. | மறம் | மறவன் |
| 9. | அறம் | அறவோன் |
| 10. | நள் | நண்பன் |

பயிற்சி

1. கீழ்வரும் வினைச் சொற்களிலுள்ள பகுதிகளைக் கூறுக.
நட்டார், படிப்பார், ஊற்றினாள், வளர்த்தான், மேய்ந்தது, ஆக்கினான், உதவினது, மேற்கொண்டார், பெற்றான், விற்றார், கற்றான்.
2. கீழ்வரும் பெயர்ச் சொற்களிலுள்ள பகுதிகளைக் கூறுக :—
கொலைஞன், கூனன், திருடன், வம்பி, பகைவன், அயலார், வலைச்சி, காவலன்.

# III. தொடர் ஆக்கம்

1. சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்வது சொற்றொடர் எனப்படும்.

2. கண்ணன் பாடம் படித்தான்—இவ்வாறு கருத்து முடிந்திருக்கும் சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும்.

3. கண்ணன் பாடம் படித்து, பாடம் படித்த கண்ணன்—இவ்வாறு கருத்து முடியாத சொற்றொடர் எச்சச் சொற்றொடர் எனப்படும்.

## 1. தமிழ்த் தொடர்களில் பிறமொழிச் சொற்கள்

நமது தமிழ் நாட்டில் பல நாட்டு மக்களும் பல காலமாகக் கலந்து பழகிய காரணத்தால் அவரவர் மொழிகளைச் சேர்ந்த சொற்கள் நமது தமிழ் மொழியில் கலந்து, நமது பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இடம் பெற்றுவிட்டன. சில சொற்கள் பேச்சு மொழியில் மட்டும் இடம் பெற்றுள்ளன.

1. (1) வாருங்கள் சார்—'சார்' என்பது ஆங்கிலச் சொல். (சார்—ஐயா)

(2) கண்டவுடன் சலாம் சொல்—'சலாம்' என்பது அரபு மொழி.

(3) நாம் பீச்சுக்குப் போகலாமா ?—'பீச்சு ? என்பது ஆங்கிலமொழி (பீச்சு—கடற்கரை)

இவை பேச்சளவில் கலந்து வரும் பிறமொழிச் சொற்கள். இவை மிருதியாக எழுதப்படுவதில்லை.

2. சம்ஸ்கிருதச் சொற்கள், போர்ச்சுகீசியச் சொற்கள், பாரசீகச் சொற்கள், இந்துஸ்தானிச் சொற்கள், அரபிச் சொற்கள் முதலியன தமிழில் இடம் பெற்று இருக்கின்றன. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து மனத்தில் இருத்துங்கள்.

(1) ரிஷபம், ரிஷி, மிருகம், விஜயம், லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஹநுமான் (ராஜன் முதலியன வடமொழிச் சொற்கள். ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ—இவை சம்ஸ்கிருத எழுத்துக்கள்.

(2) போர்ச்சுகீஸியர் தமிழ் நாட்டில் தங்கி வாணிகம் செய்த பொழுது தமிழிற் கலந்த போர்ச்சுகீஸியச் சொற்கள் சில. அவை : கிராம்பு, சன்னல், சாவி, அலமாரி, பாதிரி முதலியன.

(3) ஜமீன், சிபாரிசு, சிபாய், சுமார், பந்தோபஸ்து, மேஜை, ரஸ்தா முதலியன பாரசீகச் சொற்கள்.

(4) அஜமத்து, ஆசாமி, இலாகா, மாமூல், முனிசீப், வசூல் முதலியன அரபு மொழிச் சொற்கள்.

(5) அசல், அந்தஸ்து, அலுவா, அம்பாரி, ஆஜர், உஷார், ஜமுக்காளம், தபால், பஞ்சாயத்,

பங்களா, ருஜு, லட்டு முதலியன இந்துஸ்தானிச் சொற்கள்.

இவ்வாறு பல திசைகளிலிருந்தும் தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

## 2. வழூஉச் சொற்களும் திருத்தமும்

சாதாரண மக்கள் குளிர்ந்த நீரைப் 'பச்சைத் தண்ணி' என்றும், சூடாக்கப்பட்ட நீரை 'வெந்நித் தண்ணி' என்றும் சொல்வது வழக்கம். தண்மை-குளிர்ச்சி. தண்ணீர்=தண்மை+நீர்=குளிர்ந்த நீர். இவ்வாறே வெம்மை+நீர்=வெந்நீர். இவ்வாறு கூறுதலே முறை. இவற்றை மேலே சொன்னபடி பச்சைத் தண்ணி, வெந்நித்தண்ணி என்று கூறுதல் வழு (குற்றம்). பச்சைத்தண்ணி, வெந்நித்தண்ணி—வழூஉச் சொற்கள்.

இவ்வாறு வழூஉச் சொற்கள் பலவற்றைப் பொது மக்கள் பேசுகிறார்கள். அவை பிள்ளைகளிடமும் பரவுகின்றன. பிள்ளைகள் அவற்றைப் பேசியும், எழுதியும் தவறு செய்கிறார்கள். அத்தவறுகளை உணர்ந்து நீக்குதல் நல்லது. கீழேவரும் வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தங்களையும் படித்துக் கொள்க :

| வழூஉச்சொல் | திருத்தம் |
|---|---|
| அமக்களம் | அமர்க்களம் |
| ஆத்துக்கு | ஆற்றுக்கு |
| ஆத்துக்கு | அகத்துக்கு (வீட்டுக்கு) |
| இருக்குது | இருக்கிறது |
| ஒலக்கை | உலக்கை |

| வழூஉச்சொல் | திருத்தம் |
|---|---|
| கண்ணாலம் | கலியாணம் |
| சுவற்றில் | சுவரில் |
| நஞ்சை | நன்செய் |
| நேத்து | நேற்று |
| இண்ணைக்கி | இன்று |
| புஞ்சை | புன்செய் |

### பயிற்சி

1. கீழ்வரும் தொடர்களில் உள்ள வேற்று மொழிச் சொற்களைக் கீழ்வரும் கட்டங்களில் எடுத்து எழுதுக :—

(1) ஜமீன்தாரிடம் ரிஷபம் ஒன்றையும், அலமாரி ஒன்றையும், மேஜை ஒன்றையும், பங்களா ஒன்றையும் வாங்கினேன்.

(2) அந்த ஆசாமியிடம் உஷாராய் இரு ; ஜமுக்காளம் பத்திரம்.

(3) அலுவா சாப்பிட்டு அசலை மறந்து விடாதே.

(4) வரிவசூல் செய்யும் முனிசிப்புக்கும், உடன் செல்லும் சிபாயிக்கும், பாதிரிக்கும் சரஸ்வதிக்குப் படைத்த லட்டு கொடு.

| வட சொற்கள் | போர்ச்சுகீஸியச் சொற்கள் | பாரசீகச் சொற்கள் | அரபுச் சொற்கள் | இந்துஸ்தானிச் சொற்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

2. கீழ்வரும் வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :—

வரவு சிலவு, இஸ்கூக்கிலு போறான், வாளைப்பனம், பைத்து வரவு, எம்பளது, மருதையில் குருதை, கோர்வையாகப் பேசு.

# IV. சொல்

## 1. பெயர்ச்சொல்

1. முருகன், வள்ளி, யானை, மரம், கிளி— இவ்வாறு ஒவ்வொரு பொருளுக்கும் பெயராய் வருவது **பொருட் பெயர்** எனப்படும்.

2. கடல், மலை, ஆறு, வீடு, கடை—இவ்வாறு ஒவ்வோர் இடத்திற்கும் பெயராய் வருவது **இடப் பெயர்** எனப்படும்.

3. வருடம், ஆவணி, நாள், மூலம், பகல், மணி —இவ்வாறு ஒவ்வொரு காலத்திற்கும் பெயராய் வருவது **காலப் பெயர்** எனப்படும்.

4. கிளை, தலை, வால், விரல், மிலாறு—இவ்வாறு ஒவ்வொரு சினைக்கும் (உறுப்புக்கும்) பெயராய் வருவது **சினைப்பெயர்** எனப்படும்.

5. நன்மை, தீமை, வெண்மை, பசுமை, அமைதி—இவ்வாறு ஒவ்வொரு குணத்திற்கும் (பண்பிற்கும்) பெயராய் வருவது **குணப்பெயர்** அல்லது **பண்புப்பெயர்** எனப்படும்.

6. வருதல், வரவு, செல்லுதல், செலவு, நிற்றல் இவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் பெயராய் வருவது **தொழிற்பெயர்** எனப்படும்.

இவ்வாறு பெயர்ச்சொற்கள் (1) பொருட் பெயர், (2) இடப்பெயர், (3) காலப்பெயர், (4) சினைப்பெயர், (5) குணப்பெயர், (6) தொழிற்பெயர் எனப் பொதுவாக ஆறு வகைப்படும்.

### பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களைக் கீழ் உள்ள கட்டங்களில் எடுத்து எழுதுக :—

1. வண்ணான் அமாவாசை அன்று வெள்ளை கொண்டு வந்தான்.
2. மங்களம் வீட்டில் கையால் நூற்கிறாள்.
3. வற்றல் குழம்பு உடம்புக்கு நல்லது.
4. மரக்கிளையிலிருந்து பச்சைக்கிளி தனது சிவப்பு அலகால் பழத்தைத் தின்கிறது.
5. பௌர்ணமியில் பிறந்தவன் நேற்று வந்து பொங்கல் உண்டான்.
6. கண்ணன் பள்ளியில் வெள்ளையடித்துக் கால் வழுக்கி விழுந்தான்.

| வாக்கிய எண் | பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |

## 2. வினைச்சொல்

1. வந்தான், வந்து, வந்த—என்பவை வினைச் சொற்கள் என்பது முன்பே கூறப்பட்டது அன்றோ? இவற்றில் பொருள் முற்றி (முடிந்து) நிற்கும் வினைச் சொல் எது? வந்தான்—என்பது வினை முற்றி நிற்பது ஆதலால் வினைமுற்று எனப்படும். வந்து, வந்த என்பவை முற்றுப்பெறாத வினைச்சொற்கள்.

உ. (1) சேக்கிழார் பெரிய புராணம் பாடினூர்.
(2) ஆசிரியர் பாடம் கற்பிக்கிறூர்.
(3) தாயார் நாளை ஊரிலிருந்து வருவார்.

பாடினூர், கற்பிக்கிறூர், வருவார்—இவற்றுள் ஒவ்வொன்றும் எந்தக் கால நிகழ்ச்சியை உணர்த்துகிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

(1) பாடினூர்—என்பது செயல் நடந்துவிட்ட (இறந்த) காலத்தையும், (2) கற்பிக்கிறூர்—என்பது செயல் இப்பொழுது நடைபெறுகின்ற (நிகழ்) காலத்தையும், (3) வருவார்—என்பது செயல் நடைபெறவிருக்கும் (எதிர்) காலத்தையும் காட்டுகின்றன அல்லவா ? இவை மூன்றும் முறையே (1) இறந்தகால வினைமுற்று, (2) நிகழ்கால வினைமுற்று, (3) எதிர்கால வினைமுற்று எனப்படும்.

(1) பாடினூர்—இறந்தகால வினைமுற்று.
(2) கற்பிக்கிறூர்—நிகழ்கால வினைமுற்று.
(3) வருவார்—எதிர்கால வினைமுற்று.

### பயிற்சி

*கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களைக் கால முறைப்படி எடுத்துக் கீழ்வரும் கட்டங்களில் எழுதுக :—*

1. *கண்ணன் வந்தான் ; கணக்குப் பார்த்தான்.*
2. *மங்களம் கோலம் போடுகிறுள்.*
3. *கோகிலம் வீணை வாசித்தாள்.*
4. *ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கிறூர்கள்.*
5. *பிள்ளைகள் நேற்று ஓடினூர்கள்.*
6. *பூனையைக் கண்டால் எலிகள் ஓடும்.*
7. *திருவிழாவிற்கு எல்லோரும் வருவார்கள்.*
8. *திருடனைப் பிடிக்க நாய்கள் ஓடுகின்றன.*
9. *கண்ணன் வெண்ணெய் தின்கிறுன்.*

10. கமலம் பந்து விளையாடுவாள்.
11. வானவூர்தி வானத்தில் பறந்து செல்கிறது.
12. கரிகாலன் பேரரசனாக விளங்கினான்.

| வாக்கிய எண் | இறந்த கால வினைமுற்று | நிகழ்கால வினைமுற்று | எதிர் கால வினைமுற்று |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |

## 8. எண்ணுப் பெயர்கள்

1. (1) ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து.

(2) பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது, இருபது.

(3) பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு, ஆயிரம்—இவை எல்லாம் எண்ணுப் பெயர்கள்.

2. (1) ஒருவர், இருவர், மூவர், நால்வர், ஐவர், அறுவர், எழுவர், எண்மர், ஒன்பதின்மர், பதின்மர்.

(2) பதினொருவர், பன்னிருவர், பதின்மூவர், பதினால்வர், பதினைவர், பதினறுவர், பதினெழுவர், பதினெண்மர், பத்தொன்பதின்மர், இருபதின்மர்.

(3) பதின்மர், இருபதின்மர், முப்பதின்மர், நாற்பதின்மர், ஐம்பதின்மர், அறுபதின்மர், எழுபதின்மர், எண்பதின்மர், தொண்ணூற்றுவர், நூற்றுவர், ஆயிரவர்.

3. (1) ஒருபொருள், இருபொருள், முப்பொருள், நாற்பொருள், ஐம்பொருள், அறுபொருள், எழுபொருள், எண்பொருள், ஒன்பது பொருள், பத்துப் பொருள்.

(2) முதலாவது, இரண்டாவது, மூன்ருவது, நான்காவது, ஐந்தாவது, ஆருவது, ஏழாவது, எட்டாவது ஒன்பதாவது, பத்தாவது என வருதலும் உண்டு.

(3) முதலாம் மாணவன், இரண்டாம் மாணவி, மூன்ரும் ஆசிரியர், நான்காம் கட்டிடம்—என எண்ணுப் பெயர்கள் வேறு பெயர்களோடு சேரும் பொழுது இவ்வாறு மாறி வரும். இவை அனைத்தையும் நினைவில் வையுங்கள்.

## 4. அடைமொழி

**சுறுசுறுப்புள்ள** மாணவன் தன் பாடங்களை **ஒழுங்காகப்** படிப்பான். இந்த வாக்கியத்தில் மாணவன்—எழுவாய்; படிப்பான்—பயனிலை—**சுறுசுறுப்புள்ள** என்பது மாணவன் இயல்பினை விளக்க வந்துள்ள **அடைமொழியாகும்.** இது மாணவன் என்னும் பெயருக்கு அடையாக வந்திருப்பதால், **பெயர் அடைமொழி** எனப்படும்.

**ஒழுங்காக** என்பது படிப்பான் என்னும் வினைச் சொல்லுக்கு விளக்கமாக வந்திருத்தலால், **வினை அடைமொழி** எனப்படும்.

இவ்வாறு வாக்கியங்களில் வரும் பெயர் அடைமொழிகளையும், வினை அடைமொழிகளையும் கவனியுங்கள்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர் அடைமொழிகளையும், வினை அடைமொழிகளையும் எடுத்து எழுதுக. :—

1. ஒழுக்கமுள்ள மாணவன் பலரும் பாராட்டும்படி நடந்து கொள்வான்.
2. தீய பண்புடையவர் இழிந்த செயல்களைச் செய்வர்.
3. கவர்ச்சியுள்ள சித்திரம் கண்ணுக்குத் தெவிட்டாமல் விருந்தளிக்கும்.
4. மகிழ்ச்சியுள்ள முகம் மலர்ச்சியாக விளங்கும்.
5. தளர்ந்த நடை கொண்ட மனிதன் தள்ளாடி விழுந்தான்.
6. பெரியமனிதர்கள் எடுத்தகாரியத்தைச் செவ்வையாகச் செய்வார்கள்.

## 5. சொல்லின் பொருள் இடத்திற்கேற்ப மாறுதல்

1. மதுரை மிகப் பெரிய நகரம்.
2. தேவாரப் போட்டியில் மதுரை வென்றது.

(1) முதல் வாக்கியத்தில் மதுரை என்பது இடத்தின் பெயராய் நகரத்தைக் குறிக்கிறது.

(2) இரண்டாம் வாக்கியத்தில் உள்ள மதுரை என்பது தேவாரம் பாடினவரைக் குறிக்கிறது.

இவ்வாறு ஒரு சொல் இடத்திற்கு ஏற்பப் பொருள் வேறுபடும்.

கீழ்வரும் சில உதாரணங்களைக் கவனியுங்கள் :—

(1) அவர் தலை பெரியது.
தலைக்கு ஆறு அணா கொடு.

(2) வறியவன் பொன்னன் ஆனான்.
பொன்னன் பள்ளிக்கு வந்தானா ?

(3) குப்பன் ஒரு பக்கிரி. (பக்கிரி - ஏழை)
பக்கிரி பாடம் படித்தானா ?

(4) சிதம்பரம் பெரிய கோவிலையுடையது.
சிதம்பரம் எந்த ஊருக்குப் போனான் ?

(5) அண்ணாமலை கார்த்திகைக்குப் பெயர் போனது.
அண்ணாமலை அங்கு என்ன செய்கிறான் ?

(6) கோவுக்குத் தம்பி இளங்கோ.
(கோ - அரசன்)
சிலப்பதிகார ஆசிரியர் பெயர் இளங்கோ.

## 6. ஒரு பொருள் பல சொற்கள்
## பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

1. 'பார்த்தல்' என்னும் ஒரே பொருளை மேலோட்டமாகத் தரும் பல சொற்கள் கீழே தரப் படுகின்றன. அவை பொருளில் நுட்பமாக வேறு படுதலைக் காண்க.

(1) அவன் பெட்டியைப் பார்த்தான்—
சாதாரணமாகப் பார்த்தல்.

(2) அநுமன் சீதையைக் கண்டான்—
தேடிக் காணுதல்.

(3) அவன் என்னை நோக்கி வந்தான்—
குறியாகக் கொள்ளுதல்.

(4) அவன் என்னைக் கவனித்தான்—
ஊன்றிப் பார்த்தல்.

2. உண்மை, வாய்மை, மெய்மை என்னும் மூன்று சொற்களும் பொதுவாகப் பொய் பேசாமையைக் குறிக்கப் பயன்படுகின்றன. ஆனால் உண்மையில் அவை வேறு வேறு பொருளை உடையவை. (1) **உண்மை** என்பது (உள்+மை) உள்ளத்தைப் பற்றியது; (2) **வாய்மை** என்பது (வாய்+மை) பேச்சைப் பற்றியது; (3) **மெய்மை** என்பது (மெய்+மை) உடலை அதாவது செயலைப் பற்றியது. இம் மூன்றும் முறையே (1) உள்ளம் பொய்யாமையையும், (2) சொல் பொய்யாமையையும், (3) செயல் பொய்யாமையையும் குறிப்பன.

இவ்வாறு உங்கள் பாட நூல்களில் வரும் சொற்களையும் அவற்றின் பொருள்கள் நுட்பமாக வேறுபடுதலையும் கவனியுங்கள்.

### பயிற்சி

1. தடித்த சொற்களுக்குப் பொருள் கூறுக :—
   (1) **சென்னை** துறைமுகத்தையுடையது; அழகுப் போட்டியில் **சென்னை** வென்றது.
   (2) சுவாமியார் **தலையில்** ஜடை இருக்கிறது; கூலியாட்களில் **தலைக்கு** ஒரு ரூபாய் கொடு.
   (3) குப்பன் இரயிலில் சிக்கியதால் கால் எடுக்கப்பட்டு **மரக்கால்** வைக்கப்பட்டது; சோழர் காலத்தில் ஆடவல்லான் என்பது ஒரு **மரக்கால்** பெயர்.
   (4) சிவபெருமானை '**ஆத்திசூடி** அமர்ந்த தேவன்' என்பர்; ஔவையார் '**ஆத்திசூடி**' பாடியுள்ளார்.
   (5) பிரபாகரவர்த்தனனுக்கு ஆணும் பெண்ணுமாக **மக்கள்** மூவர் இருந்தனர்; பெருந்தேவி பின்னைபெற்ற அறையில் **மக்கள்** நால்வர் இருந்தனர்.

(6) கரிகாலன் பல நாடுகளை வென்ற வீரன்; வீரன் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சினான்?

2. நாகம் என்னும் சொல்—(1) பாம்பு, (2) யானை, (3) மலை, (4) புன்னைமரம், (5) குரங்கு என இடத்திற்கு ஏற்பப் பல பொருள்படும். இதனை மனத்தில் வைத்து, கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள நாகம் என்ற ஒவ்வொரு சொல்லும் என்ன பொருளில் வந்துள்ளது என்பதை எழுதுக.

(1) இந்த நாகம் வானளாவியது.
(2) இப்புற்றில் நாகம் வாழ்கிறது.
(3) இந் நாகம் நன்றாய் மலர்ந்திருக்கிறது.
(4) ஒரு துஷ்ட நாகம் குருவிக் கூட்டைக் கலைத்தது.
(5) நால்வகைப் படைகளில் நாகப் படை ஒன்று.

## V. புணர்ச்சி

1. மரம் + வளரும் = மரம் வளரும்
அவர் + வந்தார் = அவர் வந்தார்
மா + மரம் = மா மரம்

இவ்வாறு சொற்கள் ஒன்றோடொன்று சேருவது **புணர்ச்சி** எனப்படும். இவற்றில் முதல் சொல் **நிலைமொழி** எனப்படும்; வந்து சேரும் மொழி (இரண்டாம் சொல்) **வருமொழி** எனப்படும்.

மரம் + வளரும் = மரம் வளரும்.
↓ ↓ ↓
நிலைமொழி வருமொழி புணர்ச்சி

இவ்வாறு இரண்டு சொற்களும் எவ்வித மாறுதலும் இல்லாமல் புணர்வது **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

2. (1) அவரை + காய் = அவரைக்காய்...க்
புளி + பழம் = புளியம் பழம்...**அம்**
அந்த + காக்கை = அந்தக்காக்கை...க்

இவ்வாறு இரண்டு சொற்கள் புணருகையில் இடையில் எழுத்துக்கள் தோன்றுவது உண்டு.

(2) பல் + பொடி = பற்பொடி...ல்-ற் ஆனது.
கள் + குடம் = கட்குடம்...ள்-ட் ஆனது.
மண் + குடம் = மட்குடம்...ண்-ட் ஆனது.

இவ்வாறு நிலைமொழியின் கடைசி எழுத்து வருமொழியின் முதலெழுத்தை நோக்கி அதற்கு ஏற்பத் திரிதலும் உண்டு.

(3) மரம் + வேர் = மரவேர்...ம் கெட்டது
பெருமை + வள்ளல் = பெருவள்ளல்...மை கெட்டது
பெருமை + நன்மை = பெருநன்மை...மை கெட்டது

இவ்வாறு நிலைமொழியின் ஈற்றெழுத்துச் சில இடங்களில் கெடுதலும் உண்டு. இவை முதலிற் கூறிய இயல்பு புணர்ச்சிக்கு மாறாக விகாரப்பட்டு வருவதால் விகாரப் புணர்ச்சி எனப்படும்.

மேலே சொல்லப்பட்ட மூவகை விகாரப் புணர்ச்சிகளும் முறையே (1) தோன்றல் விகாரம், (2) திரிதல் விகாரம், (3) கெடுதல் விகாரம் எனப் பெயர் பெறும்.

3. (1) அவள் + இல்லை = அவளில்லை (ள் + இ = ளி)
நூல் + எங்கே = நூலெங்கே (ல் + எ = லெ)

இவ்வாறு தனிக்குறில் அல்லாத பிற எழுத்துக்களுக்குப் பின்வரும் மெய், வருமொழி முதலில் உள்ள உயிருடன் கூடும்.

(2) பால் + ஏடு = பாலேடு (ல் + ஏ = லே)
கால் + அழகு = காலழகு (ல் + அ = ல)

இங்கு நிலைமொழி தனி நெடிலும் மெய்யுமாக உள்ளது. ஆதலால் கடைசி மெய் வருமொழி முதலில் உள்ள உயிருடன் கூடுகிறது.

4. (1) அ + ஓடு = அவ்வோடு
இ + அணில் = இவ்வணில்
உ + அடுப்பு = உவ்வடுப்பு
எ + இடம் = எவ்விடம்

இவ்வாறு அ, இ, உ என்னும் சுட்டு எழுத்துக்களின் முன்னும், 'எ' என்னும் வினா எழுத்தின் முன்னும் உயிர் எழுத்து வந்தால், 'வ்' தோன்றி இரட்டிக்கும்.

(2) அ + கண்ணாடி = அக்கண்ணாடி
இ + படை = இப்படை
எ + தடை = எத்தடை
அ + ஙனம் = அங்ஙனம்

இவ்வாறு சுட்டு எழுத்துக்களுக்கு முன்னும், 'எ'கர வினாவின் முன்னும் மொழி முதலில் வரும் எழுத்து மிகும்.

5. முருகனை + கண்டேன் = முருகனைக் கண்டேன்
முருகனை + சந்தி = முருகனைச் சந்தி
முருகனை + தழுவு = முருகனைத் தழுவு
முருகனை + பார் = முருகனைப் பார்.

இவ்வாறு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ)க்கு முன்வரும் க, ச, த, ப மிகும்.

6. முருகனுக்கு + கொடு = முருகனுக்குக் கொடு
முருகனுக்கு + செலுத்து = முருகனுக்குச் செலுத்து
முருகனுக்கு + தா = முருகனுக்குத் தா
முருகனுக்கு + பங்கு = முருகனுக்குப் பங்கு

இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபு (கு) வ்வுக்கு முன்வரும் க, ச, த, ப மிகும்.

7. அந்த + காக்கை = அந்தக் காக்கை
அங்கு + போ = அங்குப் போ
எப்படி + செய்தான் = எப்படிச் செய்தான்

இவ்வாறு, அந்த, இந்த, எந்த
அங்கு, இங்கு, எங்கு
அப்படி, இப்படி, எப்படி
} இவற்றின்முன் வரும் க, ச, த, ப மிகும்.

### பயிற்சி

1. விடை கூறுக :—

(1) புணர்ச்சி என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

(2) விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? வகைக்கு ஓர் உதாரணம் தருக.

2. கீழ்வரும் சொற்களைப் புணர்த்திக் கூறுக :—

புளி + தோப்பு, மா + தோப்பு, பனை + தோப்பு, பனை + காய், மரம் + கிளை, அ + ஆடு, இ + வீடு, உ + ஆறு, எ + ஒடு, அ + கடை, வரதனை + காண்பேன், வள்ளியை + சந்தித்தேன், நண்பனை + தழுவினேன், அண்ணனை + பார்த்தேன், கமலத்துக்கு + கொடுப்பேன், மங்கைக்கு + தந்தேன், லலிதாவுக்கு + பங்குண்டு, அந்த + பெட்டி, இங்கு + கண்டேன், எப்படி + போனாய், பால் + ஏடு, நூல் + ஏணி.

# VI. நிறுத்தற் குறிகள்

நாம் ஒன்றை வாசிக்கும்பொழுது நமக்கும் கேட்பவருக்கும் பொருள் விளங்கவேண்டும் அல்லவா? அதற்காகச் சில இடங்களில் நிறுத்தி வாசிக்கவேண்டும். இந்த இடத்தில் இவ்வளவு நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும் என்பதை அறிவிக்கச் சில குறிகள் உண்டு. அவை நிறுத்தற் குறிகள் எனப்படும். நிறுத்தும் அளவு மாத்திரை எனப் பெயர் பெறும். இயல்பாகக் கண் இமைத்தல் அல்லது கைந்நொடித்தலுக்கு உண்டாகும் நேரமே மாத்திரை என்பது.

1. கண்ணன் பாடம் படித்தான். இந்த வாக்கியத்தின் கடைசியில் வைக்கப்பட்டுள்ள புள்ளிதான் முற்றுப்புள்ளி என்பது. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

2. கண்ணன் பாடம் படித்தான்; சோறு உண்டான்; பள்ளிக்குச் சென்றான்—இவ்வாக்கியத்தில் இரண்டு இடங்களில் இடப்பட்டுள்ள குறிதான் அரைப்புள்ளி என்பது. இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

ஒரு பெரிய வாக்கியத்தில் ஒரே எழுவாய் வந்து பல பயனிலைகள் வருமாயின், அப்பயனிலைகளை அடுத்து அரைப்புள்ளி இடப்படும்.

3. கண்ணன் பாடம் படித்து, சோறு உண்டு, பள்ளிக்குச் சென்றான்—இவ்வாறு நீண்ட வாக்கியத்தில் பொருள் விளக்கத்திற்காகப் பெரும்பாலும் வினையெச்சங்களை அடுத்து இடப்படும் குறியே கால் புள்ளி எனப்படும். இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

4. கண்ணன் பாடம் படித்தானா? பள்ளிக்குச் சென்றானா?—இங்ஙனம் வரும் கேள்வி வாக்கியங்களின் இறுதியில் இடப்படும் குறியே கேள்விக் குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

5. (1) ஐயோ! கண்ணன் இறந்துவிட்டான்!—வருத்தம்.

(2) ஆ! இரங்கூன் சென்றவர் திடீரென்று வந்துவிட்டாரே!—வியப்பு.

(3) ஐயோ! பாவம்! அக்கிழவன் பள்ளத்தில் வீழ்ந்துவிட்டான்!—கவலை.

(4) ஐயோ! அதோ! பாம்பு! பாம்பு!—அச்சம்.

இவ்வாறு வருத்தம், வியப்பு, கவலை, அச்சம் முதலிய உணர்ச்சிகளை உணர்த்தும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியம் எனப்படும். உணர்ச்சிச் சொற்களை அடுத்து உணர்ச்சிக் குறியை இடவேண்டும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

### பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் தக்க நிறுத்தற் குறிகளை இடுக :—

1. கந்தன் கடைக்குச் சென்று கால் ரூபாய் கொடுத்துக் காகிதம் வாங்கினான்
2. வரதன் வடக்கு நோக்கிச் சென்றான் ஆற்றைக் கடந்தான் தன் ஊரை அடைந்தான்
3. ஐயோ அடி பொறுக்க முடியவில்லையே
4. யார் உன்னை இப்படி அடித்தவர்
5. அடடா எப்படிப்பட்ட அடி
6. பாவம் அவன் முகத்தைப் பார்த்தால் அவன் திருடவில்லை என்பது தெரிகிறது
7. அப்பா இவர் யார் என்று கூறமாட்டீர்களா
8. அம்மா இவர்தான் உனது மாமா இரங்கூனுக்குப் போய் இருந்தவர் இன்றுதான் வந்தார்

## தேர்வுக்குரிய விஞக்கள்

1. ஒலியெழுத்து, வரியெழுத்து—வேறுபாடு யாது?

2 சில எழுத்துக்களுக்கு உயிர் எழுத்துக்கள் என்றும், வேறு சிலவற்றுக்கு மெய் எழுத்துக்கள் என்றும் பெயர் வரக் காரணம் என்ன ?

3. ர, ற—இவை தனித்தனியே எவ்வாறு பிறக்கும்? வகைக்கு நான்கு சொற்களைத் தந்து பொருள் வேறுபாட்டை உணர்த்துக.

4. ந, ன, ண—இவை முறையே எவ்வெவ்வாறு பிறக்கும்? வகைக்கு மூன்று உதாரணங்கள் தருக.

5. ல, ள, ழ—இவை முறையே எவ்வாறு பிறக்கும்? மூன்று உதாரணங்கள் தந்து பொருள் வேறுபாட்டை உணர்த்துக.

6. கீழ்வரும் சொற்களிலுள்ள பகுதிகளைக் கூறுக :—

கண்டாள், சென்ருர், செத்தான், வென்ருள், வந்தது, நிற்கின்ருர், உறங்கிஞன், நட்டார் (செடி நட்டார்), நட்டார் (சிநேகித்தார்), பெற்றேன், மனைவி, பகைவன்.

7. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்கள் இன்ன மொழிச் சொற்கள் என எடுத்து எழுதுக :—

அஞமத்துக் கணக்கில் தபால் செலவு செய்; முனிசீப் வருகிருர்; மாமூல் தொகையைக் கொடுத்துக் கணக்கைக் கட்டு; பஞ்சாயத் சபையில் தலைவர் ஆஜர் ஆனர்; அவன் திருடிஞன் என்பதற்கு ருஜு அகப்பட்டது; கிராம்பு மூட்டை, அலமாரி சாவி முதலியன அவனிடம் அகப்பட்டன; அவை பந்தோபஸ்

தாக வைக்கப்பட்டன; கடையில் இருந்த லக்ஷ்மி, சரஸ்வதி, ஹநுமார் படங்களும் காணப்படவில்லை.

8. பிழைகளைத் திருத்தி எழுதுக :—

மோர் சாப்பிடு, இது முத்தக் கோர்வை, வரவு சிலவு, பைத்து வரவு, சுடுதண்ணி.

9, கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிகளை எடுத்து எழுது :—

திறமையுள்ள பையன் பாடங்களைச் செவ்வையாகப் படிப்பான்; அடக்கமுள்ள பையன் அமைதியாக நடந்துகொள்வான்; குளிர்ந்த பார்வை உடையவர் இரக்கத்தோடு நடந்துகொள்வர்.

10. கீழ்வரும் தொடர்களைப் பிரித்துக் காட்டுக:—
மரக்கிளை, காலொடிந்தது, பனங்காய், மரக்கொம்பு, தமிழைப்படி, வீட்டிற்குப்போ, அக்காலம், இந்தப் பேச்சு, அந்தப்பையன், எங்குச்சென்றான்.

11. சேர்த்து எழுதுக :—நன்று + என்றான், அந்த + காலம், எ + பொருள், வீட்டுக்கு + தூண், அவனை + பிடி, நிலம் + அள, தாள் + இடு.

12. நிறுத்தற் குறிகள் என்பவை யாவை? ஒவ்வொன்றையும் உதாரணத்துடன் விளக்குக.

# இரண்டாம் படிவம்

## I. எழுத்துக்கள்

### 1. குறில், நெடில்

1. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—இவை பன்னிரண்டும் உயிரெழுத்துக்கள் என்பதைச் சென்ற வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? இவற்றில் ஒவ்வோர் எழுத்தையும் உச்சரித்துப் பாருங்கள். அங்ஙனம் பார்த்தால்,

(1) அ, இ, உ, எ, ஒ—இவை குறுகிய ஓசை உடையவை என்பது தெரிகிறது. இவை குறில் என்றும் பெயர் பெறும்.

(2) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவை நீண்ட ஓசை உடையவை என்பது தெரிகிறது. இவை நெடில் என்றும் பெயர் பெறும்.

2. க் என்னும் மெய் எழுத்தும் அ என்னும் உயிரெழுத்தும் சேர்ந்து க என்னும் உயிர்மெய் எழுத்து உண்டாகிறது; இங்ஙனம் 18 மெய்யெழுத்துக்கள் மேலும் 12 உயிர் எழுத்துக்களும் தனித் தனியே ஏறுவதால் (18×12) 216 உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகின்றன என்பதைச் சென்ற வகுப்பில் படித்தீர்கள் அல்லவா? இவற்றை உச்சரித்துப் பாருங்கள்.

(1) உயிர்க் குற்றெழுத்துக்கள் ஐந்தும் பதினெட்டு மெய்களோடும் சேர, க, கி, கு, கெ, கொ என (18×5) 90 உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் உண்டாகின்றன.

(2) உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் பதினெட்டு மெய்களோடும் தனித்தனிச் சேர, (18×7) 126 உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் உண்டாகின்றன.

## 2. மெய்யெழுத்துக்களின் வகை

1. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இவை பதினெட்டும் மெய் யெழுத்துக்கள் என்பதைச் சென்ற வகுப்பில் படித் தீர்கள் அல்லவா? இவற்றில் ஒவ்வோர் எழுத்தையும் உச்சரித்துப் பாருங்கள். அங்ஙனம் பார்த்தால்,

(1) க், ச், ட், த், ப், ற்—என்னும் ஆறும் வலிந்த ஓசை உடையனவாகத் தோன்றும். ஆதலால் இவ்வ வல்லினம் என்றும் வலி என்றும் பெயர் பெறும்.

(2) ங், ஞ், ண், ந், ம், ன்—என்னும் ஆறும் மெலிந்த ஓசை உடையனவாகத் தோன்றும். ஆதலால் இவை மெல்லினம் என்றும், மெலி என்றும் பெயர் பெறும்.

(3) ய், ர், ல், வ், ழ், ள்—என்னும் ஆறும் இடைத்தர ஓசை உடையன என்பது தோன்றும். ஆதலால் இவை இடையினம் என்றும், இடை என்றும் பெயர் பெறும்.

2. சென்ற பகுதியில் உயிர்மெய்க் குறில், உயிர் மெய் நெடில் என்று பிரித்தாற் போலவே, இம்மூவின மெய்களையும் உயிர்மெய் வல்லினம், உயிர்மெய் மெல்லினம், உயிர்மெய் இடையினம் என மூவகை யாகப் பிரிக்கலாம்.

(1) வல்லினமெய் ஆறுடன் பன்னிரண்டு உயிர்களும் சேர, உயிர்மெய் வல்லினம் 72 ஆகும்.

(2) மெல்லினமெய் ஆறுடன் பன்னிரண்டு உயிர்களும் சேர, உயிர்மெய் மெல்லினம் 72 ஆகும்.

(3) இடையினமெய் ஆறுடன் பன்னிரண்டு உயிர்களும் சேர, உயிர்மெய் இடையினம் 72 ஆகும்.

### பயிற்சி

1. விடை கூறுக :—
   (1) உயிர் எழுத்துக்களைக் குறில், நெடில் என்று பிரிப்பது ஏன் ?
   (2) வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மெய் யெழுத்துக்களை ஏன் பிரிக்க வேண்டும் ?

2. கீழ்வரும் சொற்களில் உள்ள குறில், நெடில்களைக் கூறுக :

கன்று பாலைக் குடித்தது ; செல்வம், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் உண்டாக்குதற்கு உரியது ; உறையூர் முது கண்ணன் சாத்தனார், மோசிகீரனார், பிசிராந்தையார், கணியன் பூங்குன்றனார் ; இது நீர் வேட்கையைத் தணிக்கும் சிறிய குளம் ; இவன் முடிசார்ந்த மன்னன்.

# II. சொல் ஆக்கம்

## 1. விகுதி

1. சிரித்தான்—இதில் சிரி என்பது பகுதி. சிரித்தலாகிய தொழிலைச் செய்தவர் யார்? இதற்கு விடை இச் சொல்லிலேயே இருப்பதைக் கவனியுங்கள். சிரித்தவன் ஓர் ஆண்மகன் என்பதைச் சிரித்தான் என்னும் சொல்லே உணர்த்துகிறது. அதாவது, சொல்லின் கடைசியிலுள்ள 'ஆன்' என்பது உணர்த்துகிறது. இது விகுதி எனப்படும்.

அன், ஆன்—ஆண்பால் வினைமுற்று விகுதிகள்.

2. சிரித்தாள்—மேற்சொன்னவாறே ஆராய்ந்தால், இங்கு 'ஆள்' என்பது விகுதியாகிறது. இது பெண்பால் வினைமுற்று விகுதி.

**அள், ஆள்**—பெண்பால் வினைமுற்று விகுதிகள்.

3. சிரித்தனர்—இதில் 'அர்' என்பது விகுதியாகிறது. இது பலர்பால் வினைமுற்று விகுதி.

**அர், ஆர்**—பலர்பால் வினைமுற்று விகுதிகள்.

4. சிரித்தது—இதில் 'து' என்பது விகுதி. இது ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

**து, று, டு**—ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்.

5. சிரித்தன—இதில் 'அ' என்பது விகுதி. இது பலவின்பால் வினைமுற்று விகுதி.

**அ, ஆ**—பலவின்பால் வினைமுற்று விகுதிகள்.

6. சிரித்தனை — ஐ
சிரித்தாய் — ஆய்
சிரித்தி — இ

இவற்றில் ஐ, ஆய், இ என்பன விகுதிகள். இவை **முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்.**

7. சிரித்தனிர் — இர்
சிரித்தீர் — ஈர்
சிரிமின் — மின்
சிரியுங்கள் — கள்

இவற்றில் இர், ஈர், மின், கள் என்பன விகுதிகள். இவை **முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.**

8. சிரித்தனென் — என்
சிரித்தேன் — ஏன்
சிரித்தனன் — அன்
சிரிப்பல் — அல்

இவற்றில் என், ஏன், அன், அல் என்பன விகுதிகள். இவை **தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்.**

| | | |
|---|---|---|
| 9. சிரித்தனெம் | — எம் | இவற்றில் எம், ஏம், அம், ஆம், ஓம் என்பன விகுதிகள். இவை தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகள். |
| சிரித்தேம் | — ஏம் | |
| சிரித்தனம் | — அம் | |
| சிரித்தாம் | — ஆம் | |
| சிரித்தோம் | — ஓம் | |

## 2. இடை நிலை

1. (1) செய்தான் = செய் + த் + ஆன்
   (2) செய்கிறான் = செய் + கிறு + ஆன்
   (3) செய்வான் = செய் + வ் + ஆன்

இம்மூன்று சொற்களும் வெவ்வேறு காலங்களை உணர்த்துகின்றன என்பதை நீங்களே உணரலாம். இங்ஙனம் தனித்தனிக் காலத்தை உணர்த்தும் உறுப்பு ஒவ்வொரு சொல்லிலும் எங்கே இருக்கிறது? மூன்றிலும் உள்ள 'செய்' என்னும் முதல் உறுப்புப் பகுதி என்பதும், கடைசி உறுப்பு விகுதி என்பதும் உங்களுக்குத் தெரியும். அவை தொழிலையும் கருத்தாவையும் உணர்த்துவன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவை போக எஞ்சியிருக்கும் ஒவ்வோர் உறுப்பே ஒவ்வோர் காலத்தை உணர்த்துகிறது.

அதாவது,

(1) த்—இறந்த (செயல் நடந்த) காலத்தையும்,

(2) கிறு—நிகழ் (செயல் நிகழ்கின்ற) காலத்தையும்,

(3) வ்—எதிர் (செயல் இனி நடைபெறும்) காலத்தையும் உணர்த்துகின்றன. இவை, இங்ஙனம் சொல்லின் இடையிலே நிற்பதால் இடைநிலை

என்றும், காலம் காட்டுவதால் காலம் காட்டும் இடை நிலை என்றும் பெயர் பெறும்.

2. (1) செய்தான் —செய் + த் + ஆன்
(2) உண்டான் —உண் + ட் + ஆன்
(3) கற்றான் —கல் + ற் + ஆன்
(4) விரும்பினான்—விரும்பு + இன் + ஆன்

இவை நான்கும் இறந்த காலத்தைக் குறிக்கும் வினைச்சொற்கள். ஆயினும், அக்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் வெவ்வேறாக இருத்தலைப் பாருங்கள். இவை அனைத்தும் இறந்தகால இடைநிலைகள்.

த், ட், ற், இன்—இறந்தகால இடைநிலைகள்.

3. (1) உண்கிறான் —உண் + கிறு + ஆன்
(2) உண்கின்றான் —உண் + கின்று + ஆன்
(3) உண்ணாநின்றான்—உண் + ஆநின்று + ஆன்

இவை மூன்றும் நிகழ்காலத்தை உணர்த்துகின்றன. ஆயினும், அக்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் வெவ்வேறாக இருத்தலைப் பாருங்கள். இவை அனைத்தும் நிகழ்கால இடைநிலைகள்.

கிறு, கின்று, ஆநின்று—நிகழ்கால இடைநிலைகள்.

4. (1) உண்பான்—உண் + ப் + ஆன்
(2) செய்வான்—செய் + வ் + ஆன்

இவை இரண்டும் எதிர்காலத்தை உணர்த்துகின்றன. ஆயினும், அக்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் வெவ்வேறாக இருத்தலைப் பாருங்கள். இவை எதிர்கால இடைநிலைகள்.

ப், வ்—எதிர்கால இடைநிலைகள்.

### பயிற்சி

1. கீழ்வரும் சொற்களில் உள்ள விகுதிகளைக் கூறி, அவை இன்ன விகுதிகள் எனக் கூறுக :—

படித்தான், நகைக்கிறாய், வருகின்றனர், ஓடிற்று, (அவை) நில்லா, வாழ்ந்தாய், நடக்கின்றீர், படிக்கிறேன், (யான்) வருவல், வருவேன், பாடினோம்.

2. மூன்று கால இடைநிலைகளை எடுத்து எழுதுக.

3. கீழ்வரும் சொற்களிலுள்ள இடைநிலைகளை மட்டும் எடுத்து எழுதுக :—

பாடுகிறாள், ஆடுவார், ஓடுகின்றன, போனது, போனான், ஓடினார், செய்தேன், கண்டனள், படிப்பார்.

4. கீழ்வரும் வினைச்சொற்களில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கீழ்க்கண்டவாறு கட்டமிட்டு எழுதுக :—

நகைத்தான், கண்டான், வென்றார், ஓடினான், சிரிக்கிறான், சிரிக்கின்றனர், ஓடாநின்றனர், சேர்ப்பான், செய்வான்.

| வினைச்சொற்கள் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| | | | |

# III. சொல்

## 1. செந்தமிழ்—கொடுந்தமிழ்

1. தமிழ் பேசப்படும் எல்லா மாவட்டங்களிலும் இருப்பவர் அறிந்து கொள்ளத்தகும் சொற்களைக் கொண்ட தமிழ் செந்தமிழ் எனப்படும். இவ்வாறு இல்லாமல், ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள மக்களுக்

குப் புரியும் சொல் வழக்குகளும் சில உண்டு. அவை வேறு மாவட்டத்தில் உள்ள மக்களுக்குத் தெரியா. அத்தகைய சொற்கள் கொடுந்தமிழ் எனப்படும்.

2. கொள்—இது ஒருவகைத் தானியம். இது செந்தமிழ்ச் சொல். மதுரை மாவட்டத்தினர் இதனைக் காணம் என்பர். இச் சொல் வேறு மாவட்டத்தினர் வழக்கில் இல்லை. இவ்வாறு வருவது கொடுந்தமிழ்ச் சொல்.

| | செந்தமிழ் | கொடுந்தமிழ் |
|---|---|---|
| 1. | தாய் | தள்ளை |
| 2. | தந்தை | அச்சன் |
| 3. | தோட்டம் | கிழார் |
| 4. | சிறுகுளம் | பாழி |
| 5. | வயல் | செய் |
| 6. | சிறுகுளம் | கேணி |
| 7. | தண்ணீர் | வெள்ளம் |
| 8. | தாய் | ஆய் |
| 9. | தோழன் | எலுவன் |
| 10. | அக்காள் | அப்தா |
| 11. | தோழி | இகுளை |
| 12. | கத்தரிக்காய் | வழுதுணங்காய் |

நீங்கள் விடுமுறைக் காலங்களில் வேறு மாவட்டங்களுக்குச் செல்லும்போது இத்தகைய கொடுந்தமிழ்ச் சொற்களைச் சேகரிப்பது நல்லது.

## ௨. வழு—வழுவமைதி

1. கண்ணன் வந்தான்—எனச் சொற்கள் ஒன்றையொன்று தொடரும்பொழுது, எழுவாய் ப்யனிலைகள் திணை பால் முதலியவற்றில் மாறுபடா

மல் தொடர்ந்து நிற்பது முறை. இது வழாநிலை எனப்படும். (வழாநிலை - தவறாத நிலை)

2. மேற்சொன்ன எழுவாய் பயனிலைகள் திணை பால் முதலியவற்றில் மாறி, மன்னன் எனக்குத் தாய் என வருவது வழுவாம்.

3. இவ்வாறு திணை பால் முதலியவற்றில் மாறி, எழுவாய் பயனிலைகள் வருவது வழுவாயினும், முன்னோர் பாக்களில் ஆட்சி பெற்றிருப்பின் ஏற்றுக் கொள்ளத் தக்கவை. ஆதலின் அவை வழு அமைதி எனப்படும்.

4. வழுக்கள் பல வகைப்படும். அவற்றைக் கீழே காண்க :—

(1) அவன் வந்தது—திணை வழு.

(2) அவன் வந்தாள்—பால் வழு.

(3) யான் வந்தான்—இட வழு.

(4) நாளை வந்தான்—கால வழு.

(5) கறக்கிற எருமை பாலோ? சினையோ? —வினா வழு.

(6) சூரியன் ஏன் கிழக்கில் உதிக்கிறான்? என்றால், ஆகாயம் நீலமாக இருக்கிறது என்பது விடை வழு.

(7) மாடு மேய்ப்பவனைப் பாகன் என்பது மரபு வழு.

5. (1) கண்ணனும் பசுக்களும் வந்தார்கள். —இதில் இரு திணையும் கலந்து சிறப்பினால் 'வந்தார்கள்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. இவ்வாறு வருவது திணை வழுவமைதி.

(2) தோழியும் தானும் வந்தாள்—'வந்தார்கள்'

என்று பலர்பாலில் கூருமல், 'வந்தாள்' எனப் பெண்பாலில் கூறுதல் பால் வழுவமைதி.

(3) கண்ணன் தாய் இதைச் செய்வேனே—(கண்ணன் தாய் ஆகிய) யான் என்னும் தன்மைப் பெயர் இருக்க வேண்டும் இடத்தில், தாய் என்னும் படர்க்கைப் பெயர் வந்திருத்தல் இட வழுவமைதி.

(4) உண்ணுகின்ற ஒருவன் வெளியிலிருப்பவன் கேட்கும்படி, 'வந்துவிட்டேன்' எனக் கூறுதல் கால வழுவமைதி.

(5) கறியும் சோறும் உண்டான்—சோறு உண்டான், கறி தின்ருன் என்று வருதலே மரபு. இம்முறை (மரபு) மாறி, உண்ணல் என்பதே இரண்டிற்கும் வந்தது மரபு வழுவமைதி.

6. (1) அறிஞர் எப்பொருளை எச்சொல்லால், எவ்வழியால் வழங்கினரோ, அப்படியே அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியால் சொல்லுதலே மரபு எனப்படும்.

(2) குதிரைக்குட்டி, யானைக்கன்று, யானைக் குட்டி, பசுக்கன்று, யானைப்பாகன், ஆட்டிடையன்—மரபு.

(3) குதிரைக் குஞ்சு, பசுக்குட்டி, ஆட்டுப் பாகன்—மரபு வழு. இவற்றை நன்கு நினைவில் வையுங்கள்.

## 8. சில வழூஉச் சொற்களும் திருத்தமும்

நீங்கள் சென்ற வகுப்பில் சில வழூஉச் சொற்களையும் அவற்றிற்குரிய திருத்தங்களையும் படித்தீர்கள் அல்லவா ? இங்கு மேலும் சிலவற்றை அறிக.

| வழூஉச் சொற்கள் | திருத்தம் |
|---|---|
| 1. | |
| ஆச்சு | ஆயிற்று |
| ஆம்படையான் | அகமுடையான் |
| இருக்குது | இருக்கிறது |
| எண்ணெ | எண்ணெய் |
| கண்ணாலம் | கலியாணம் |
| சிலவு | செலவு |
| தவக்களை | தவளை |
| பாவக்காய் | பாகற்காய் |
| பிருமணன் | பிராமணர் |
| புட்டு | பிட்டு |
| முளிக்கிறான் | விழிக்கிறான் |
| வாளக்கா | வாழைக்காய் |
| வாத்தியார் | உபாத்தியாயர் |
| விடிஞ்சது | விடிந்தது. |
| 2. | |
| (யானை) கத்துகிறது | (யானை) பிளிறுகிறது |
| (சிங்கம்) கத்துகிறது | (சிங்கம்) முழங்குகிறது |
| (மயில்) கூவுகிறது | (மயில்) அகவுகிறது |
| (காகம்) கத்துகிறது | (காகம்) கரைகிறது |
| (ஆந்தை) கத்துகிறது | (ஆந்தை) அலறுகிறது. |
| 3. | |
| (சோறு) தின்றான் | (சோறு) உண்டான் |
| (தண்ணீர்) சாப்பிட்டான் | (தண்ணீர்) பருகினான் |
| (வடை) உண்டான் | (வடை) தின்றான். |
| 4. | |
| தென்னஞ்செடி | தென்னம்பிள்ளை |
| வாழைக்கண்ணு | வாழைக்கன்று |
| மாஞ்செடி | மாங்கன்று. |

### பயிற்சி

1. செந்தமிழ், கொடுந்தமிழ்—இவற்றை உதாரணத்தால் விளக்குக.

2. கொடுந்தமிழ்ச் சொற்கள் ஆறினையும் அவற்றிற்குரிய செந்தமிழ்ச் சொற்களையும் எழுதிக் காட்டுக.

3. வழாநிலை, வழு, வழுவமைதி—இவற்றை உதாரணங்களால் விளக்குக.

4. வழுக்கள் எத்தனை வகைப்படும்? உதாரணங்கள் தருக.

5. இரண்டு கண்ணும் சிவந்தது, தம்பி வந்தது, யானையை ஓட்டுபவன் இடையன், கரிகாலன் வந்தாள், நீ வந்தான்—இவை இன்ன வழுக்கள் என்பதைக் கூறுக.

6. கீழ்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக:—

கடலை உண்டான், தலகாணி, காகம் கூவுகிறது, கோழி கத்துகிறது, சிங்கம் சீறுகிறது, வாழைச்செடி, வாழைப் பிள்ளை, பனஞ்செடி, நாயின் கன்று, யானைப்பிள்ளை, பசுவின் குட்டி, குதிரைக்கன்று, கோழிக்குட்டி, பூனைக்குஞ்சு.

## 4. குறிப்புப் பெயர்கள்

1. கண்ணன் வந்து தான் வைத்திருந்த பெட்டியை எடுத்தான்.

2. கண்ணன் வந்தான். அவன் உண்டபிறகு சென்றான்.

3. புனிதம் படித்தாள். பிறகு அவள் பள்ளிக்குச் சென்றாள்.

4. நண்பர் இருவரும் தாம் செல்லவேண்டும் இடத்திற்குச் சென்றனர்.

5. நண்பர் இருவரும் வந்தனர். சிறிது நேரம் கழித்து அவர்கள் நீராடினார்கள்.

6. நாய் ஓடிவந்தது. அது தன் வாலை ஆட்டியது.

7. நாய்கள் வந்தன. அவை ஓடி விளையாடின.

மேலே காட்டப்பட்டுள்ள (1) தான் என்பது கண்ணனுக்குப் பதிலாக நிற்கிறது; (2) அவன் என்பது கண்ணனுக்குப் பதிலாக நிற்கிறது; (3) அவள் என்பது புனிதத்திற்குப் பதிலாக நிற்கின்றது; (4) தாம் என்பது நண்பர்க்குப் பதிலாக நிற்கிறது; (5) அவர்கள் என்பது நண்பர்களையும் (6) அது என்பது நாயையும், (7) அவை என்பது நாய்களையும் குறித்து நிற்கும் பெயர்களாகும். **ஆதலால் இவை, குறிப்புப் பெயர்கள் எனப்படும்.**

## 5. வினைச்சொல்

1. **படித்தான், படித்து, படித்த**—என்பவை *வினைச்சொற்கள்* என்பது முன்பே கூறப்பட்டது அல்லவா? இவற்றில் பொருள் முற்றி (முடிந்து) நிற்கும் வினைச்சொல் எது? **படித்தான்**—என்பது வினை முற்றி நிற்பது ஆதலால் **வினைமுற்று** எனப்படும்.

**படித்து, படித்த**—என்பவை *முற்றுப்பெறாத வினைச்சொற்கள்.*

2. **படித்து** என்பது படித்து (போனான்) என்றாற்போல வேறொரு வினைச்சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இது **வினையெச்சம்** (எச்சம்-குறைவு) எனப்படும்.

3. **படித்த** என்பது படித்த (பையன், பெண்) என்றாற்போல ஒரு பெயரைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இது **பெயரெச்சம்** எனப்படும்.

4. (1) வந்தாள், வருகிறாள், வருவாள்—**வினை முற்று.**

(2) வந்து, படித்து, படிக்க—வினை எச்சங்கள்.

(3) வந்த, வருகின்ற, வரும் (பையன்) —பெயரெச்சங்கள்.

## 6. காலம்

சென்ற வகுப்பில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களையும் வினை முற்றுக்கள் காட்டும் என்பதையும், மூன்று காலங்களையும் உணர்த்தும் இடைநிலைகள் இன்னவை என்பதையும் படித்தீர்கள் அல்லவா? அவற்றை இங்கு நினைவிற் கொள்ளுங்கள்.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | நகைத்தான் | நகைக்கிறான் | நகைப்பான் |
| 2. | கற்றாள் | கற்கின்றாள் | கற்பாள் |
| 3. | வாழ்ந்தார் | வாழ்கிறார் | வாழ்வார் |
| 4. | நட்டான் | நடுகிறான் | நடுவான் |
| 5. | விரும்பினான் | விரும்புகிறான் | விரும்புவான் |
| 6. | ஓடினது | ஓடுகிறது | ஓடும் |
| 7. | பாய்ந்தன | பாய்கின்றன | பாயும் |
| 8. | கண்டான் | காண்கிறான் | காண்பான். |

### பயிற்சி

1. கீழ்வரும் உதாரணங்களில் வந்துள்ள குறிப்புப் பெயர்களை எடுத்துக் கூறுக :—

(1) ஊருக்குச் சென்ற கமலம் தான் வாங்கின பெட்டியை எடுத்துச் சென்றாள்.

(2) மங்களம் வந்தாள்; அவள் எல்லோருடனும் கலகல வென்று பேசினாள்.

(3) வந்தவர் மூவரும் தாம் செல்ல வேண்டும் இடத்துக்குச் சென்றனர்.

(4) என் மாமனர் வந்தார்; சிறிது நேரம் பேசினர். பிறகு அவர் நீராடினர்.
(5) புலி ஓடி வந்தது, அது மோப்பம் பிடித்துக்கொண்டே மரத்தைச் சுற்றியது.
(6) நாய்கள் வந்தன, ஆனல் அவை புலியைக் கண்டதும் ஓடிவிட்டன.

2. கீழ்வரும் தொடர்களிலுள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கீழ்க்கண்டவாறு கட்டமிட்டு எழுதுக:

(1) படித்த பையன் விளையாடி வந்தான்.
(2) பாடிய மங்களம் தாவிக் குதித்தாள்.
(3) கோபம் கொண்ட கண்ணகி நிலத்தைக் கையால் ஓங்கி அறைந்தாள்.
(4) திருடிய கள்வன் பதுங்கி மறைந்தான்.
(5) ஓடிய குதிரை கால் வழுக்கி வீழ்ந்தது.
(6) மலர்ந்த முகத்தாள் ஒதுங்கி நின்ருள்.

| வாக்கிய எண் | வினைமுற்று | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |

3. கீழ்வரும் ஒவ்வொரு வினைச் சொல்லுக்கும் உரிய காலத்தை எழுதுக; மற்ற இரு காலங்களுக்கு உரியவாறு அவ் வினைச் சொல்லை மாற்றி எழுதுக :—

கீழ்வருமாறு கட்டம் போட்டு எழுதுக.

நடக்கிறன், பாடினள், ஆடுவார், ஓடினது, நிற்கின்றன, நடுகின்ருர், உறங்கினர், கவர்ந்தான், இயற்றப்பட்டது, சென்றனர், புறப்படுவான், தொடங்கினன்.

| இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|
| | | |

## 7. திணை

(1) திணை - குலம்; வகை அல்லது ஒழுக்கம் என்றும் சொல்லலாம். உயர்ந்த ஒழுக்கமுடைய மக்கள், தேவர், நரகர்—உயர்திணை எனவும் (2) இவர் ஒழிந்த விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன முதலிய எல்லா உயிர் உடையவையும், கல் மண் முதலிய உயிர் இல்லாதவையும் அஃறிணை (அஃறிணை = அல் + திணை-உயர்வு அல்லாத குலம்) எனவும் இலக்கண ஆசிரியர் பிரித்துள்ளனர். எனவே,

(1) மக்கள், தேவர், நரகர்—உயர்திணை.

(2) மற்ற உயிர் உள்ளனவும், இல்லனவும்—அஃறிணை.

இவற்றை நினைவில் வையுங்கள்.

## 8. பால்

1. பால் - பிரிவு. மேலே சொன்ன உயர்திணையில்,

(1) நக்கீரன், இந்திரன், ஆதிசேடன்—ஆண் பால்,

• (2) கண்ணகி, ஊர்வசி, இந்திராணி—பெண் பால்,

(3) அரசர் அரசியர், ரிஷிகள்—பலர்பால்,

என்று மூன்று பால்கள் உண்டு.

2. மேலே சொன்ன அஃறிணையில்,

(1) எருமை, மலை, வீடு, கிளி—ஒன்றன்பால்,

(2) கிளிகள், மலைகள், மரங்கள்—பலவின் பால் என இரண்டு பால்கள் உண்டு.

எனவே, உயர்திணைக்கு மூன்று பால்களும், அஃறிணைக்கு இரண்டு பால்களும் உரியவை என்பதை அறிக.

## 9. எண்

பொருள்களின் எண்ணிக்கை எண் எனப்படும். (1) ஒன்றாக இருப்பது ஒருமை எண் எனப்படும். (2) ஒன்றுக்கு மேற்பட்டவை எல்லாம் பன்மை எண் எனப்படும்.

(1) கண்ணன், கண்ணகி, பசு, மலை—ஒருமை எண்.

(2) பிள்ளைகள், பசுக்கள், மலைகள்—பன்மை எண்.

(3) நான், நீ, அவன், அவள், அது—ஒருமை எண்.

(4) நாம், நீர், அவர்கள், அவை—பன்மை எண்.

## 10. இடம்

“நான் நேற்றுக் கண்ணனைப் பற்றிச் சொன்ன போது நீ கேட்டுக்கொண்டிருந்தாய் அல்லவா?”—இதில்,

(1) நான் என்பது பேசுவோனைக் குறிக்கிறது.

(2) நீ என்பது முன்னின்று கேட்பவனைக் குறிக்கிறது.

(3) கண்ணன் என்பது பேசப்படுபவனைக் குறிக்கிறது.

இம்மூவர் இடங்களும் முறையே, (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் என்று பெயர் பெறும்.

(1) நான்—தன்மை இடம்
(2) நீ—முன்னிலை இடம்
(3) கண்ணன்—படர்க்கை இடம்

அதாவது (1) பேசுவோன் இடம்—தன்மை இடம், (2) முன்னின்று கேட்போன் இடம்—முன்னிலை இடம், (3) பேசப்படுபவன் இடம்—படர்க்கை இடம்.

1. நான்—தன்மை ஒருமை
   நாம், நாங்கள்—தன்மைப் பன்மை
2. நீ—முன்னிலை ஒருமை
   நீர், நீவிர், நீங்கள்—முன்னிலைப் பன்மை
3. அவன், அவள், அது—படர்க்கை ஒருமை
   அவர்கள், அவை—படர்க்கைப் பன்மை

## 11. வேற்றுமை

1. முருகன்—இது ஒரு பெயர்ச் சொல். இச்சொல் முருகனை (ஐ), முருகனால் (ஆல்), முருகனுக்கு (கு), முருகனில் (இல்), முருகனது (அது), முருகனிடம் (இடம்), முருகனே! வருக—எனப் பலவாறு பொருளில் வேறுபட்டு வருதலைக் காணலாம். இவ்வேறுபாடு வேற்றுமை எனப்படும். இவ்வேற்றுமை

களை உண்டாக்கும் ஐ முதலிய உருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும்.

2. வேற்றுமை எட்டு வகைப்படும்.

(1) முருகன் வந்தான்—இயல்பான பெயர், முதல் வேற்றுமை.

(2) முருகனை அழைத்தேன்—இரண்டாம் வேற்றுமை.

ஐ—இரண்டாம் வேற்றுமை உருபு.

(3) முருகனால் அழைக்கப்பட்டேன்.—ஆல்
முருகனோடு சென்றேன். —ஓடு
முருகனுடன் வந்தேன். —உடன்
—மூன்றும் வேற்றுமை.

ஆல், ஓடு, உடன்—மூன்றும் வேற்றுமை உருபுகள்.

(4) முருகனுக்கு நன்றி—நான்காம் வேற்றுமை.

கு—நான்காம் வேற்றுமை உருபு.

(5) முருகனில் கண்ணன் வலியவன்—இல்
முருகன் வீட்டினின்று சென்றான்—நின்று
முருகன் ஊரிலிருந்து வந்தான்—இருந்து
—ஐந்தாம் வேற்றுமை.

இல், நின்று, இருந்து—ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

(6) இது முருகனது புத்தகம்.—அது
இவை என்னுடைய நூல்கள்.—உடைய
—ஆறும் வேற்றுமை

அது, உடைய ஆறும் வேற்றுமை உருபுகள்.

(7) பெட்டியில் கத்தி இருக்கிறது.—இல்

முருகனிடம் பணம் இருக்கிறது.—இடம்
வீட்டின்கண் திருடர் நுழைந்தனர்.—கண்
—ஏழாம் வேற்றுமை.

இல், இடம், கண்—ஏழாம் வேற்றுமை உருபுகள்.

(8) எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. இதன் பொருள்—விளித்தல் பொருள். விளித்தல்—அழைத்தல்.

| முதல் வேற்றுமை | விளி வேற்றுமை |
|---|---|
| 1. அண்ணன் | அண்ணா !—ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது |
| 2. மகன் | மகனே !—ஈறு நீண்டது |
| 3. மக்கள் | மக்காள் !—ஈற்றயல் நீண்டது |
| 4. முருகன் | முருக !—ஈறு கெட்டது |
| 5. பிள்ளை | பிள்ளாய் !—ஈற்று 'ஐ'–'ஆய்' எனத் திரிந்தது. |

## 12. சொல் இலக்கணம் கூறுதல்

ஒரு வாக்கியத்தில் வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கணம் கூறி, அது நிற்கும் நிலையையும் கூறுதல் சொல்லிலக்கணம் கூறுதல் எனப்படும். உதாரணம் கீழே காண்க.

1. கமலம் பாடம் படித்தாள்.

இவ் வாக்கியத்தில் (1) கமலம், (2) பாடம், (3) படித்தாள் என்னும் மூன்று சொற்கள் இருக்கின்றன.

(1) கமலம்—பெயர்ச் சொல், உயர்திணை, பெண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், முதல்

வேற்றுமை, 'படித்தாள்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

(2) பாடம்—பெயர்ச் சொல், அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'படித்தாள்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

(3) படித்தாள்—வினைச் சொல், உயர்திணை, பெண்பால். ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம், 'கமலம்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

குறிப்பு: பெயர்ச் சொல்லுக்கு வேற்றுமை உண்டு; வினைச் சொல்லுக்குக் காலம் உண்டு.

2. படித்த பரந்தாமன் பாடி மகிழ்ந்தான்.

(1) படித்த—இறந்தகாலப் பெயரெச்சம், பரந்தாமன் என்னும் பெயரைக் கொண்டு முடிகிறது.

(2) பரந்தாமன்—பெயர்ச்சொல். உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'மகிழ்ந்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

(3) பாடி—இறந்தகால வினையெச்சம், 'மகிழ்ந்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது.

(4) மகிழ்ந்தான்—வினைச் சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம், பரந்தாமன் என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

### பயிற்சி

1. விடை கூறுக:

(1) *திணை, பால், எண்—இவற்றின் பொருள் என்ன?*

(2) *உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு எவ்வாறு பொருந்தும்?*

(3) உயர்திணைக்கு உரிய பால்கள் எவை? அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?
(4) வேற்றுமை என்பது யாது? விளக்குக.

2. மூன்று இடங்களையும் ஏற்ற உதாரணம் கொண்டு விளக்கிக் காட்டுக.

3. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்கள், எவ்வெவ் வேற்றுமையை ஏற்று வந்துள்ளன என்பதைக் குறிப்பிடுக:-

(1) கபிலன் பரணனை அழைத்து நக்கீரனோடு அனுப்பினான்.
(2) நெடுஞ்செழியனுக்கு மாதேவியது சிலம்பைக் கண்டதும் மகிழ்ச்சி உண்டானது.
(3) பெட்டியில் இருந்த பணத்தை, முருகா, நீயா எடுத்தாய்?
(4) கண்ணன் அண்ணனை வெண்ணெயுடன் வீட்டுக்கு வரச்சொன்னான்.

4. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் சொல்லிலக்கணம் கூறுக :—

(1) படித்து விளையாடின பரந்தாமன் படுத்து உறங்கினான்.
(2) பதுமினி கோலம் போடுகிறள்.
(3) நாய்கள் பன்றிகளைத் துரத்தின.
(4) கண்ணகி மதுரையை எரித்தாள்.
(5) செங்குட்டுவன் வெகுண்டு போர் செய்தான்.
(6) படி தாண்டிய பங்கஜம் அடியைத் தாங்காது வீழ்ந்தாள்.

# IV. புணர்ச்சி

இரண்டு சொற்கள் ஒன்றோடு ஒன்று சேருவது புணர்ச்சி என்பதும், அவ்விரு சொற்களுள் இடக்கைப் பக்கம் இருப்பது நிலைமொழி என்பதும், வலக்கைப் பக்கம் இருப்பது வருமொழி என்பதும் சென்ற வகுப்பில் கூறப்பட்டன அல்லவா? அவற்றுடன்

இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி முதலிய புணர்ச்சி வகைகள் சில சென்ற வகுப்பிலேயே கூறப்பட்டன. அவற்றோடு கீழ்வரும் புணர்ச்சி வகைகளையும் நினைவில் வையுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | (1) | ஒன்று | + | ஆயிரம் | = | ஓராயிரம் |
| | | ஒன்று | + | கலம் | = | ஓர்கலம் |
| | | ஒன்று | + | நாழி | = | ஓர்நாழி |
| | | ஒன்று | + | யானை | = | ஓர்யானை |
| | (2) | இரண்டு | + | ஆயிரம் | = | ஈராயிரம் |
| | | இரண்டு | + | கலம் | = | ஈர்கலம் |
| | | இரண்டு | + | நாழி | = | ஈர்நாழி |
| | | இரண்டு | + | யானை | = | ஈர்யானை |
| | (3) | ஒன்று | + | கலம் | = | ஒருகலம் |
| | | ஒன்று | + | நாள் | = | ஒருநாள் |
| | | ஒன்று | + | வழி | = | ஒருவழி |
| | (4) | மூன்று | + | ஆயிரம் | = | மூவாயிரம் |
| | | மூன்று | + | கலம் | = | முக்கலம் |
| | | மூன்று | + | நூறு | = | முந்நூறு |
| | | மூன்று | + | வட்டி | = | முவ்வட்டி |
| | | மூன்று | + | பால் | = | முப்பால் |
| | (5) | நான்கு | + | ஆயிரம் | = | நாலாயிரம் |
| | | நான்கு | + | வகை | = | நால்வகை |
| | | நான்கு | + | கால் | = | நாற்கால் |
| | | நான்கு | + | மணி | = | நான்மணி |
| | (6) | ஐந்து | + | மூன்று | = | ஐம்மூன்று |
| | | ஐந்து | + | பால் | = | ஐம்பால் |
| | | ஐந்து | + | ஆயிரம் | = | ஐயாயிரம் |
| | | ஐந்து | + | வகை | = | ஐவகை |

(7) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + கலம் = எண்கலம்
எட்டு + நான்கு = எண்ணான்கு
எட்டு + வகை = எண்வகை
(8) ஒன்பஃது + பத்து = தொண்ணூறு
ஒன்பஃது + நூறு = தொள்ளாயிரம்

2. (1) ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது
இரண்டு + பத்து = இருபது, இருபஃது
இவ்வாறே எட்டு + பத்து வரையிலும் கொள்க.
(2) பத்து + ஒன்று = பதினொன்று
பதிற்றொன்று
பத்து + பத்து = பதிற்றுப்பத்து
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்
(3) பத்து + இரண்டு = பன்னிரண்டு
பத்து + மூன்று = பதின்மூன்று
(4) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐயைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
பத்து + பத்து = பப்பத்து
பாதி + பாதி = பப்பாதி

3. (1) மணி + அடி = மணி + (ய்) + அடி
= மணியடி
(2) தீ + அவி = தீ + (ய்) + அவி
= தீயவி

(3) பனை + ஓலை = பனை + (ய்) + ஓலை
= பனையோலை

நிலைமொழி ஈற்றில் உள்ள இ, ஈ, ஐ—இவற்றின் முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வரின், இடையில் 'ய்' தோன்றும்.

4. (1) கோ + இல் = கோ + (வ்) + இல்
= கோவில்

இ, ஈ, ஐ, ஏ ஒழிந்த எட்டு உயிர்களின்முன் உயிர்வரின், இடையில் 'வ்' தோன்றும்.

(2) சே + அடி = (1) சே + (வ்) + அடி
= சேவடி
(2) சே + (ய்) + அடி
= சேயடி

ஏ முன் உயிர் வரின், இடையில் 'வ்' தோன்றும்; சில இடங்களில் 'ய்' தோன்றும்.

5. (1) கல் + அடி = கல் + (ல்) + அடி
= கல்லடி
(2) நல் + அரசு = நல் + (ல்) + அரசு
= நல்லரசு

நிலைமொழி தனிக்குறிலும் மெய்யுமாக இருந்து, வருமொழி முதலில் உயிர்வரின், நிலைமொழி ஈற்றிலுள்ள மெய் இரட்டும்.

வல் + அரசு = வல்லரசு
கண் + அழகு = கண்ணழகு
என் + அளவு = என்னளவு

இவற்றை நினைவில் வையுங்கள்.

6. நல்லவனாய் + போனான் = நல்லவனாய்ப் போனான்

| | | |
|---|---|---|
| வல்லவனாக + செய் | = | வல்லவனாகச்செய் |
| போய் + பார் | = | போய்ப்பார் |
| அதுபற்றி + பேசு | = | அதுபற்றிப்பேசு |
| பலவித + பைகள் | = | பலவிதப்பைகள் |

இவ்வாறு சொல்லின் கடைசியில் வரும் ஆய், ஆக, ஆகி இவற்றின் முன்னும், போய், பற்றி, வித, வகை இவற்றின் முன்னும் வரும் க, ச, த, ப மிகும்.

### பயிற்சி

1. கீழ்வரும் தொடர்களைப் பிரித்துக் காட்டுக :—

ஓராயிரம், ஈரியானை, முப்பால், நால்வகை, நான்மணி, ஐம்பால், எண்கலம், தொண்ணூறு.

2. கீழ்வருவனவற்றைப் புணர்த்திக் காட்டுக :—

ஒன்று + பத்து, மூன்று + மூன்று, பாதி + பாதி, பத்து + மூன்று, ஆறு + ஆறு.

3. கீழ்வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக :—

தடியடி, தீயணை, தென்னையோலை, பலவாடுகள், சேவேறி, சேயடி.

4. பின்வருவனவற்றைச் சேர்த்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக :

கல் + அடி, நல் + உரை, கண் + ஆடி, நல்லவனாய் + சென்றான், போய் + சேர், (குதிரை)பற்றி + பேசு, ஒன்று + நாழி, இரண்டு + பத்து, நான்கு + நான்கு.

## V. அணி

அணி - அழகு. செய்யுளிலும், உரைநடையிலும் அழகுபடச் சொல்வது அணி எனப்படும்.

(1) கண்ணன் பாய்ந்தான்.

(2) கண்ணன் புலிபோலப் பாய்ந்தான்.

இவ்விரண்டு வாக்கியங்களையும் படித்துப் பாருங்கள் : இவற்றுள் முதல் வாக்கியம் சாதாரணமாக

அமைந்திருக்கிறது. இரண்டாம் வாக்கியம் அழகும் தெளிவும் பொருந்தி அமைந்திருக்கிறது. இவ்வாறு அணி (அழகு) அமைய எழுதப்படுவது விரும்பத் தக்கது அல்லவா? இதனை இலக்கண ஆசிரியர் அணி என்று கூறுவர். இந்த அணி (1) உவமையணி, (2) உருவக அணி எனப் பலவகைப்படும். இங்கு இவ் விரண்டு அணிகளையும் பற்றி அறிக.

## 1. உவமையணி

1. வேடன் புலிபோலப் பாய்ந்தான்—இதில் புலி—உவமை, வேடன்—உவமேயம், போல—உவம உருபு, பாய்தல்—பொதுத்தன்மை.

உவமை அணியில் உவமை, உவமேயம், பொதுத் தன்மை, உவமவுருபு என்னும் நான்கும் வருவதுண்டு. இவற்றில் சில உறுப்புக்கள் குறைந்து வருதலும் உண்டு.

2. பவளவாய்—இதில் பவளம்—உவமை. வாய்—உவமேயம். இதில் பொதுத் தன்மையும் உவம உருபும் இல்லை. இவ்வாறு வருதலும் உவமையணி எனப்படும்.

3. "முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும்; தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்."

இச் செய்யுளில் 'சிற்றுளியால்' என்பது முதல் பின் இரண்டு வரிகள் உவமானம்; முன் இரண்டு வரிகளும் உவமேயம். எனவே, இச்செய்யுள் உவமை யணி பெற்றுவந்துள்ள செய்யுள் ஆகும்.

செய்யுளில் தெரியாத ஒன்றை விளக்க நமக்குத் தெரிந்த ஒன்று புலவரால் தரப்படும். அத்தெரிந்த ஒன்றே உவமை என்பது. அதனைக் கொண்டு விளக்கப்படும் தெரியாதது உவமேயம் எனப்படும். இவ்வாறு செய்யுட்களில் வரும் உவமை அணியைக் கவனியுங்கள்.

## 2. உருவக அணி

1. கமலக்கை = கமலம் (போன்ற) கை —உவமை.

கைக்கமலம் = கை (ஆகிய) கமலம்— உருவகம்.

கமலம் போன்ற கை—என்பதில் கமலம் —உவமை. கை—உவமேயம்.

2. கைக்கமலம்—என்பது கையாகிய கமலம் எனப் பொருள் படுகிறது. அதாவது, உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றி, அவ்விரண்டும் ஒன்றுபடுத்திக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறப் படுவது உருவக அணியாகும். இவ்வணியில் உவ மேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையே 'ஆகிய' என்னும் உருபு மறைந்தும் வெளிப்பட்டும் வரும்.

3. சேனைக்கடல் = சேனையாகிய கடல்
கவிஅமுதம் = கவியாகிய அமுதம்
பாததாமரை = பாதமாகிய தாமரை

இவை உருவக அணி பெற்று வந்தவை.

இவற்றைப்போல் வருவனவற்றை நினைவில் வையுங்கள்.

4. உவமைக்கும் உருவகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் :

| உவமை | உருவகம் |
|---|---|
| தாமரைப் பாதம்<br>(தாமரை போன்ற பாதம்) | பாத தாமரை<br>(பாதம் ஆகிய தாமரை) |
| 1. உவமை முன்னும் உவமேயம் பின்னும் வரும். | 1. உவமேயம் முன்னும் உவமை பின்னும் வரும். |
| 2. ஒரு பொருள் மற்றொன்றுடன் ஒப்பிட்டுக் கூறப்படும். | 2. இரு பொருள்களும் சமமாகச் சொல்லப்படும். |
| 3. 'போல' முதலிய உவமையுருபுகளைப் பெற்று வரும். | 3. 'ஆகிய' என்னும் உருபைப் பெற்று வரும். |

### பயிற்சி

1. விடை கூறுக :—

(1) அணி என்பது யாது?
(2) உவமையணி எவ்வாறு வரும்? உதாரணம் தந்து விளக்குக.
(3) உருவக அணியை உதாரணத்துடன் விளக்குக.
(4) உவமையணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடுகள் எவை? உதாரணம் கொண்டு விளக்குக.

2. கீழ்வருவனவற்றுள் உள்ள உவமை, உருவக அணிகளை எடுத்து எழுதுக :—

(1) முருகன் என்னைக் கண்டதும் புலிபோல் உறுமினான்.
(2) அவருடைய கமலக்கண்கள் என்னை மகிழச் செய்தன.
(3) நாய் போன்ற நண்பர் உறவு வேண்டும்.
(4) தாமரைக் கையும் முத்துப் பற்களும் வேல்விழிகளும் கண்டு உருகாதார் யார்?
(5) வீமனாகிய கப்பல், சேனைக் கடலைக் கலக்கியது.

# VI. நிறுத்தற் குறிகள்

நீங்கள் சென்ற வகுப்பில் காற்புள்ளி, அரைப் புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப் புள்ளி, வினுக்குறி, உணர்ச்சிக்குறி என்பவற்றை அறிந்தீர்கள் அல்லவா? இங்கு மேற்கோள் குறியைப் பற்றி அறிந்து கொள்க.

1. முருகன் என்னைப் பார்த்து, "நாம் நாளை ஊருக்குப் போகலாம்," என்றான்—இதில் " " இக்குறிகள் நேரே பேசியதை உணர்த்துவன; ஆதலால் இவை மேற்கோள் குறிகள் எனப்படும்.

2. முருகன் என்னைப் பார்த்து, "கண்ணா, 'அறம் செய விரும்பு' என்று ஔவையார் கூறியதன் பொருள் என்ன?" என்று கேட்டான்—இதில் இரட்டை மேற்கோள் குறிகளுக்குள் இருப்பது முருகன் நேரே பேசியது; ஒற்றை மேற்கோள் குறி களுக்குள் இருப்பது ஔவையார் சொன்னது. இவ் வாறு ஒருவர் நேரே பேசும் சொற்களில் பிறருடைய சொற்கள் எடுத்தாளப்படுமானால் ஒற்றை மேற் கோள் குறிகள் இட்டு அதனைக் காட்டவேண்டும். இவற்றை நன்கு நினைவில் வையுங்கள்.

### பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் தக்க நிறுத்தற் குறிகளை இடுக:—

1. கண்ணன் கந்தனைப் பார்த்துப் பேசினான் பின்பு கடைக்குச் சென்றான் பத்தணா கொடுத்தான் ஒரு பந்து வாங்கினான்.

2. மங்களம் மரகதத்தைப் பார்த்து என்ன அக்கா உன்னைப் பார்ப்பதே அரிதாய் இருக்கிறதே என்று அன்போடு கேட்டாள்.

3. நக்கீரன் இறந்தான் என்பதைக் கேட்டவுடன் ஐயோ அவன் போய்விட்டானா என்று நெடுஞ்செழியன் கூறி அழுதான்.

4. கமலும் அன்னக்கிளியைப் பார்த்து அக்கா அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது] பழமொழியல்லவா என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

## தேர்வுக்குரிய வினாக்கள்

1. கீழ்வரும் வினைச் சொற்களிலுள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் குறிக்க :—

வென்றான், தோற்றனர், உறங்கின, கண்டது, விட்டனம், நின்றேன், செய்வல், வந்தனை, வாழ்ந்தான்.

2. கீழ்வரும் கொடுந்தமிழ்ச் சொற்களுக்கு ஏற்ற செந்தமிழ்ச் சொற்களைக் கூறுக :—

அச்சன், எலுவன், தள்ளை, பாழி, எகின், சொன்றி.

3. கீழ்வரும் தொடர்களிலுள்ள வழுக்களைக் காட்டித் திருத்தம் கூறுக :—

பசுக்குட்டி, குதிரைக் கன்று, மீன் குட்டி, வாழைப் பிள்ளை, காகம் சீறுகிறது, புலி பிளிறுகிறது, நரி முழங்குகிறது.

4. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்து எழுதுக :—

(1) படித்துக் கெட்டபையன் உலகத்தில் இல்லை.
(2) பாடுபட்டு உழைத்த பெரியோர் பயன் பெற்றனர்.
(3) அடுத்து முயன்ற அண்ணன் எடுத்த காரியம் சாதித்துவிட்டான்.
(4) போன மைத்துனன் திரும்பி வந்தான்.
(5) புகழ்பெற்ற பெரியவர் தலைவணங்கி நிற்கின்றார்.

5. கீழ்வரும் ஒவ்வொரு வினைமுற்றுக்கும் உரிய மற்ற இரண்டு காலங்களையும் கூறுக :—

மணப்பான், பெறுகிறாள், (நாய்) ஓடும், வந்தார், ஓடிற்று, நகைத்தார்.

6. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக :—

(1) முயன்று படித்த முருகன் பதக்கத்தைப் பெற்றான்.

(2) உழைத்து வேலைசெய்த வேங்கடசாமி பொருளைத் திரட்டினான்.

7. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டிக் காட்டுக :—

(1) கண்ணனோடு வீட்டுக்குச் சென்ற அண்ணன் கமலத்தைக் கண்டு, "கல்வியிற் சிறந்தவர் கம்பர்" என்று கூறினான்.

(2) "எனது புத்தகம் பெட்டியில் இருக்கிறது அண்ணா" என்று கமலம் கூறினாள்.

8. (1) கீழ்வருவனவற்றைப் பிரித்துக் காட்டுக:—
ஐவகை, எண்ணாயிரம், எழுபது, முப்பது, பூவழகு, நீயேயடி, கையடை, கிளியழகு.
(2) பின்வருவனவற்றைச் சேர்த்துக் கூறுக:—
திரு + ஆளன், போ + என்றான், தீ + அவிந்தது, வருபவனாய் + தெரியவில்லை, நல் + எண்ணம், கல் + அழகு, நிலம் + வரி, மரம் + கொம்பு.

9. கீழ்வருவனவற்றுள் உள்ள உவமை அணிகளையும் உருவக அணிகளையும் எடுத்துக் காட்டுக :—

(1) சிங்கம் மண்ணிலிருந்து விண்ணில் பாய்வதுபோல் அங்கதன் இலங்கை நோக்கி வானத்திற் பறந்து சென்றான்.

(2) அன்னம் நடை கற்பதுபோலத் தமயந்தி சோலையில் மெல்ல நடந்தாள்.

(3) கைத் தாமரையும் முகத் தாமரையும் பொலிவு தருகின்றன.

(4) அடிமலர் முடிமீது வையுங்கள்.

10. கீழ்வரும் வாக்கியங்களில் தக்க நிறுத்தற் குறிகளை இடுக :—

(1) கண்ணா இன்று பள்ளிக்கூடம் இருக்கின்றதா என்று கோபாலன் கண்ணனைக் கேட்டான்.

(2) தம்பி நீ புத்திசாலி உழைப்பாளி அதனால் இக்காரியத்தில் வெற்றி பெற்றாய் என்று மாமா சோமுவைப் பாராட்டினார்.

(3) நல்லது நான் எதிர்பாராததை நீ கொண்டு வந்துவிட்டாயே நீ மிகவும் கெட்டிக்காரன் என்று ஆசிரியர் மாணவனைப் பாராட்டினார்.

# மூன்றும் படிவம்

## I. எழுத்துக்கள்

### 1. உயிர்ப்பு எழுத்துக்கள்
(Breathed Sounds)

தமிழ் எழுத்துக்களுள் வாய்விட்டு ஒலியாதபடி உயிர்த்தல் அளவிலேயே ஒலிக்கும் எழுத்துக்கள் உயிர்ப்பு எழுத்துக்கள் எனப்படும். அவை எவை? தமிழ் எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்: மிக்க கவனத்துடன் உச்சரித்துப் பார்த்தால், க், ச், ட், த், ப் என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் உயிர்ப்பு எழுத்துக்கள் என்பதை அறியலாம்.

### 2. ஒலிப்பு எழுத்துக்கள்
(Voiced sounds)

மேலே சொன்ன ஐந்து மெய்யெழுத்துக்கள் நீங்கலாக 'உள்ள பிற மெய்யெழுத்துக்களும், உயிர் எழுத்துக்களும், உயிர்மெய் யெழுத்துக்களும், ஆய்த எழுத்தும் ஒலிப்பு எழுத்துக்கள் ஆகும்.

### 3. மூக்குவழி ஒலிக்கும் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களைக் கவனத்துடன் உச்சரியுங்கள். ங, ஞ, ண, ந, ம, ன—என்னும் ஆறுமே மூக்கை இடமாகக் கொண்டு உச்சரிக்கப்படுவன.

### 4. வாய்வழி ஒலிக்கும் எழுத்துக்கள்

மேலே சொன்ன ஆறு எழுத்துக்கள் நீங்கலாக உள்ள பிற எழுத்துக்கள் எல்லாம் வாய்வழி ஒலிப்பனவாகும்.

## 5. அலகு பிரித்து எழுதுதல்
### (Syllabic writing)

நல்லன்—என்னும் சொல் நல்-லன் எனப் பிரிந்து ஒலிக்கும். இவ்வாறே நல்ல என்பது நல்-ல என்று பிரிந்து ஒலிக்கும்.

ஓடுவான் என்பது ஓடு-வான் என்றும், தண்ணீர் என்பது தண்-ணீர் என்றும் பிரிந்து ஒலிக்கும்.

செய்யுள் இலக்கணத்தில் இவ்வாறு பிரிக்கப் படுவது அசை எனப்படும்.

## 6. ஒரே எழுத்து, சொல்லில் வரும் இடத்திற்கு ஏற்ப ஒலி மாறுதல்

1. கட்டிடம், அங்கனம், மக்கு—க, கு என்னும் எழுத்துக்களை உச்சரியுங்கள்.

2 சக்கரம், பசுமை, சங்கு—இவற்றில் வந்துள்ள ச, சு என்னும் எழுத்துக்களை உச்சரியுங்கள்.

3. படம், பட்டம், பண்டு—இவற்றில் வந்துள்ள ட, ட், டு என்னும் எழுத்துக்களை உச்சரித்தும் பாருங்கள்.

4. தந்தை, மத்து, மருந்து—இவற்றில் வந்துள்ள த, தை, து என்னும் எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்.

5. பட்டு, தப்பு, கம்பு—இவற்றில் வந்துள்ள ப, ப், பு என்ற எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்.

6. பொறுமை, கன்று, வற்றல்—இவற்றில் வந்துள்ள று, ற எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்.

இவற்றில் க, ச முதலிய எழுத்துக்கள் சொல்லின்

முதலில் ஒருவகை ஓசையுடனும், சொல்லின் இடையில் மற்றொரு வகை ஓசையுடனும், வல்லினத்துடன் வரும்பொழுது வேறொரு வகை ஓசையுடனும், மெல்லினத்தோடு வரும்பொழுது பிறிதொரு வகை ஓசையுடனும் ஒலிப்பதை உணரலாம். இவற்றை நினைவில் வையுங்கள்.

பயிற்சி

1. விடை கூறுக :

(1) உயிர்ப்பு எழுத்துக்கள் என்பதன் பொருள் யாது?

(2) ஒலிப்பு எழுத்துக்கள் எவை?

(3) மூக்கு வழி ஒலிக்கும் எழுத்துக்கள் எவை?

(4) வாய் வழி ஒலிப்பன யாவை?

2. மறதி, வாழ்வு, செலவு, படித்தான், ஏற்றுமதி, இறக்குமதி, வாழ்தல், திருமணம்—இவற்றை அலகு பிரித்துக் காட்டுக.

3. கீழ்வரும் ஒவ்வொரு எண்ணிலும் வரும் ஒரே வகை எழுத்துப் பெறும் ஓசையைக் குறிப்பிடுக :—

(1) கல்வி, அகல், தங்கம்

(2) சங்கம், குஞ்சம், மொச்சை

(3) குடம், குட்டி, குண்டு

(4) பகுதி, பத்து, பந்தம்

(5) பட்டு, குப்பன், வம்பன்

(6) சிறுமை, மூன்றில், நாற்றம்

# II. சொல்

## 1. சுட்டு—வினா

இவற்றைப் படியுங்கள் :—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| அரங்கன் | அவர் | அம்மனிதர் |
| இரங்கினார் | இவர் | இம்மனிதர் |
| உறங்கினார் | உவர் | உவ்வீடு |
| எடுத்தார் | எவர் | எம்மனிதர் |

1. முதல் வரிசையில் உள்ள அ, இ, உ, எ என்பன சொற்களில் அமைந்துள்ள உயிர் எழுத்துக்கள்.

2. இரண்டாம் வரிசையில் உள்ள முதல் மூன்று சொற்களில் இருக்கும் முதல் எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களே ஆயினும், ஒருவரைச் சுட்டிக் காட்டுவன; ஆதலால் அவை சுட்டு எழுத்துக்கள் எனப்படும். அதே வரிசையில் கடைசியில் உள்ள எவர் என்னும் சொல்லில் எ என்னும் எழுத்து வினவி நிற்பதால் வினா எழுத்து எனப்படும். இவை சொல்லின் அகத்திலேயே இருப்பதால் (1) அகச்சுட்டு, (2) அக வினா எனப் பெயர் பெறும்.

3. மூன்றும் வரிசையில் உள்ள முதல் மூன்று சொற்களிலும் சுட்டெழுத்துக்கள் சொல்லுக்குப் புறத்தே (வெளியே) இருந்து சுட்டுவதால் புறச்சுட்டு எனப்படும்; கடையில் உள்ள எம்மனிதர் என்பதில் உள்ள எ என்னும் எழுத்துப் புறவினா எனப்படும்.

(1) அந்த, இந்த, உந்த, எந்த
(2) ஆங்கு, ஈங்கு, ஊங்கு, எங்கு
(3) அப்படி, இப்படி, உப்படி, எப்படி
(4) அவ்வாறு, இவ்வாறு, உவ்வாறு, எவ்வாறு
(5) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம்—இவற்றை நினைவில் வையுங்கள்.

## 2. இடுகுறிப் பெயர், காரணப்பெயர்

1. மூத்தவன் - முதுமையுடையவன். இளையவன் - இளமை உடையவன். அகழி - அகழப்பட்டது. இல்லான் - இல்லத்துக்கு உரியவன். காற்றாடி - காற்

றில் அசைவது. இவ்வாறு ஒரு காரணம்பற்றி வழங்கும் பெயர் காரணப் பெயர்.

2. மரம், கல், செடி—இவையும் காரணப் பெயர்களே. ஆயின் இவை என்ன காரணம் பற்றி வந்த பெயர்கள் என்பது இப்பொழுது தெரியவில்லை. ஆதலால் இவை இடுகுறிப் பெயர்கள் என இலக்கணத்தில் பெயர் பெறும். ஆயினும், எல்லாப் பெயர்களும் காரணப் பெயர்களே என்பதை மறத்தல் ஆகாது.

## 8. வழூஉச் சொற்களும், திருத்தமும்

1. மாமல்லபுரம் —இலக்கண வழக்குச் சொல். மகாபலிபுரம், மாவலிபுரம், மாவலிவரம் —வழூஉச் சொற்கள்.
2. திருவல்லிக்கேணி — இலக்கண வழக்குச் சொல்.

   தில்லெகேணி, திருளக்கேணி —வழூஉச் சொற்கள்.
3. குன்றத்தூர் —இலக்கண வழக்குச் சொல். குண்ணத்தூர்—வழூஉச் சொல்.
4. வழூஉச் சொற்கள் — திருத்தம்

| வழூஉச் சொற்கள் | திருத்தம் |
|---|---|
| ஆக்ஷி | ஆட்சி |
| இடதுகை | இடக்கை |
| உத்திரவு | உத்தரவு |
| ஊரணி | ஊருணி |
| எண்ணை | எண்ணெய் |
| கடகால் | கடைக்கால் |
| கயறு | கயிறு |
| காக்ஷி | காட்சி |

| வழூஉச்சொற்கள் | திருத்தம் |
|---|---|
| கொடக்கூலி | குடிக்கூலி |
| கெடியாரம் | கடிகாரம் |
| சீக்காய் | சிகைக்காய் |
| சுவற்றில் | சுவரில் |
| தாவாரம் | தாழ்வாரம் |
| புடவை | புடைவை |
| ரொம்ப | நிரம்ப |
| வெக்கம் | வெட்கம் |
| வெண்ணே | வெண்ணெய் |
| வேண்டாம் | வேண்டா |
| நேத்து | நேற்று |
| வேஷ்டி | வேட்டி |
| வயறு | வயிறு |
| முழுங்கு | விழுங்கு |

## 4. ஒரு பொருள் தரும் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

1. 'ஓசை இடுதல்' என்னும் ஒரே பொருளை உணர்த்தும் 'முழங்கும், பிளிறும்' உருமும், கூவும், அகவும், கரையும், அலறும்' என்பன போன்ற பல சொற்கள் வெவ்வேறு விலங்கு அல்லது பறவை செய்யும் ஓசையை நுட்பமாக உணர்த்துகின்றன; அங்ஙனம் உணர்த்தலால் அவை பொருளில் நுட்பமாக வேறுபடுகின்றன.

சிங்கம் —முழங்கும்
யானை —பிளிறும்.
பன்றி —உருமும்.
கோழி —கூவும்.
மயில் —அகவும்.

காகம் — கரையும்.
ஆந்தை — அலறும்.

2. முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, இரை, இயம்பு, இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சும்மை, கவ்வை, கம்பலை, அரவம், ஆர்ப்பு—இச்சொற்கள் ஒலித்தல் என்னும் ஒரே பொருளில் வருவன. எனினும் இவை, ஓசையிடும் கருத்தாவை நோக்கப் பொருளில் நுட்பமாக வேறுபடுதலை அறியலாம். கீழ் வரும் உதாரணங்களைக் காண்க :

(1) கடல் முழங்குகிறது.
(2) குடிஞை இரட்டும். (குடிஞை - கோட்டான்)
(3) புனல் ஒல்லென்று ஒலிக்கிறது.
(4) கலி கெழுகடவுள்.
(5) பறை இசை அருவி.
(6) பறவைகள் இரைகின்றன.
(7) முரசம் இயம்பும்.
(8) இமிழ்கடல்.
(9) குளிறு முரசம்.
(10) கார்மேகம் அதிருகிறது.
(11) குரை புனல். (புனல் - நீர்)
(12) கனைகடல்.
(13) சும்மை மிகுந்த நாடு.
(14) கவ்வைநீர் வேலி.
(15) கம்பலை மூதூர்.
(16) அரவத்தானை, (தானை - சேனை)
(17) ஆர்த்த பல் இயங்கள். (இயம் - வாத்தியம்)

## 5. முக்கால இடைநிலைகள்

1. செய்தான் =செய்+த்+ஆன் —த்
உண்டான்=உண்+ட்+ஆன் —ட்

கற்றான் =கல்+ற்+ஆன் —ற்
போயினான்=போ(ய்)+இன்+ஆன்—இன்
ஓடியது =ஓடு+இ(ய்)+அ+து—இ(ய்)
போயது =போ+ய்+அ+து —ய்
போனது =போ+(இ)ன்+அ+து —ன்

த், ட், ற், இன், இ(ய்), ய், ன்—இறந்தகால இடைநிலைகள்.

2. செய்கிறான்=செய்+கிறு+ஆன் —கிறு
செய்கின்றான்=செய்+கின்று+ஆன் —கின்று
செய்யாநின்றான்+செய்+ஆநின்று+ஆன் —ஆநின்று

கிறு, கின்று, ஆநின்று—நிகழ்கால இடைநிலைகள்.

3. படிப்பான் =படி+(ப்)+ப்+ஆன் —ப்
செய்வான் =செய்+வ்+ஆன் —வ்

ப், வ்—எதிர்கால இடைநிலைகள்.

## 6. இடைச் சொல்

1. பகுபதத்தில் பகுதி நீங்கலாக உள்ள இடைநிலை, சாரியை, விகுதி முதலிய உறுப்புக்கள் இடைச் சொற்கள் எனப்படும்.

2. வீரன் புலியைப் போலப் பாய்ந்தான்—போல'-இது உவமையுருபு. போல, அன்ன, ஒப்ப முதலிய உவமையுருபுகள் எல்லாம் இடைச் சொற்களேயாகும்.

3. 'முருகனை' என்றாற் போலப் பெயர்ச் சொற்களைச் சார்ந்துவரும் ஐ, ஆல், கு, இன், அது,

கண் முதலிய வேற்றுமை உருபுகளும் இடைச் சொற்களே.

4. முன் சொல்லப்பட்ட சுட்டு எழுத்துக்களும், எ, ஏ, ஆ, யா, ஓ என்னும் வினு எழுத்துக்களும் இடைச் சொல் ஆகும்.

5. முருகனும் வள்ளியும் வந்தனர். இதில் பெயர்களைச் சார்ந்து வந்துள்ள 'உம்' என்பது இடைச் சொல் ஆகும்.

இவ்வாறு பெயர்ச் சொல்லையேனும், வினைச் சொல்லையேனும் சார்ந்து வருவது இடைச்சொல் எனப்படும்.

## 7. உரிச்சொல்

1. (1) அன்பழகன் திருமண விருந்தில் நனி தின்ருன். (நனி - மிகுதி)
   (2) கமலம் சாலப் பேசினுள். (சால-மிகுதி)
   (3) கண்ணகி நனிபேதை. (நனி - மிகுதி, மிக்க)

இங்கு (1) நனி என்பது 'தின்ருன்' என்னும் வினைச்சொல்லின் குணத்தை உணர்த்தினது; (2) சால என்பது 'பேசினுள்' என்னும் வினைச் சொல்லின் குணத்தை உணர்த்திற்று; (3) நனி என்பது 'பேதை' என்னும் பெயர்ச் சொல்லின் குணத்தை உணர்த்தியது.

இங்ஙனம் பெயர், வினைகளின் குணத்தை உணர்த்தும் சொல் உரிச்சொல் எனப்படும்.

நாம் மேலே கூறிய சொற்கள் எல்லாம் 'மிகுதி' என்னும் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள்.

2. கடிமனை — கடி - காவல்.
கடிவாள் — கடி - கூர்மை.
கடிமாலை — கடி - வாசனை.
கடிமார்பன் — கடி - விளக்கம்.
கடியாமம் — கடி - அச்சம்.
கடிமலர் — கடி - சிறப்பு.
அம்பு கடிவிடுவோம் — கடி - விரைவு.
கடிவினை — கடி - திருமணம்.
கடிமிளகு — கடி - கரிப்பு.

இவ்வாறு கடியென்னும் ஓர் உரிச்சொல் பல பொருள்களை உணர்த்தி நிற்றலைக் காண்க.

இங்ஙனம் ஒரு குணத்தையேனும், பல குணங்களையேனும் தழுவி, பெயரை அல்லது வினையைச் சார்ந்து, பெரும்பாலும் செய்யுளுக்கு உரிமை பூண்டு வருபவை உரிச்சொற்கள் எனப்படும்.

## பயிற்சி

1. கீழ்வரும் சொற்களில் சுட்டெழுத்துக்களையும், வினா எழுத்துக்களையும் உடைய சொற்களை எடுத்து எழுதுக :—

அண்ணன், அவன், இரக்கம், இவன், உப்பு, உவர், எவன், எடுப்பு, இஞ்சி, இது, உரல், உவன், எடை, எங்கு.

2. கீழ்வரும் பெயர்களில் காரணப் பெயர்களையும், இடுகுறிப் பெயர்களையும் சுட்டுக :—

நாற்காலி, மண், மரம், மன்னன், அரிவாள், ஆழி, முள்ளி, அணை, அணி, முக்கண்ணன், வீடு, தசரதன்.

3. கீழ்வரும் வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :—

சொல்லலையே, போகச்சே, வரச்சே, வந்துகிட்டு, மச்சான், பொம்மனாட்டி, விடியங்காட்டியும், திகளம், தலகாணி, கோடாலி, ஒண்டியாய், சாயரட்சை, பாக்குது, முளி.

4. கீழ்வரும் வினைச்சொற்களில் உள்ள இடைநிலைகளை எழுதி, அவை காட்டும் காலத்தையும் குறிப்பிடுக :—

பார்த்தான், போனது, வருவேன், காண்பார், நின்றனை, படித்தேன், ஓடுகின்றன.

5. இடைச்சொல் என்பது யாது? ஆறு உதாரணங்கள் தருக.

6. உரிச்சொல் என்பது யாது? ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்களையும், பல பொருள் உணர்த்தும் ஓர் உரிச்சொல்லையும் உதாரணங்களால் விளக்குக.

## 8. சாரியைகள்

1. உண்டனன்=உண் + ட் + அன் + அன்
   - உண் ↓ பகுதி
   - ட் ↓ இடைநிலை
   - அன் ↓ சாரியை
   - அன் ↓ விகுதி

2. புளியங்காய்=புளி + அம் + காய்
   - அம் ↓ சாரியை

3. நெல்லின் குப்பை=நெல் + இன் + குப்பை
   - இன் ↓ சாரியை

4. அவற்றை=அ + அற்று + ஐ
   - அற்று ↓ சாரியை

5. ஆனை=ஆ + ன் + ஐ
   - ன் ↓ சாரியை

6. ஆவினுக்கு=ஆ + இன் + உ + கு
   - இன், உ ↓ சாரியைகள்

7. மரத்தினுக்கு=மரம்+அத்து+இன்+உ+கு
↓ ↓ ↓
சாரியைகள்

8. நெஞ்சம்=நெஞ்சு + அம்
↓
சாரியை

9. மரத்திலே=மரம் + அத்து + இலே
↓
சாரியை

இவ்வாறு விகுதிப் புணர்ச்சியிலும், பதப் புணர்ச்சியிலும், உருபுப் புணர்ச்சியிலும், தனிச் சொற்களிலும் சார்ந்து வருவன சாரியைகள் எனப்படும்.

## 9. ஆகு பெயர்

1. (1) மயில்—ஒரு பறவையின் பெயர்.
   (2) மயில் வந்தாள்—மயில் போன்ற சாயலே யுடைய பெண்ணைக் குறிக்கிறது.

2. (1) உறையூர்—ஓர் இடத்தின் பெயர்
   (2) உறையூர் உன் செயலைக்கண்டு சிரிக்கின்றது—இங்கு, 'உறையூர்' என்னும் இடத்தின் பெயர் அங்குள்ள மக்களுக்கு ஆகி வந்தது.

இவ்வாறு ஒரு பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருதல் ஆகுபெயர் எனப்படும்.

## 10. வெளிப்படை, குறிப்பு

1. (1) இப்பசு மிகுதியாய்க் கறக்கும்—பசு பால் கறப்பது அனைவரும் அறிந்ததே. எனவே, இது வெளிப்படை.

(2) இம்மாடு மிகுதியாய்க் கறக்கும்—இங்கு மாடு என்பது பொதுச்சொல்; ஆனால் 'கறக்கும்' என்னும் வினையால் பசுவைக் குறிப்பாய் உணர்த்திற்று. எனவே, இது குறிப்பு.

2. (1) இவர்கள் என் மக்கள்—இங்கு 'மக்கள்' என்னும் பொதுச்சொல் ஆண்மக்களையும் பெண் மக்களையும் உணர்த்துகின்றது. இது வெளிப்படை.

(2) என் மக்கள் ஏர் உழுகின்றனர்—இங்கு 'மக்கள்' என்பது, ஏர் உழுதல் என்னும் தொழிலால் ஆண்மக்களையே குறிப்பாய் உணர்த்துகின்றது. எனவே, இது குறிப்பு.

## 11. இயல்பு வழக்கு

1. இல்முன், நகர்ப்புறம், இல்வாய்—இவை முறையே இல்லின்முன், நகரினதுபுறம், இல்லினது வாய் எனப் பொருள்படும். இவை இலக்கணம் உடையவை.

2. முன்றில், புறநகர், வாயில்—இவை இல்முன், நகர்ப்புறம், இல்வாய் என்பன மாறிவந்துள்ள சொல் உருவங்களேயாகும். இவை நூல்களில் ஆளப் பெற்றுள்ளன. ஆயினும் இலக்கணமுடையவை அல்ல; இலக்கணப்போலி எனப்படும்.

3.

| | | |
|---|---|---|
| சென்னப்பட்டணம் | —சென்னை | என மருவி வருவன மரூஉ. |
| தஞ்சாவூர் | —தஞ்சை | |
| நாகபட்டினம் | —நாகை | |

இவை மூன்றும் இயல்பு வழக்கு எனப்படும். வழக்கு என்பது, சொற்கள் பேச்சு வழக்கில் வழங்கப் படும் முறைமை.

## 12. தகுதி வழக்கு

1. கண்ணகி வாயைக் கழுவினாள்—இங்கு, ‘எச்சில்’ என்னும் இடக்கரான சொல்லை அடக்கி, ‘வாய்’ என்னும் சொல்லால் கருத்து விளங்கக் கூறப் பட்டுள்ளது. இங்ஙனம் கூறல் **இடக்கர் அடக்கல்** எனப்படும்.

2. கோவலன் இறைவன் திருவடி நிழலை அடைந்தான்—‘இறந்தான்’ என்னும் அமங்கலச் சொல் நீக்கப்பட்டு, மங்கலமாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இவ்வழக்கு **மங்கலம்** எனப்படும்.

3. ஆடைக்கடையினர் தமக்குள் ஒன்றன் விலையைக் கூறக் ‘குணவெள்ளை’ முதலிய குறிச் சொற்களைக் கையாள்கின்றனர். இவ்வாறு ஒரு குழுவினர் (கூட்டத்தார்) தமக்கு மட்டும் விளங்கும்படி கொண்டுள்ள குறியீட்டுச் சொற்கள் **குழூஉக்குறி** எனப்படும்.

இவை மூன்றும் தகுதி எனப் புலவர் ஏற்றுக் கொண்டமையின், **தகுதி வழக்கு** எனப்பட்டன.

### பயிற்சி

1. *கீழ்வரும் சொற்களில் உள்ள சாரியைகளை எடுத்துக் காட்டுக :*

பதினொன்று, மரத்தை, மண்ணாங்கட்டி, செய்தனன், படத்துக்கு, வீட்டினில்.

2. *கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள ஆகுபெயர்களைக் குறிப்பிடுக :—*

(1) *கண்ணகியை மதுரை பாராட்டியது.*
(2) *வீரன் வெற்றிலை நட்டான்.*
(3) *வண்ணான் வெள்ளை கொண்டுவந்தான்.*
(4) *வரதன் வற்றல் தின்றான்.*
(5) *சோலையில் பாவை நிற்கின்றாள்.*

3. கீழ் வருவன இயல்பு வழக்கில் எவ்வெப் பிரிவுகளைச் சேர்ந்தவை என்பதைக் கூறுக :

முன்றில், கோயில், புறநகர், சென்னை, பூவை, நாகை, தஞ்சை.

4. பின்வருவன தகுதி வழக்கில் எவ்வெப் பிரிவுகளைச் சார்ந்தவை என்று எழுதுக :—

மாமனார் நேற்றுத் துஞ்சினார், தம்பி வெளிக்குச் சென்றான், அவர் வாய் பூசி வந்தார்.

# III. தொடர் ஆக்கம்

## 1. தொகைநிலை—தொகாநிலை

1. கண்ணன் வந்தான், கண்ணன் பெட்டி, முத்துப்பல்—என்றாற்போலச் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்வது சொற்றொடர் எனப்படும்.

2. பால் குடித்தாள்—இது 'பாலைக் குடித்தாள்' என விரியும். அதாவது, இரண்டு சொற்களுக்கும் இடையில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது. இவ்வாறு இடையில் ஒன்று மறைந்து வரும்படி இரண்டு சொற்கள் தொடர்வது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

3. கண்ணன் வந்தான்—இத்தொடரில் இடையில் எதுவும் மறைந்திருக்கவில்லை. இவ்வாறு வரும் தொடர் தொகாநிலைத் தொடர் எனப்படும்.

## 2. தொகைநிலைத் தொடர்கள்

1. கண்ணன் பெட்டி—இது கண்ணனது பெட்டி எனப் பொருள்படும். 'அது' என்னும் வேற்றுமை உருபு தொக்கி (மறைந்து) வந்ததால், இது வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் எனப்படும்.

இவ்வாறு இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் வரும். கீழே காண்க :—

(1) வீடு கட்டு—இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

(2) தலை வணங்கு—மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

(3) கூலி வேலி—நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

(4) நகர் நீங்கு—ஐந்தாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்.

(5) அவள் புத்தகம்—ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

(6) வீட்டு உணவு—ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

2. மதிமுகம்=மதி (போன்ற) முகம்—இவ்வாறு உவமை உருபு மறைந்து வந்ததால் இது **உவமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

3. பூரி சட்னி=பூரியும் சட்னியும்—'**உம்**' மறைந்து வந்ததால், இது **உம்மைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

4. செந்தாமரை=செம்மை (ஆகிய) தாமரை—இவ்வாறு பண்பு உருபு மறைந்து வரச் சொற்கள் தொடருதல் **பண்புத்தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

5. சுடுகாடு—இது 'சுடு' என்னும் பகுதியும் '**காடு**' என்னும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து (இடைநிலையும் விகுதியும் மறைந்து) வருவதால் **வினைத் தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

இவை ஐந்தும் தொகைநிலைத் தொடர்கள் எனப்படும்.

## 8. தொகாநிலைத் தொடர்கள்

1. வரதன் வந்தான்—இந்த வாக்கியத்தில் முதலில் இருப்பது வரதன் என்ற எழுவாய். எனவே, இத்தொடர் எழுவாய்த் தொடர் எனப்படும். இவ்வாறே முதற் சொல் நோக்கி, இன்னதொடர் எனக் கூறுக.

2. வந்தான் வரதன் — வினைமுற்றுத்தொடர்.
3. வந்த வரதன் — பெயரெச்சத் தொடர்.
4. வந்து போனான் — வினையெச்சத் தொடர்.
5. வந்து வந்து — அடுக்குத்தொடர்.
6. இனி வருவான் — இடைச்சொல் தொடர்.
7. சாலப் பேசினான்— உரிச்சொல் தொடர்.

### பயிற்சி

1. தொகைநிலைத் தொடர் தொகாநிலைத் தொடர்—இவற்றை விளக்கி உதாரணம் தருக.

2. பணம் கொடு, கை எழுத்து, ஊர் செல், வீடு நீங்கு, உன்வீடு, காட்டுப்பூனை—இவற்றை விளக்கி, ஒவ்வொன்றும் இன்ன தொகைநிலைத்தொடர் என்பதைக் கூறுக.

3. கருங்குதிரை, இராப்பகல், வளர்பிறை, தாமரைக்கை—இவற்றை விளக்குக; ஒவ்வொன்றும் இன்ன தொகை என்பதை எழுதுக.

4. குப்பன் வந்தான், வந்த குப்பன், வந்து பார்த்தான், வந்தான் முருகன், இனியொன்று, சாலப் பெரியன், போ போ—ஒவ்வொன்றும் இன்ன தொடர் எனக் கூறுக.

# IV. புணர்ச்சி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆட | + கண்டேன் | = | ஆடக் கண்டேன் |
| | ஓட | + சென்றேன் | = | ஓடச் சென்றேன் |
| | வர | + பார்த்தேன் | = | வரப்பார்த்தேன் |
| | நிற்க | + கண்டேன் | = | நிற்கக்கண்டேன் |
| | தூங்க | + செல் | = | தூங்கச்செல் |
| | படிக்க | + தங்கு | = | படிக்கத்தங்கு |

ஆட, ஓட, வர, நிற்க, தூங்க, படிக்க என்றாற் போல வரும் அகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | ஆடி | + பார் | = | ஆடிப்பார் |
| | ஓடி | + காண் | = | ஓடிக்காண் |
| | பாடி | + தொழு | = | பாடித்தொழு |
| | நாடி | + காண் | = | நாடிக்காண் |
| | அன்றி | + காணல் | = | அன்றிக்காணல் |
| | இன்றி | + தேடல் | = | இன்றித் தேடல் |
| | (இது) பற்றி | + பேசு | = | (இது) பற்றிப் பேசு |

ஆடி, ஓடி, தூங்கி, பாடி, நாடி, அன்றி, இன்றி, பற்றி என்றாற்போல் வரும் இகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | எல்லா | + பிள்ளைகள் | = | எல்லாப்பிள்ளைகளும் |
| | நாலா | + பக்கங்கள் | = | நாலாப்பக்கங்களும் |
| | (பல)வித | + பைகள் | = | (பல)விதப் பைகள் |
| | (பல)வகை | + சட்டைகள் | = | (பல)வகைச்சட்டைகள் |

எல்லா, நாலா, வித, வகை இவற்றின் முன் க, ச, த, ப மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | வந்த | + கண்ணகி | = | வந்த கண்ணகி |
| | போன | + சண்டை | = | போன சண்டை |

சிரிக்கின்ற + தாய் = சிரிக்கின்ற தாய்
படித்த + பையன் = படித்த பையன்

வந்த, போன, சிரிக்கின்ற, படித்த என்றாற்போல வருகின்ற பெயரெச்சங்களின் முன் வரும் க, ச, த, ப மிகா.

5. வந்து + காண் = வந்து காண்
நுழைந்து + தேடு = நுழைந்து தேடு
செய்து + பேசு = செய்து பேசு

வந்து, நுழைந்து, செய்து என்றாற்போல வரும் உகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் க, ச, த, ப மிகா.

6. வாழை + பழம் = வாழைப்பழம்
நரி + குறவன் = நரிக்குறவன்
குடி + கூலி = குடிக்கூலி
வாடை + காற்று = வாடைக்காற்று

உயிரீற்றின் முன் க, ச, த, ப மிகுந்தன.

7. கல் + சட்டி = கற்சட்டி
பல் + பொடி = பற்பொடி

'ல்' என்பது க, ச, த, ப முன் 'ற்' ஆகத் திரிந்தது.

பல் + மாலை = பன்மாலை — ல்-ன் ஆகத் திரிந்தது

8. வாள் + போர் = வாட்போர்—'ள்'-'ட்' ஆனது.
முள் + முனை = முண்முனை—'ள்'-'ண்' ஆனது.

9. மனம் + களித்தான் = மனங்களித்தான்.
மனம் + சலித்தான் = மனஞ்சலித்தான்
பணம் + தந்தார் = பணந்தந்தார்.

க, ச, த-க்களுக்குமுன் வந்த ம், முறையே ங், ஞ், ந் ஆகத் திரிந்தது.

## குற்றியலுகரப் புணர்ச்சி

(ட்+உ) (ட்+உ)
↓ ↓

**1. குற்றியலுகரம்:** படு, பாடு—இவ்விரண்டையும் உச்சரித்துப் பாருங்கள்: முதல் டுவ்விலுள்ள உகரத்தைவிட இரண்டாம் டுவ்விலுள்ள உகரம் ஓசையிற் குறைந்து இயல்வதைக் காணலாம். இயல்பான குறில் ஒரு மாத்திரை ஓசை உடையது. ஆதலால் முதல் உகரம் ஒரு மாத்திரை ஓசை உடையது. அதை விடக் குறைந்து இயலும் இரண்டாம் உகரம் அரை மாத்திரை ஓசை உடையது. இவ்வாறு குறைந்து இயலும் உகரம் குற்றியல் உகரம் எனப்படும்.

குற்றியல் உகரம் தனி நெட்டெழுத்துக்குப் பின்னும், இரண்டு முதலிய எழுத்துக்களுக்குப் பின்னும் சொல்லின் கடைசியில் வல்லின மெய்களின்மேல் ஏறிவரும்.

**2. குற்றியலுகர வகை:** இக்குற்றியலுகரம் ஈற்றுக்கு அயல் எழுத்தை நோக்க ஆறுவகைப்படும். கீழ்வரும் உதாரணங்களைக் காண்க.

ட்+உ
(1) பட்டு ↓ வன்றொடர்க் குற்றியலுகரம்.
↓
(வல்லினம்)

ட்+உ
(2) தொண்டு ↓ மென்றொடர்க் குற்றியலுகரம்.
↓
(மெல்லினம்)

த்+உ
(3) வீழ்து ↓ இடைத்தொடர்க் குற்றியலுகரம்.
→
(இடையினம்)

ட்+உ
(4) மாடு ↓ நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.
↓
(தனி நெடில்)

ற்+உ
(5) பயறு ↓ உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.
↓
(ய்+அ+உயிர்)

த்+உ
(6) அஃது ↓ ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.
↓
(ஆய்தம்)

3. முற்றியலுகரம்: படு, நுங்கு—டுவ்வில் உள்ள உகரமும், நுவ்வில் உள்ள உகரமும் ஒரு மாத்திரை ஓசை உடையவை. இங்ஙனம் ஒரு மாத்திரை ஓசை உடைய உகரம் முற்றியல் உகரம் எனப்படும்.

4. குற்றியலிகரம்:

நாடு + யாது = நாடியாது
பட்டு + யாது = பட்டியாது
குரங்கு + யாது = குரங்கியாது

நாடு, பட்டு முதலிய சொற்களின் ஈற்றிலுள்ள குற்றியலுகரம், வருமொழி முதலில் யகரம் வந்ததால் இகரமாகத் திரிந்தது. இங்ஙனம் திரியும் இகரம் குற்றியலிகரம் எனப்படும். இதன் மாத்திரை அரை.

**5. குற்றியலுகரப் புணர்ச்சி**

(1) காசு + இல்லை = காசில்லை
பட்டு + உண்டு = பட்டுண்டு

இவற்றால், குற்றியலுகரத்தின் முன் வருமொழி முதலில் உயிர் வரின், குற்றியலுகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக் கெடும் என்பது தெரிகிறது.

(2) நாடு + யாது = நா (ட்+உ)+யாது
= நா (ட்+இ)+யாது
= நாடியாது
பட்டு + யாது = பட் (ட்+உ)+யாது
= பட் (ட்+இ)+யாது
= பட்டியாது

இவ்வாறு வருமொழி முதலில் யகரம் வரின், குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரியும்.

(3) செலவு+ஆயிற்று=செல(வ்+உ)+ஆயிற்று
=செல+வ்+ஆயிற்று
=செலவாயிற்று

வருமொழி முதலில் உயிர் வரின், குற்றியலுகரம் போலவே, முற்றியலுகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக் கெடும் என்பதை அறிக.

(4) செலவு+யாது = செல(வ்+உ)+யாது
= செல(வ்+இ)+யாது
= செலவியாது

ய வரின், குற்றியலுகரம் போலவே, முற்றியலுகரம் சில இடங்களில் இகரமாகத் திரியும்.

(5) எழுத்து+கோணல் = எழுத்துக்கோணல்
(வேற்றுமைப் புணர்ச்சி)
எழுத்து+சிறியது = எழுத்துச்சிறியது
(அல்வழிப் புணர்ச்சி)

கழுத்து + பட்டை = கழுத்துப்பட்டை
(வேற்றுமைப் புணர்ச்சி)
கழுத்து + குறுகியது = கழுத்துக்குறுகியது
(அல்வழிப் புணர்ச்சி)

இங்ஙனம் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் மிகும்.*

(6) 1. நண்டு + கால் = நண்டுக்கால்
குரங்கு + தலை = குரங்குத்தலை } வேற்றுமைப் புணர்ச்சி

2. நண்டு + பெரியது = நண்டு பெரியது
குரங்கு + பெரியது + குரங்கு பெரியது } அல்வழிப் புணர்ச்சி

இவ்வாறு மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகும்; அல்வழியில் மிகா.

(7) ஆறு + பாலம் = ஆற்றுப்பாலம்
காடு + பாதை = காட்டுப்பாதை
சேறு + பாக்கம் = சேற்றுப்பாக்கம்
ஆடு + கால் = ஆட்டுக்கால்
வயிறு + வலி = வயிற்றுவலி
சோறு + பை = சோற்றுப்பை

இவ்வாறு நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றிய

*1. வேற்றுமை உருபு இடையில் மறைந்தோ, வெளிப்பட்டோ வரச் சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

2. எவ்வகை உருபும் மறைந்து வராமல் இரண்டு சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சி எனப்படும்.

(அல்வழி - வேற்றுமை அல்லாத வழி)

லுகரங்களில் உள்ள டகர, றகர மெய்கள் வருமொழி யோடு சேரும்போது பெரும்பாலும் இரட்டிக்கும்.

### பயிற்சி

1. கீழ்வரும் சொற்களைப் புணர்த்திக் கூறுக :—
   ஆட + பார், நிற்க + காண், படிக்க + பாடுபடு, ஓடி + சேர், ஆடி + காண், (அவை) பற்றி + சொல்.
2. கீழ்வருவனவற்றைப் புணர்த்திக் காட்டுக :—
   வாழை + காய், நரி + தோல், பல் + மணி, வாள் + போர், பணம் + தா.
3. எவற்றின் முன்வரும் க, ச, த, ப மிகா? உதாரணங்கள் தருக.
4. குற்றியலுகரம் யாது? உதாரணம் கொண்டு விளக்குக.
5. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? உதாரணம் தந்து விளக்குக.
6. முற்றியலுகரத்தையும், குற்றியலிகரத்தையும் உதாரணம் கொடுத்துத் தெளிவிக்க.
7. பின்வருவனவற்றைப் புணர்த்தி விதி கூறுக :—
   மாசு + உண்டு, காடு + யாது, நெசவு + ஆயிற்று, கதவு + யாது.
8. அல்வழிப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி—இவற்றை விளக்கி உதாரணம் தருக.
9. பின்வருவன எவ்வாறு புணரும்?
   குரங்கு + கால், குரங்கு + சிறியது, கழுத்து + பட்டை, எழுத்து + பெரியது, ஆறு + வழி, கயிறு + கட்டில், வயிறு + கட்டி, மாடு + கொம்பு, வீடு + வேலை.

# V. அணிகள்

## 1. தற்குறிப்பேற்ற அணி

1. தன் மரபில் வந்த இராமனது வரலாற்றை நாம் படித்துக்கொண்டு இருப்பதால் நம்மைப் பாராட்டுவான் போலச் சூரியன் தன் கிரணங்களை நம் மீது வீசுகிறான்.

பாடம் நடக்கும் வகுப்பில் சன்னல் வழியே சூரியனுடைய கிரணங்கள் வகுப்பில் தாராளமாக நுழைகின்றன. இவ்வாறு இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சியில் கவிஞன் **தன்** குறிப்பை ஏற்றிச் சொல்லுதல் **தற்குறிப்பேற்ற** அணி எனப்படும்.

2. திரௌபதியை மணக்கச் சென்ற பாண்டவர் காட்டு வழியே போனபோது, 'திரௌபதியின் திரு மணத்திற்கு அரசர் எல்லோரும் வந்துவிட்டனர். நீங்கள் விரைந்து வாருங்கள்' என்று சொல்வன போலக் குயில்கள் கூவின.

காட்டில் குயில் கூவுதல் இயற்கை; அந்த இயற்கை நிகழ்ச்சியில் புலவன் தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருத்தல் காண்க. இங்ஙனம் கூறுதல் **தற் குறிப்பேற்ற அணி.**

## 2. இயல்பு நவிற்சி அணி

இந்த அரண்மனை மிக்க உயரம்—இஃது உள் ளதை உள்ளவாறு கூறுவது; ஆதலால் இயல்பு நவிற்சி அணி அல்லது தன்மை அணி எனப்படும்.

### 3. உயர்வு நவிற்சி அணி

இந்த அரண்மனை மிக்க உயரம்—என்பதற்குப் பதிலாக, இந்த அரண்மனை மேகமண்டலத்தை அளாவி நிற்கிறது எனக் கூறுதல் **உயர்வு நவிற்சி அணி** எனப்படும்.

### 4. முரண் தொடை அணி

" இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

**இக்குறளில்** (1) முதல் வரியில் **இனிய—இன்னாத** என்பன ஒன்றுக்கு ஒன்று முரண்.

(2) இரண்டாம் வரியில் **கனி—காய்** என்பன ஒன்றுக்கு ஒன்று முரண்.

இவ்வாறு செய்யுளில் வருதல் **முரண் தொடை அணி** எனப்படும். (முரண் - மாறுபாடு)

## VI. நிறுத்தற் குறிகள்

நீங்கள் சென்ற இருவகுப்புக்களிலும் பல நிறுத்தற் குறிகளைப் பற்றி அறிந்தீர்கள் அல்லவா? இந்த வகுப்பில் மேலும் சிலவற்றை அறிக.

### 1. கோடு இடுதல்

— கோடு இடுதல்

1. (1) நீ, நான் சொன்னபடி நடந்திருந்தால் — அதை இப்பொழுது எண்ணிப் பயன் யாது?

(2) நீ தமிழிசையில் வல்லவனாக இருந்ததலுக்கு, அண்ணாமலை அரசர் இப்பொழுது உயிருடன்

இருப்பாராயின் — அதை இப்பொழுது நினைந்து பயனில்லை.

இவ்வாறு ஒன்றைக் கூறி வருகையில் திடீரெனக் கருத்து மாறுபடின்—இக்கோட்டை இடுகிறோம்.

2. (1) அநாதியான அவனுக்கு உணவு, உடை ஏன் ?—எல்லாம் உதவினேன்.

(2) அவன் சிறந்த ஒழுக்க முடையவன் என்று மதித்து நானும் என் மனைவியும், ஏன் ? — என் பிள்ளைகள் உட்பட எல்லோருமே அவனுக்குத் தொண்டு செய்தோம்.

இவ்வாறு மறந்த செய்தியை நினைவுக்குக் கொண்டுவரும் முறையில் விளக்கவும் — இக்குறி இடப்படுகின்றது.

## 2. இடைப் பிற வைப்புக் குறிகள்

— — இவை இடைப் பிற வைப்புக் குறிகள்.

1. நான் என்ன செய்வேன் — என் போதாத காலம் — இவ்வாறு தவறு நேர்ந்துவிட்டது.

2. ஒழுக்கத்திற் சிறந்த உங்களைச் சந்திக்கும் பொழுதெல்லாம் — நீங்கள் நான் கூறுவதை நம்பினும் சரி, நம்பாவிடினும் சரி — நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

மேல் வாக்கியங்களில் 1. ‘என் போதாதகாலம்,’ 2. ‘நீங்கள் நான் கூறுவதை நம்பினும் சரி, நம்பா விடினும் சரி’ என்பன முதலில் சொல்ல நினைத்த செய்திகளுக்கு அப்பாற்பட்டவை. ஆயினும் சொன் னவர் அவற்றைத் தாம் முதலில் சொல்ல நினைந்த செய்திகளுக்கு இடையில் வைத்துக் கூறினர்.

ஆதலால் அவை வேறுபட்டவை என்பதைக் காட்ட, அவற்றுக்கு முன்னும் பின்னும் கோடுகள் இட வேண்டிய நிலை உண்டானது. இக்கோடுகள் முதலில் கூற நினைந்த வாக்கியத்திற்கு இடையில் வைக்கப் பட்டுள்ளமையால், இடைப் பிற வைப்புக் குறிகள் எனப் பெயர் பெற்றன.

## 8. பிறைக்குறிகள்

( ) இவை பிறைக்குறிகள்

1. நான் நேற்று உன்னிடம் சொன்னது (அதாவது, நாளை மாலை நாம் திருப்பதிக்குப் போகலாம் என்றது) உன் நினைவில் இருக்கிறதா ?

இவ்வாறு ஒன்றை விளக்கும் தேவை ஏற்படும் போது பிறைக்குறிகள் இடப்படும்.

2. பின் வருவனவற்றைக் கேட்டுள்ளவாறு மாற்றி அமைக்க :—

(1) அவள் சிறந்த பாடகி. (இவ்வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றுக.)

(2) கணபதி கணக்குப் போட்டான். (இவ் வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.)

இங்ஙனம் ஒரு தேவையைக் குறிக்கையில் பிறைக்குறிகள் இடப்படும்.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமுடைய சொற்களை அமைத்து எழுதுக :—

(1) வீமன் சிறந்த ——. (வீரன், பேடி)

(2) இலக்குமி —— உரியவள். (செல்வத்திற்கு, வறுமைக்கு)

இவ்வாறு பயிற்சிகள் தரப்படும் பொழுதும் பிறைக்குறிகள் இடப்படும்.

4. (1) இவள் மலை அரசன் மகள்—(இமய) மலை அரசன் மகள்.

(2) இவர் குலோத்துங்க சோழர்—அதாவது (மூன்றும்) குலோத்துங்க சோழர்

இவ்வாறு பொருள் விளக்கம் செய்கையில், சொற்களை வருவிக்கும் தேவை உண்டாகும் பொழுது பிறைக்குறிகள் இடப்படும்.

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற இடங்களில் காற்புள்ளி முதலியவற்றை இடுக :—

(1) கண்ணா எப்பொழுது வந்தாய்
(2) என்ன அப்பா உன்னைக் காண்பதே அரிதாய் இருக்கிறதே
(3) கந்தன் சந்தைக்குப் போனான் மூன்று ரூபாய் கொடுத்தான் ஒரு கட்டுக் கரும்பு வாங்கினான்

2. தக்க இடங்களில் தக்க மேற்கோள் குறிகளை இடுக :—
முருகா ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று ஔவையார் கூறி உள்ளார் அல்லவா என்று என் தாயார் என்னைக் கேட்டார்

3. ஏற்ற இடங்களில் ஒற்றைக்கோடு, இடைப்பிற வைப்புக் குறிகள், பிறைக் குறிகள் இவற்றை இடுக :—

(1) அவன் சொன்னதையா கேட்கிறீர்கள்? அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்
(2) என் திருமணத்தை என் பாட்டியார் இருந்து பார்த்திருப்பாரானால் அதைப்பற்றி இப்பொழுது எண்ணிப் பயன் யாது
(3) தம்பி நீ அவரிடம் போகும்பொழுது நான் சொல் வதைக் கேள் மிக்க மரியாதையுடன் போக வேண்டும்

## தேர்வுக்குரிய விஞக்கள்

1. கீழ்வரும் சொற்களில் உள்ள அகச்சுட்டு, புறச்சுட்டு, அகவிஞ, புறவிஞ இவற்றைச் சுட்டிக் காட்டுக :—

அண்ணி, அவள், அப்பெண், இளேயவள், இம்மனிதன், இவர், உவ்வீடு, உலக்கை, எவன், எவ்வூர், யாது.

2. கீழ்வரும் பெயர்களுள் இடுகுறிப் பெயர் களேயும் காரணப் பெயர்களேயும் எடுத்து எழுதுக :—

காற்ருடி, சுருள், தாழ்வடம், மனேவி, மலே, மன்னன், அம்பு, ஆறு.

3. கீழ்வரும் வழூஉச் சொற்களேத் திருத்தி எழுதுக :—

இடது கை, சுவற்றில், துகையல், எண்ணே, புஞ்சை, வேண்டாம், சீக்காய், நேத்து, சிகப்பு.

4. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதலேத் தக்க உதாரணங்களால் விளக்குக.

5. கீழ்வரும் விஞமுற்றுக்களில் உள்ள காலம் காட்டும் இடைநிலேகளேச் சுட்டுக :—

போஞன், போயது, ஓடியது, காண்பேன், வருவாள், நடிக்கிருன், வென்ருர்.

6. கீழ்வரும் உதாரணங்களில் உள்ள இடைச் சொற்களேயும் உரிச்சொற்களேயும் எடுத்துக் கூறுக :—

அன்னம் போன்ற நடை, அவள் வேறு ஒருத்தி, உறுதுணே, சாலப் பேசிஞன், அவனும் இவனும் தோழர்கள், கடிமலர்.

7. கீழ்வரும் சொற்களைப் பிரித்துச் சாரியைகளை எடுத்துக் காட்டுக :—

மரத்தினை, வீட்டுக்கு, பார்த்தனள், பதின்மூன்று, புளியம்பழம், பனங்காய், ஜுரத்துக்கு, விஷத்தை, பலத்திற்கு, வரத்தால், பெரியவன்.

8. அன்னம் வருகிறாள், வீட்டுக்கு வெள்ளை அடி, வற்றல் உண்க, தெரு சிரிக்கிறது, மருக்கொழுந்து நட்டான்—இவற்றில் உள்ள ஆகுபெயர்களைச் சுட்டுக.

9. வெளிப்படை, குறிப்பு—இவற்றை உதாரணத்தால் தெளிவு படுத்துக.

10. இடக்கர் அடக்கல், குழூஉக்குறி, இலக்கணப் போலி, மரூஉ—இவற்றை விளக்கி உதாரணங்கள் தருக.

11. தொகைநிலைத் தொடர், தொகா நிலைத் தொடர்—இவற்றை உதாரணம் கொண்டு விளக்குக.

12. கீழ்வரும் தொடர்கள் இன்னவை என விளக்கிக் கூறுக :—

பல் விளக்கு, கையெழுத்து, கூலிவேலை, வீடுநீங்கு, அவள் புத்தகம், காட்டுப் பூனை, பால் நிலவு, கரும்பலகை, இட்டலி சாம்பார், ஆடுபாம்பு, கமலம் வந்தாள், மிகப் பெரியவள், பாடுபாடு, அக்கா! வா, படித்துப் பார்த்தாள், குனிந்தான் குப்பன்.

13. கீழ்வரும் சொற்களைப் புணர்த்தி விதி கூறுக :—

பூத்து + காய்த்தது, நாடு + புகழ், கல் + பதுமை, காடு + வழி, ஆறு + பாதை,

வாழை + பூ, குரங்கு + படை, பட்டு + துணி, பஞ்சு + ஆலை.

14. இராமன் காடு சென்றபோது வழியில் இருந்த மலர்ச் செடிகள், மலர்களிலிருந்து நீரைச் சிந்திய காட்சி, இராமன் பிரிவுக்காக அச்செடிகள் கண்ணீர் உகுத்தனபோன்று இருந்தது—இதில் உள்ள அணியை விளக்கி எழுதுக.

15. புலியும் மாடும் ஒரு துறையில் நீர் பருகும்—இதில் உள்ள அணியைத் தெளிவாக்குக.

16. சிவந்த உதடும், கரிய விழியும்—இதில் உள்ள முரண்தொடை அணியை விளக்கிக் கூறுக.

17. இடைப்பிறவைப்புக் குறிகள், பிறைக் குறிகள்—இவற்றை உதாரணங்களில் இட்டுக் காட்டுக.

# இளைஞர் இலக்கணம்

## இரண்டாம் புத்தகம்

(சிறப்புப் பகுதி)

4, 5, 6-ஆம் படிவங்கட்கு உரியது

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., Ph.D.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

பதிப்புரிமை]    1954    [விலை ரூ. 1-4-0

முதற் பதிப்பு—1953
மூன்றாம் பதிப்பு—ஜூலை 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
In their R. C. No. 3, dated 7-6-1954

Kabeer Printing Works, Madras (2570)

# முகவுரை

இளைஞர் இலக்கணம் என்னும் பெயருடன் வெளிவரும் இவ்விலக்கண நூல் 4, 5, 6-ஆம் படிவங்களில் சிறப்புத் தமிழ் கற்கும் மாணவர்க்கென்று எழுதப்பெற்றது. அம்மாணவர்க்கே சிறப்பு முறையில் இலக்கணம் கற்பித்தல் வேண்டும் என்பது பாடத்திட்டத்தின் விதி. ஆதலின், அதற்கென்று அமைக்கப்பெற்ற பாட இயலை (Syllabus) உளங்கொண்டே இந்நூல் எழுதப்பெற்றது.

மாணவர்க்கு நன்கு தெரிந்த உதாரணங்களைக் கொண்டே, மிக எளிய நடையில், இலக்கணச் செய்திகள் இதன்கண் விளக்கப்பெற்றுள்ளன. பண்பட்ட ஆசிரியர்கள் பாராட்டிப் பேசும்—முதலில் உதாரணங்களைக் கொடுத்து அவற்றிலிருந்து விதிகளை அறியும்—முறையில் (Inductive Method) இந்நூற் செய்திகள் தெளிவாக வரையப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதியிலும், சில அதிகாரங்களில் இடையிலும் இறுதியிலும் பயிற்சிகள் தரப்பெற்றுள்ளன. இவையன்றி, ஒவ்வொரு படிவத்தின் ஈற்றிலும் தேர்வுக்குரிய வினாக்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றை மாணவர் மதித்துச் செய்வராயின், இலக்கண அறிவு நிரம்பப் பெறுவர்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை

## நான்காம் படிவம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | எழுத்து— | | |
| | 1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள் | ... | 1 |
| | 2. மாத்திரை | ... | 1 |
| | 3. முதல் எழுத்து—சார்பெழுத்து | ... | 2 |
| | 4. போலி | ... | 5 |
| II. | சொல்— | | |
| | 1. (1) தமிழில் வடசொல் | ... | 6 |
| | (2) தத்திதாந்த நாமம் | ... | 7 |
| | 2. பெயர்ச்சொல்— | | |
| | (1) ஆகுபெயர் (வகைகளிற் சில) | ... | 8 |
| | (2) வேற்றுமை | ... | 9 |
| | 3. வினைச்சொல்— | | |
| | (1) வினைமுற்று வகைகள் | ... | 15 |
| | (2) எச்சவினை வகைகள் | ... | 21 |
| | (3) எச்சங்களின் முடிபுகள் | ... | 22 |
| | (4) தன்வினை—பிறவினை | ... | 23 |
| | (5) செய்வினை—செயப்பாட்டுவினை | ... | 24 |
| | 4. இடைச்சொல்— | | |
| | (1) ஏகார இடைச்சொல் | ... | 26 |
| | (2) ஓகார இடைச்சொல் | ... | 27 |
| | (3) 'மற்று' என்னும் இடைச்சொல் | ... | 28 |
| | (4) 'தான்' என்னும் இடைச்சொல் | ... | 28 |
| | 5. உரிச்சொல்— | | |
| | (1) ஒரு பொருள் குறித்த பல சொல் | ... | 30 |
| | (2) பல பொருள் குறித்த ஒரு சொல் | ... | 30 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| III. | பொது— | |
| | 1. தொகைநிலைத்தொடர், தொகா நிலைத் தொடர் ... | 31 |
| | 2. தொகைநிலைத்தொடர்—வகை ... | 31 |
| | 3. தொகாநிலைத்தொடர்—வகை ... | 34 |
| | 4. குறிப்பும் வெளிப்படையும் ... | 34 |
| | 5. வழுவமைதிகள் (திணை, பால், இடம்) ... | 36 |
| IV. | புணர்ச்சி— | |
| | 1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ... | 38 |
| | 2. இயல்பு புணர்ச்சி ... | 42 |
| | 3. தீர்க்கசந்தி முதலியன ... | 44 |
| V. | யாப்பு— | |
| | 1. நால்வகைப் பாக்களின் பொது இலக்கணம் ... | 46 |
| | 2. அசை, சீர்—இலக்கணமும் வாய்பாடும் ... | 49 |
| VI. | அணி— | |
| | 1. உவமையணி—சில வகைகள் ... | 54 |
| | 2. உருவக அணி—சில வகைகள் ... | 55 |
| | 3. வேற்றுப்பொருள் வைப்பு அணி ... | 56 |
| | 4. தேர்வுக்குரிய வினாக்கள் ... | 57 |


## ஐந்தாம் படிவம்


| | | |
|---|---|---|
| I. | எழுத்து— | |
| | 1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு ... | 62 |
| | 2. உடனிலை மயக்கம்-வேற்றுநிலை மயக்கம் ... | 63 |
| II. | சொல்— | |
| | 1. பெயர்ச்சொல்— | |
| | (1) விளி ஏற்கும்போது மாறுபடும் முறை ... | 64 |
| | (2) விளி ஏலாத பெயர்கள் ... | 64 |
| | (3) ஆகு பெயர்கள் ... | 65 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | 2. வினைச்சொல்— | | |
| | (1) செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று | ... | 68 |
| | (2) பொது வினைகள் | ... | 68 |
| | (3) எச்சத் திரிபு | ... | 69 |
| | (4) உளப்பாட்டுப் பன்மை வினை முற்றுக்கள் | ... | 70 |
| | 3. இடைச்சொல்— | | |
| | (1) 'மன்' என்னும் இடைச்சொல் | ... | 72 |
| | (2) 'என' என்னும் இடைச்சொல் | ... | 73 |
| | (3) 'தில்' என்னும் இடைச்சொல் | ... | 73 |
| | (4) 'அம்ம' என்னும் இடைச்சொல் | ... | 73 |
| | (5) 'மோ' 'மதி' என்னும் இடைச் சொற்கள் | ... | 74 |
| | (6) மாது, போலும், ஆம், தான், தாம் என்னும் இடைச்சொற்கள் | ... | 74 |
| | 4. உரிச்சொல் | ... | 75 |
| III. | பொது— | | |
| | 1. தொகையால் பொருள் சிறந்து நிற்கு மிடம் | ... | 76 |
| | 2. மரபு | ... | 77 |
| | 3. வழுவமைதிகள் : கால, மரபு வழு வமைதிகள் | ... | 79 |
| | 4. ஒரு பொருட் பன்மொழி முதலியன | ... | 81 |
| | 5. உபலட்சணம் | ... | 83 |
| IV. | புணர்ச்சி— | | |
| | 1. உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி | ... | 84 |
| | 2. உயிரீற்றில் இயல்பாக நிற்பவை | ... | 85 |
| V. | யாப்பு— | | |
| | 1. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல் | ... | 89 |
| | 2. தளை (இலக்கணமும் வகையும்) | ... | 90 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 3. | வெண்டளையின் இலக்கணம் | ... | 92 |
| 4. | வெண்பா வகையும் ஆசிரியப்பா வகையும் | .. | 92 |
| 5. | ஆசிரிய விருத்தம் | ... | 96 |
| VI. | அணி— | | |
| 1. | வேற்றுமையணி | ... | 97 |
| 2. | வஞ்சப்புகழ்ச்சியணி | ... | 98 |
| 3. | நிரல்நிறையணி | ... | 99 |
| VII. | பொருள் இலக்கணம்— | | |
| 1. | அகப்பொருள் | ... | 100 |
| 2. | புறப்பொருள் | ... | 101 |
| 3. | தேர்வுக்குரிய வினாக்கள் | ... | 102 |


## ஆறும் படிவம்


| | | | |
|---|---|---|---|
| I. | எழுத்து— | | |
| 1. | ஐகாரக் குறுக்கம் முதலியன | ... | 106 |
| 2. | எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு | ... | 107 |
| 3. | மெய்ம்மயக்கம் | ... | 108 |
| II. | சொல்— | | |
| 1. | ஓரெழுத்து ஒரு மொழி | ... | 111 |
| 2. | இலக்கணை | ... | 112 |
| 3. | பெயர்ச்சொல்— | | |
| (1) | விளிவேற்றுமையில் அடையும் விகாரங்கள் | ... | 112 |
| (2) | ஐம்பால் பெயர் விகுதிகள் | ... | 115 |
| 4. | வினைச்சொல்— | | |
| (1) | ஐம்பால் வினைமுற்றுக்கள் | ... | 117 |
| (2) | சினைவினை-முதல் வினை | ... | 117 |
| (3) | ஆக்க வினை | ... | 118 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 5. | இடைச்சொல்— | | |
| | (1) ' அந்தில் ' என்னும் இடைச்சொல் | ... | 119 |
| | (2) ' ஆங்கு ' என்னும் இடைச்சொல் | ... | 119 |
| | (3) ' மா ' என்னும் இடைச்சொல் | ... | 119 |
| | (4) முன்னிலை அசைச் சொற்கள் | ... | 119 |
| III. | பொது— | | |
| 1. | இடைப் பிறவரல் | ... | 121 |
| 2. | வினா வகை | ... | 122 |
| 3. | விடை வகை | ... | 122 |
| 4. | அடைமொழி | ... | 123 |
| 5. | பொருள்கோள் | ... | 124 |
| IV. | புணர்ச்சி— | | |
| 1. | மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி | ... | 130 |
| 2. | வினா—சுட்டுக்களின் புணர்ச்சி | ... | 131 |
| 3. | செய்யுளுக்கு ஏற்ற சிறப்பு விதிகள் சில | ... | 132 |
| 4. | இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி | ... | 133 |
| V. | யாப்பு— | | |
| 1. | சீர் பிரித்துத் தளை கூறுதல் | ... | 135 |
| 2. | எதுகை—மோனை வகைகள் | ... | 138 |
| 3. | கட்டளைக் கலித்துறை | ... | 141 |
| 4. | பா இனங்களின் பொது இலக்கணம் | ... | 142 |
| VI. | அணி— | | |
| 1. | பிறிது மொழிதல் அணி | ... | 147 |
| 2. | கருத்துடை அடைகொளி அணி | ... | 148 |
| VII. | பொருள் இலக்கணம்— | | |
| 1. | அகப்பொருள்—முதல், கரு, உரிப் பொருள் (இவை எனல்) | ... | 149 |
| 2. | புறப்பொருள்—திணைகள் (சுருக்கமாக) | ... | 154 |
| | தேர்வுக்குரிய வினாக்கள் | ... | 156 |

# இளைஞர் இலக்கணம்

## நான்காம் படிவம்

## I. எழுத்து

### 1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள்

1. ககரம், நகரம் டகரம் என மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியை பெற்றுவரும்.

2. ஆகாரம், ஐகாரம், ஔகாரம் என உயிர் நெட்டெழுத்துக்கள் 'காரம்' என்னும் சாரியை பெறும்.

ஐகான், ஔகான் என ஐயும் ஔவும் 'கான்' சாரியை பெற்றுவரும்.

3. அகாரம், அஃகான், அகரம்; மகாரம், மஃகான், மகரம் என உயிர்க் குற்றெழுத்தும், உயிர்மெய்க் குற்றெழுத்தும் கரம், காரம், கான் என்னும் சாரியைகள் பெறும்.

### 2. மாத்திரை

நாம் ஒன்றை வாசிக்கும்பொழுது பொருள் விளங்குவதற்காகச் சில இடங்களில் நிறுத்தி வாசிக்கிறோம். அவ்வாறு நிறுத்தவேண்டும் இடங்களில் 'இவ்வளவு நேரம் நிறுத்தவேண்டும்' என்பதை அறிவிக்கச் சில குறிகள் உண்டு. அக்குறிகளைப் பற்றி

யும், அவற்றுக்குரிய கால அளவைப் (மாத்திரையைப்) பற்றியும் கீழ் வகுப்புக்களில் படித்திருக்கிறீர்கள் அல்லவா ?

கண் இமைத்தல் அல்லது கைநொடித்தலுக்கு இயல்பாக உண்டாகும் நேரமே மாத்திரை என்பது.

1. க போன்ற குற்றெழுத்து மாத்திரை ஒன்று; ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்று.

2. கா போன்ற நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு.

3. உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று.

4. க் போன்ற மெய்யெழுத்துக்கும், குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும், ஆய்த எழுத்திற்கும் தனித்தனி மாத்திரை அரை.

5. மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை கால்.

## 8. முதல் எழுத்து—சார்பெழுத்து

1. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் முதல் எழுத்துக்கள் எனப்படும்.

2. மேலே சொல்லப்பட்ட முதலெழுத்துக்களைச் சார்ந்து உண்டாகும் உயிர்மெய் எழுத்துக்களும், ஆய்த எழுத்தும், உயிர் அளபெடையும், ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்

தக் குறுக்கம் என்பனவும் சார்பு எழுத்துக்கள் எனப்படும்.

(1) உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் உயிர் மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறும் சார்பு எழுத்துக்கள் எனப்படும்.

(2) எஃகு, கஃசு, இருபஃது, அஃகிய, அஃகான், வஃகான் என மூன்று புள்ளி வடிவத்தை உடையதாய், குற்றெழுத்தின் முன்னதாய், உயிரோடு கூடிய வல்லெழுத்துக்கள் மேலதாய் வருவது **ஆய்த எழுத்து**.

(3) ஆஅ அளிய
உரூஅர் குறுநோய்.

இவ்வாறு செய்யுளில் இசை குறையும்பொழுது மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் நின்ற நெட்டெழுத்துக்கள் ஏழும், அவ்விசையை நிறைக்கத் தம் மாத்திரையில் மிக்கு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமை அறிதற்கு அவற்றின்பின் அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவின்கண் அறிகுறியாய் வரும். இது **உயிர் அளபெடை** எனப்படும்.

(4) இலங்ங்கு வெண்பிறை
எங்ங் கிறைவன்

செய்யுளில் இசை குறையும்பொழுது ஒரு குற்றெழுத்தின் கீழும், இரண்டு குற்றெழுத்தின் கீழுமாய், சொல்லின் இடையிலும் கடையிலும் நின்ற ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள என்னும் பத்து மெய்களும், ஆய்த எழுத்தும் அவ்வோசையை நிறைக்கத் தம் மாத்திரையில் மிக்கு ஒலிக்கும். இங்ஙனம் அளபெடுத்தன அறிதற்கு, அவற்றின்பின் அவ்வெழுத்துக்

களே அறிகுறியாய் எழுதப்படும். இது ஒற்றள பெடை எனப்படும்.

(5) குற்றியலுகரம் இன்னது எனக் கீழ்வகுப் புக்களிலேயே விளக்கப்பட்டுள்ளது.

(6) குற்றியலிகரமும் இவ்வாறே கீழ்வகுப்புக் களில் இடம் பெற்றுள்ளது அன்றோ?

(7) ஐப்பசி, மைப்புறம்—இவற்றிலுள்ள ஐகா ரம், தனக்கு இயல்பான இரண்டு மாத்திரையளவில் குறுகி ஒலிக்கிறது. மொழியின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடத்தும் முன்னும் பின்னும், இரு பக்கத்துமுள்ள எழுத்தின் தொடர்பால், தன் மாத்திரையில் குறுகி ஒலிக்கும் ஐகாரம், ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

(8) மௌவல், ஒளவையார் என வரும் சொற்களில் உள்ள ஒளகாரம், தன் இயல்பான இரண்டு மாத்திரையில் குறுகியதாகும். இது தனியே நிற்கும்பொழுது குறுகாது; மொழியின் முதலில் பின் வரும் எழுத்தின் தொடர்பால் தன் மாத்திரையில் குறுகும். இவ்வாறு குறுகும் ஒளகாரம், ஒளகாரக் குறுக்கம் எனப்படும்.

(9) மருளினு மெல்லா மருண்ம்.
திசையறி மீகானும் போன்ம்.

இவ்வாறு ணகர, னகரங்களில் ஒன்று நின்று தொடர்ந்திட அதன்முன் வரினும், வகரம் வந்து தொடர்ந்திட அதன்மேல் நிற்பினும் மகரம் தன் அரை மாத்திரையிற் குறுகும். இவ்வாறு குறுகும் மகரம் மகரக் குறுக்கம் எனப் பெயர் பெறும்.

(10) கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

என, லகார, ளகார ஈற்றுப் புணர்ச்சியினால் வரும் ஆய்தம் இரு பக்கத்திலுமுள்ள எழுத்தின் தொடர்பால் தன் மாத்திரையில் குறுகி ஒலிக்கும். இந்த ஆய்தம், ஆய்தக் குறுக்கம் என்று சொல்லப் படும்.

## 4. போலி

1. உலக்கை என்னும் சொல் கல்வியறிவற்ற மக்களால் ஒலக்கை என உச்சரிக்கப்படுகிறது; வைத்தியன் என்னும் சொல் வயித்தியன் என்று சொல்லப்படுகிறது; சாம்பல் என்பது நூல்களில் சாம்பர் என்று குறிக்கப்படும். இவ்வாறு ஒரே சொல்லிலுள்ள ஓரெழுத்து வேறோர் எழுத்தாக மாறி உச்சரிக்கப்பட்டாலும் அச்சொல் குறிக்கும் பொருள் ஒன்றாகவே இருக்கின்றது. இங்ஙனம் பொருள் மாறுபாடு இல்லாமல், ஆனால் அப்பொருளைக் குறிக்கும் சொல்லில் மட்டும் ஓரெழுத்துக்குப் பதிலாக வேறோர் எழுத்து வருதல், தொன்றுதொட்ட வழக்கமாக இருந்துவருகிறது. இங்ஙனம் வரும் எழுத்தைப் போலி எழுத்து என்று இலக்கண ஆசிரியர்கள் குறித்துள்ளனர்.

2. இப்போலி எழுத்து, மொழிக்கு (1) முதலில் இருக்குமாயின் மொழி முதற்போலி என்றும், (2) மொழியின் இடையில் இருக்குமாயின் மொழியிடைப்போலி என்றும், (3) மொழியின் இறுதியில் இருக்குமாயின் கடைப்போலி என்றும் பெயர் பெறும்.

(1) உலக்கை—ஒலக்கை<br>வைத்தியன்—வயித்தியன் } முதற்போலி

(2) அரசன்—அரைசன் இடைப்போலி

(3) பந்தல்—பந்தர்
சாம்பல்—சாம்பர் } கடைப்போலி

பயிற்சி

1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள் யாவை? ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் தருக.

2. மாத்திரை என்பது யாது? உதாரணம் தந்து விளக்குக.

3. ட, ழை, த், ஃ, பந்து (த்+உ), வீடியாது (ட்+இ)—இவ்வெழுத்துக்களுக்குத் தனித்தனி மாத்திரை யாது?

4. சார்பு எழுத்து—இத்தொடரை விளக்குக.

5. சார்பு எழுத்துக்கள் எவை? உதாரணம் தருக.

6. போலி என்பதனைத் தக்க உதாரணத்தால் விளக்குக.

7. முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி—இவற்றிற்கு இந்நூலில் இல்லாத வேறு உதாரணங்களைத் தருக.

# II. சொல்

## 1. (1) தமிழில் வடசொல்

ஆரம் (ஹாரம்), கயம் (கஜம்) என்பனபோன்ற சம்ஸ்கிருத சொற்கள் வட இந்தியாவிலிருந்து பல நூற்றாண்டுகட்குமுன் வந்து தமிழில் வழங்குகின்றவை. அவை தமிழகத்திற்கு வடக்கேயிருந்து வந்தமையால், வடசொற்கள் எனப்பட்டன.

1. கஞ்சம், காரணம், குங்குமம்—என்று தனக்குரிய உச்சரிப்போடு வழங்கும் வடசொல் தற்சமம் எனப்படும். (தத் - அதற்கு, சமம் - சமமானது.)

2. ராமா - இராமன், சீதா - சீதை எனத் தமிழ் நடைக்குப் பொருந்த விகாரம் அடைந்து, தமிழ் உச்சரிப்போடு தமிழில் வந்து வழங்கும் வடசொல்

தற்பவம் என்று சொல்லப்படும். (தத் - அதிலிருந்து, பவம் - பிறந்தது.)

3. ரங்கன்—அரங்கன்
ரங்கநாயகி—அரங்கநாயகி

இவ்வாறு ரகரத்தை முதலாகவுடைய வடசொல், ரகரத்திற்கு முன் அகரத்தைப் பெற்றுவரும்.

4. லாடம்—இலாடம்
லாவணம்—இலாவணம்
லாபம்—இலாபம்

இவ்வாறு லகரத்தை முதலாகவுடைய வடசொல், லகரத்திற்கு முன் இகரத்தைப் பெற்றுவரும்.

5. ராஜன்—இராஜன்
ராணி—இராணி
ரோமம்—உரோமம்
ருக்மிணி—உருக்மிணி

இவ்வாறு சில இடங்களில் ரகரம் வரும்பொழுது இகரமும், சில இடங்களில் உகரமும் முதலெழுத்தாக வரும்.

## (2) தத்திதாந்த நாமம்

(1) ஜனகன் மகள் ஜனகி அல்லது ஜானகி.

(2) துருபதன் மகள் துருபதை அல்லது திரௌபதை.

இவ்வாறு வழங்கும் நாமம் (பெயர்) தத்திதாந்த நாமம் என்று வடமொழி இலக்கணத்தில் பெயர் பெறும். இங்ஙனம் வரும் பெயர்களை உங்கள் பாடப் புத்தகத்திலிருந்து தொகுத்துவையுங்கள்.

# 2. பெயர்ச்சொல்

## (1) ஆகுபெயர்

(1) **மயில்**—ஒரு பறவையின் பெயர்.

(2) **மயில் வந்தாள்**—மயில் என்னும் பறவையின் பெயர், மயில்போன்ற சாயலையுடைய பெண்ணிற்கு உவமையாகிவந்தது.

இவ்வாறு ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருதல் ஆகு பெயர் எனப்படும். இவ்வாகுபெயர் பல வகைப்படும். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க :

1. தாமரை போன்ற முகம்—இங்குத் தாமரை என்பது தாமரை மலரை (சினையை)க் குறிக்கின்றது. இங்ஙனம் முதலின் பெயர் அதன் சினைக்கு ஆகிவருதல் முதலாகுபெயர் எனப்படும். இது பொருளாகு பெயர் என்றும் பெயர் பெறும்.

2. அவன் நற்செயலைக்கண்டு மதுரை பாராட்டுகிறது—இங்கு மதுரை என்னும் இடத்தின் பெயர், அங்குள்ள மக்களைக் குறிக்கின்றது. இங்ஙனம் ஓரிடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகுபெயர் எனப்படும்.

3. சித்திரை வந்தான்—இங்கு, சித்திரை என்பது, சித்திரை மாதத்தில் பிறந்தவனுக்குப் பெயராகி வந்தது. இங்ஙனம் ஒரு காலத்தின் பெயர் அக்காலத்துடன் தொடர்பு கொண்ட ஒரு பொருளுக்கு ஆகிவருதல் கால ஆகுபெயர் எனப்படும்.

4. வெற்றிலை நட்டான்—வெற்றிலை என்பது ஒரு சினையின் பெயர். அஃது இங்கு வெற்றிலைக் கொடிக்கு (முதலுக்கு)ப் பெயராகிவந்தது. இங்ஙனம்

ஒரு சினையின் பெயர் அதன் முதலுக்கு ஆகிவருவது சினை யாகுபெயர் எனப்படும்.

5. வீட்டிற்கு வெள்ளை அடித்தான்—இங்கு வெள்ளை என்னும் நிறத்தின் பெயர் அந்நிறத்தை யுடைய பொருளுக்கு ஆகிவந்தது. இவ்வாறு வருதல் குணவாகுபெயர் எனப்படும். இது பண்பாகு பெயர் என்றும் பெயர் பெறும்.

6. பொங்கல் உண்டாள்—பொங்கல் (பொங்கு தல்) என்னும் தொழிலின் பெயர், இங்கு, அத்தொழிலை யடைந்த பொருளுக்கு ஆகிவந்துள்ளது. இவ்வாறு வருதல் தொழிலாகுபெயர் எனப்படும்.

7. கழல் பணிந்தான்—கழல் என்பது வீரர் காலில் அணியும் சதங்கை. அப்பொருளின் பெயர் அது கட்டப்பட்டுள்ள காலிற்கு ஆகிவந்தது. இவ்வாறு ஓரிடத்திலுள்ள பொருளின் (ஸ்தானியின்) பெயர், அது உள்ள இடத்திற்கு ஆகிவருதல் (ஸ்தானி) தானியாகுபெயர் என்று கூறப்படும்.

## (2) வேற்றுமை

கண்ணன் என்னும் இயற்பெயர் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, கண்ணனை (ஐ), கண்ணனால் (ஆல்), கண்ண னுக்கு (கு), கண்ணனில் (இல்), கண்ணனது (அது) கண்ணனிடம் (இடம்), கண்ணா—எனப் பலவாறு பொருளில் வேறுபட்டு வரும். இவ்வாறு ஓர் இயற் பெயரை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். வேறுபடுத்தும் ஐ, ஆல், கு முதலிய உருபுகள் வேற்றுமை உருபுகள் என்று சொல்லப்படும்.

வேற்றுமை எட்டு வகைப்படும். அவற்றைக் கீழே காண்க :

**1.** முதல் வேற்றுமை—

(1) கம்பர் வந்தார்.
(2) நம் நாட்டுத் தலைவர் ஜவாஹர்.
(3) நேற்று இங்கு வந்தவர் யாவர் ?

இம்மூன்று வாக்கியங்களிலும் முறையே 'வந்தார்', 'ஜவாஹர்', 'யாவர்' என்பன பயனிலைகளாக வந்துள்ளன. இவற்றுள், (1) 'வந்தார்' என்பது வினைச்சொல்; (2) 'ஜவாஹர்' என்பது பெயர்ச்சொல்; (3) 'யாவர்' என்பது வினாச் சொல். எனவே கம்பர், தலைவர், வந்தவர் என்னும் மூன்று எழுவாய்களுக்கும் முறையே அவை பயனிலை ஆயின. இதிலிருந்து முதல் வேற்றுமைப் பெயர்—வினை, பெயர், வினா என்னும் மூவகைப் பயனிலைகளையும் கொள்ளும் என்பதை அறிக.

**2.** இரண்டாம் வேற்றுமை—

(1) கோச்செங்கணான் மாடக்கோயிலைக் கட்டினான்.

(2) பல்லவன் சாளுக்கியனது அரண்மனையை இடித்தான்.

(3) பல்லவன் வாதாபியை அடைந்தான்.
(4) பல்லவன் வாதாபியை நீங்கினான்.
(5) கண்ணகி அழகில் இலக்குமியை ஒத்தவள்.
(6) கரிகாலன் ஆண்மையைப் பெற்றவன்.

இவற்றைப் படித்து, இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' எவ்வெப்பொருளில் வந்துள்ளது எனக் காண்க. அது முறையே ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் பொருள்களில் வந்துள்ளது.

3. மூன்றும் வேற்றுமை—

(1) இக்கடிதம் பேனாவால் எழுதப்பட்டது.

(2) இவ்வீடு தொழிலாளரால் கட்டப்பட்டது.

(3) அண்ணனோடு தம்பி வந்தான்.

இவற்றுள் (1) பேனா - கருவி. எனவே, ஆல் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு கருவிப் பொருளை உணர்த்தியது. (2) தொழிலாளர்-கருத்தா. எனவே, இங்கு ஆல் என்பது கருத்தாப்பொருளை உணர்த்தியது. (3) அண்ணனும் தம்பியும் வந்த செயல் உடன் நிகழ்ந்தது. எனவே, ஓடு என்பது உடன் நிகழ்ச்சிப் பொருளை உணர்த்திற்று.

இங்ஙனம் மூன்றும் வேற்றுமை உருபுகள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்னும் மூன்று பொருள் களில் வரும் என்பதை அறிக.

4. நான்காம் வேற்றுமை —

(1) கண்ணன் தம்பிக்குப் பாடம் கற்பித்தான்.

(2) பாம்புக்குப் பகை கருடன்.

(3) இராமனுக்கு நண்பன் குகன்.

(4) அரசனுக்குத் தகுதி குடிகளைக் காத்தல்.

(5) காப்புக்குப் பொன் கொடு.

(6) கூலிக்கு வேலை செய்தான்.

(7) கோவலனுக்கு மனைவி கண்ணகி.

இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' முறையே—கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பல பொருள்களில் வரும்.

5. ஐந்தாம் வேற்றுமை—

(1) மலையின் வீழ் அருவி.

(2) மதுரையிற் பெரியது சென்னை.
(3) மதுரையின் கிழக்கு வண்டியூர்.
(4) கல்வியிற் பெரியவர் கம்பர்.

இவ்வாறு ஐந்தாம் வேற்றுமை உருபுகள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களில் வரும். (ஏது - காரணம்.)

**6. ஆறும் வேற்றுமை —**

(1) கண்ணனது கை.
(2) கண்ணகியது சிலம்பு.
(3) என புத்தகங்கள்.

இவ்வாறு ஆறும் வேற்றுமை உருபாகிய 'அது' ஒருமைக்கு வரும்; 'அ' பன்மைக்கு வரும். உடைய என்னும் சொல்லுருபு ஒருமையிலும் பன்மையிலும் வரும்.

ஆறும் வேற்றுமையுருபு கிழமைப்பொருளில் வரும். (கிழமை - உரிமை.)

(1) 'கண்ணனது கை'—என்ற இடத்து, கண்ணன் வேறு, கை வேறு அன்று; இரண்டையும் பிரிக்க முடியாது. இங்ஙனம் வருதல் தற்கிழமை எனப்படும். (தற்கிழமை - தன்னோடு உரிமை கொண்டது.)

(2) கண்ணகியது சிலம்பு—என்ற இடத்து, கண்ணகியையும் அவளது சிலம்பையும் வேருகப் பிரித்தல் கூடும். இது பிறிதின்கிழமை எனப்படும். (பிறிதின் கிழமை - தன்னின் வேருனது.)

தற்கிழமை—பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் முதலிய பொருள்களில் வரும்; **பிறிதின்** கிழமை—பொருள், இடம்,

காலம் முதலிய பொருள்களில் வரும். இவ்விவரங் களை யெல்லாம் மேல் வகுப்புக்களில் அறிக.

7. ஏழாம் வேற்றுமை—

(1) மணியின்கண் ஒலி.

(2) வீட்டின்கண் பெட்டி.

கண், இடம் என்பன ஏழாம் வேற்றுமை உருபு கள். இவையும் மேலே சொல்லப்பட்ட இரு கிழமை களையும் அடிப்படையாகப் பெறும். (1) மணியின் கண் ஒலி—மணியைவிட்டு ஒலி பிரியாதது. ஆதலால் இது தற்கிழமை இடப்பொருளது. (2) வீட்டின் கண் பெட்டி—வீடு வேறு, பெட்டி வேறு. ஆதலால் இது பிறிதின் கிழமை இடப்பொருளது. இதுவும் ஆறும் வேற்றுமைபோலப் பல்வேறு பிரிவுகளை உடையது. அப்பிரிவுகளை மேல்வகுப்புக்களில் அறிக.

8. எட்டாம் வேற்றுமை—

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| (1) முருகன் | முருகன்—ஈறு இயல்பாயிற்று. |
| (2) தம்பி | தம்பீ—ஈறு நீண்டது. |
| (3) முருகன் | முருகா—ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது. |
| (4) குழந்தை | குழந்தாய்—ஈற்று ஐ...ஆய் எனத் திரிந்தது. |
| (5) மக்கள் | மக்காள்—ஈற்றயல் நீண்டது. |

இவ்வாறு விளிக்கும் (அழைக்கும்) பொருளில் வரும் எட்டாம் வேற்றுமைச் சொற்கள் பல மாறுதல் களை அடையும். இவற்றை உங்கள் பாடப்புத்தகத்தி லிருந்தும் கண்டுகொள்க.

(1) தம்பி—இவ்வாறு அண்மையில் (சமீபத்தில்)

உள்ளவனைத்தான் விளிக்க (அழைக்க) முடியும். இது அண்மை விளி எனப்படும்.

(2) தம்பீ—இவ்வாறு சேய்மையில் (தூரத்தில்) உள்ளவனைத்தான் விளிக்க முடியும். இது சேய்மை விளி எனப்படும்.

### பயிற்சி

1. கீழ் வரும் வடசொற்கள் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதைத் (உங்கள் சொந்த அனுபவத்திலிருந்தும் ஆசிரியரைக் கேட்டும்) தெரிவிக்கவும் :—ராக்ஷஸன், லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஹநுமான், ஹாரம், விஷயம், பாஷை, ரங்கம், ரிஷபம், ஜலம், புஷ்பம், ராஜ்ய.

2. திரௌபதி, ஜனகி அல்லது ஜானகி—இப்பெயர்கள் எவ்வாறு அமைந்தவை என்பதை விளக்குக.

3. ஆகுபெயர் என்பது யாது? உதாரணம் தந்து விளக்குக.

4. கொவ்வை போன்ற உதடு, அவன் செயலைக் கண்டு நாகை நகைக்கிறது, மூலம் தந்தான், மருக்கொழுந்து நட்டான், வண்ணான் வெள்ளை கொண்டு வந்தான், அவியல் உண்டான்—இவற்றிலுள்ள ஆகு பெயர்களை விளக்கிக் கூறுக.

5. இரண்டாம் வேற்றுமையுருபு எப்பொருள்களில் வரும்? உதாரணங்கள் தருக.

6. ஆல், ஒடு, உடன்—இவை எப்பொருள்களில் வரும்?

7. சென்னைக்கு வடக்கே ஒற்றியூர், கோவிலில் பூனை, கோவிலில் கோபுரம், கண்ணனது கண், கந்தனது பை, முருகனில் பெரியவன் முருந்தன்—இவற்றில் வந்துள்ள வேற்றுமை உருபுகள் எப்பொருள்களில் வந்துள்ளன என்பதை விளக்கிக் கூறுக.

8. நான்காம் வேற்றுமையுருபு எப்பொருள்களில் வருமென்பதை உதாரணங்களால் குறிப்பிடுக.

9. எனது பைகள், எனது பை, என பை, என பைகள்—இவற்றில் எவை சரி, எவை தவறு என்பதை விளக்குக.

10. எட்டாம் வேற்றுமையில் இயற்பெயர் அடையும் மாறுதலைத் தக்க உதாரணங்களால் விளக்குக.

## 8. வினைச்சொல்

நின்றான், நின்று, நின்ற—இவை நிற்றல் ஆகிய வினையைக் குறிக்கும் சொற்களாதலால் வினைச் சொற்கள் எனப்படும். இவற்றுள் (1) 'நின்றான்' என்பது வினைமுற்று என்பதையும், (2) 'நின்று' என்பது வினையெச்சம் என்பதையும், (3) 'நின்ற' என்பது பெயரெச்சம் என்பதையும் நீங்கள் கீழ் வகுப்புக்களிலேயே அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? அவற்றை நினைவிற்கொண்டு, வினைச்சொல்பற்றிக் கீழ் வரும் விவரங்களை அறிக.

### (1) வினைமுற்று வகைகள்

1. (1) யான் வந்தனென்
யான் வந்தேன்
யான் வந்தனன்
யான் வருவல்
(வருவேன்) } தன்மை ஒருமை வினைமுற்றுக்கள்.

என், ஏன், அன், அல்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

(2) யாம் வந்தனெம்
யாம் வந்தேம்
யாம் வந்தனம்
யாம் வந்தாம்
யாம் வந்தோம் } தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்.

எம், ஏம், அம், ஆம், ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

2. (1) நீ வந்தனை
நீ வந்தாய்
நீ வருதி } முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள்.

ஐ, ஆய், இ—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

(2) நீர் வந்தனிர்
நீர் வந்தீர்
நீர் வம்மின்
நீங்கள் வாருங்கள்
} முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள்.

இர், ஈர், மின், கள்—முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

(3) (i) அவன் வந்தனன்
அவன் வந்தான்
அவன் பிறன்
} ஆண்பால் வினை முற்றுக்கள்.

அன், ஆன், ன்—ஆண்பால் வினைமுற்று விகுதிகள்.

(ii) அவள் வந்தனள்
அவள் வந்தாள்
அவள் பிறள்
} பெண்பால் வினை முற்றுக்கள்.

அள், ஆள், ள்—பெண்பால் வினைமுற்று விகுதிகள்.

(iii) அவர் வந்தனர்
அவர் வந்தார்
அவர் பிறர்
அவர் செய்ப
அவர் கொண்மார்
அவர்கள் வந்தார்கள்
} பலர்பால் வினை முற்றுக்கள்

அர், ஆர், ர், ப, மார், கள்—பலர்பால் வினை முற்று விகுதிகள்.

(4) அது வந்தது
அது உண்டு
அது போயிற்று
} ஒன்றன்பால் வினை முற்றுக்கள்.

து, டு, று—ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்.

(5) அவை வந்தன | பலவின்பால் வினை
அவை வாரா | முற்றுக்கள்.

அ, ஆ—பலவின்பால் வினைமுற்று விகுதிகள்.

ஆ—எதிர்மறை விகுதி.

இவை ஐந்தும் ஐம்பால் வினைமுற்றுக்கள் எனப்படும்.

## ஏவல் வினைமுற்று

வா, நில், போ, எடு, பிடி, படி—என்றாற் போலக் கட்டளைப் பொருளில் வரும் வினைப் பகுதிகளே ஏவல் வினைமுற்று எனப்படும்.

1. உண்ணுதி—இ | ஏவல் ஒருமை வினை
வருவை —ஐ | முற்றுக்கள்.
உண்பாய் —ஆய்

இ, ஐ, ஆய்—ஏவல் ஒருமை வினைமுற்று விகுதிகள்.

2. வருவிர் —இர் | ஏவல் பன்மை
உண்பீர் —ஈர் | வினைமுற்றுக்கள்.
உண்மின் —மின்
உண்மின்கள் —கள்

இர், ஈர், மின், கள்—ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகள்.

## வியங்கோள் வினைமுற்று

1. இது மரியாதை ஏவல் எனப்படும். இது சமநிலையிலுள்ளவர்க்கும் பெரியோர்க்கும் பயன்படுத்தப்படும் வினைமுற்று. இது ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாக வரும்.

| | வாழ்த்தல் | வைதல் | வேண்டல் | விதித்தல் |
|---|---|---|---|---|
| (1) நான், நாம் | வாழ்க | ஒழிக | தருக | செய்க |
| (2) நீ, நீர் | வாழ்க | ஒழிக | தருக | செய்க |
| (3) அவன், அவள், அவர் | வாழ்க | ஒழிக | தருக | செய்க |
| (4) அது, அவை | வாழ்க | ஒழிக | தருக | செய்க |

இவ்வாறு வியங்கோள் வினைமுற்றுக்கள் வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் என்னும் பொருள்களில் வரும்.

2. வாழ்க — க
வாழிய — இய
வாழியர் — இயர்

க, இய, இயர் இம் மூன்றும் வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

## ஏவல்—வியங்கோள் வேறுபாடுகள் —

ஏவலும் வியங்கோளும் ஒன்றுபோலக் காணப்படினும் அவை தம்முள் வேறுபாடுகள் உண்டு. அவற்றைக் கீழே காண்க :

(1) செல்வாய்—ஏவல் வினைமுற்று.

(2) செல்க—வியங்கோள் வினைமுற்று.

| ஏவல் | வியங்கோள் |
|---|---|
| 1. ஏவல் கட்டளைப் பொருளில்தான் வரும். | வியங்கோள் வாழ்த்தல் முதலிய பொருள்களில் வரும். |
| 2. ஏவல் முன்னிலையில் மட்டும் வரும். | வியங்கோள் ஐம்பால் மூவிடங்களிலும் வரும். |
| 3. ஏவலில் ஒருமை பன்மை என்னும் பிரிவுகள் உண்டு. | வியங்கோளில் அப்பிரிவுகள் இல்லை. |

## 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென்னாட்டு மொழிகள் திராவிட மொழிகள் என்றும், அவை மூல திராவிட மொழி ஒன்றிலிருந்து நாளடைவில் தனித்தனியே பிரிந்து வழங்கலாயின என்றும், ஒப்பிலக்கண ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மூலதிராவிட மொழியில் ஒரே வினைமுற்று, மேற் சொல்லப்பட்ட வேறு, இல்லை, உண்டு என்னும் வினைமுற்றுக்களைப்போல இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவாக வழங்கி வந்த காலம் ஒன்று உண்டு. திராவிட மொழிகள் பிரிந்த பிறகு, தமிழில் பால் காட்டும் விகுதிகள் வினைமுற்றில் சேர்ந்தன. அதனால் ஒவ்வொரு வினைமுற்றும் ஒரு பாலை உணர்த்தும் ஆற்றல் பெற்றது.

ஆயினும் பழைய திராவிட வழக்கிலிருந்த வினைமுற்று, அப்பழங்கால முதலே அப்பழைய முறைப்படியே தமிழ்ப் புலவர்களால் கையாளப்பட்டு வந்தது. அது 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று எனப் பெயர் பெற்றது. அது பழம் புலவர் பாக்களில் வந்துள்ளதே தவிர, இன்றைய வழக்கில் இல்லை என்பதை அறிக.

இராமன் வரும் (வருவான்).
சீதை சொல்லும் (சொல்வாள்).
நாய் வரும்.
நாய்கள் வரும்.

### தெரிநிலை—குறிப்பு வினைமுற்றுக்கள்

1. (1) கந்தன் வந்தான் — இறந்தகாலம்
(2) கந்தன் வருகிறான் — நிகழ்காலம்
(3) கந்தன் வருவான் — எதிர்காலம்

இவ்வாறு காலம் எளிதில் தெரியத்தரும் நிலையில் வரும் வினைமுற்று, தெரிநிலை வினைமுற்று எனப் படும்.

2. (1) இவன் பொன்னன் (பொன்னை உடையான்) —பொருள்

(2) இவள் மதுரையாள் (மதுரையைச் சேர்ந்தவள்) —இடம்

(3) இவன் ஆதிரையான் (ஆதிரையிற் பிறந்தவன்) —காலம்

(4) இவன் பெருங்கண்ணன்—சினை

(5) இவன் நல்லன் (நல்லவன்)—குணம்

(6) இவன் கடுநடையன்—தொழில்

இவ்வாறு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகப் பிறந்து, காலத்தை வெளிப்படையாக உணர்த்தாத வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப் பெயர் பெறும்.

(1) இவன் முன் நல்லன் என்னும் குறிப்பால் 'நல்லன்' என்பது இறந்தகாலத்தையும், (2) இவன் இன்று நல்லன் என்னும் குறிப்பால் 'நல்லன்' நிகழ் காலத்தையும், (3) இவன் இனி நல்லன் என்னும் குறிப்பால் 'நல்லன்' என்பது எதிர்காலத்தையும் உணர்த்தும்.

முற்றெச்சம்—

1. (1) அநுமன் இராமனைக் கண்டனன் தொழுதான்
↓
(கண்டு)

(2) கண்ணன் வெண்ணெய் உண்டனன் ஓடினான்
↓
(உண்டு)

கண்டனன், உண்டனன் என்ற சொற்கள் தனித்து நோக்குப்போது வினைமுற்றுச் சொற்களாகும்; ஆனால் மேல் உதாரணங்களில் கண்டு, உண்டு எனப் பொருள் முடிவு பெறாமல் வினையெச்சமாக நிற்கின்றன. இவ்வாறு வினைமுற்று வினையெச்சப் பொருளில் வருதல் முற்றெச்சம் எனப்படும். மேல் உதாரணங்கள் இரண்டும் தெரிநிலை முற்றெச்சங்கள்.

2. (1) சேரன் வில்லினன் வந்தான்.
↓
(வில்லை உடையவனாய்)

(2) சிவபெருமான் குழையினன் தோன்றினான்.
↓
(குழையை உடையவனாய்)

இவை மேலே சொன்னவாறு முற்றெச்சங்கள் ஆகும். இவை இரண்டும் குறிப்புமுற்றெச்சங்கள் எனப்படும்.

## (2) எச்சவினை வகைகள்

வினைச்சொற்கள் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூவகைப்படும் என்பது நீங்கள் அறிந்ததே. அவற்றுள் வினைமுற்றைப் பற்றிய விளக்கம் மேலே விரிவாகக் கூறப்பட்டது. இங்கு வினையெச்சம், பெயரெச்சம் இவற்றின் வகைகளைக் காண்க.

1. வினையெச்சம்—

(1) வந்து போனான்—இறந்தகாலவினையெச்சம்.
(2) வரக் காண்கிறேன்—நிகழ்கால வினையெச்சம்.
(3) வரக் காண்பேன்—எதிர்கால வினையெச்சம்.

வினையெச்சங்களுள் இறந்தகால வினையெச்சம் ஒன்றே திட்டமாகக் கூறமுடியும்; நிகழ்கால வினைமுற்றையும் எதிர்கால வினைமுற்றையும் நோக்கியே, அதற்கு முன்வரும் வினையெச்சம் இன்னகால வினையெச்சம் என்று கூறலாமே தவிர, தனிப்பட்ட வினையெச்சத்தைமட்டும் கொண்டு இது ' நிகழ்கால வினையெச்சம்,' இது ' எதிர்கால வினையெச்சம்,' என்று கூறமுடியாது.

2. பெயரெச்சம்—

(1) வந்த கண்ணன்—இறந்த காலப் பெயரெச்சம்

(2) வருகின்ற கண்ணன்—நிகழ்காலப் பெயரெச்சம்

(3) வரும் கண்ணன்—எதிர்காலப் பெயரெச்சம்.

இங்ஙனம் பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும். இது மேற்கண்டவாறு மூவகைப்படும்.

## (3) எச்சங்களின் முடிபுகள்

1. (1) வந்து போனான்—வினையெச்சம் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

(2) வந்து போய்—வினையெச்சம் மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

(3) வந்து போன(பையன்)—வினையெச்சம் பெயரைக் கொண்டு முடிந்தது.

(4) வந்து போதல்—வினையெச்சம் தொழிற்பெயரைக் கொண்டு முடிந்தது.

(5) வந்து போனவன்—வினையெச்சம் வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிந்தது.

இவ்வாறு வினையெச்சம் (1) வினைமுற்று, (2) வினையெச்சம், (3) பெயரெச்சம், (4) தொழிற்பெயர், (5) வினையாலணையும் பெயர் முதலியவற்றைக் கொண்டு முடியும்.

2. (1) வந்த பையன், பெண், மாடு.
   (2) வருகின்ற அரசன், புலி, வண்டி.
   (3) வரும் தந்தை, தாய், விலங்கு.

என இவ்வாறு பெயரெச்சம் எப்பொழுதும் ஒரு பெயர்ச்சொல்லையே கொண்டு முடியும்.

## (4) தன்வினை—பிறவினை

1. (1) நான் புத்தகம் படித்தேன்.
   (2) கமலம் கோலம் போட்டாள்.
   (3) கண்ணன் குழல் ஊதினான்.

இவற்றுள் வந்துள்ள (1) படித்தேன், (2) போட்டாள், (3) ஊதினான் என்பன முறையே நான், கமலம், கண்ணன் என்பவர் செய்த வினைகளைக் குறிக்கும் முற்றுக்கள். இவை தன்வினைகள் எனப்படும்.

2. (1) நான் அவனைப் படிப்பித்தேன்.
   (2) கமலம் கோலம் போடுவித்தாள்.
   (3) கண்ணன் குழலை ஊதுவித்தான்.

இவற்றுள் (1) நான் பிறரைத் தூண்டிப் படிக்கச்செய்ததாகவும், (2) கமலம் பிறரைக் கோலம் போடுவித்ததாகவும், (3) கண்ணன் பிறரைக் குழல் ஊதச் செய்ததாகவும் தெரிவதால், படிப்பித்தேன், போடுவித்தாள், ஊதுவித்தான் என்பன பிறவினைகள் எனப்படும்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| செய் | செய்வி |
| படி | படிப்பி |
| ஓடு | ஓட்டு |
| செல் | செலுத்து |
| நட | நடப்பி |
| வா | வருவி |
| உண் | உண்பி |

இவற்றையும், இவைபோல் உங்கள் பாட நூல்களில் வருவனவற்றையும் மனத்தில் அமைத்துக் கொள்க.

## (5) செய்வினை—செயப்பாட்டுவினை

1. (1) கோவலன் கண்ணகியை மணந்தான்.
(2) வாள்வீரன் கோவலனைக் கொன்றான்.
(3) செங்குட்டுவன் கண்ணகியை வழிபட்டான்.

இவ்வாக்கியங்களில், (1) கோவலன் செய்தவினை (செயல்) கண்ணகியை மணந்தமை. (2) வாள்வீரன் செய்த செயல் கோவலனைக் கொன்றமை. (3) செங்குட்டுவன் செய்தவினை கண்ணகியை வழிபட்டமை. எனவே, (1) மணந்தான் (2) கொன்றான் (3) வழிபட்டான் என்பன செய்வினைகள் எனப்படும்.

2. (1) கண்ணகி கோவலனால் மணக்கப்பட்டாள்.
(2) கோவலன் வாள்வீரனால் கொல்லப்பட்டான்.
(3) கண்ணகி செங்குட்டுவனால் வழிபடப்பட்டாள்.

இவ்வாறு (1) மணக்கப்பட்டாள் (2) கொல்லப்பட்டான், (3) வழிபடப்பட்டாள் என வரும் வினை

கள் முறையே கோவலனாலும், வாள்வீரனாலும், செங்குட்டுவனாலும் செய்யப்பட்ட வினைகள். ஆதலால் இவை செயப்பாட்டு வினைகள் எனப் பெயர் பெறும். இத்தகைய வினைகளை உங்கள் தமிழ்ப்பாட நூல்களில் கண்டு தெரிக.

பயிற்சி

1. வருகிறான், பாடினான், நிற்பார், ஓடுகிறது, நிற்கின்றன —இவை இன்ன வினைமுற்றுக்கள் என்பதைக் கூறுக.

2. (யான்) வருவன், (யான்) வந்தனன், (அவன்) வந்தனன், (நீ) வருவை, (நீ) உண்மின், வந்தீர்—இவை எவ்வெவ்விடத்து வினைமுற்றுக்கள்?

3. "'இராமன் யான் இல்லாததால் எப்பாடு படுமோ!' என்று சீதை வருந்தும்"—தடித்த சொற்கள் இன்ன வினைமுற்றுக்கள் என்பதைக் காரணத்துடன் விளக்குக.

4. இவன் தையான், இவன் நேற்று வந்தான்—தடித்த எழுத்துக்களில் உள்ளவற்றுள் தெரிநிலை வினைமுற்று எது என்பதையும், குறிப்பு வினைமுற்று எது என்பதையும் விளக்கிக் காட்டுக.

5. வினையெச்சம் மூன்று காலங்களிலும் எவ்வாறு வரும்? உதாரணம் தந்து தெளிவுபடுத்துக.

6. பெயரெச்சம் முக்காலங்களிலும் எப்படி வரும் என்பதற்கு உதாரணம் தருக.

7. வினையெச்சம் எவற்றைக் கொண்டு முடியும்?

8. ஓடினான், படிப்பித்தான், ஓதுவித்தார், நடந்தான், நடப்பித்தான், உண்டான், உண்பித்தான், செய்வித்தான், நிறுத்தினான்—இவற்றுள் தன் வினைகள் எவை? பிற வினைகள் எவை?

9. கந்தன் புத்தகம் வாங்கினான், நெசவாளியால் ஆடை நெய்யப்பட்டது, கொற்றன் சுவரை எழுப்பினான், வீடு தொழிலாளரால் கட்டப்படுகிறது, கண்ணன் வெண்ணெய் தின்றான், பெண்கள் கோலம் போடுகிறார்கள், நாய் பூனையைத் துரத்துகிறது—இவற்றிலுள்ள செய்வினைகளையும், செயப்பாட்டு வினைகளையும் எடுத்து எழுதுக; செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றிக் கூறுக.

# 4. இடைச்சொல்

ஐ முதலிய வேற்றுமை உருபுகளும்; போல, ஒப்ப முதலிய உவமையுருபுகளும்; அ, இ, உ என்னும் சுட்டுக்களும்; யா முதலிய வினாவெழுத்துக்களும், பிறவும் இடைச் சொற்கள் என்பது கீழ் வகுப்புக்களில் கூறப்பட்டது அல்லவா?

இடைச்சொல் என்பது தனித்து நில்லாமல் பெயரையாவது வினையையாவது சார்ந்து வருவது.

மேற்சொன்ன வேற்றுமையுருபுகள் முதலியனவும், இடைநிலைகள், சாரியைகள், விகுதிகள், தமக்கெனப் பொருளையுடைய ஏ, ஓ, மற்று, தான் முதலியனவும் இடைச்சொற்களாகும். இங்கு ஏ, ஓ, மற்று, தான் என்னும் இடைச்சொற்களைப் பற்றிய விவரங்களைக் காண்க.

## (1) ஏகார இடைச்சொல்

(1) பிற்காலச் சோழருள் முதலாம் இராசராசனே பல்லாற்றானும் சிறந்தவன்—ஏகாரம், பிற்காலச் சோழருள் முதலாம் இராசராசனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலைப் பொருளில் வந்ததாகும்.

(2) வாதாபிப் படையெடுப்பில் சிறுத்தொண்டரே வென்றார்?—ஏகாரம் வினாப் பொருளைத் தந்தது.

(3) கோவலன் கண்ணகியை, "பொன்னே, மணியே, திருவே" என்று பாராட்டினான்—இங்குள்ள ஏகாரங்கள் 'பொன்னும் மணியும் திருவும்' என எண்ணுப் பொருளில் வந்தன.

(4) "மாய்ந்துவீழ்ந் தனரே"—இந்த ஏகாரம் ஒரு பொருளையும் தராது நிற்றலால், ஈற்றசை எனப்படும்.

(5) வென்றே தீருவேன்—ஏகாரம் தெளிவுப் பொருளில் நிற்றலால், தேற்றம் எனப்படும்.

(6) "ஏயே இவளொருத்தி காண்"—இதிலுள்ள ஏகாரம் வேறு பொருளில்லாமல் இசை நிறைத்து நிற்றலால், இசைநிறைப் பொருளில் வந்தது.

(7) "ஏ சனியன்"—இங்கு ஏகாரம் இகழ்ச்சிப் பொருளில் வந்தது.

இவ்வுதாரணங்களால், ஏகார இடைச்சொல் (1) பிரிநிலை, (2) வினா, (3) எண், (4) ஈற்றசை, (5) தேற்றம், (6) இசைநிறை, (7) இகழ்ச்சி முதலிய பொருள்களில் வரும் என்பதை அறிக.

## (2) ஓகார இடைச்சொல்

(1) அவள் வந்தாளோ?—ஓகாரம் வினாப் பொருளில் வந்தது.

(2) வாதாபிப் போரில் சிறுத்தொண்டரோ தோற்றனர்—ஓகாரம் 'இல்லை' எனப் பொருள்படுதலால், எதிர்மறைப் பொருளில் வந்தது.

(3) "காட்டுவன் பார்மினோ"—ஓகாரம் ஒரு பொருளும் இல்லாமல் நிற்றலால் அசை நிலைப் பொருளது.

(4) அருச்சுனனோ பாண்டவர் கௌரவருள் வில் வித்தையிற் சிறந்தவன்.—பாண்டவர், கௌரவர் என்பவரிலிருந்து அருச்சுனனைப் பிரித்து நிற்றலால், ஓகாரம் பிரிநிலைப் பொருளில் வந்தது.

(5) ஐந்தோ ஆறோ—ஓகாரம் ஐயப் பொருளில் வந்தது.

இவ்வுதாரணங்களால், ஓகார இடைச் சொல் (1) வினா, (2) எதிர்மறை, (3) அசைநிலை,

(4) பிரி நிலை, (5) ஐயம் முதலிய பொருள்களில் வரும் என்பதை அறிக.

## (3) 'மற்று' என்னும் இடைச்சொல்

1. "மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது"—'விரைந்து அறிவாம்', என்னும் வினையை ஒழித்து, 'விரையாது அறிவாம்' என்னும் வினையைத் தந்து நிற்றலால், 'மற்று' என்னும் இடைச்சொல் இங்கு வினைமாற்றுப் பொருளில் வந்தது.

2. "மற்றடிகள் கண்டருளிச் செய்ய மலரடிக்கீழ்"—இங்கு, 'மற்று' என்பது ஒரு பொருளையும் தராது நிற்றலால், அசைநிலை எனப்படும்.

3. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்"—இங்கு, 'மற்று' என்னும் இடைச்சொல், 'ஊழ் அல்லது ஒன்று' என்னும் பொருள் தந்து நிற்றலால், பிறிதுப் பொருளில் வந்தது.

எனவே, 'மற்று' என்னும் இடைச்சொல், (1) வினைமாற்று, (2) அசைநிலை, (3) பிறிது முதலிய பொருள்களில் வரும் என அறிக.

## (4) 'தான்' என்னும் இடைச்சொல்

1. முருகன் தான் என்னை அடித்தவன்—இங்கு, முருகனை மற்றவரிலிருந்து பிரித்து நிற்றலால், 'தான்' என்பது பிரிநிலைப் பொருளில் வந்தது என்னலாம்.

2. கண்ணன் கயிலையைக் கண்டனன் தான்—இங்குள்ள தான், ஒரு பொருளையும் தராது நிற்றலால், அசைநிலைப் பொருளது.

இவ்வுதாரணங்களைக் காண்கையில், 'தான்' என்னும் இடைச்சொல், (1) பிரிநிலை, (2) அசைநிலை, முதலிய பொருள்களில் வரும் என்பதை அறியலாம்.

### பயிற்சி

1. இடைச்சொல் என்பது யாது?

2. எவை இடைச்சொற்களாகும்?

3. ஏகார இடைச்சொல் எப்பொருள்களில் வரும்?

4. (1) இக்கூட்டத்தாருள் இவனே கள்வன். (2) நீயே செய்தாய்? (3) நிலமே, நீரே, தீயே. (4) "ஏயே இவ ளொருத்தி பேடி." (5) உண்டே தெய்வம். (6) நன்கு இயம்புவன் எழுத்தே."—இவற்றிலுள்ள ஏகாரம் எவ்வெப் பொருளில் வந்துள்ளது?

5. (1) நீ படிக்கவோ வந்தாய்! (2) இதைச் செய்தவன் நீயோ, அவனோ? (3) ஓ ஓ கொடிது? (3) அவனோ இவ்விழி செயலைச் செய்தான்? (5) பார்க்க வம்மினோ. (6) இவ்வகுப்பு மாணவருள் இவனோ முதல்வன்!—இங்கு வந்துள்ள ஒகாரம் எவ்வெப் பொருளில் வந்துள்ளது?

6. 'மற்று' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும்? உதாரணங்கள் தருக.

7. 'தான்' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும் என்பதை உதாரணங்களால் சுட்டுக.

## 5. உரிச்சொல்

பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்ஙனம் உணர்த்தும் பொழுது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங் களை உணர்த்துவனவுமாய், பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் விட்டு நீங்காதனவாய், செய்யு ளுக்கு உரியனவாய், பொருளுக்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொற்கள் எனப்படும்.

## (1) ஒரு பொருள் குறித்த பல சொல்

1. சாலப் பேசினுன். (மிகுதி)
2. உறு புகழ். (மிகுதி)
3. தவ உயர்ந்தன. (மிகுதி)
4. நனி தின்ருன். (மிகுதி)

இந்நான்கிலும் வரும் சால, உறு, தவ, நனி என்னும் உரிச்சொற்கள் மிகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்துவன.

## (2) பல பொருள் குறித்த ஒரு சொல்

1. கடிமனை—காவல்
2. கடிவாள்—கூர்மை
3. கடிமாலை—மணம்
4. கடி மார்பன்—விளக்கம்
5. கடிப்பேய்—அச்சம்
6. கடி மலர்—சிறப்பு
7. கடி விடுதும்—விரைவு
8. கடி உண்டான்—மிகுதி
9. கடி முரசு—ஆர்த்தல்
10. கடி வினை—மன்றல்
11. கடி மிளகு—கரிப்பு

இவ்வுதாரணங்களால் ‘கடி’ என்னும் உரிச்சொல்—காவல், கூர்மை முதலிய பல பொருள்களைக் குறித்து வந்தமை தெளிவு.

### பயிற்சி

1. உரிச்சொல்லின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துக.

2. ஒரு பொருள் குறித்த பல உரிச்சொற்களைக் கூறிப் பொருள் விளக்கம் செய்க.

3. ‘கடி’ என்னும் ஒரு சொல் பல பொருள் குறித்தலை விளக்குக.

4. உறு பொருள் கொடுத்தான், நனி சிறந்தன, தவ உயர்ந்தவை, சாலப் பேசினுன், அன்பு கூர் மணம், கடி துளைப் பகழி, கடி மார்பன், கடி அகழி—இவற்றிலுள்ள உரிச்சொற்கள் எவ்வெப்பொருளில் வந்துள்ளன?

# III. பொது

## 1. தொகைநிலைத்தொடர்—தொகா நிலைத்தொடர்

1. வீடு கட்டினான்—இது, வீட்டைக் கட்டினான் என விரியும். எனவே, 'வீடு' என்னும் சொல்லுக்கும் 'கட்டினான்' என்னும் சொல்லுக்கும் இடையில் 'ஐ' உருபு தொக்கி (மறைந்து) உள்ளது. இங்ஙனம் இடையில் வேற்றுமையுருபோ, உவமையுருபோ, பிறவோ தொக்கி (மறைந்து) வர, இரண்டு சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்றல் தொகைநிலைத்தொடர் எனப்படும்.

2. வரதன் வந்தான்—இவ்விரு சொற்களுக்கும் இடையில் மேற்சொன்ன வேற்றுமையுருபோ, உவமையுருபோ, பிறவோ தொகாமல் (மறையாமல்) இரண்டு சொற்கள் தொடர்ந்து நிற்றலைக் காணலாம். இங்ஙனம் இரு சொற்கள் தொடர்ந்து நிற்றல் தொகா நிலைத்தொடர் எனப்படும்.

## 2. தொகைநிலைத்தொடர்—வகை

1. (1) வீடு கட்டினான்.—இதில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கி வருதலால், இத்தொடர் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும்.

(2) தலைவணங்கு—இங்கு 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமையுருபு மறைந்து வருதலால், இத்தொடர் மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும்,

(3) வீடு செல்—இங்குக் 'கு' என்னும் நான்

காம் வேற்றுமை உருபு தொக்கி நிற்றலால், இத்தொடர் நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் எனப்படும்.

(4) மலை வீழ் அருவி—இதில் ‘இன்’ என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கி நிற்றலால், இத்தொடர் ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும்.

(5) கண்ணன் குழல்—இங்கு ‘அது’ என்னும் ஆறும் வேற்றுமை உருபு தொக்கி நிற்றலால், இத்தொடர் ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும்.

(6) பெட்டிப் பணம்—இங்கு ‘இல்’ என்னும் ஏழாம் வேற்றுமையுருபு தொக்கி நிற்றலால், இத் தொடர் ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும்.

(7) பொன் மோதிரம்—இது ‘பொன்(னுல் செய்யப்பட்ட) மோதிரம்’ என விரியும். இடையில் ‘ஆல்’ என்னும் மூன்றும் வேற்றுமை உருபும் ‘செய்யப்பட்ட’ என்னும் பயனும் உடன்தொக்கி வருதலால், இத்தொடர் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப் பெயர் பெறும்.

இவ்வுருபும் பயனும் உடன் தொக்க தொகை, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய வரும் என்பதை அறிக.

2. ஆடு பாம்பு
ஓடு குதிரை
தாழ் சடை

என, வினைப் பகுதியும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து

வருதல் வினைத்தொகை எனப்படும். 'ஆடு பாம்பு' என்பது ஆடின பாம்பு, ஆடுகின்ற பாம்பு, ஆடும் பாம்பு எனப் பொருள்படும்.

3. கருங்குதிரை—

இது, கருமை (ஆகிய) குதிரை என விரியும்.

↓ ↓ ↓

(பண்பு) (பண்புருபு) (பண்பி)

இவ்வாறு 'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே மறைந்து வர, பண்பும் பண்பியும் தொடர்தல் பண்புத் தொகை எனப்படும்.

4. முத்துப் பல்—

இது முத்துப் (போன்ற) பல் என விரியும்.

↓ ↓ ↓

(உவமை) (உவமைஉருபு) (பொருள்)

இவ்வாறு உவமை யுருபு இடையிலே தொக்கி வர, உவமையும் பொருளும் தொடருதல் உவமைத் தொகை எனப்படும்.

5. சேர சோழர்—இது சேரனும் சோழனும் என விரியும். இதில் உம் என்பது தொக்கி வருதலால், உம்மைத் தொகை எனப்படும்.

6. (1) தாழ் குழல்—தாழ்ந்த கூந்தல், தாழ்கின்ற கூந்தல், தாழும் கூந்தல் எனப் பொருள் படுதலால் வினைத்தொகை எனப்படும்.

(2) தாழ் குழல் வந்தாள்—இது, தாழ்ந்த கூந்தல் (உடையவள்) வந்தாள் என விரியும். அதாவது, வினைத்தொகைப் புறத்தில் 'உடையவள்' என்னும் சொல் தொக்கி வருகிறது. இங்ஙனம் வருதல் அன்மொழி (அல்லாத மொழி)த் தொகை என்று இலக்கணத்தில் கூறப்படும். இவ்வுதாரணத்

தில் வந்துள்ள 'தாழ்குழல்'—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப் பெயர் பெறும்.

இந்த அன்மொழித்தொகை (1) வேற்றுமைத் தொகை, (2) வினைத்தொகை, (3) பண்புத் தொகை, (4) உவமைத் தொகை, (5) உம்மைத் தொகை என்னும் ஐந்திலும் வரும்.

## 3. தொகாநிலைத்தொடர்—வகை

(1) வரதன் வந்தான்.—இத்தொடரில் முதலில் இருக்கும் சொல் வரதன் என்பது. இவ்வாக்கியத்தில் அதுவே எழுவாய். எனவே, இத்தொடர் எழுவாய்த் தொடர் எனப்படும். இவ்வாறே கீழ்வரும் தொடர்களில் வரும் முதற் சொல்லின் இலக்கணம் கொண்டே தொடர் கூறுக.

(2) வந்தான் வரதன்-வினைமுற்றுத் தொடர்.

(3) வந்து போனான்-வினையெச்சத் தொடர்.

(4) வந்த வரதன்-பெயரெச்சத் தொடர்.

(5) வரதா, வா-விளித் தொடர்.

(6) வரதனை அழைத்தான் - வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.

(7) இனி வருவான்-இடைச்சொல் தொடர்.

(8) சாலப் பேசினான்-உரிச்சொற்றொடர்.

(9) பாம்பு பாம்பு-அடுக்குத் தொடர்.

இவ்வொன்பதும் தொகாநிலைத்தொடர்கள்.

## 4. குறிப்பும் வெளிப்படையும்

சொல்லுவோன் குறிப்பினால் ஒன்றனை ஒழித்து மற்றொன்றனைத் துணிதல் குறிப்பு எனப்படும். இதற்கு மாறுபட்டது வெளிப்படை எனப்படும்.

1. ஆயிரம் மக்கள் போரிட்டனர்—'போரிட்டனர்' என்னும் வினையால், 'மக்கள்' என்னும் பொதுச் சொல், பெண்பாலரை ஒழித்து ஆண் பாலரைக் குறிப்பால் உணர்த்தியது.

2. இப் பெற்றம் உழவு ஒழிந்தன—உழவு ஒழிந்தன என்பதனால், பசுவையும் எருதையும் குறிக்கும் 'பெற்றம்' என்னும் பொதுச் சொல், பசுக்களை ஒழித்து, எருதுகளைக் குறிப்பால் உணர்த்தியது.

3. மரை பலர்—இந்த விகாரச்சொல், 'தாமரை' என்பதைக் குறிப்பாக உணர்த்தியது.

4. இது இவ்வூருக்கு நன்காடு (சுடுகாடு) —இது தகுதி வழக்கால் சுடுகாட்டைக் குறிப்பால் உணர்த்தியது.

5. புளித் தின்றான்—இந்த ஆகுபெயர் அதன் பழத்தினைக் குறிப்பால் உணர்த்தியது.

6. பொற்றொடி தந்த புடைவை—இவ்வன் மொழித் தொகை அதனையுடைய பெண்ணைக் குறிப்பால் உணர்த்தியது.

7. சொலல் வல்லன், சோர்வு இலன்—வல்லன், இலன் என்னும் சொற்கள் பெயர்ப்பொருளை ஒழித்து, வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்தின.

8. "அறத்தாறு இதுஎன வேண்டாக்கு இழிபு" என்னுமிடத்து வரும் அடிமுதல் குறிப்புச் சொற்கள்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை."

என்னும் பாட்டைக் குறிப்பால் உணர்த்தின.

9. "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட."

என்னுமிடத்து, 'ஐவர்' என்னும் தொகைக் குறிப்புச் சொல் பாண்டவரைக் குறிப்பால் உணர்த்திற்று.

10. (1) பாயா வேங்கை—'பாயா' என்னும் குறிப்பினால், 'வேங்கை' என்பது விலங்கை ஒழித்து, வேங்கை மரத்தை உணர்த்திற்று.

(2) பூவா வஞ்சி—'பூவா' என்னும் குறிப்பினால், 'வஞ்சி' என்பது வஞ்சி மரத்தை ஒழித்து, சேரர் தலைநகரான வஞ்சி மாநகரத்தை உணர்த்தியது. இவ்வாறு குறிப்பினால் பொருளுணர்த்தும் சொற்களை நன்கு நினைவிற்கொள்க.

மேலே சொன்னவை அல்லாதனவெல்லாம் வெளிப்படையால் தத்தம் பொருள்களைத் தரும் சொற்களாகும்.

## 6. வழுவமைதிகள்

பசுவை அன்பினால், 'இவள் என் அம்மை' என்று சொல்லுதல் வழு (குற்றம்). ஆயினும் இங்ஙனம் கூறுதல் வழக்காறு பெற்றதால், ஆன்றோர் அமைதி (பொருத்தம்) என ஏற்றுக்கொண்டனர். எனவே, இது வழு அமைதி ஆயிற்று.

இங்ஙனம் கூறப்படும் வழுவமைதி (1) திணை வழுவமைதி, (2) பால் வழுவமைதி, (3) இட வழுவமைதி, (4) கால வழுவமைதி, (5) மரபு வழுவமைதி எனப் பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்க.

**1. திணை வழுவமைதி—**

"திங்களும் சான்றோரும் ஒப்பர்"—இங்குத் திங்கள்—அஃறிணை; சான்றோர்—உயர்திணை. இவ் விருதிணைச் சொற்களும் கலந்து, சிறப்பினால் உயர்திணை முடிவை ஏற்றன. இங்ஙனம் வருதல் திணை வழுவமைதி எனப்படும்.

**2. பால் வழுவமைதி—**

(1) தாய் தன் புதல்வனை, 'என் அம்மை வந்தாள்' என்று கூறுதலில், அன்பின் பெருக்கால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை, "அவர் வந்தார்" என்பது, உயர்வினால் ஒருமைப்பால் பலர்பால் ஆயிற்று.

இங்ஙனம் வருதல் பால் வழுவமைதி எனப்படும்.

**3. இட வழுவமைதி—**

(1) நீயோ, அவனோ, யார் இது செய்தார்?
(2) யானோ, அவனோ, யார் இது செய்தார்?
(3) நீயோ, யானோ, யார் இது செய்தார்?
(4) நீயோ, அவனோ, யானோ, யார் இது செய்தார்?

இவ்வுதாரணங்களில் (1) முன்னிலையில் படர்க்கையும் (2) தன்மையில் படர்க்கையும், (3) முன்னிலையில் தன்மையும், (4) முன்னிலையில் படர்க்கையும் தன்மையும் வந்திருத்தலைக் காண்க. இங்ஙனம் வருதல் இட வழுவமைதி எனப்படும்.

பயிற்சி

1. தொகா நிலைத்தொடர், தொகை நிலைத்தொடர்—இவற்றை உதாரணங்களால் விளக்குக.

2. தொகா நிலைத்தொடர்கள் எவை? ஒவ்வொன்றையும் தக்க எடுத்துக்காட்டால் தெளிவுறுத்துக.

3. கண்ணா வா, கண்ணன் வந்தான், வந்த கண்ணன், வந்து போனான், இனி வருவான், உறுபுகழ், தேன்தேன்—இவை எவ்வெத் தொகாநிலைத்தொடர்கள்?

4. சோர்கூந்தல், மதிமுகம், பள்ளி செல், கந்தன் பெட்டி, பெட்டிப்பணம், மலர்முகம், கொஞ்சுகிளி, சோர்கூந்தல், வாடினான், பூரி சட்னி, இராப்பகல்—இவை எவ்வெத் தொகைநிலைத்தொடர்கள்?

5. பண்புத் தொகையையும் உவமைத் தொகையையும் உதாரணம் தந்து விளக்குக.

6. பெருந்தேவி பிள்ளை பெற்ற அறையில் நால்வர் மக்கள் இருந்தனர், இப்பெற்றம் ஒரு படி பால் கறக்கும், கால் கழுவி வருவேன், சோர் கூந்தற்கு இல்லை அருள், கல் கடிக்க நன்கு சமைத்தாய்—இவற்றுள் எச்சொற்கள் எவ்வகைக் குறிப்புப் பொருள்களை உணர்த்தி நிற்கின்றன என்பதை விளக்குக.

7. நம்பி பொன் பெரியன்; பசுவும் அருந்தவம் விட்டானும் எருதும் ஆகிய இவர் மூவர்; தசரதன் தான் ஆண்ட நாட்டுக்குத் தாய்; நீயோ நானோ யார் அங்குச் சென்றவர்? அவனோ நானோ, யார் இங்கு உண்டவர்?—இவற்றில் வந்துள்ள வழுவமைதிகளைக் குறிப்பிடுக.

# IV. புணர்ச்சி

## 1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஒன்று | + | ஆயிரம் | = | ஓராயிரம் |
| | இரண்டு | + | ஆயிரம் | = | இராயிரம் |
| | ஒன்று | + | பத்து | = | ஒருபது |
| | இரண்டு | + | பத்து | = | இருபது |
| | ஒன்று | + | கழஞ்சு | = | ஒருகழஞ்சு |
| | ஒன்று | + | நாழி | = | ஒருநாழி |
| | ஒன்று | + | வகை | = | ஒருவகை |

இவ்வுதாரணங்களால், எண்ணுப் பெயரும், நிறைப் பெயரும், அளவுப் பெயரும், பிற பெயரும்

வரின், ஈற்று உயிர்மெய் கெட, நின்ற ணகர ஒற்று ரகர ஒற்ருக, இரண்டு என்னும் எண்ணினது ணகர ஒற்றும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகர உயிரும் கெட, அவ்விரண்டு ரகரத்தின் மேலும் உகரம் வரும் என்பது தெரிகிறது.

2. (1) மூன்று + ஒன்று = மூவொன்று
மூன்று + எடை = மூவெடை
மூன்று + உழக்கு = மூவுழக்கு
மூன்று + உலகு = மூவுலகு
(2) மூன்று + பத்து = முப்பது
மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு
மூன்று + நாழி = முந்நாழி
மூன்று + மொழி = மும்மொழி

இவ்வுதாரணங்களால், எண்ணுப் பெயரும், நிறைப் பெயரும், அளவுப் பெயரும், பிற பெயரும் வருமிடத்து, மூன்று என்பதிலுள்ள கடைசி உயிர் மெய் கெட, நின்ற ணகர வொற்றுக் கெடும், அல்லது வருமொழி முதலிலுள்ள ஒற்ருகத் திரியும் என்பது தெரிகிறது.

3. (1) நான்கு + ஒன்று = நாலொன்று
நான்கு + எடை = நாலெடை
நான்கு + நாழி = நானாழி
நான்கு + மணி = நான்மணி
(2) நான்கு + பத்து = நாற்பது
நான்கு + கழஞ்சு = நாற்கழஞ்சு
நான்கு + கலம் = நாற்கலம்
நான்கு + கவி = நாற்கவி

இவ்வுதாரணங்களால், மேற்சொன்ன நால்வகைப் பெயர்களும் வருமிடத்து, இறுதி உயிர்மெய் கெட,

நின்ற ணகர ஒற்று லசர ஒற்றாயும், றகர ஒற்றாயும் திரிந்தது என்பது தெரிகிறது.

4. (1) ஐந்து + மூன்று = ஐம்மூன்று
ஐந்து + மஞ்சாடி. = ஐம் மஞ்சாடி
ஐந்து + வட்டி = ஐவ்வட்டி
ஐந்து + வண்ணம் = ஐவ்வண்ணம்
(2) ஐந்து + பத்து = ஐம்பது
ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு
ஐந்து + கலம் = ஐங்கலம்
ஐந்து + பொறி = ஐம்பொறி
(3) ஐந்து + ஒன்று = ஐயொன்று
ஐந்து + எடை = ஐயெடை
ஐந்து + ஆழாக்கு = ஐயாழாக்கு
ஐந்து + அம்பு = ஐயம்பு

இவ்வுதாரணங்களால், 'ஐந்து' என்பதற்கு முன் மேற்சொன்ன நால்வகைப் பெயர்களும் வருமிடத்து, இறுதி உயிர்மெய் கெட, நின்ற நகர ஒற்று வரும் ஒற்றாகியும், அதற்கு இனமாகியும், கெட்டும் முடியும் என்பது தெரிகிறது.

5. எட்டு + பத்து = எண்பது
எட்டு + கழஞ்சு = எண்கழஞ்சு
எட்டு + கலம் = எண்கலம்
எட்டு + குணம் = எண்குணம்

இவ்வுதாரணங்களால், 'எட்டு' என்பதன் முன் நால்வகைப் பெயர்களும் வருமிடத்து, இறுதி உயிர்மெய் கெட, ஈற்றில் ஈன்ற டகர ஒற்று ணகர ஒற்றாகும் என்பது தெரிகிறது.

6. (1) பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + மூன்று = பதின்மூன்று

பத்து + ஆயிரம்= பதினாயிரம்
பத்து + கழஞ்சு= பதின்கழஞ்சு
பத்து + கலம் = பதின்கலம்
பத்து + மடங்கு= பதின்மடங்கு
(2) பத்து + ஒன்று = பதிற்றொன்று
பத்து + பத்து = பதிற்றுப்பத்து
பத்து + கோடி = பதிற்றுக்கோடி
பத்து + தூணி = பதிற்றுத்தூணி

இவ்வுதாரணங்களால், 'பத்து' என்பதன் முன் 'ஒன்று' முதலாகிய பத்து, ஆயிரம், கோடி என்னும் எண்ணுப் பெயர்களும், நிறைப் பெயரும், அளவுப் பெயரும், பிற பெயரும் வந்தவிடத்து, 'பத்து' என்பதன் ஈற்று உயிர்மெய் கெடும்; அவ்விடத்து, இன் அல்லது இற்று என்னும் சாரியை வரும். பிறகு, நிலைமொழியும் வருமொழியும் மேற்சொன்ன வாறு புணரும் என்பது தெரிகின்றது.

இவ்வாறே ஒன்பது என்னும் எண்ணிற்கும் கொள்க.

7. பத்து + இரண்டு = பன்னிரண்டு

இவ்வுதாரணத்தால், 'இரண்டு' என்பது வரின், 'பத்து' என்னும் நிலைமொழியினது ஈற்று உயிர்மெய் கெட, தகர ஒற்று னகர ஒற்றாகத் திரியும் என்பது தெரிகிறது.

8. ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு= இவ்விரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐவைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு

ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
பத்து + பத்து = பப்பத்து

இவ்வுதாரணங்களால், 'ஒன்பது' என்னும் எண் நீங்கலாக, நின்ற ஒன்று முதல் பத்து ஈருன எண்களை இரட்டித்துக் கூறின், நிலைமொழி முதலெழுத்து மட்டும் நிற்கும்; மற்றவை கெடும்; உயிர் முதலான எண்வரின் வகர ஒற்றும், மெய் முதலான எண் வரின் வந்த ஒற்றும் மிகும் என்பது தெரிகிறது.

## 2. இயல்பு புணர்ச்சி

1. உண்ணிய + சென்றான் = உண்ணிய சென்றான்
உண்ட + பையன் = உண்டபையன்
வெளுத்த + துணி = வெளுத்த துணி
உற்ற + துயர் = உற்றதுயர்

இவ்வுதாரணங்களால், (1) 'செய்யிய' என்னும் வினையெச்சத்தின் முன்னும், (2) பலவகைப் பெயரெச்சத்தின் முன்னும், க, ச, த, ப இயல்பாயின என்பது தெரிகிறது.

2. ஆ + வாழிய = ஆவாழிய, ஆவாழி
வாழிய + கொற்றா = வாழிய கொற்றா, வாழி கொற்றா

இவ்வுதாரணங்களால், 'வாழிய' என்னும் வியங்கோள் வினைமுற்றினது ஈற்று உயிர்மெய் இயல்பாக நிற்பதும் உண்டு. குறைதலும் உண்டு என்பது தெரிகிறது.

3. சாத்தனொடு + சென்றான் = சாத்தனொடு சென்றான்

| | | |
|---|---|---|
| சாத்தனது | + கை | =சாத்தனதுகை |
| ஏழு | + தலை | =ஏழுதலை |
| அடு | + களிறு | =அடுகளிறு |
| அது | + கண்டான் | =அதுகண்டான் |

இவ்வுதாரணங்களால், (1) 'ஒடு' என்னும் மூன்றும் வேற்றுமை உருபுக்கும், (2) 'அது' என்னும் ஆறும் வேற்றுமை உருபுக்கும், (3) எண்ணுப் பெயருக்கும், (4) வினைத்தொகை, (5) சுட்டுப் பெயர்களுக்கும் முன்வரும் க, ச, த, ப இயல்பாகும் என்பது தெரிகிறது.

4.

| | | |
|---|---|---|
| நாகு | + சிறிது | =நாகுசிறிது |
| எஃகு | + பெரிது | =எஃகுபெரிது |
| வரகு | + சிறிது | =வரகுசிறிது |
| குரங்கு | + தீது | =குரங்குதீது |
| தெள்கு | + பெரிது | =தெள்கு பெரிது |

(தெள்கு - தெள்ளுப்பூச்சி.)

இவ்வுதாரணங்களால், வன்றொடர் ஒழிந்த ஐந்து குற்றியலுகர ஈற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் (வேற்றுமை அல்லாத வழியில்) மிகா என்பது தெரிகிறது

5.

| | | |
|---|---|---|
| தெள்கு | + கடுமை | = தெள்குகடுமை |
| எஃகு | + கடுமை | = எஃகுகடுமை |
| நாகு | + சிறுமை | = நாகுசிறுமை |
| வரகு | + பெருமை | = வரகுபெருமை |

இவ்வுதாரணங்களால், இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும், வரும் வல்லினம், வேற்றுமைப் புணர்ச்சியில் மிகா என்பது தெரிகிறது.

## 3. தீர்க்கசந்தி முதலியன

வடமொழிப் பெயர்களில் உயிர்முன் உயிர் புணரும்பொழுது தோன்றும் சந்திகளில் குறிப்பிடத் தக்கவை—நமக்கு வேண்டுபவை—தீர்க்க சந்தி, குண சந்தி, விருத்தி சந்தி என்பன.

**1. தீர்க்க சந்தி—**

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | பத | + அம்புயம் | = | பதாம்புயம் |
| | சதா | + ஆனந்தம் | = | சதானந்தம் |
| (2) | சுசி | + இந்திரன் | = | சுசீந்திரன் |
| | மகீ | + ஈசன் | = | மகீசன் |
| (3) | குரு | + உபதேசம் | = | குருபதேசம் |

இவ்வுதாரணங்களை நோக்க,

(1) 'அ, ஆ முன் அ, ஆ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஆ தோன்றும்.'

(2) 'இ, ஈ முன் இ, ஈ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஈ தோன்றும்.'

(3) 'உ, ஊ முன் உ, ஊ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஊ தோன்றும்' என்னும் விதிகள் பற்றி இவை இவ்வாறு புணர்ந்தன என்பது தெரிகிறது.

**2. குண சந்தி—**

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | நர | + இந்திரன் | = | நரேந்திரன் |
| (2) | கங்கா | + உதகம் | = | கங்கோதகம் |

இவ்வுதாரணங்களை நோக்க,

(1) அ, ஆ முன் இ, ஈ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஏ தோன்றும்.

(2) 'அ, ஆ முன் உ, ஊ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஓ தோன்றும்' என்னும் விதிகள் பற்றி இவை இவ்வாறு புணர்ந்தன என்பது தெரிகிறது.

3. விருத்தி சந்தி—

(1) பரம + ஏகாங்கி = பரமைகாங்கி

(2) வந + ஓஷதி = வநௌஷதி

இவற்றை நோக்க,

(1) 'அ, ஆ முன் ஏ, ஐ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஐ தோன்றும்,'

(2) 'அ, ஆ முன் ஓ, ஔ வரின் அவ்விரண்டும் கெட ஓர் ஔ தோன்றும்' என்னும் விதிகள் பற்றி இவை இவ்வாறு புணர்ந்தன என்பது தெரிகிறது.

### பயிற்சி

1. *கீழ்வருவனவற்றிற்குப் புணர்ச்சி விதி கூறுக :—*
   ஒன்று + பத்து, இரண்டு + நாழி, மூன்று + வகை, மூன்று + உலகு, மூன்று + நாழி, நான்கு + எடை, நான்கு + கவி, ஐந்து + ஆழாக்கு, எட்டு + கலம், ஒன்று + ஒன்று, ஐந்து + ஐந்து.
2. *கீழ்வருவனவற்றைப் பிரித்து எழுதுக :—*
   உண்டகண்ணன், உண்ணியசென்றான், சித்திரித்த திரை, உற்றபன்றி, நாகுசிறிது, குரங்குபெரிது, ஓராயிரம், இருபது.
3. *தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி—இவற்றிற்கு இந்நூலில் இல்லாத வேறு உதாரணங்கள் தருக.*

# V. யாப்பு

**முன்னுரை—**

யாப்பு - யாத்தல் (கட்டுதல்), தொழிற் பெயர்; இங்கு யாக்கப்படும் (கட்டப்படும்) செய்யுளுக்கு ஆகி வருதலால் தொழிலாகுபெயர்.

யாப்பு, செய்யுள், பாட்டு, பா, கவி—ஒரு பொருட் சொற்கள்.

எலும்பு, நரம்பு, இரத்தம், கொழுப்பு, தசை முதலியவற்றால் நமது உடம்பு கட்டப்பட்டிருத்தல் போல எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய உறுப்புக்களால் செய்யுள் கட்டப்பட்டதாகும்.

இவ்வாறு கட்டப்பட்ட செய்யுட்கள் (1) வெண்பா (2) ஆசிரியப்பா, (3) கலிப்பா, (4) வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். இனி இவை ஒவ்வொன்றன் பொது இலக்கணம் காண்க.

## 1. நால்வகைப் பாக்களின் பொது இலக்கணம்

### (1) வெண்பா

1. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு." [உய்வில்லை

இது திருக்குறள். இதில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் "எந்நன்றி.........மகற்கு" என்று இடம் விட்டுத் தொடர்களும், சொற்களும் இருப்பதைக் காண்க. அவற்றுள் ஒவ்வொன்றும் சீர் எனப்படும். முதல் வரியில் நான்கு சீர்களும், இரண்டாம் வரியில் மூன்று சீர்களும் இருக்கின்றன. இவ்வாறு வரும் பாடல் குறள் வெண்பா எனப்படும்.

குறள் - குட்டை; வெண்பா - தூய்மையான (செய்யுளுக்குரிய சிறப்பு இலக்கணம் பொருந்தப் பெற்ற) செய்யுள். திருக்குறளில் உள்ள எல்லாப் பாக்களும் குறள் வெண்பாக்களே.

2. "நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

இச் செய்யுளில் நான்கு அடிகள் இருக்கின்றன. அவற்றுள் முதல் மூன்று அடிகள் தனித்தனியே நான்கு சீர்களைக் கொண்டவை. கடைசி அடி மட்டும் மூன்று சீர்களைக் கொண்டது. இவ்வாறு வருவது நாலடி வெண்பா எனப்படும். மூதுரை, நீதி வெண்பா, நன்னெறி, நீதிநெறி விளக்கம், நாலடியார், நளவெண்பா முதலிய நூல்கள் வெண்பாக்களால் இயன்றவை. வெண்பாவிற்குச் செப்பலோசை உரியது. வெண்பாவின் ஈற்றடி முச்சீரடியாக வரும்; ஏனைய அடிகள் நாற்சீரடிகள்; இயற்சீரும் காய்ச்சீருமே வரும்; ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டுச் சீர்களில் ஒன்றைப் பெற்று வரும்; இயற்சீர் வெண்தளை, வெண்சீர் வெண்தளைகளே வரும். செப்பலோசை பொருந்தியிருக்கும்.

## (2) ஆசிரியப்பா

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

இப்பாடலில் முதல் வரியிலும் கடைசி வரியிலும்

நந்நான்கு சீர்கள் வந்திருக்கின்றன. ஈற்றடிக்கு முன்னடியில் மட்டும் மூன்று சீர்கள் இருக்கின்றன. பெரும்பாலும் ஈரசைச் சீர்களே இதில் மிகுதியாக வரும். அடிதோறும் நாற்சீர்களை உடையதாகி, ஈற்றடிக்கு முன்னடியில் மட்டும் முச்சீர்களை உடையதாகி வருவது ஆசிரியப்பா. ஆசிரியன் தன் மாணவனுக்கு உறுதிப் பொருளை உரைத்தல் போலக் கேட்போருக்கு நன்மை பயக்கும் செய்திகளை நம் முன்னோர் இச் செய்யுளில்தாம் பெரும்பாலும் கூறி வந்தனர். ஆதலின் இச்செய்யுள் ஆசிரியப்பா எனப்பட்டது. இச்செய்யுள் நூற்றுக்கணக்கான அடிகளைப் பெற்று வருதலும் உண்டு. சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்களில் வரும் ஒவ்வொரு காதையும் ஓர் ஆசிரியப்பாவில் பாடப்பட்டதாகும். இப்பாவிற்கு உரியது அகவலோசை.

## (3) கலிப்பா

### நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூனெடுங்கு நகில்கண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ"

இது தரவு.

"சூருடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியரே"

"சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே"

"சிலம்படைத்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே"

இவை மூன்றும் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

" அருளென்ப திலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடு தானையிற் பொலிந்தே "

இது சுரிதகம்.

இங்ஙனம் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலிய உறுப்புக்களைப் பெற்றுக் கலித்தளை தழுவிய வெண்சீர்களால் அமைவது கலிப்பா எனப் படும். இதன் ஓசை துள்ளல் ஓசை.

### (4) வஞ்சிப்பா

" வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளினை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே."

இவ்வாறு வஞ்சிப்பா பெரும்பாலும் வஞ்சித்தளையும் சிறுபான்மை பிறதளையும் பெறும்; இரு சீரடியாலேனும் முச்சீர் அடியாலேனும் வரும்; மூன்று முதலிய பல அடிகளைப் பெறும்; தனிச்சொல் பெற்று வரும்; தூங்கல் ஓசை உடையதாயிருக்கும்.

## 2. அசை, சீர்—இலக்கணமும் வாய்பாடும்

### (1) அசை

எழுத்துக்களால் ஆவது அசை. அது (1) நேரசை, (2) நிரையசை என இருவகைப்படும்.

1. அ அல் } இவ்வாறு தனிக் குறில் அல்லது
ஆ ஆல் } தனி நெடில் தனித்தோ, ஒற்றடுத்தோ வருவது நேரசை.

2. பட படல் } இங்ஙனம் இரு குறில்
இரு இருல் } இணைந்து, அல்லது ஒற்றடுத்தும், குறிலும் நெடிலும் சேர்ந்து, அல்லது ஒற்றடுத்தும் வருவது நிரையசை.

## (2) சீர்

எழுத்துக்களால் ஆவது அசை. அதுபோல அசைகளால் ஆவது சீர். அஃது (1) ஓரசைச் சீர், (2) ஈரசைச் சீர், (3) மூவசைச் சீர், (4) நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

1. (1) "பாலொடு......நீர்"—இக்குறளில் உள்ள கடைசிச் சீர் 'நீர்' என்பது. இஃது ஓரசைச் சீர். இது நேரசைச் சீர். இதனை 'நாள்' என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

(2) "நன்றறி......இலர்".—இக்குறளில் உள்ள கடைசிச்சீர் 'இலர்' என்பது. இதுவும் ஓரசைச் சீரே. இது நிரையசைச் சீர். இதனை 'மலர்' என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

2. "குன்றக் குறவன் மடமகள் காண்மினோ."—இவ்வடியில் நான்கு சீர்கள் இருக்கின்றன.

| | |
|---|---|
| (1) குன்-றக் | (2) குற-வன் |
| ↓ ↓ | ↓ ↓ |
| நேர் நேர் | நிரை-நேர் |
| (3) மட-மகள் | (4) காண்-மினோ |
| ↓ ↓ | ↓ ↓ |
| நிரை நிரை | நேர் நிரை |

இவற்றை இங்ஙனம் அசைகளாகப் பிரித்தால்,

(1) முதற் சீரில் நேரசையும் நேரசையும் (நேர் நேர்),

(2) இரண்டாம் சீரில் நிரையசையும் நேரசையும் (நிரை நேர்),

(3) மூன்றும் சீரில் நிரையசையும் நிரையசையும் (நிரை நிரை),

(4) நான்காம் சீரில் நேரசையும் நிரையசையும் (நேர் நிரை) இருத்தலைக் காணலாம்.

இந்த நான்கில் ஒவ்வொன்றும் ஈரசைகளால் இயன்ற சீரே யாகும். இந்நான்கு சீர்களையும் எளிதிற் கூறத்தக்க வாய்பாடுகள் இலக்கண ஆசிரியர்களால் உண்டாக்கப்பட்டுள்ளன. அவை யாவை?

(1) நேர் நேர்—தேமா

(2) நிரை நேர்—புளிமா

இவை இரண்டும் 'மா' என முடிவதால் மாச்சீர்கள் எனப்படும்.

(3) நிரை நிரை—கருவிளம்

(4) நேர் நிரை—கூவிளம்

இவை இரண்டும் 'விளம்' என முடிவதால், விளச் சீர்கள் எனப்படும்.

இவை நான்கும் இயற்சீர் எனப் பெயர் பெறும். இவை பெரும்பாலும் ஆசிரியப்பாவில் மிகுதியாகப் பயின்று வருதலால், ஆசிரிய வுரிச்சீர் என்றும் கூறப் பெறும்.

3. (அ) "வாறுறு பொறுத்தான்றன் இணை மலரைத் தேடினனே"—இவ்வடியில் நான்கு சீர்கள் இருக்கின்றன. இவற்றை அசைகளாகப் பிரிப்போம்:

(1) வா—று—று (2) பொறுத்—தான்—றன்
↓ ↓ ↓ ↓ ↓ ↓
நேர் நேர் நேர் நிரை நேர் நேர்

(3) இணை—மல—ரைத் (4) தே—டின—னே
↓ ↓ ↓ ↓ ↓ ↓
நிரை நிரை நேர் நேர் நிரை நேர்

இவை எல்லாம் மூவசைச் சீர்கள். இவற்றை எளிதிற் கூறத்தக்க வாய்பாடுகளைக் கீழே காண்க :—

(1) நேர் நேர் நேர்—தேமாங்காய்
(2) நிரை நேர் நேர்—புளிமாங்காய்
(3) நிரை நிரை நேர்—கருவிளங்காய்
(4) நேர் நிரை நேர்—கூவிளங்காய்

இவை 'காய்' என முடிவதால், காய்ச்சீர்கள் எனப்படும்.

இவை நான்கும் வெண்பாவில் மிகுதியாகப் பயின்று வருவதால் வெண்சீர் என்றும், வெண்பா வுரிச்சீர் என்றும் பெயர் பெறும்.

(ஆ) (1) வாழைப் பழம்—வா—ழைப்—பழம்
↓ ↓ ↓
நேர் நேர் நிரை

(2) புலியாயினை—புலி—யா—யினை
↓ ↓ ↓
நிரை நேர் நிரை

(3) வசையமைகவி–வசை—யமை—கவி
↓ ↓ ↓
நிரை நிரை நிரை[1]

(4) வாவெனஅழை–வா–வென–அழை
↓ ↓ ↓
நேர் நிரை நிரை

இந்நான்கும் மூவசைச்சீர்களே ; ஆயின், இவை நிரை அசையில் முடிந்துள்ளன. இவை நான்கும்

முறையே (1) தேமாங்கனி, (2) புளிமாங் கனி, (3) கருவிளங்கனி, (4) கூவிளங்கனி என்ற வாய்பாட்டால் கூறப்படும். இவை 'கனி' என முடிவதால், கனிச்சீர்கள் என்று பெயர் பெறும். இவை வஞ்சிப்பாவில் மிகுதியாகப் பயின்று வருதலால், வஞ்சியுரிச்சீர் என்றும் சொல்லப்படும்.

| நாலசைச்சீர் | | வாய்பாடு |
|---|---|---|
| 4. | நேர் நேர் நேர் நேர் | —தேமாந்தண்பூ |
| | நிரை நேர் நேர் நேர் | —புளிமாந்தண்பூ |
| | நிரை நிரை நேர் நேர் | —கருவிளந்தண்பூ |
| | நேர் நிரை நேர் நேர் | —கூவிளந்தண்பூ |

இவ்வாறு தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கினோடும் தண்பூ, நறும்பூ, தண்ணிழல், நறுநிழல் என்னும் நான்கினையும் முறைப் படி கொணர்ந்து உறழ்ந்தால், 16 நாலசைச்சீர்கள் உண்டாகும்.

இந்த நாலசைச் சீர்கள் (1) வெண்பாவில் வாரா; (2) ஆசிரியப்பாவிலும் கலிப்பாவிலும் மிக அருகியே வரும்; (3) வஞ்சிப்பாவில் ஓரளவு பயின்று வரும்.

பயிற்சி

1. யாப்பு இலக்கணம் என்பதன் பொருள் யாது?
2. 'அசை' என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
3. ஆசிரிய வுரிச்சீர், வெண்பாவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர்—பெயர்க் காரணத்தை விளக்குக.
4. மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர்—ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.
5. நாள், மலர் என்னும் வாய்பாடுகள் எவற்றிற்கு வரும்?
6. ஈரசைச் சீருக்கு உரிய வாய்பாடுகள் யாவை?
7. மூவசைச் சீருக்குரிய வாய்பாடுகள் யாவை?

8. “ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.”

இச்செய்யுளில் வந்துள்ள சீர்களை அசைகளாகப் பிரித்து, ஒவ்வொரு சீருக்கும் உரிய வாய்பாட்டைக் கூறுக.

9. வெண்பா, ஆசிரியப்பா—இவற்றின் இலக்கணத்தையும், பெயர்க் காரணத்தையும் விளக்குக.

10. வஞ்சிப்பா, கலிப்பா—இவற்றின் பொது இலக்கணத்தைக் கூறுக.

# VI. அணி

செய்யுளுக்கு அழகு செய்து நிற்பது அணி எனப்படும். அது உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, வேற்றுப்பொருள் வைப்பு எனப் பலவகைப் படும். இங்கு உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு என்னும் மூன்று அணிகளைப் பற்றிய சில விவரங்களைக் காண்போம் :

## 1. உவமை அணி—சில வகைகள்

மதிபோன்ற வட்ட முகம்—இதில் மதி—உவமை ; முகம்—பொருள் (உவமேயம்) ; வட்டம்—பொதுத்தன்மை ; போன்ற—உவம உருபு. இவ்வாறு உவமை, பொருள், பொதுத்தன்மை, உவமவுருபு என்னும் நான்கும் அமையும்படி, அல்லது மூன்று அமையும்படி, அல்லது உவமையும் பொருளும் அமையும்படி கூறுவது உவமை அணியாகும்.

இவ்வுவமையணி விரியுவமை, தொகையுவமை முதலாகப் பல வகைப்படும். அவற்றுள், இங்குச் சில வற்றைக் காண்க :

1. விரியுவமை—

"பால்போலும் இன்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்."

இவ்வாறு பண்பு முதலியன விரிந்து நிற்றலை உடைய உவமை விரியுவமை எனப்படும்.

2. உண்மை உவமை—

"தாமரை அன்று முகமே"—முகத்துக்கு உவமையாகிய தாமரையை முதலிற் கூறி, அது அன்று என மறுத்து, உவமேயத்தினையே கூறி முடிப்பது உண்மை உவமையின் இலக்கணம்.

3. மாலை உவமை—

சோழனது செல்வம் பொதிய மலையில் வாழும் அகத்தியனைப் போன்றும், அவனால் பருகப்பட்ட கடல் போன்றும், அக்கடலினுள் உண்டாகிய நில வட்டம் போன்றும் பெயராது நிற்கும்.

இவ்வாறு ஒரு பொருளுக்குப் பல உவமைகள் வந்து, அவை ஒன்றினை ஒன்று இடைவிடாது தொடர்ச்சி உடையனவாகக் கூட்டிக் கடைசியில் பொருள் கூட்டி முடிப்பது மாலை உவமை ஆகும்.

## 2. உருவக அணி—சில வகைகள்

முகமதி—இது 'முகம் ஆகிய மதி' என விரியும். இவ்வாறு உவமேயம் முன்னும் உவமானம் பின்னும் வரும்படி அமைவது உருவக அணி எனப் படும். இவ்வணி தொகை உருவகம், விரியுருவகம் முதலாகப் பல வகைப்படும். அவற்றுள் சில வகை களைக் கீழே காண்க :

**1. தொகை உருவகம்—**

" அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும் "—

இது அங்கை - (ஆகிய) மலரும், அடி - (ஆகிய) தளிரும், கண் - (ஆகிய) வண்டும் என விரியும். இவ்வாறு 'ஆகிய' என்னும் சொல் மறைந்துவர, பொருளும் உவமையும் சேர்ந்து வருதல் தொகை உருவகம் எனப்படும்.

**2. விரி உருவகம்—**

" அங்கை மலராக, அடிதளிராக, கண்வண்டாக "—

மேல் உதாரணத்திற்கும் இதற்கும் உள்ள வேறு பாட்டைப் பாருங்கள். இங்கு ஒவ்வொன்றன் பின்னும் 'ஆக' என்னும் சொல் வெளிப்படையாக வந்துள்ளது. இவ்வாறு வருதல் விரி உருவகம் எனப்படும்.

**3. தொகை-விரி உருவகம்—**

" வையம் தகழியா(க)......இடராழி
நீங்கவே என்று."

இச்செய்யுளில், (1) 'வையம்தகழியாக' என்பது விரி உருவகம் ; (2) 'இடராழி' என்பது தொகை உருவகம். இவ்வாறு ஒரே செய்யுளில் தொகை உருவகமும், விரி உருவகமும் சேர்ந்து வருவது தொகை-விரி உருவகம் எனப்படும்.

## 8. வேற்றுப்பொருள் வைப்பு அணி

" புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான் ;
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்."

இவ்வாறு ஒன்றைக் கூறத் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு உலகம் அறிந்த வலிமை உடைய வேறொரு பொருளை வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பு அணி எனப்படும்.

பயிற்சி

1. உவமை அணி, உருவக அணி—இவற்றின் வேறுபாட்டை உதாரண முகத்தால் விளக்குக.

2. சந்திரன் போன்ற முகம், முத்துப்பல், தாமரைக்கை, கொவ்வை போன்ற உதடு, பவளவாய், கயற்கண், பாற்சொல், மலர்ப்பாதம், ஆல் இலை வயிறு, வேய்போன்ற தோள்—இவற்றன் வந்துள்ள தொகையுவமைகளையும் விரியுவமைகளையும் எடுத்துக் கூறுக.

3. இவை வண்டு அல்ல, கருநெடுங்கண்—இதில் என்ன உவமை அமைந்துள்ளது என்பதை விளக்குக.

4. மாலை உவமைக்கு ஏற்ற உதாரணம் ஒன்று தருக.

5. பல் முத்தும், தாமரைக்கண்ணும், தாமரைப் பாதமும்—இதில் அமைந்துள்ள அணி யாது?

6. முகம் தாமரையாக, பல் முத்தாக, புருவம் வில்லாக,—இதில் அமைந்துள்ள அணியை விளக்குக.

7. "கடலே நெய்யாக, கதிரோன் விளக்காக, பிறவிக் கடல்—" இதில் அமைந்துள்ள உருவகம் யாது?

8. "வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு முகிறனைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்."

இச்செய்யுளில் அமைந்துள்ள அணியை விளக்குக.

## 4. தேர்வுக்குரிய வினாக்கள்

1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள் எவை? உதாரணங்களுடன் விளக்குக.

2. மாத்திரை என்பது யாது? அரை மாத்திரை கால அளவுள்ள எழுத்துக்கள் யாவை?

3. குற்றெழுத்து, நெட்டெழுத்து, ஐகாரக் குறுக்கம், அளபெடை—இவ்வெழுத்துக்களுக்குத் தனித்தனி மாத்திரை எத்தனை?

4. முதல் எழுத்து, சார்பு எழுத்து—இவற்றை விளக்குக.

5. சார்பெழுத்துக்கள் எத்தனை? அவற்றில் ஏதேனும் இரண்டிற்கு உதாரணம் தருக.

6. போலி என்பதனை விளக்குக. முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்களைத் தருக.

7. கீழ் வரும் வட சொற்கள் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகின்றன?

சீதா, ரங்கநாயகி, ருக்மிணி, லாபம்.

8. தத்திதாந்த நாமம்.—இதனை உதாரணத்துடன் விளக்குக.

9. ஆகு பெயர் என்பது யாது? உதாரணம் தந்து விளக்குக.

10. கொவ்வை போன்ற உதடு, அவனது செயலைக் கண்டு ஊர் சிரிக்கிறது, கார்த்திகையான் வந்தான், அவியல் உண்டான்—இவற்றிலுள்ள ஆகுபெயர்களைக் கூறுக.

11. மூன்றும் வேற்றுமையுருபுகள் எப்பொருள்களில் வரும்? உதாரணம் தந்து விளக்குக.

12. ஐந்தாம் வேற்றுமையுருபுகள் எவை? அவை எப்பொருள்களில் வரும்? உதாரணம் தருக.

13. கண்ணனைக் கண்டேன், என் கைகள், மணியின்கண் ஒலி, கூலிக்கு வேலை செய்தான்,

பாலின் வெளிது கொக்கு—இவற்றில் வந்துள்ள வேற்றுமையுருபுகள் எவை? அவை எப்பொருள்களில் வந்துள்ளன?

14. எட்டாம் வேற்றுமையில் இயற்பெயர் அடையும் மாறுதல்களை உதாரணங்களால் விளக்குக.

15. வந்தெனம், வருதி, வருவல், வம்மின், செய்ப, கூவிற்று—இவை இன்ன வினைமுற்றுக்கள் என்பதைக் கூறுக.

16. வியங்கோள் வினைமுற்றுக்கும் ஏவல் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கி வரைக.

17. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று எவ்வாறு தோன்றி ஆட்சி பெற்றுள்ளது? அது எப்பால்களில் மட்டும் வரும்?

18. குறிப்பு வினைமுற்று, பொருள் முதல் ஆறின் அடியாகப் பிறந்து வரும் என்பதை உதாரணங்களால் விளக்குக.

19. வினையெச்சத்திற்கும் முற்றெச்சத்திற்கும் உள்ள வேறுபாடு யாது? உதாரணம் தருக.

20. வினையெச்சம் எவற்றைக்கொண்டு முடியும்?

21. பின்வரும் வினைகளில் தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினைகள் எடுத்தெழுதுக :- அவனை உண்பித்தான், அவன் உண்பிக்கப்பட்டான், அதனைச் செய்தேன், அவனை நடப்பித்தான், குடியிருந்தவனை ஓட்டினான், சீதை சிறையெடுக்கப் பட்டாள், தவளை பாம்பினால் விழுங்கப்படுகிறது, குடிமக்களால் நாடு ஆளப்படுகிறது, கண்ணன் பாடம் படிக்கிறான்.

22. கீழ்வரும் உதாரணங்களில் உள்ள இடைச் சொற்கள் யாவை? அவை எப்பொருள்களில் வந்துள்ளன?

(1) சென்று தேய்ந்ததுவே, (2) ஏழோ எட்டோ, (3) மற்றறிவாம் நல்வினையாமிளைய மென்றது, (4) விசயன் மதுரையைக் கண்டனன் தான்.

23. பலபொருள் குறித்த ஒரு சொல்லுக்கு உதாரணம் தருக.

24. பால் குடித்தான், வீடு நீங்கினான், பொன் வளையல்—இவை எவ்வெவ் வேற்றுமைத் தொகைகள்?

25. கொல்யானை, இட்டலி சாம்பார், பவளவாய், மதிமுகம் வந்தாள்—இவை என்ன தொகைகள்? விளக்கி வரைக.

26. படித்த கண்ணன், படித்தான், பரந்தாமன், படித்து வந்தான், சாலத் தின்றான், என்ன என்ன, அவனையழைத்தேன்—இவை என்ன தொகாநிலைத் தொடர்கள்?

27. குறிப்பு, வெளிப்படை—இவற்றுள் குறிப்பு என்பதனைத் தக்க உதாரணத்தால் விளக்குக.

28. திணைவழுவமைதி, பால்வழுவமைதி—இவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

29. கீழ் வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:—

முப்மொழி, மூவுலகு, நாலெடை, ஐவ்வட்டி, ஐங்கலம், எண்குணம், பதிற்றுப்பத்து, பன்னிரண்டு, எவ்வேழு, சுசீந்திரம், நரேந்திரன், வநைவஷதி.

30. நால்வகைப் பாக்கள் எவை? அவற்றுள் ஏதேனும் ஒன்றன் பொது இலக்கணம் கூறுக.

31. 'வல்லான் வகுத்த வழியன்றி வேறோர் வழியுள்ளதோ?'—இச்சீர்களை அசைகளாகப் பிரித்து வாய்பாடு கூறுக.

32. உவமையணி, உருவக அணி—இவற்றின் வேறுபாட்டை விளக்குக.

33. வேற்றுப்பொருள்வைப்பு அணியை ஏற்ற உதாரணத்தால் விளக்குக.

# ஐந்தாம் படிவம்

## I. எழுத்து

### 1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

சிறு துளைகளின் வழியாகக் காற்று வெளிப்படும் பொழுது ஒலி உண்டாகும் என்பது நாம் அறிந்ததே. இவ்வாறே நமது தொண்டையின் வழியாகக் காற்று வெளிப்படும்பொழுது ஒலி உண்டாகிறது. நமது உடம்பில் இருக்கும் நுரையீரலில் காற்று நிரம்பியிருக்கிறது. நாம் பேச முயலும்பொழுது அக்காற்று நுரையீரலிலிருந்து மேலெழும்புகிறது. அது, நமது மார்பு, கழுத்து, தலை, மூக்கு முதலிய இடங்களில் பொருந்தி வெளி வருகிறது. அப்பொழுது ஒலி உண்டாகிறது. அக்காற்றினை இதழ், நாக்கு, பல், மேல் வாய் ஆகிய நான்கும் பலவகை எழுத்து ஒலிகளாக மாற்றுகின்றன.

நுரையீரலிலுள்ள காற்றுப் பல அணுக்களின் கூட்டமேயாகும். தமிழ் எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள்: (1) உயிரெழுத்துக்களும் இடையின எழுத்துக்களும் கழுத்திலிருந்து பிறக்கின்றன; (2) மெல்லின எழுத்துக்கள் மூக்கிலிருந்து பிறக்கின்றன; (3) வல்லின எழுத்துக்கள் மார்பிலிருந்து பிறக்கின்றன; (4) ஆய்த எழுத்துக்கள் தலையிலிருந்து பிறக்கின்றன.

## 2. உடனிலை மயக்கம்—வேற்றுநிலை மயக்கம்

1. கங்கணம், வண்டு, தெவ்யாது, கம்பம், மஞ்சள்—என்றாற்போலப் பதினெட்டு மெய்யெழுத்துக்களுள் க, ச, த, ப ஒழிந்த பதினான்கு மெய்யெழுத்துக்களும் பிற மெய்களோடு சேர்ந்து வருதல் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

2. பட்டு, வற்றல், பக்கம், சத்தம்—என்றாற்போல ர, ழ ஒழிந்த பதினாறு மெய்யெழுத்துக்களும் தம்மொடு கூடும் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

இவ்விரண்டு வகை மயக்கமும் மொழிக்கு இடையில் வரும். (மயக்கம் - கூட்டம்). இவற்றை நோக்க, மெய்யுடன் மெய் மயங்கும்பொழுது, (1) க, ச, த, ப என்னும் நான்கும் தம்மோடு தாமே மயங்கும்; (2) ர, ழ என்பவற்றோடு பிறவே மயங்கும்; (3) ஒழிந்த பன்னிரண்டு மெய்யும் தம்மோடு தாமும், தம்மொடு பிறவும் மயங்கும் என்பது அறிக.

### பயிற்சி

1. ஒலி எழுத்து எவ்வாறு பிறக்கின்றது?
2. தலைவழிப் பிறக்கும் எழுத்துக்கள் எவை?
3. மெல்லின எழுத்துக்கள் எங்குப் பிறக்கின்றன?
4. ஆய்த எழுத்தின் பிறப்பிடம் யாது?
5. கழுத்தில் பிறக்கும் எழுத்துக்கள் எவை?
6. வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம்—இவற்றை உதாரணங்களால் விளக்கிக் காட்டுக.

# II. சொல்

## 1. பெயர்ச்சொல்

### 1. விளி ஏற்கும்போது மாறுபடும் முறை

கண்ணா, முருகா, பெண்ணே—என்று அழைக்கப் பெறும் பெயர்கள் விளிப்பெயர்கள் எனப்படும்.

| முதல் வேற்றுமை | விளிவேற்றுமை | மாறுபடும்முறை |
|---|---|---|
| 1. மன்னன் | மன்ன | ஈறு கெட்டது. |
| 2. கண்ணன் | கண்ணா | ஈறுகெட்டு, ஈற்றயல் நீண்டது. |
| 3. பிள்ளை | பிள்ளாய் | 'ஐ'–'ஆய்' எனத் திரிந்தது. |
| 4. பெண் | பெண்ணே | ஈறு மிகுந்தது. |
| 5. மக்கள் | மக்காள் | ஈற்றயல் நீண்டது. |

இவ்வாறு, இயல்பான படர்க்கைப் பெயர்கள் விளி வேற்றுமையில் பல மாறுதல்கள் அடையும்.

### 2. விளி ஏலாத பெயர்கள்

படர்க்கைப் பெயர்கள் மட்டுமே விளியை ஏற்கும்.

(1) நுமன், நுமள், நுமர் —கிளைப்பெயர்கள்

(2) எவன், எவள், எவர், எது, எவை
யாவன், யாவள், யாவர், யாது, யாவை
—வினாப்பெயர்கள்

(3) அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை
உவன், உவள், உவர், உது, உவை
—சுட்டுப் பெயர்கள்

(4) தாம், தாம் —பொதுப் பெயர்கள்

இவை விளி ஏலாத பெயர்கள் ஆகும்.

## 3. ஆகு பெயர்கள்

**மயில்**—ஒரு பறவையின் பெயர்.

**மயில் வந்தாள்**—மயில் (போன்ற சாயலையுடைய பெண்) வந்தாள். இவ்வாறு ஒன்றன்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பெயருக்குத் தொன்று தொட்டு ஆகிவருதல் ஆகுபெயர் எனப்படும். இது பலவகைப்படும்.

1. தாமரை போன்ற பாதம்—தாமரை என்பது முதற் பொருளாகிய கொடியின் பெயர். அஃது இங்கு அதன் சினையாகிய பூவுக்கு ஆகிவந்ததால் முதலாகு பெயர் அல்லது பொருளாகு பெயர் எனப்படும்.

2. அவன் சிறப்பை நாகை பாராட்டுகிறது—நாகை என்னும் இடத்தின் பெயர், அவ்விடத்திலுள்ள மக்களுக்கு ஆகிவந்ததால் இடவாகு பெயர் எனப்படும்.

3. ஆவணி வந்தான்—ஆவணி என்னும் காலத்தின் பெயர், அக்காலத்தில் பிறந்த மனிதனுக்கு ஆகிவந்ததால் காலவாகுபெயர் எனப்படும்.

4. அறுபதம் பாடியது—(அறுபதம் - ஆறு பாதங்கள்; அவற்றையுடைய வண்டு) இங்குப் 'பதம்' என்னும் சினைப்பெயர் அதனையுடைய வண்டுக்கு ஆகி வந்ததால் சினையாகுபெயர் எனப்படும்.

5. வீட்டிற்கு வெள்ளை யடித்தான்—வெள்ளை என்னும் நிறத்தின் பெயர் அந்நிறத்தையுடைய சுண்ணாம்பிற்கு ஆகிவந்ததால், குண ஆகுபெயர் எனப்படும். இது பண்பாகுபெயர் என்றும் பெயர்பெறும்.

6. அவியல் உண்டாள்—'அவியல்' என்னும் தொழிற்பெயர் இங்கு அத்தொழிலை அடைந்த உணவு

வகைக்கு ஆகினமையால் தொழிலாகுபெயர் எனப் படும்.

7. கால் வலிக்கிறது—'கால்' என்னும் எண்ணல் அளவைப் பெயர் உறுப்பிற்கு ஆகினமையால் எண்ணலளவை ஆகுபெயர் எனப்படும்.

8. துலா இறைத்தான்—'துலா' என்னும் எடுத்தல் (நிறுத்தல்) அளவைப் பெயர். இங்குக் கிணற்று இறைவைமரத்திற்கு ஆயிற்று. அதனுல் இது எடுத்தல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

9. உழக்கு வாங்கினுன்—உழக்கு என்னும் முகத்தல் அளவைப்பெயர் அந்த அளவுடைய ஒரு கருவிக்கு ஆகிவந்ததால், முகத்தலளவை ஆகு பெயர் எனப்படும்.

10. ஒரு கஜம் வாங்கினுன்—கஜம் என்னும் நீட்டலளவையின் பெயர் இங்கு அந்த அளவைக் கொண்ட பொருளுக்கு ஆகி வந்ததால் இது நீட்டலளவை ஆகுபெயர் எனப்படும்.

11. மனம் உடைந்தது—'மனம்' என்பது 'உணர்வு'. இது மனத்தை இடமாகக் கொண்டு பிறப்பது. இது 'தானி' எனப்படும். இத்தானி அதற்கு ஸ்தானமாகிய மார்பினுக்கு ஆகிவந்ததால் தானியாகு பெயர் எனப்படும்.

12. திருவாசகம் படித்தான்—'வாசகம்' என்னும் கருவியின் பெயர் இங்கு அதன் காரியமாகிய செய்யுளுக்கு ஆகிவந்ததால் கருவி ஆகுபெயர் எனப்படும்.

13. அலங்காரம் படித்தான்—'அலங்காரம்' என்னும் இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அத

னைத் தருதற்குக் கருவியாகிய நூலுக்கு ஆகிவந்த தால் காரிய ஆகுபெயர் எனப்படும்.

14. திருவள்ளுவர் படித்தான்—இது 'திருவள்ளுவர் செய்த நூலைப் படித்தான்' எனப் பொருள் படும். எனவே, கருத்தாவின் பெயர் அவர் செய்த காரியத்திற்கு ஆயிற்று. இங்ஙனம் வருதல் கருத்தா ஆகுபெயர் எனப்படும்.

15. காளை வந்தான்—வலிமை முதலியவற்றால் 'காளை' என்பது உவமையாக இளைஞனைக் குறிக்கிறது. இங்ஙனம் வருதல் உவமை ஆகுபெயர் எனப்படும்.

16. புளி நட்டான்—புளி என்னும் சுவைப் பெயர் பழத்திற்கு ஆனது; பிறகு அப்பெயர் மரத்திற்கு ஆயிற்று. இங்ஙனம் இருமுறை மடிந்து வந்ததால் இது இருமடியாகு பெயர் எனப்படும்.

17. கார் பயிராகிறது—'கார்' என்பது கருமை நிறத்தைக் குறித்து, பிறகு அந்நிறப்பெயர் கரியமேகத்திற்கு ஆகி, அம்மேகத்தின் பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆகி, பின்னர் அப்பருவத்தின் பெயர் அப்பருவத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது. இவ்வாறு ஓர் ஆகுபெயர் மும்முறை மடிந்து வருதல் மும்மடி யாகுபெயர் எனப்படும்.

பயிற்சி

1. குப்பன், அம்மை, பிள்ளை, கந்தன், மணியன், பொன்னன், தம்பி—இப்பெயர்கள் விளி ஏற்கும்போது எவ்வெவ்வாறு மாறும்?

2. விளி ஏலாத பெயர்கள் எவை?

3. ஆகுபெயரை உதாரணத்தால் விளக்குக.

4. மயில் வந்தான், வண்டியில் வெள்ளையைப் பூட்டு, கோவ்வை போன்ற உதடு, அவனை மேலூர் போற்றுகிறது,

விளக்கு ஒடிந்தது, பொரியல் உண்டாள்—இவற்றிலுள்ள ஆகு பெயர்கள் இன்ன ஆகு பெயர்களென்று காரணம் காட்டுக.

5. நாழி வாங்கினான், திருவாய்மொழி ஓதினான், இந்நூல் பாட்டியல், தொல்காப்பியர் படித்தான், கார் அறுத்தான்—இவற்றிலுள்ள ஆகுபெயர்களை விளக்கி எழுதுக.

## 2. வினைச்சொல்

### 1. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று

(1) அவன் வருவான், அவள் வருவாள், அது வரும், அவை வரும்—இவ்வாறு வருதலே பெரும்பாலான வழக்கம். ஆனால் செய்யுட்களில் சில இடங்களில், (2) அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் என இந்நான்கு பால்களுக்கும் ஒரே வினை வருதல் உண்டு. இவ்வாறு வரும் வினைமுற்று, **'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று** எனப்படும்.

இது பலர்பாலில் வராது; தன்மை முன்னிலைகளிலும் வராது.

### 2. பொதுவினைகள்

**1. இருதிணைப் பொதுவினை :**

| | வேறு | இல்லை | உண்டு |
|---|---|---|---|
| (1) | அவன் வேறு | அவன் இல்லை | அவன் உண்டு |
| (2) | அவள் வேறு | அவள் இல்லை | அவள் உண்டு |
| (3) | அவர் வேறு | அவர் இல்லை | அவர் உண்டு —உயர்திணை |
| (4) | அது வேறு | அது இல்லை | அது உண்டு |

(5) அவை வேறு அவை இல்லை அவை உண்டு
—அஃறிணை

இவ்வாறு வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று வினைமுற்றுக்களும் இரண்டு திணைகளுக்கும் ஐந்து பால்களுக்கும் பொதுவாக வரும் வினைமுற்றுக் களாகும்.

**2. பால் பொதுவினை :**

(1) அவன் யார்? அவள் யார்? அது யார்?

இவ்வாறு 'யார்' என்னும் வினாப்பொருளில் வரும் வினைமுற்று உயர்திணைப் பால்கள் மூன்றிற்கும் பொதுவாக வரும்.

(2) அஃது எவன்? அவை எவன்?—இவ்வாறு 'எவன்' என்னும் வினாப்பொருளில் வரும் வினை முற்று, அஃறிணை இரு பால்களிலும் பொதுவாக வரும்.

## 3. எச்சத் திரிபு

**1. பெயரெச்சத் திரிபு :**

ஆகும் பொருள்—இதில் 'ஆகும்' என்பது 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம். இது கீழ்வருமாறு பலவாறு திரியும் :

(1) ஆம் பொருள்—ஈற்றுக்கு அயல் எழுத்துக் கெட்டது.

(2) பாயுந்து—'பாயும்' என்பதிலுள்ள கடைசி 'உம்' – 'உந்து' எனத் திரிந்தது. இது செய்யுளில் மட்டும் வரும்.

(3) மொழிமே—'மொழியுமே' என்பதிலுள்ள உயிர்மெய் கெட்டது.

(4) கேண்மோ—'கேளும்' என்னும் ஏவல்முற்று இவ்வாறு உயிர்மெய் கெட்டு வந்தது.

**2. வினையெச்சத் திரிபு :**

(1) யான் கொள்வான் பொன் கொடுத்தான் (கொள்வான்-கொள்ள)—'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் 'செய்வான்' எனத் திரிந்து நின்றும், 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்ச முடிவை ஏற்று நின்றது.

(2) ஞாயிறு பட்டு வந்தான்—'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துக்குரிய 'பட்டு' என்பது, இங்குப் 'பட' என்னும் பொருளில் வந்தது. இவ்வாறு 'செய்து' முதலிய வினையெச்ச வாய்பாடுகள் தம்முள் ஒன்று மற்றொன்றாகத் திரியினும், அவற்றின் பொருள்கள் திரியா.

## 4. உளப்பாட்டுப் பன்மை

### வினைமுற்றுக்கள்

1. (1) யானும் நீயும் உண்டனம்—தன்மையோடு கூடிய முன்னிலையும் தன்மை முடிபை ஏற்றது.

(2) யானும் அவனும் உண்டேம்—தன்மையோடு கூடிய படர்க்கையும் தன்மை முடிபை ஏற்றது.

(3) யானும் நீயும் அவனும் வருதும்—தன்மையோடு கூடிய முன்னிலையும் படர்க்கையும் தன்மை முடிபை ஏற்றன.

இவ்வாறு பிற இடத்துப் பெயர்களை உளப்படுத்தி முடியும் வினைமுற்று உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

(1) அம், ஆம் என்பன முன்னிலையாரை உளப்படுத்தும்;

(2) எம், ஏம், ஓம் என்பன படர்க்கையாரை உளப்படுத்தும்;

(3) கும், டும், தும், றும் என்பன முன்னிலையாரையும் படர்க்கையாரையும் உளப்படுத்தும்.

2. நீயும் அவனும் உண்டீர்—என, முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலை முடிவை ஏற்றது. இவ்வினைமுற்று உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

பயிற்சி

1. "கண்ணன் பூக்கொய்து வருமோ" என்றீர் பாமா கவலையுறும்—இதிலுள்ள வினைமுற்றுக்கள் எவை? அவை என்ன வாய்பாட்டைச் சேர்ந்தவை?

2. அவன் உண்டு, அவன் யார், அது எவன், அவர் இல்லை, அவர் யார், அவை எவன்—இவற்றிலுள்ள வினைமுற்றுக்கள் யாவை? அவற்றின் பெயரென்ன?

3. 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எவ்வெவ்வாறு திரிந்து வரும்?

4. யானும் அவனும் சென்றேம், நீயும் நானும் வந்தனம், நீயும் யானும் அவனும் சென்றும், நீயும் அவனும் போனீர்கள்—இவற்றிலுள்ள வினைமுற்றுக்கள் எத்தகைய பன்மை வினைமுற்றுக்கள்?

## 8. இடைச்சொல்

வேற்றுமை உருபுகள், இடைநிலை–விகுதி முதலிய வினையுருபுகள். அன்–ஆன் முதலிய சாரியை யுருபுகள், போல, புரைய முதலிய உவமஉருபுகள், தத்தமக்குரிய பொருளை உணர்த்திவரும் ஆ, ஏ முதலியன, செய்யுளிசை நிறைத்தலே பொருளாக வருவன, அசைத்தலே பொருளாக நிற்பன, குறிப்பால்

பொருளுணர்த்துவன ஆகிய இவ்வெட்டும் தனித்து நடத்தல் இல்லாமல் பெயரினிடத்தும் வினையினிடத்தும் அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் ஒன்றேனும் பலவேனும் வந்து, அப்பெயர்—வினைகட்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்கும் தன்மை உடையது இடைச்சொல் என்பது.

(1) 'மன்' என்னும் இடைச்சொல்

(1) "அது மன் கொண்கன் தேரே"—அசைநிலை.

(2) "கூரியதோர் வாள்மன்"—'அதனால் கருந்தாது அறத்துணித்தது' என்னும் சொல் ஒழிய (தொக்கி) நின்றதால் ஒழியிசைப் பொருளில் வந்தது.

(3) "நெடியன் மன்"—என்புழி, 'அவனே வலியனும் ஆனான்' எனப் பொருள்தரின், ஆக்கம்.

(4) "சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே"–இது, 'இப்பொழுது அவ்வள்ளல் இல்லை ஆதலின் எமக்கு ஈதல் கழிந்தது' எனப் பொருள் தருதலின், கழிவு.

(5) "எந்தை எமக்கருளுமன்"—'மிகுதியும் அருளும்' எனப் பொருள் தருதலின், மிகுதி.

(6) "மன்னா வுலகத்து மன்னியது புரைமே"–இவ்விடைச்சொல் அடியாகப் பிறந்த வினையுள் 'மன்' என்பது நிலையினை உணர்த்தினமையின், நிலைபேறு.

இவ்வாறு மன் என்னும் இடைச்சொல் – (1) அசைநிலை, (2) ஒழியிசை, (3) ஆக்கம், (4) கழிவு, (5) மிகுதி, (6) நிலைபேறு என்னும் ஆறு பொருள்களில் வரும்.

## (2) 'என' என்னும் இடைச்சொல்

(1) கண்ணனெனக் கந்தனெனக் ககந்தனெனக் கோவிந்தனென நால்வர் உளர்—இங்கு 'என' என்னும் இடைச்சொல் தொகைபெற்று வந்தது.

(2) "நிலனென நீரெனத் தீயெனக் காற்றென அளவறு காயமென ஆகிய உலகம்"—இதில் 'என' என்னும் இடைச்சொல் தொகைபெறாது வந்தது.

## (3) 'தில்' என்னும் இடைச்சொல்

(1) "வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப் பெறுகதில் லம்ம யானே"—இங்குப் பெறுதல் வேட்கையை உணர்த்தலால், விழைவு.

(2) "பெற்றாங் கறிகதில் லம்மஇவ் வூரே"—என்பது, 'பெற்ற காலத்து அறிக' எனக் காலத்தை உணர்த்தலின், காலம்.

(3) "வருகதில் லம்மாஎம் சேரி சேர"—என்பது, 'வந்தால் ஒன்று செய்வேன்' என்னும் சொல் ஒழிந்து நிற்றலால், ஒழியிசை.

இங்ஙனம் 'தில்' என்னும் இடைச்சொல்—(1) விழைவு, (2) காலம், (3) ஒழியிசை என்னும் பொருள்களில் வரும்.

## (4) 'அம்ம' என்னும் இடைச்சொல்

(1) "அதுமற் றம்ம"—இது செய்யுளின் பொருட்டன்றித் தானடைந்த சொல்லின் பொருட்டு வருதலின் உரையசை ஆயிற்று.

(2) "அம்ம வாழி தோழி"—என்பது, 'ஒன்று சொல்வன் கேள்' என்னும் ஏவற்பொருளைத் தந்தது.

இவ்வாறு 'அம்ம' என்னும் இடைச்சொல்—(1) உரையசை, (2) கேண்மின் என்னும் பொருள்களில் வரும்.

## (5) 'மோ', 'மதி' என்னும் இடைச்சொற்கள்

(1) "காமம் செப்பாது கண்டது மொழிமோ"-அசைநிலை.

(2) "சென்மதி பெரும"—அசைநிலை.

இவ்விடைச்சொற்கள் இவ்வாறு முன்னிலைக்கண் வரும் அசைநிலைகள் ஆகும்.

## (6) மாது, போலும், ஆம், தான், தாம் - என்னும் இடைச்சொற்கள்

இவை, முற்கூறப்பெற்ற இடைச்சொற்கள் போலன்றி, எல்லா இடங்களிலும் எல்லாச் சொற்களிலும் வரும் அசைச்சொற்கள் ஆகும்.

(1) "விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவெங் கண்ணே".

(2) "வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்".

(3) "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து".

(4) நீ தான்.

(5) நீர் தாம்.

### பயிற்சி

1. இடைச்சொல்லின் இலக்கணத்தை விளக்குக.
2. 'மன்' இடைச்சொல் எப்பொருள்களில் வரும்?

3. 'என' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும் என்பதை உதாரணங்களால் விளக்குக.

4. விரைவு, காலம், ஒழியிசை என்னும் பொருள்களில் வரும் இடைச்சொல் யாது? உதாரணம் தருக.

5. 'அம்ம' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும்? சான்று தேவை.

6. முன்னிலை அசையாக வரும் இடைச்சொற்கள் எவை?

7. மாது, போலும் முதலிய இடைச்சொற்களின் இயல்பு யாது? உதாரணங்கள் தருக.

## 4. உரிச்சொல்

பலவகைப் பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அவ்வாறு உணர்த்தும் பொழுது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணத்தை உணர்த்துவனவுமாய், ஏனைப் பெயர் வினைகளை விட்டு நீங்காவாய், செய்யுட்கு உரியனவாய் வருவன உரிச்சொற்கள் எனப்படும்.

1. "செங்கேழ் வெண்கொடி"—'கேழ்' என்பது நிறம் என்னும் பண்பு உணர்த்திற்று.

2. "மல்லல் மால் வரை"—'மல்லல்' என்னும் உரிச்சொல் வளம் என்னும் பொருளில் வந்தது.

3. "துனிகூர் எவ்வம்"—'கூர்' என்னும் உரிச்சொல் சிறத்தல் என்னும் பொருளை உணர்த்திற்று.

4. "கழிகண் ணோட்டம்',—'கழி' என்னும் உரிச்சொல் சிறத்தல் என்னும் பொருளில் வந்தது.

5. "வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்"—'தட' என்னும் உரிச்சொல் பெருமை என்னும் பொருளில் வந்தது.

6. "வைநுனைப் பகழி—'வை' என்னும் உரிச்சொல் கூர்மை என்னும் பொருளில் வந்தது.

பயிற்சி

1. உரிச்சொல்லின் இலக்கணத்தை வரைக.
2. கெழு, மல்லல், கூர்—இவை எப்பொருள்களில் வரும்?
3. கழி, தட, வை—இவை எப்பொருள்களில் வரும் உரிச்சொற்கள்? உதாரணங்கள் தருக.

# III. பொது

## 1. தொகையால் பொருள் சிறந்து நிற்குமிடம்

1. குடம் வனைந்தான்—இத் தொகைநிலைத் தொடரில் முதல் சொல்லாகிய 'குடம்' என்பது இனம் விலக்கி நிற்றலின், அதன்கண் பொருள் சிறந்து நின்றது; 'வனைந்தான்' என்னும் பின் மொழியில் சிறப்பின்றியும் நின்றது.

2. நிலம் உழுதான்—'நிலம்' என்பது இனமும் இனம் விலக்குதலும் இன்றி வந்தமையின், அம் முன்மொழியிற் பொருட் சிறப்பில்லை; 'உழுதான்' என்றவுடனே 'நிலத்தை' என்பது தானே புலப்படுதலின் பின் மொழிக்கண் பொருள் சிறந்ததாயிற்று.

3. கபில பரணர்—கபிலன் + பரணர்—இங்கு இரண்டு மொழிகளிலும் பொருள் சிறந்து நின்றது.

4. பூங்குழல் வந்தாள்—பூ(வையுடைய) குழல் (உடையவள்) என விரியும். எனவே, இத்தொகையின் புறத்தேயுள்ள 'உடையவள்' என்ற புறமொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்றலைக் காண்க.

இவ்வாறு தொகைநிலைத் தொடர்மொழிகள் (1) முன்மொழியிலும், (2) பின்மொழியிலும் (3) இரண்டு மொழிகளிலும், (4) இரண்டிற்குப் புறத்திலும் பொருள் சிறந்து நிற்கும்.

## 2. மரபு

1. மரபு—சான்றோர் வழக்கு. எப்பொருளை எச்சொல்லால், எந்நெறியால் சான்றோர் சொன்னார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அந்நெறியால் சொல்லுதலே மரபு ஆகும்.

குதிரைக் குட்டி—இது சான்றோர் வழக்கு—மரபு.
பசுவின் கன்று— „ —மரபு.

2. (1) அடிசில்—இது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல். ஆதலால் இதனை 'அயின்றார்', 'மிசைந்தார்', என்னும் பொதுவினையாற் கூறலே மரபு.

(2) அணி (நகை)—இது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல். ஆதலால், இதனை, 'அணிந்தார்', 'தாங்கினார்' என்னும் பொது வினையாற் கூறலே மரபு.

(3) இயம் (வாத்தியம்)—இது கொட்டுவன, ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல் ஆதலால், இதனை 'இயம்பினார்', 'படுத்தார்' என்னும் பொதுவினையாற் கூறலே மரபு.

(4) படை (போர்க்கருவி)—இது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல். ஆதலால் இதனை, 'வழங்கினார்', 'தொட்டார்' என்னும் பொதுவினையாற் கூறலே மரபு.

3. குன்றவன் கொற்றன்—திணை பற்றிவந்த சிறப்புப் பெயர்
அருவாளன் அழகன்—நிலம் ,,
பார்ப்பான் கௌதமன்—சாதி ,,
கோவூர் கிழான் கண்ணன்—ஊர் ,,
பொன்னன் கந்தன்—உடைமை ,,
கரியன் கண்ணன்—நிறம் (குணம்) ,,
நடிகன் நடராசன்—தொழில் ,,
ஆசிரியன் அந்துவன்—கல்வி ,,

திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி பற்றிவரும் சிறப்புப் பெயருடன் இயற்பெயர் சேர்ந்து வருமாயின், அவ்வியற்பெயர் (மேற்கண்டவாறு) பின் வருதலே சிறந்த மரபு.

4. (1) நம்பி வந்தான், அவற்குச் சோறிடுக—படர்க்கை இடத்தாகிய உயர்திணைப் பெயரைச் சார்ந்த சுட்டுப் பெயர் உயர்திணைப் பெயருக்குப் பின் வந்தது.

(2) பசு வந்தது அதற்குப் புல்லிடுக—அஃறிணைப் பெயரைச் சார்ந்த சுட்டுப் பெயர் அதன் பின் வந்தது.

(3) சாத்தன், தெய்வம், அவற்குப் பலியிடுக.
↓
(உயர்திணை)
சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக.
↓
(அஃறிணை)
—விரவுப் பெயர்.

இவ்விரவுப் பெயரைச் சார்ந்த சுட்டுப் பெயர் அவ்விரவுப் பெயரின் பின் வந்தது.

இங்ஙனம் (1) உயர்திணைப் பெயர், (2) அஃறிணைப் பெயர், (3) விரவுப் பெயர் என்னும் மூவகைப் பெயரைச் சுட்டுப் பெயர் சாரின், அச் சுட்டுப் பெயர் அம் மூவகைப் பெயர்க்கும் பின்வரும். இங்ஙனம் வருதலே மரபு.

## 8. வழுவமைதிகள்

### (1) கால வழுவமைதி

1. (1) தெய்வம் இருக்கிறது.
   (2) நிலம் கிடக்கிறது.
   (3) மலை நிற்கிறது.

இவ்வாறு தம் தொழில் இடையறுது முக்காலத்திலும் ஒரு தன்மையவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தால் கூறுதல் கால வழு அமைதி எனப் படும்.

2. (1) தனக்காகக் காத்துநிற்கும் நண்பன், 'இன்னும் சோறு உண்டிலையோ!' எனின், அது வரை உண்ணுதான், 'உண்டேன், இதோ வருகிறேன்' என்பான். உண்ணுகின்றவனும் 'உண்டேன் இதோ வருகிறேன்' என்பான். இவ்வாறு விரைவு பற்றி எதிர் காலமும் நிகழ்காலமும் இறந்த காலம் ஆயின.

(2) அக்காட்டிற் புகின் கூறை கோட்பட்டான்—இது மிகுதியால் எதிர்காலம் ('கூறை கோட்படுவான்' என்பது) இறந்தகாலம் ('பட்டான்' என) ஆயிற்று.

(3) அறம் செயின், சுவர்க்கம் புகுந்தான்— இது தெளிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலம் ஆயிற்று.

(4) யாம் பண்டு விளையாடுவது இப்பூங்கா.
யாம் பண்டு விளையாடுகிறது இப்பூங்கா.

இது காரணம் இன்றி இயல்பினால் இறந்தகாலம் (விளையாடியது என்பது) எதிர் காலம் (விளையாடுவது என) ஆயிற்று; இறந்தகாலம் நிகழ்காலம் ஆயிற்று.

இவ்வாறு (1) விரைவு, (2) மிகுதி, (3) தெளிவு, (4) இயல்பு என்னும் பொருள்கள் பற்றி, பொருத்தமான இடங்களில் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படும். இது கால வழுவமைதி எனப்படும்.

## (2) மரபு வழுவமைதி

1. யானைக்கன்று—மரபு; யானைக்குட்டி—மரபு வழு. ஆயினும் வழக்குப் பெற்றுவிட்டதால் இது அமைதி எனக் கொள்ளப்பட்டது.

2. மீமிசை—'மேல்' என்னும் ஒரே பொருளைத் தரும் மீ—மிசை என்னும் இரு சொற்கள் வந்தன. இங்ஙனம் வருதல் காரணமற்றதாயினும், சிறந்து நிற்றலால் அமைதியாகக் கொள்ளப்பட்டது.

3. இம்மாடு யான் வாங்கியது—என, செயப்படு பொருளைக் கருத்தாவைப்போல வைத்து அதன் மேல் வினை முதல் வினை ஏற்றிக் கூறுவதும் வழக்கில் இருப்பதால் அமைதி எனக் கொள்ளப்பட்டது.

4. (1) நெஞ்சமே! நான் கூறுவதைக் கேள்.
(2) பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்.
(3) இவ்வழி அவ்வூருக்குப் போகும்.

(4) பெடையன்னம் தன்நிழலைக் கண்டு தன் ஆண் அன்னத்தின் காதலி என்று கருதி, ஆண் அன்னத்துடன் ஊடல் கொண்டது.

இவ்வாறு (1) கேளாதனவற்றைக் கேட்பன போலவும், (2) சொல்லாதனவற்றைச் சொல்வன போலவும், (3) நடவாதனவற்றை நடப்பன போலவும், (4) செய்யாதனவற்றைச் செய்வன போலவும் அஃறிணையிடத்தில் சொல்லப்படும்.

உயர்திணை இடத்தும் இவ்வாறு சொல்லப்படுதல் புலம்பல் முதலியவற்றில் காண்க.

## 4. ஒரு பொருட் பன்மொழி முதலியன

**1. ஒரு பொருட் பன்மொழி :**

(1) மீ மிசை ஞாயிறு—இதில், 'மேல்' என்னும் ஒரே பொருளைத் தரும் 'மீ' என்பதும், 'மிசை' என்பதும் வந்துள்ளன.

(2) உயர்ந்தோங்கு பெருவரை — இதில், 'உயர்ச்சி' என்னும் ஒரே பொருளைத் தரும் 'உயர்ந்து', என்பதும், 'ஓங்கு' என்பதும் வந்துள்ளன.

இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் காரணம் இன்றி வரினும், சிறந்து நிற்றலின், வழுவென்று நீக்கப்பட்டில. இவை ஒரு பொருட் பன் மொழி எனப்படும்.

**2. இரட்டைக் கிளவி :**

(1) அவன் கலகல என்று பேசினான்.

(2) இலைகள் சலசல என்று ஒலித்தன.

(3) மரம் மளமள என்று முறிந்தது.

(4) வாள் பளபள என்று மின்னுகிறது.

முதல் வாக்கியத்திலுள்ள கலகல என்பதைப் பாருங்கள். இதனை இரண்டாகப் பிரித்தால் பொருள் தராது; பிரித்துச் சொல்லவும் முடியாது. ஆதலால் இது இரட்டைக் கிளவி (கிளவி-சொல்) எனப்படும். இவ்வாறு வரும் பல சொற்களை எழுதி வையுங்கள்.

## 8. அடுக்குத்தொடர்:

(அ) (1) பாம்பு பாம்பு

(2) மழை மழை மழை

(3) கண்டேன் கண்டேன் கண்டேன் கண்டேன்

இங்ஙனம் சொற்கள் அடுக்கித் தொடர்தல் அடுக்குத்தொடர் எனப்படும். இத்தொடரிலுள்ள சொற்களைப் பிரிக்கலாம்; பிரித்தாலும் பொருள் தரும்.

இவ்வடுக்குத்தொடர் பல பொருள்பற்றி வரும்.

(ஆ) (1) அன்றே அன்றே—அசைநிலை

(2) உண்டேன் உண்டேன்—விரைவு

(3) எறி எறி எறி—வெகுளி

(4) வருக வருக வருக—உவகை

(5) தேள் தேள் தேள்—அச்சம்

(6) வாழேன் வாழேன் வாழேன்—அவலம்

(7) நல்குமே நல்குமே நல்குமே நாமகள்—இசை நிறை

இவ்வாறு அடுக்குத் தொடர் (1) அசைநிலை, (2) விரைவு, (3) வெகுளி, (4) உவகை, (5) அச்சம், (6) அவலம், (7) இசைநிறை முதலிய பொருள்களில் வரும்.

## 5. உப லட்சணம்

1. சோற்றை நனி உண்டான்—இங்ஙனம் கூறியவுடனே 'கறியை நனி தின்றான்', என்ற தொடக்கத்தின் இனமாய் எஞ்சி நின்றன.

2. பாக்கை நனி தின்றான்—இவ்வாறு கூறிய வுடனே 'வெற்றிலையை நனி தின்றான்', 'சுண் ணும்பை நனி தின்றான்' என்பன இனமாய் எஞ்சி நின்றன.

இவற்றுள்—(1) சோற்றை என்னும் பெயர்ச் சொல்லும் உருபிடைச் சொல்லும், "கறியை' என்னும் பெயர்ச் சொல்லையும் உருபிடைச் சொல்லை யும்; (2) நனி உண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும் 'நனி தின்றான்' என்னும் உரிச் சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்கு உரியவாய் நிற்கின்றன.

இவ்வாறு பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்றும் எஞ்சி நின்ற தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரியது. இங்ஙனம் இனங்களைக் கொள்ளுதலை வடநூலார் உப லட்சணம் என்பர்.

### பயிற்சி

1. தொகையால் பொருள் சிறந்து நிற்குமிடங்களைத் தக்க உதாரணங்களால் விளக்குக.
2. மரபு என்பது இன்னது என்பதைத் தெளிவுறுத்துக.
3. வழு எது ? அமைதி எது ? விளக்குக.
4. கால வழுவமைதிக்கு ஏற்ற உதாரணம் தருக.
5. மரபு வழு—எது ?
6. மரபு வழுவமைதிக்கு உதாரணங்கள் தருக.
7. ஒரு பொருட் பன்மொழி—விளக்கி உதாரணம் தருக.

8. வழவழ, தடதட, நரி நரி, வண்டு வண்டு வண்டு; வருக வருக, வாழ்க வாழ்க—இவற்றிலுள்ள இரட்டைக் கிளவிகளையும் அடுக்குத் தொடர்களையும் எடுத்து எழுதுக.

9. இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறுக.

10. அடுக்குத்தொடர் எப்பொருள்களில் வரும்? உதாரணம் தருக.

# IV. புணர்ச்சி

## 1. உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி

1. ஊரன் + சிறியன் = ஊரன் சிறியன் } அல்வழி
கந்தன் + பெரியன் = கந்தன் பெரியன் }
கந்தன் + தலை = கந்தன் தலை—வேற்றுமை

இவ்வாறு உயர்திணைப் பெயர்களின் ஈற்றிலுள்ள ன் வல்லினம் வர, வேற்றுமையிலும் அல்வழியிலும் இயல்பாயிற்று.

2. (1) நம்பி + சிறியன் = நம்பி சிறியன்—அல்வழி
நம்பி + தலை = நம்பி தலை—வேற்றுமை
(2) விடலை + சிறியன் = விடலை சிறியன்—அல்வழி
விடலை + கை = விடலை கை—வேற்றுமை
(3) சேய் + பெரியன் = சேய் பெரியன்—அல்வழி
சேய் + செவி = சேய் செவி—வேற்றுமை
(4) அவர் + தீயர் = அவர் தீயர்—அல்வழி
அவர் + தலை = அவர் தலை—வேற்றுமை

இவ்வாறு உயர்திணை இகர, ஐகார, யகர, ரகரங்களின் முன்வந்த வல்லினம் இரு வழியிலும் இயல்பாயிற்று.

3. கபிலன் + பரணன் = கபில பரணர்
வடுகன் + நாதன் = வடுக நாதன்
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்
(மேலுள்ள மூன்றும்: உயர்திணை)
குமரன் + கோட்டம் = குமரகோட்டம்
ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி
நளன் + வெண்பா = நளவெண்பா
—உயர்திணையும் அஃறிணையும்.

இவ்வாறு உயர்திணைப் பெயர்கள், சில உயர்திணைப் பெயர்களோடும் அஃறிணைப் பெயர்களோடும் சேர்கையில் தமக்கேற்றவாறு விகாரமடையும்.

## 2. உயிரீற்றில் இயல்பாக நிற்பவை

1. நம்பியா + கொண்டான் = நம்பியா கொண்டான்?
உண்கா + கொற்று = உண்கா கொற்று
தம்பீ + கொடு = தம்பீ கொடு

இவ்வாறு யா என்னும் வினாப் பெயர் முன்னும், உயிரீறு ஆகிய விளிப்பெயர்கள் முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

2. (1) உண்ணிய + கொண்டான் = உண்ணிய கொண்டான்
(2) உண்ட + கண்ணன் = உண்ட கண்ணன்
(3) வந்தன + குதிரைகள் = வந்தன குதிரைகள்
(4) தன + கைகள் = தனகைகள்
(5) பல + குதிரைகள் = பல குதிரைகள்
பல + செய்தான் = பல செய்தான்
(6) அம்ம + கண்ணா = அம்ம கண்ணா

இவ்வாறு *(1) அகரத்தை ஈற்றிலேயுடைய

'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன்னும், (2) பலவகைப் பெயரெச்சங்கள் முன்னும், (3) வினைமுற்று முன்னும், (4) ஆறும் வேற்றுமை உருபின் முன்னும், (5) அஃறிணைப் பன்மைக்கு முன்னும், (6) 'அம்ம' என்னும் இடைச்சொல்லுக்கு முன்னும் வரும் க, ச, த, ப இயல்பாகும் என்பது மேலே காட்டப்பெற்ற உதாரணங்களால் தெரிகிறது.

3. "ஆவாழி அந்தணர் வாழி"—'வாழிய' என்னும் வியங்கோள் வினைமுற்றினது ஈற்று உயிர்மெய் குறைந்து, இகர ஈறாய் நின்றாலும் வல்லினம் (க, ச, த, ப) இயல்பாகும்.

4. ஆ + சிறிது = ஆசிறிது
மா + பெரிது = மாபெரிது
கேண்மியா + கண்ணா = கேண்மியா கண்ணா
உண்ணா + குதிரைகள் = உண்ணா குதிரைகள்

இவ்வுதாரணங்களால், ஆ, மா, மியா, ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினைமுற்று என்பவற்றின் முன்வரும் வல்லினம் மிகா என்பது தெரிகிறது.

5. நாளன்றி—இதிலுள்ள 'அன்றி' என்னும் சொல்லில் உள்ள ஈற்று இகரம் செய்யுளில் உகாரமாயின், 'அன்று' எனவரும். அப்போது அதன் முன்வரும் வல்லினம் மிகா.

"நாளன்று போகி" என மிகாமல் வரும்.

6. (1) வரதனொடு + சென்றான் = வரதனொடு சென்றான்

(2) வரதனது + தலை = வரதனது தலை
(3) ஏழு + கை = ஏழுகை
(4) அறு + தலை = அறுதலை
(5) அடு + களிறு = அடுகளிறு
(6) அது + சிறிது = அது சிறிது

இவ்வாறு (1) முற்றியலுகர ஈற்று மூன்றும் வேற்றுமை 'ஒடு' உருபு, (2) ஆறும் வேற்றுமை 'அது' உருபு, (3) இயல்பாய் வரும் எண்ணுப் பெயர், (4) விகாரமாய் வரும் எண்ணுப் பெயர், (5) வினைத்தொகை, (6) சுட்டு இவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

7. (1) நாகு + கடிது = நாகுகடிது
(2) எஃகு + சிறிது = எஃகு சிறிது
(3) வரகு + பெரிது = வரகுபெரிது
(4) குரங்கு + தீது = குரங்குதீது
(5) தெள்கு + கடிது = தெள்குகடிது

இவ்வாறு வன்றொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த ஏனைய (1) நெடிற்றொடர், (2) ஆய்தத்தொடர், (3) உயிர்த்தொடர், (4) மென்றொடர், (5) இடைத்தொடர்க் குற்றியலுகரங்கட்கு முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்.

8. (1) தெள்கு + கடுமை = தெள்குகடுமை
(2) எஃகு + சிறுமை = எஃகுசிறுமை
(3) நாகு + தீமை = நாகுதீமை
(4) வரகு + கடுமை = வரகுகடுமை

என்று இவ்வாறு (1) இடைத்தொடர், (2) ஆய்தத் தொடர், (3) ஒற்று இடையில் மிகாத நெடிற்றொடர்,

(4) உயிர்த்தொடர் இவற்றின் முன்வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகாமல் வரும்.

9. (1) அவனே + கொண்டான் = அவனே கொண்டான் என 'ஏ'கார இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

(2) அவனோ + கொண்டான் = அவனோ கொண்டான் என 'ஓ'கார இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

### பயிற்சி

1. அல்வழி, வேற்றுமை—இவற்றை விளக்குக.

2. 'வல்லினம் மிகா'—இங்கு 'வல்லினம்' என்பது சுட்டும் எழுத்துக்கள் யாவை?

3. பின்வருவனவற்றிற்குப் புணர்ச்சி விதி கூறுக :—
ஊரன் + சிறியன், கந்தன் + தலை, கபிலன் + பரணன், விடலை + கை, விடலை + பெரியன், நளன் + வெண்பா.

4. தம்பியா கொண்டான், தம்பீதா, உண்காபரந்தாமா—இவை எவ்விதி பற்றிப் புணர்ந்தன?

5. செய்யிய + பார்த்தான், உண்ட + பையன், வந்தன + கழுதைகள், என + பைகள், சில + பைகள், சில + செய்தான், அம்ம + கமலா—இவற்றைப் புணர்த்தி விதி கூறுக.

6. "ஆ, மா, மியா, ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை வினைமுற்று—இவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்."—இவ்விதிக்கு உதாரணங்கள் தருக.

7. கண்ணனொடு, கண்ணனது, ஆறு, அறு, கொல், அது—இவற்றின் முன்வரும் வல்லினம் என்ன ஆகும்? எடுத்துக் காட்டுகளைத் தருக.

8. எவ்வெத்தொடர்க் குற்றியலுகரத்திற்கு முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்?

9. எவ்வெத்தொடர்க் குற்றியலுகரத்திற்கு முன்வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகும்?

10. ஏ, ஓ என்னும் இடைச்சொற்கள் முன்வரும் வல்லினம் என்ன ஆகும்? உதாரணங்கள் தருக.

# V. யாப்பு

சென்ற வகுப்பில் அசை, சீர்களின் இலக்கணமும் வாய்பாடும் பற்றி அறிந்தீர்கள் அல்லவா? இங்கு மேலும் யாப்பிலக்கணச் செய்திகள் சிலவற்றை அறிந்துகொள்ளுங்கள்.

## 1. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல்

(அ)

(1) முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
முயற்-சி திரு-வினை யாக்-கும் முயற்-றின்-மை
நிரை நேர் நிரை நிரை நேர் நேர் நிரை நேர் நேர்
புளி மா கருவிளம் தே மா புளி மாங்காய்

(2) இன்மை புகுத்தி விடும்
இன்-மை புகுத்-தி விடும்
நேர் நேர் நிரை நேர் நிரை
தே மா புளி மா மலர்

(ஆ)

(1) கண்மணி திருவருளால் உனைக்காண்பேன்
கண்-மணி திரு-வரு-ளால் உனைக்-காண்-பேன்
நேர் நிரை நிரை நிரை நேர் நிரை நேர் நேர்
கூ விளம் கரு விளங் காய் புளி மாங் காய்

(2) மண்ணதனில் ஆக்குங்கால் மதிப்பரிதால்
மண்-ணத-னில் ஆக்-குங்-கால் மதிப்-பரி-தால்
நேர் நிரை நேர் நேர் நேர் நேர் நிரை நிரை நேர்
கூ விளங் காய் தே மாங் காய் கரு விளங் காய்

இவ்வாறு சீர்களை அசைகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் வாய்பாடு கூற அறிதல் வேண்டும்.

## 2. தளை (இலக்கணமும் வகையும்)

இன்-மை புகுத்-தி
↓ ↓ ↓ ↓
நேர் நேர் நிரை நேர்
தே மா

ஒரு சீரின் ஈற்றசையும் வருசீரின் முதலசையும் பொருந்தும் பொருத்தமே தளை என்பது.

1. கந் - தா கா - யா
நேர் நேர் நேர் நேர்

இச்சீர்கள் இரண்டும் ஈரசைச்சீர்கள்; இயற்சீர்கள்; ஆசிரிய வுரிச்சீர்கள் எனப்படும். நிலைச்சீரின் ஈற்றசை நேர்; வருசீரின் முதலசையும் நேர். இவ்வாறு ஆசிரிய வுரிச்சீர்களில் 'நேர் - நேர்' பொருந்துவது, நேர் ஒன்றிய ஆசிரியத்தளை எனப் பெயர் பெறும்.

2. இவ்-வணி அவ - னது
நேர் நிரை நிரை நிரை

இந்த இரண்டும் ஆசிரிய வுரிச்சீர்களே. இங்கு 'நிரை-நிரை' பொருந்துவது, நிரை ஒன்றிய ஆசிரியத்தளை எனப்படும். இவை பெரும்பாலும் ஆசிரியப்பாவில் வரும்.

3. (1) மேற்சொன்ன முறை மாறி, 'நிரை நேர்', 'நேர் நிரை' என இவ்வியற்சீர்கள் மாறிப் பொருந்துவதும் உண்டு.

அவ்-வணி எங் - கே
நேர் நிரை நேர் நேர் } 'விள' முன் 'நேர்'
கூ விளம்

(2) அண்-ணே அடி - யடா | 'மா' முன் 'நிரை'
நேர் நேர் நிரை நிரை
தே மா

இவை பெரும்பாலும் வெண்பாவில் வருபவை. ஆதலால் இவை 'இயற்சீர் வெண்டளை' எனப்படும்.

எனவே, ஈரசைச் சீர்களால் (1) நேர் ஒன்றிய ஆசிரியத்தளை, (2) நிரை ஒன்றிய ஆசிரியத் தளை, (3) இயற்சீர் வெண்டளை என்னும் மூவகைத் தளைகள் உண்டாதலை அறிக.

4. (1) மண்-ணத-னில் ஆ-குங்-கால் | 'காய்' முன் 'நேர்'
நேர் நிரை நேர் நேர் நேர் நேர்
கூ விளங் காய்

(2) மதிப்-பரி - தால் மன்-னனே | 'காய்' முன் 'நேர்'
நிரை நிரை நேர் நேர் நிரை
கரு விளங் காய்

காய்ச்சீராகிய வெண்பாவுரிச்சீர் நேரசையோடு பொருந்துதல் ('காய்' முன் 'நேர்' வருதல்) வெண்சீர் வெண்டளை (வெண்பாவுக்கே பெரிதும் உரிய சீர் களால் அமைந்த—வெண்பாவுக்கே பெரிதும் உரிய தளை) எனப்படும்.

5. 'காய்ச்சீர்' எனப்படும் வெண்பாவுரிச்சீர் நின்று தன் வருஞ்சீரின் முதலசையோடு ஒன்றாதது கலித்தளை எனப்படும்.

6. 'கனி' என்று முடியும் வஞ்சியுரிச்சீர் நின்று தன் வருஞ்சீரின் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளை எனப்படும்; வஞ்சியுரிச்சீர் நின்று தன் வருஞ்சீரின் முதலசையோடு ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளை என்று பெயர் பெறும்.

எனவே, தளை—(1) நேர் ஒன்றிய ஆசிரியத்தளை, (2) நிரை ஒன்றிய ஆசிரியத்தளை, (3) இயற்சீர் வெண்டளை, (4) வெண்சீர் வெண்டளை, (5) கலித்தளை, (6) நேர் ஒன்றிய வஞ்சித்தளை, (7) நேர் ஒன்றா வஞ்சித்தளை என ஏழு வகைப்படும் என்பதை அறியலாம்.

## 3. வெண்டளையின் இலக்கணம்

(1) இயற்சீர் வெண்டளை, (2) வெண்சீர் வெண்டளை என வெண்டளை இருவகைப்படும்.

(1) மா முன் நிரை
விள முன் நேர் } இயற்சீர் வெண்டளை.

(2) காய் முன் நேர்—வெண்சீர் வெண்டளை இவை மேலே நன்கு விளக்கப்பட்டன.

## 4. வெண்பா வகையும், ஆசிரியப்பா வகையும்

### (1) வெண்பா வகை

1. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு." [உய்வில்லை

இப்பாடலில் இரண்டு அடிகள் உள. முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் உள. இத்தகைய குறுகிய வடிவில் உள்ள பாவில் வெண்பாவுக்குரிய இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே உள்ளன. இது குறள் வெண்பா எனப்படும். திருக்குறளில் உள்ள எல்லாப் பாக்களும் குறள் வெண்பாக்களே.

2. "அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வன் உரைப்ப—சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு."

இவ்வாறு மூன்றடியால் வரும் வெண்பா சிந்தியல் வெண்பா எனப்படும்.

3. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

இப்பாவில் நான்கு அடிகள் உள்ளன. முதல் மூன்று அடிகளில் நந்நான்கு சீர்கள் உள. கடைசியடி மூன்று சீர்களை உடையது; இரண்டாம் அடியில் மூன்றாம் சீருக்கும் நான்காம் சீருக்கும் இடையில் கோடு இடப்பட்டுள்ளது. அஃதாவது, இரண்டாம் அடியில் 'தனிச்சொல்' வந்துள்ளது. இங்ஙனம் வரும் வெண்பா நேரிசை வெண்பா எனப்படும்.

4. "துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

இதனில் 'தனிச்சொல்' இல்லை. இவ்வாறு வரும் வெண்பா இன்னிசை வெண்பா எனப் பெயர் பெறும். இவ்வெண்பா அடிதோறும் தனிச்சொல் பெற்று வரும்; இரண்டாம் அடியில் மட்டும் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வருதலும் உண்டு; *மூன்றும் அடியின் இறுதியில் தனிச்சொல்

* அடிதோறும் முதற்சீரில் இரண்டாம் எழுத்து ஒன்றாகவே வருதல் ஒரு விகற்பம்; முதல் இரண்டடிகளில் ஓரெழுத்து ஒன்றாகவும், பின்னிரண்டு அடிகளில் வேறோர் எழுத்து ஒன்றாகவும் வருதல் இருவிகற்பம்; இரண்டடிகளில் முதற்சீரில் இரண்டாம்

வந்து, இருவிகற்பத்தால் முடிவது உண்டு. இவ்வாறு பலவாறு வந்து நேரிசை வெண்பாவிற் சிறிது வேறு பட்டு வருவது இன்னிசை வெண்பா என்பது.

5. "சோற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயற் [வேல்
ரேற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்."

இப்பா நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா இவற்றுக்குரிய நான்கு அடியினும் மிக்கு வந்து வெண்பா இலக்கணம் பொருந்தப்பெற்றிருப்பதால், பஃறொடை வெண்பா எனப்படும். (பல்+தொடை =பஃறொடை.)

## (2) ஆசிரியப்பா வகை

"பாரி பாரி என்றுபல வேத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே."

இப்பாடலில் பெரும்பாலான சீர்கள் ஈரசைச் சீர்களாகிய அகவற் சீர்களே. இதில் அமைந்துள்ள ஓசை அகவல் ஓசை. ஈற்றுக்கு அயலடி மூன்று சீர்களை உடையதாயும், ஏனைய அடிகளெல்லாம் நாற்சீர்களைப் பெற்றும் வருவது அகவற்பாவின் பொது இலக்கணம்.

இப்பா (1) நேரிசை ஆசிரியப்பா, (2) இணைக் குறள் ஆசிரியப்பா, (3) நிலை மண்டில ஆசி

எழுத்து ஒன்றாகவும் பிற அடிகளில் வேறுபட்டும் வருதல் மூவிகற்பம் என்று சொல்லப்படும்.

ரியப்பா, (4) அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

1. "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொ டு நட்பே."

இவ்வாறு ஈற்றுக்கு அயலடி மூன்று சீர்களால் வருவது நேரிசை ஆசிரியப்பா எனப்படும்.

2. "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரனுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே."

ஈற்றடியும் முதலடியும் நாற்சீர்களையுடையன வாய், இடைப்பட்ட அடிகள் குறளடி*களாகவும் சிந்தடிகளாகவும் வருதல் இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

3. "வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட! செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

* இரண்டு சீர்களைக் கொண்ட அடி குறளடி எனப்படும்.

மூன்று சீர்களைக் கொண்ட அடி சிந்தடி எனப்படும்.

நான்கு சீர்களைக் கொண்ட அடி அளவடி அல்லது நேரடி எனப்படும்.

ஐந்து சீர்களைக் கொண்ட அடி நெடிலடி எனப்படும்.

ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களும் கொண்ட அடி கழி நெடிலடி எனப் பெயர் பெறும்.

இப்பாவில் எல்லா அடிகளும் நாற்சீர்களால் அளவு ஒத்து வந்தமையால், இது நிலை மண்டில ஆசிரியப்பா எனப்படும்.

4. "சூரல் பம்பிய சிறுகான் யாரே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சார னாட! நீவர லாறே."

இது அடிதோறும் முதல், நடு, இறுதியாக உச்சரிக்க ஓசையும் பொருளும் பிழையாது வருவதால், அடிமறி மண்டில ஆசிரியப்பா எனப் பெயர் பெறும்.

## 5. ஆசிரிய விருத்தம்

ஆசிரியப்பாவுக்கு உரிய இலக்கணங்கள் பலவற்றையும் பெற்றதாய், அடிதோறும் ஐந்து சீர்களுக்கு மேற்பட்டதாய், நான்கு அடிகளிலே முடிவதாய் அமையும் செய்யுள் ஆசிரிய விருத்தம் எனப்படும்.

"தேரழிந் தெடுத்த வில்லும் செங்கதிர் வாளு மின்றி
ஒருத வியும்பெ றுமல் ஒழிந்துயிர் அழிந்த மைந்தா
போரமர் உடற்றி நீயப் பொன்னக ரடைந்த போதுன்
பேரமர் ஆண்மை கேட்டுப் பிதாமகன் என்சொன்
னானோ."

இது ஆசிரிய விருத்தமாகும்.

பயிற்சி

1. "அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரை நிலையாற் காய்ந்தாரென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு."

(1) இப்பாவிலுள்ள சீர்களைப் பிரித்து வாய்பாடு கூறுக.
(2) இப்பாவிலுள்ள தளைகளைச் சுட்டுக.
(3) இப்பாடல் எவ்வகை வெண்பாவுக்கு மேற்கோள்.

2. வெண்டளையின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

3. வெண்பாவின் உட்பிரிவுகள் எவை? ஒவ்வொன்றுக்கும் இலக்கணமும் உதாரணமும் தருக.

4. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது? அதன் வகை யாது?

5. ஆசிரிய விருத்தத்தின் இலக்கணம் என்ன? ஓர் உதாரணம் தந்து, ஆசிரிய விருத்தத்தின் இலக்கணத்தை விளக்குக.

# VI. அணி

## 1. வேற்றுமையணி

"சென்று செவியளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று [னை
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு."

இச் செய்யுளில் முன் இரண்டு அடிகளால் வெளிப்படையாக இரு பொருள்களுக்கு ஒப்புமை கூறி, பின்பு, ஒன்று 'மாதர்நோக்கு,' ஒன்று 'கூத்தன்றன் வாக்கு' என அவ்விரு பொருள்களுக்கும் வேறுபாடு கூறப்பட்டது. ஆதலால் இது வேற்றுமையணி எனப்படும்.

கூற்றினாலாவது, குறிப்பினாலாவது, ஒப்புடைய இரு பொருள்களை ஒரு பொருளாக வைத்து, அவற்றைத் தம்முள் வேற்றுமைபடச் சொல்வது வேற்றுமையணி எனப்படும்.

## 2. வஞ்சப் புகழ்ச்சி அணி

" அந்தவுரை மீண்டிவன்கேட் டாங்கவனை
நகைத்துரைப்பான் அரக்க ரேனும்
சிந்தனையில் விரகெண்ணுர் செருமுகத்தில்
வஞ்சமுகஞ் செய்யார் ஐயா
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருந்தார்
நிரைக்கழுவில் வீழச் செய்யார்
உந்துபுன லிடைப்புதையார் ஓரூரில்
இருப்பகற்ருர் உரையும் தப்பார்.

" செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணர்
அழுந்துமனத் தழுக்குருர் அச்சமுற்
றருளின்றிப் பொய்க்கூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கானம்
அடைவித்துக் கொல்ல எண்ணுர்
எழுந்தமரில் முதுகிடார் இவையெல்லாம்
அடிகளுக்கே ஏற்ப என்ருன்."

இச்செய்யுட்கள், தன்னை அரக்கிமகன் என்று பழித்த துரியோதனனை நோக்கி, "அரக்கராயினும் துணைவருக்கு விடம் அருந்தார்............................ ......இவையெல்லாம் அடிகளுக்கே ஏற்ப" என்று வஞ்சகமாகப் புகழ்ந்து கூறியதாகப் பாடப்பட்டவை. எனவே, இவற்றில் **வஞ்சப் புகழ்ச்சியணி** அமைந்துள்ளது காண்க.

## 3. நிரல்நிறையணி

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

இப்பாடலில் வரும் வெஃகாவும் பாடகமும் ஊரகமும் காஞ்சி மாநகரிலுள்ள திருமாலின் திருப்பதிகள். இவற்றுள் திருமால் வெஃகாவில் கிடந்த திருக்கோலமாகவும், பாடகத்தில் இருந்த திருக்கோலமாகவும், ஊரகத்தில் நின்ற திருக்கோலமாகவும் எழுந்தருளியிருக்கின்றனர். இவற்றை இப்பாடலில் ஆசிரியர் நன்றாக அமைத்துள்ளார்; முதலில் மூன்று திருக்கோயில்களையும், பின்னர் முறையே பெருமாளின் மூன்று கோலங்களையும் கூறியுள்ளார். படிப்பவர் இவற்றை மாற்றி இயைத்துப் பொருள் கொள்ளவேண்டும். இவ்வாறு சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல் நிறையணி எனப்படும்.

### பயிற்சி

1. "அனைத்துலகுஞ் சூழ்போய் அரும்பொருள் கைக்கொண்டு
இனைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடல்
மன்னவநின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னும் இதுவொன்றே வேறு."

இதில் அமைந்துள்ள வேற்றுமையணியை விளக்குக.

2. வஞ்சப் புகழ்ச்சியணியை உதாரணத்தால் விளக்கிக் காட்டுக.

3. நிரல்நிறையணிக்கு ஓர் உதாரணம் தருக.

# VII. பொருள் இலக்கணம்

மனிதன் பெறத்தக்க அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களின் இலக்கணத்தையும் ,விளக்கிக் கூறுவது பொருள் இலக்கணம் என்பது. அப்பொருள் அகப்பொருள், புறப் பொருள் என இருவகைப்படும்.

## 1. அகப்பொருள்

ஒருவனும் ஒருத்தியும் ஒருவரையொருவர் காதலித்து நடத்தும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பல படியாக விளக்கிக் கூறுவது அகப்பொருள் என்பது. காதற்செய்திகள் புறத்தே கூறலாகா நிலையில் அகத்தே அடங்கவேண்டுவன ஆதலின் 'அகப்பொருள்' எனப் பெயர் பெற்றன. இதுபற்றிய இலக்கண நூல்கள் தமிழில் உண்டு.

பலர் அறியத் திருமணம் செய்துகொள்வதற்கு முன் தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகும் வாழ்க்கை களவு வாழ்க்கை என்றும், மணம் முடிந்தபின் வாழும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கூறப்படும். இவைபற்றிய விவரங்களைக் கூறும் இயல் (பகுதி) முறையே களவியல், கற்பியல் எனப் பெயர் பெறும். ஒவ்வொரு வாழ்க்கையிலும் பல நிகழ்ச்சிகள் உண்டு. அவ்வொவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு துறை எனப் பெயர் பெறும். இத்தகைய துறைகள் ஏறத்தாழ நானூறு அகப்பொருள் நூலில் கூறப்பட்டுள்ளன. இவ்விவரங்களைத் தொல்காப்பியம் களவியல், கற்பியல், பொருளியல் என்னும் இயல்களிலும், இறையனார் களவியல் நூலிலும் நம்பியகப்

பொருள் இலக்கணத்திலும், கோவை நூல்களிலும் சங்க நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய இலக்கிய நூல்களிலும் காணலாம்.

## 2. புறப்பொருள்

மனிதன் பெறத்தக்க நான்கு பேறுகளில் 'இன்பம்' ஒழிந்த அறம், பொருள், வீடு என்னும் மூன்றும் அனைவரும் அறியத்தக்க நிலையில் இருப்பவை. இவை அகவொழுக்கத்தைச் சார்ந்தவையல்ல; புற (வெளிப்படை) ஒழுக்கத்தைச் சேர்ந்தவை. ஆதலின் புறப்பொருள் எனப்பட்டன. அறம்பற்றிய விவரங்களும் பொருள்பற்றிய செய்திகளும் வீடு பற்றிய விவரங்களும் இப்பகுதியில் விரிவாகப் பேசப்படும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டில் பல பாடல்கள், நீதி நூல்கள், காவியங்கள் முதலியன புறப்பொருள் இலக்கிய நூல்களாம்.

புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம், புறத்திணை இயல் முதலியன புறப்பொருள் இலக்கண நூல்களாம். இப்பகுதியில் அரசனுடைய போர்ச் செயல்களை ஏழு திணைகளாக வகுத்து, ஒவ்வொரு திணைக்கும் பல துறைகளை அமைத்து இலக்கண ஆசிரியர்கள் போர் விவரங்களை விரித்துக் கூறியுள்ளார்கள். அத்திணைகள் முறையே வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை எனப் பெயர் பெறும். இவை பற்றிய விவரங்களனைத்தையும் மேற்சொல்லப்பட்ட பெரு நூல்களில் காணலாம்.

பயிற்சி

1. அகப்பொருள், புறப்பொருள் இவற்றின் பொருளை விளக்குக.

2. அகப்பொருளை விளக்கும் இலக்கண நூல்கள் எவை?

3. புறப்பொருளை விளக்கும் இலக்கிய நூல்கள் யாவை?

4. "அகம் புறம் என்பவற்றில் நாற்பேறுகளும் அடங்கும்"—இக்கூற்றை விளக்கி வரைக.

5. போர் விவரங்களைக் கூறும் திணைகள் எவை?

6. களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை—இவற்றை விளக்குக.

## 8. தேர்வுக்குரிய வினாக்கள்

1, உயிரெழுத்து, மெய்யெழுத்து, ஆய்த எழுத்து—இவை பிறக்கும் இடங்கள் எவை?

2. உடனிலை மயக்கம், வேற்றுநிலை மயக்கம்—இவற்றை உதாரணத்தால் விளக்குக.

3. விளி ஏலாத பெயர்கள் எவை?

4. கமலம், பிள்ளை, முதலியார், இராமன், மக்கள்—இப்பெயர்கள் விளி ஏற்கும்போது அடையும் மாறுதல்களைக் குறிப்பிடுக.

5. ஆகுபெயர் என்பது யாது? உதாரணம் தருக.

6. தாமரை போன்ற முகம், அவனைச் சிதம்பரம் சிரிக்கிறது, தையான் வந்தான், வீட்டிற்கு நீலம் அடித்தாள், அவள் அவியல் தயாரித்தாள், மயில் வந்தாள், திருவாசகம் படித்தான், சேனாவரையர் கற்றான் (சேனாவரையர்—தொல்காப்பிய உரையாசிரியர்), கார் விளைந்தது, இது கார் (காலம்)—இவற்றிலுள்ள ஆகு பெயர்கள் என்னென்ன ஆகு பெயர்கள் என்பதை விளக்குக.

7. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று எவ்வெப் பால்களில் வரும்? உதாரணம் தேவை.

8. பொதுவினைகள் யாவை? வகைக்கு ஓர் உதாரணம் தருக.

9. 'எச்சத் திரிபு'—இதனை நன்கு விளக்கி, உதாரணம் தருக.

10. நானும் அவனும் வந்தோம். நீயும் அவனும் வந்தீர்கள், நீயும் நானும் அவனும் போனோம், நீங்களும் அவர்களும் போனீர்கள்—இவை எவ்வகை உளப்பாட்டுப் பன்மை வினைமுற்றுக்கள்?

11. இடைச்சொல் என்பது யாது?

12. மன், என, தில்—இவை எவ்வெப் பொருள் களில் வரும்? உதாரணம் வேண்டும்.

13. உரிச்சொல் என்பது யாது? உதாரணம் தேவை.

14. கெழு, மல்லல், கூர், கழி—இவை எவ்வெப் பொருள்களில் வரும் என்பதை உதாரணத்தால் குறிப்பிடுக.

15. வாழைக்குட்டி, பசுக்குட்டி, முயல்கன்று, குரங்குக்கன்று—இவை மரபுச் சொற்களா? அல்ல வெனில், இவற்றுக்குரிய மரபுச் சொற்களை எழுதுக.

16. கால வழு அமைதி எவ்வெப் பொருள்களைக் கொண்டு பிறக்கும்?

17. மரபு வழு அமைதியை விளக்க ஏற்ற உதாரணம் தருக.

18. மிமிசை, சலசல, பாம்பு பாம்பு—இவை எவற்றிற்கு உதாரணங்கள்?

19. உபலட்சணத்தை ஏற்ற உதாரணத்தால் விளக்குக.

20. கபிலபரணர், நளவெண்பா, கண்ணன் சிறியன், சாத்திதீயள், நம்பிபெரியன், நம்பிதலை நம்பியாகொண்டான்—இவை எவ்வாறு புணர்ந்தன?

21. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு."

இப்பாட்டிலுள்ள ஒவ்வொரு சீரையும் பிரித்து வாய்பாடு கூறுக.

22. தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை —இவற்றின் வாய்பாடுகள் யாவை?

24. "கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலு மேறும் வயக்களிறே—கைதொழுவல்
காலைக் கவண்ணனைக் கண்டாரக் காணவெஞ்
சாலேகஞ் சார நட."

(1) இப்பாடலிலுள்ள சீர்களைப் பிரித்து வாய்பாடு கூறுக.

(2) இப்பாட்டிலுள்ள தளைகளைக் கூறுக.

25. வெண்பாவின் வகை யாவை? ஏதேனும் ஒன்றுக்கு உதாரணம் தருக.

26. ஆசிரியப்பாவின் வகை எவை? ஏதேனும் ஒன்றுக்கு உதாரணம் தருக.

27. (1) ஆசிரிய விருத்தத்திற்கு ஓர் உதாரணம் தருக.

(2) அவ்விருத்தத்தின் முதலடியிலுள்ள சீர்களைப் பிரித்து வாய்பாடு கூறுக.

28. வேற்றுமையணியை உதாரணத்தால் விளக்குக.

29. வஞ்சப்புகழ்ச்சியணியை விளக்கி வரைக.

30. நிரல்நிறையணி—இதனை ஏற்ற உதாரணத்தால் தெளிவுறுத்துக.

31. அகப்பொருள்—இதனை நன்கு விளக்குக.

32. (1) புறப்பொருள்—இதன் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்துக.

(2) பண்டைத் தமிழர் போர் நிகழ்ச்சிகளை எவ்வெத்திணைகளாகப் பிரித்தனர்?

33. அகப்பொருளைக் குறிக்கும் நூல்கள் ஏவை?

34. புறப்பொருளைக் குறிக்கும் நூல்கள் யாவை?

# ஆறாம் படிவம்

## I. எழுத்து

### 1. ஐகாரக் குறுக்கம் முதலியன

**1. ஐகாரக் குறுக்கம்—**

சாதாரண ஐகாரம் இரண்டு மாத்திரை ஓசை உடையது. ஆனால் அது ஐப்பசி, வலையன், குவளை என மொழியின் முதலிலும் இடையிலும் கடையிலும் வரும்போது, தனக்கு முன்னும் பின்னுமுள்ள எழுத்துக்களின் தொடர்பால் தன் மாத்திரையில் குறுகும். இந்தக் குறுக்கமே ஐகாரக் குறுக்கம் என்பது. இதன் மாத்திரை ஒன்று.

**2. ஔகாரக் குறுக்கம்—**

தனி ஔகாரம் இரண்டு மாத்திரை ஓசையுடையது; ஆயின் 'மௌவல்' என மொழிக்கு முதலில் வரும்போது அடுத்துவரும் எழுத்தின் தொடர்பால் ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும். இது ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

**3. மகரக் குறுக்கம்—**

(1) "மருளினும் எல்லாம் மருண்ம்"
(2) "தரும் வளவன்"

இவ்வாறு (1) ண், ன் இவற்றில் ஒன்று நின்று தொடர்ந்திட அதன் முன் வரினும், (2) வகரம் வந்து தொடர்ந்திட அதன்மேல் நிற்பினும், மகரம் தன் அரை மாத்திரையில் குறுகிக் கால் மாத்திரையளவில் ஒலிக்கும். இது மகரக் குறுக்கம் எனப்படும்.

**4. ஆய்தக் குறுக்கம்—**

இயல்பான ஆய்த எழுத்திற்கு மாத்திரை அரை. ஆனால் சில இடங்களில் ல், ள் ஈற்றுப் புணர்ச்சியினால் (கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது என) வரும் ஆய்தம், தன் இரு பக்கத்திலுமுள்ள எழுத்துக்களின் தொடர்பால் தன் அரை மாத்திரையிற் குறுகிக் கால் மாத்திரையளவில் ஒலிக்கும். இஃது ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

## 2. எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

1. அ, ஆ—இவ்வுயிரெழுத்துக்கள் அங்காத்தலை உடையவாய்ப் பிறக்கும்.

2. இ, ஈ, எ, ஏ, ஐ—இவ்வைந்தும் அங்காப்புடனே மேல்வரிசைப் பற்களை அடிநா விளிம்பு பொருந்தப் பிறக்கும்.

3. உ, ஊ, ஒ, ஓ, ஔ—இவை ஐந்தும் இதழ் குவிதலால் பிறப்பன.

4. க, ங, ச, ஞ, ட, ண—இவற்றில் க, ங முதல்நா முதல் அண்ணத்தையும் (அண்ணம் - மேல்வாய்); ச, ஞ இரண்டும் இடைநா இடை அண்ணத்தையும்; ட, ண இரண்டும் நுனிநா நுனி அண்ணத்தையும் பொருந்தப் பிறக்கும்.

5. த, ந—அண்பல்லடியை நாநுனி பொருந்தப் பிறக்கும். (அண்பல் - மேல்வரிசைப் பல்)

6. ப, ம—மேல் இதழும் கீழ் இதழும் பொருந்தப் பிறக்கும்.

7. ய—அடிநா அடி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

8. ர, ழ—அண்ணத்தை நுனிநா தட்டவப் பிறக்கும்.

9. ல—அண்பல் முதலை நாவிளிம்பு வீங்கி ஒற்றப் பிறக்கும்.

10. ள—அண்ணத்தை நாவிளிம்பு வீங்கி வருடப் பிறக்கும்.

11. வ—மேற்பல் கீழ் இதழைப் பொருந்தப் பிறக்கும்.

12. ற, ன—அண்ணத்தை நுனிநா மிகப் பொருந்தப் பிறக்கும்.

13. ஃ—ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை; முயற்சி அங்காத்தல்.

14. ஏனைய சார்பெழுத்துக்களின் இடமும் முயற்சியும் மேற்சொல்லப்பட்ட தம் முதலெழுத்துக் களோடு ஒப்பனவாய்ப் பிறக்கும்.

## 8. மெய்ம்மயக்கம்

சென்ற வகுப்பில் உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பன யாவை என அறிந்தீர்கள். இங்கு அவற்றைச் சிறிது விரிவாகக் காண்போம்.

### 1. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்—

1. தங்கண், தெவ்யாது - இவ்வாறு 'ங,' முன்பு கவ்வும், 'வ' முன்பு யகரமும் மயங்கும். (மயங்கும் - சேரும்.)

2. சஞ்சன், கந்தன், உரிஞ்யாது, பொருந்யாது—இவ்வாறு ஞ, ந முன் அவற்றுக்கு இனமாகிய ச, த, ய மயங்கும்.

3. கட்கம், கட்சி, நுட்பம்.
கற்க, கற்கிறார், கற்ப.

இவ்வாறு ட, ற முன் க, ச, ப என்னும் மெய்கள் இணங்கி மயங்கும்.

4. (1) வண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண் யாது, மண் வலிது.

(2) புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன் மலர், பொன் யாது, பொன் வலிது.

இவ்வாறு ண, ன இரண்டும் தமக்கு இனமாகிய ட, ற என்பவற்றுடனும்; க, ச, ஞ, ப, ம, ய, வ என்னும் ஏழு மெய்யுடனும் மயங்கும்.

5. கம்பன், கலம் யாது, கலம் வலிது—இவ்வாறு மகர மெய்யின் முன்னர்ப் ப, ய, வ மயங்கும்.

6. (1) வேய், வேர், வீழ்+கடிது, சிறிது, தீது, பெரிது.

(2) வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு.

இவ்வாறு ய, ர, ழ முன்பு க, ச, த, ந, ப, ம, வ, ய, ங, ஞ என்னும் பத்து மெய்யும் மயங்கும்.

7. வேல் கடிது, வாள் பெரிது, வாள் வலிது, வேல் யாது, என ல், ள் முன்பு வரும் க, ச, ப, வ, ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும்.

2. உடனிலை மெய்ம்மயக்கம்—

1. (1) அங்ஙனம், அவ்வை, அஞ்ஞானம், அந்நீர், அட்டு, அற்றம், அன்னை, அண்ணம், அம்மை, அய்யம், அல்லி, அள்ளல்.

(2) அக்கு, அச்சு, அத்து, அப்பு என ர, ழ ஒழிந்த ங, வ, ஞ, ந, ட, ற, ன, ண, ம, ய, ல, ள என்னும் பன்னிரண்டு மெய்யும், உடனிலை மயக்கத்துக்கே உரிய க, ச, த, ப என்னும் நான்கும் தம்மில் தாம் உடன்நின்று மயங்கும்.

2. (1) வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை.

(2) வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு.

(3) காய்ந்தனன், தேர்ந்தனன், வாழ்ந்தனன்.

ய, ர், ழ என்னும் மூன்று மெய்களும் க, ச, த, ப, ங, ஞ, ந, ம என்னும் எட்டு மெய்யெழுத்துக்களும் தனிமெய்யும் உயிர் ஊர்ந்த மெய்யுமாய் மயங்குவன அன்றி, ஈரொற்றுயும் மயங்குவனவாம்.

3. 'போலும்' என்பது செய்யுளில் போன்ம் என வரும். அதாவது ல், ன் ஆகத் திரிந்தது; அதன் முன்வரும் மகர ஒற்று முன்சொன்னவாறே குறுகி அதனுடன் ஈரொற்று உடனிலையாயிற்று.

இவ்வாறே மருளும் என்பது செய்யுளில் மருண்ம் என வரும். அதாவது ள், ண ஆகத் திரிந்தது. அதன் முன்வரும் மகர ஒற்று முன் சொன்னவாறே குறுகி அதனுடன் ஈரொற்று உடனிலையாயிற்று.

### பயிற்சி

1. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்—இவற்றை ஏற்ற உதாரணம் தந்து விளக்குக.

2. மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்—இவற்றைத் தெளிவுறுத்துக.

3. உயிர்க் குறில் ஐந்தும் எம்முயற்சியால் பிறக்கும்?

4. உயிர் நெடில் ஏழின் முயற்சிப் பிறப்பினைக் குறிப்பிடுக.

5. உடனிலை மெய்ம்மயக்கம் —இதனை உதாரணங்களால் விளக்குக.

6. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பது யாது? உதாரணம் தருக.

7. ய, ர, ழ என்னும் ஒற்றுக்கள் எவ்வாறு மயங்கும்?

8. ண, ன இவற்றின் முன் மயங்குவன யாவை?

# II. சொல்

## 1. ஓரெழுத்து ஒரு மொழி

கை—இது ஓர் எழுத்து; ஆயினும் ஓர் உறுப்பினை உணர்த்தும் (பொருளைத் தரும்) ஆற்றலை உடையது. இஃது இவ்வாறு ஓரெழுத்தாயினும், ஒரு பொருளைத் தரும் ஆற்றலை உடைமையின் மொழி என்று சொல்லப்படும்.

மொழி, சொல், பதம்—ஒரு பொருட் சொற்கள்.

இவ்வாறு வரும் ஓரெழுத்து மொழிகள் தமிழில் பலவுண்டு:

(1) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ
(2) மா, மீ, மு, மே, மை, மோ
(3) தா, தீ, தூ, தே, தை
(4) பா, பூ, பே, பை, போ
(5) நா, நீ, நே, நை, நோ
(6) கா, கூ, கை, கோ
(7) வா, வீ, வை, வௌ
(8) சா, சீ, சே, சோ
(9) யா, நொ, து.

இவை ஓர் எழுத்து ஒரு மொழிகள்.

## 2. இலக்கணை

" இசையா வொருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று; வையத் தியற்கை "

என்று செயற்கை—இயற்கையாக இங்குக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது இலக்கணை எனப்படும்.

## 3. பெயர்ச்சொல்

### (2) விளிவேற்றுமையில் அமையும் விகாரங்கள்

1. முதல் வேற்றுமை — எட்டாம் வேற்றுமை

(1) விடலை — விடலை—ஐ இயல்பாயிற்று.
விடலை — விடலையே—ஏ மிகுந்தது.
அன்னை — அன்னாய்—ஐ, ஆய் எனத் திரிந்தது.
அன்னை — அன்னா—ஐ, ஆ எனத் திரிந்தது.

(2) நாரை — நாரை—ஐ இயல்பாயிற்று.
நாரை — நாரையே—ஏ மிகுந்தது.
நாரை — நாராய்—ஐ, ஆய் எனத் திரிந்தது.

இவ்வாறு ஐகார ஈற்றுப் பொதுப் பெயர் இயல்பாகும்; ஏகாரம் மிகப் பெறும்; ஈற்று ஐ 'ஆய்' எனவும், 'ஆ' எனவும் திரியும்; ஐகார ஈற்று அஃறிணைப் பெயரும் இவ்விகாரங்களை அடையும்.

2. முதல் வேற்றுமை — எட்டாம் வேற்றுமை

(1) அம்பர் கிழான் — அம்பர்கிழாஅன்—அளபெடுத்தது.
(2) புலவர் தோழன் — புலவர் தோழ—ஈறு கெட்டது.
(3) நம்பன் — நம்பான்—ஈற்றயல் நீண்டது.

| | | |
|---|---|---|
| (4) இறைவன் | இறைவா—ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது. | |
| (5) அய்யன் | அய்யாவோ—ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டு, ஓகாரம் மிகுந்தது. | |
| (6) ஐயன் | ஐயவோ—ஈறு கெட்டு, ஓகாரம் மிகுந்தது. | |
| (7) வாயிலான் | வாயிலாய்—இறுதி ன்—ய் ஆனது. | |
| (8) வாயிலான் | வாயிலாய்<br>வாயிலோய்<br>வாயிலோயே | இறுதி ன்—ய் ஆகி, ஈற்றயல் 'ஆ' 'ஓ' ஆகி, 'ஏ' மிகுந்தது. |
| (9) ஐயன் | ஐய<br>ஐயே | ஈறு கெட்டு, அயல், 'அ' 'ஏ' ஆனது. |

இவ்வாறு னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி வேற்றுமையில் பல மாறுதல்களை அடையும்.

| 8. முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| (1) வேள் | வேஎள்—அளபெடுத்தது. |
| (2) எல்லாள்(தோழி) | எல்லா—ஈறு கெட்டது. |
| (3) நமர்கள் | நமர்காள்—ஈற்றயல் நீண்டது. |
| (4) குழையாள் | குழையாய்—ள் - ய் ஆனது. |
| (5) அடிகள் | அடிகேள்—ஈற்றயல் அ—ஏ ஆயிற்று. |

இவ்வாறு ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி வேற்றுமையில் பல மாறுதல்களை அடையும்.

| 4. முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை | |
|---|---|---|
| (1) சிறார் | சிறாஅர் | —அளபெடுத்தது. |
| (2) தெவ்வர் | தெவ்விர் | —ஈற்றயல் அ—இ ஆயிற்று. |
| (3) வேந்தர் | வேந்தீர் | —ஈற்றயல் அ—ஈ ஆயிற்று. |
| (4) மடவார் | மடவீர் | —ஈற்றயல் ஆ—ஈ ஆயிற்று. |
| (5) சான்றார் | சான்றீர், சான்றீரே | ஈற்றயல் ஆ—ஈ ஆகி, ஏ ஏற்றது. |
| (6) நம்பியார் | நம்பியாரே, நம்பீரே | ஈற்றில் ஏ மிகுந்தது; ஈற்றயல் யா கெட்டது அதன்-அயல்இ-ஈஆன வந்தது. |
| (7) தமர் | தமரீர் | —ஈற்றில் ஈர் பொருந்தியது. |

இவ்வாறு ரகார ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி வேற்றுமையில் பல மாறுதல்கள் அடையும்.

| 5. முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை | |
|---|---|---|
| (1) மால் | மாஅல் | —அளபெடுத்தது. |
| (2) தோன்றல் | தோன்றால் | —ஈற்றயல் நீண்டது. |

இவ்வாறு லகார ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி வேற்றுமையில் சில மாறுதல்களைப் பெறும்.

| 6. முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை | |
|---|---|---|
| சேய் | சேஎய் | —அளபெடுத்தது. |

இவ்வாறு யகார ஈற்று உயர்திணைப் பெயர் விளி வேற்றுமையில் அளபெடுக்கும்.

| 7. முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை | |
|---|---|---|
| (1) அலவன் (நண்டு) | அலவ | —ஈறுகெட்டது. |

(2) அலவன் — அலவா—ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது.

இவ்வாறு ணகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் விளி வேற்றுமையில் சில மாறுதல்களைப் பெறும்.

8.

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை |
|---|---|
| (1) சாத்தன் | சாத்த—ஈறு கெட்டது. |
| (2) சாத்தன் | சாத்தா—ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது. |

இவ்வாறு ணகர ஈற்று விரவுப் பெயர்கள் (உயர் திணையிலும் அஃறிணையிலும் கலந்து வரும் பெயர்கள்) விளி வேற்றுமையில் சில மாறுதல்களை அடையும்.

9.

| முதல் வேற்றுமை | எட்டாம் வேற்றுமை | | |
|---|---|---|---|
| (1) முயல் | முயால்— | ஈற்றயல் நீண்டது | அஃறிணைப் பெயர்கள். |
| (2) கிளிகள் | கிளிகாள்— | ,, | |
| (3) மக்கள் | மக்காள்— | ,, | விரவுப் பெயர் |

இவ்வாறு ல், ள் இவற்றை ஈற்றிலேயுடைய அஃறிணைப் பெயர்களும் விரவுப் பெயர்களும் எட்டாம் வேற்றுமையில் மேற்கண்டவாறு மாறுதல்களை அடையும்.

## (2) ஐம்பால் பெயர் விகுதிகள்

1. ஆண்பால் பெயர் — விகுதி

| ஆண்பால் பெயர் | விகுதி |
|---|---|
| (1) குழையன் | அன் |
| (2) குழையான் | ஆன் |
| (3) வடமன் | மன் |

(4) கோமான் மான்
(5) பிறன் ன்

அன், ஆன், மன், மான், ன்—ஆண்பாற் பெயர் விகுதிகள்.

| 2. பெண்பால் பெயர் | விகுதி |
|---|---|
| (1) குழையள் | அள் |
| (2) குழையாள் | ஆள் |
| (3) பிறள் | ள் |
| (4) அரசி | இ |

அள், ஆள், ள், இ—பெண்பால் பெயர் விகுதிகள்.

| 3. பலர்பால் பெயர் | விகுதி |
|---|---|
| (1) குழையர் | அர் |
| (2) குழையார் | ஆர் |
| (3) குருமார் | மார் |
| (4) குருமார்கள் | கள் |
| (5) பிறர் | ர் |

அர், ஆர், மார், கள், ர்—பலர்பால் பெயர் விகுதிகள்.

| 4. ஒன்றன்பால் பெயர் | விகுதி |
|---|---|
| அது | து |

து—ஒன்றன்பால் பெயர் விகுதி.

| 5. பலவின்பால் பெயர் | விகுதி |
|---|---|
| (1) நல்லன | அ |
| (2) நல்லவை | வை |
| (3) நாய்கள் | கள் |

அ, வை, கள்—பலவின்பால் பெயர் விகுதிகள்.

## 4. வினைச்சொல்

### (1) ஐம்பால் வினைமுற்றுக்கள்

| | |
|---|---|
| 1. ஆண்பால் வினைமுற்று | விகுதி |
| (1) நடந்தனன் | அன் |
| (2) நடந்தான் | ஆன் |
| 2. பெண்பால் வினைமுற்று | விகுதி |
| (1) நடந்தனள் | அள் |
| (2) நடந்தாள் | ஆள் |
| 3. பலர்பால் வினைமுற்றுக்கள் | விகுதி |
| (1) நடந்தனர் | அர் |
| (2) நடந்தார் | ஆர் |
| (3) சொல்லுப | ப |
| (4) பாடன்மார் | மார் |
| 4. ஒன்றன்பால் வினைமுற்று | விகுதி |
| (1) நடந்தது | து |
| (2) கூவிற்று | று |
| (3) பொருநட்டு ↓ (பொருளையுடையது) | டு |
| 5. பலவின்பால் வினைமுற்று | விகுதி |
| (1) நடந்தன | அ (உடன்பாடு) |
| (2) நடவா | ஆ (எதிர்மறை) |

### (2) சினைவினை—முதல் வினை

சினை - உறுப்பு. சினைவினை—(கால்) ஒடிந்தது.

முதல்—உடல் (உடலையுடைய மனிதன்)

முதல்வினை—(மனிதன்) வீழ்ந்தான்

இவற்றால் சினைவினை வேறு, முதல்வினை வேறு என்பதை அறிக.

(1) கால் முறிந்து விழுந்தது.
↓ ↓
சினை சினைவினை

—சினைப்பெயர் சினை வினை கொண்டு முடிந்தது.

(2) கால் ஒடிந்து விழுந்தான்—இதில், கால்—சினை ; ஒடிந்து—சினைவினை ; விழுந்தான்—முதல் வினை.

இவ்வுதாரணத்திலிருந்து, சினைவினை சினையொடு முடிதலே அன்றி, முதலுடனும் முடியும் என்பது தெரிகிறது.

### (3) ஆக்க வினை

ஆக்கவினை—ஆக்கத்தால் வரும் வினைச்சொல்.

(1) கண்ணன் நல்லவனாயினான்.

(2) கண்ணன் கல்வியால் பெரியன்.

இவ்வுதாரணங்களால், ஆக்கத்தால் வரும் வினைக் குறிப்புச் சொற்கள் ஆக்கச் சொல் இன்றி வாரா என்பது தெரிகிறது.

## 5. இடைச் சொல்

இடைச்சொல்லின் இலக்கணம் சென்ற வகுப்பில் தெளிவாகக் கூறப்பட்டதன்றோ? அந்நினைவுகொண்டு, கீழ்வருவனவற்றைக் கவனிக்கவும்.

### 1. 'அந்தில்' என்னும் இடைச்சொல்

(1) "அந்தில் கழலினன் கச்சினன்"—அசைநிலை.

(2) "வருமே சேயிழை அந்தில், கொழுநற் காணிய". (அந்தில் - அவ்விடம்)

இவ்வாறு அந்தில் என்னும் இடைச்சொல் (1) அசைநிலை, (2) இடம் என்னும் பொருள்களில் வரும்.

### 2. 'ஆங்கு' என்னும் இடைச்சொல்

(1) "ஆங்கத், திறனல்ல யாங்கழற"—அசைநிலை.

(2) "ஆங்காங் காயினும் ஆக"—இடம்.

இவ்வாறு ஆங்கு என்னும் இடைச்சொல் (1) அசைநிலை, (2) இடம் என்னும் பொருள்களில் வரும்.

### 3. 'மா' என்னும் இடைச்சொல்

"மாயக் கடவுட் குயர்கமா வலனே"

இவ்வாறு வியங்கோளில் வரும் மா என்னும் இடைச்சொல் அசைச் சொல்லாம்.

### 4. முன்னிலை அசைச்சொற்கள்

(1) "சிலையன் செழுந்தழையன் சென்மியா வென்றும்"—மியா.

(2) "தண்டுறை யூரயாங் காணிக வெனவே"—இக.

(3) "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!"—மோ.

(4) "சென்மதி பெரும"—மதி.

(5) "மெல்லியற் குறுமக ளுள்ளிச்செல் வலத்தை"—அத்தை.

(6) "வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை" —இத்தை.

(7) "காணியவா வாழிய மலைச்சாரல்"— வாழிய.

(8) "சிறிது தவிர்ந் தீக மாளநின் பரிசில ரும்மார்"—மாள.

(9) "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே"—ஈ.

(10) "நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழ"—யாழ.

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ—என்னும் பத்து இடைச் சொற்களும் முன்னிலை அசைச் சொற்கள் என்பது மேல் காட்டப்பட்ட உதாரணங்களிலிருந்து தெரிகின்றது.

### பயிற்சி

1. ஓரெழுத் தொருமொழியை நன்கு விளக்கி, ஆறு உதாரணங்கள் தருக.

2. உதாரணம் கொண்டு 'இலக்கணை'யை விளக்குக.

3. ஐகார ஈற்றுப் பொதுப்பெயரும் அஃறிணைப் பெயரும் விளிவேற்றுமையில் எம்மாறுதல்களை அடையும்? உதாரணம் தேவை.

4. ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிவேற்றுமையில் அடையும் மாறுதல்களை உதாரணங்களால் தெளிவுறுத்துக.

5. னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிவேற்றுமையில் அடையும் மாறுதல்கள் எவை?

6. ரகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிவேற்றுமையில் எவ்வெம் மாறுதல்களை அடையும்? உதாரணம் வேண்டும்.

7. லகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிவேற்றுமையில் அடையும் மாறுதல்களைக் குறிக்க.

8. னகர ஈற்று அஃறிணைப் பெயர்களும் விரவுப் பெயர்களும் விளிவேற்றுமையில் அடையும் மாறுதல்கள் யாவை?

9. ல, ள ஈற்று அஃறிணைப் பெயர்களும் பொதுப் பெயர்களும் விளிவேற்றுமையில் பெறும் மாறுதல்களைக் கூறுக.

10. ஐம்பால் பெயர்களுக்குரிய விகுதிகளைப் பால் முறைப்படி எழுதுக.

11. கண்டான், தின்றன், படிக்கின்றுள், வருகின்றது, ஓடின, நகைத்தார், குழைத்தது, கூவின, ஓடுவான், தூங்குவான் —இவற்றிலுள்ள ஐம்பால் வினைமுற்றுக்களை முறைப்படுத்தி எழுதுக.

12. கால் இற்று விழுந்தது, கால் இற்று விழுந்தான்—இவ்விரு வினைகளையும் விளக்குக.

13. 'ஆக்கவினை' என்பது யாது? விளக்கி உதாரணம் தருக.

14. 'அத்தில்' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும்?

15. 'ஆங்கு' என்னும் இடைச்சொல் எப்பொருள்களில் வரும் என்பதை உதாரணங்களால் விளக்குக.

16. முன்னிலை அசைச் சொற்கள் எவை? அவற்றுள் நான்கிற்கு உதாரணம் தருக.

# III. பொது

## 1. இடைப் பிற வரல்

வரதன் வயிறுர உண்டான், அறத்தை அழகு பெறச் செய்தான், வாளால் பகைவரை மாய வெட்டினுன்—இதில் வயிறர, அழகுபெற, மாய என்பவை இடையில் வந்த பிற சொற்கள். இவ்வாறு ஒரு வாக்கியத்தில் பெயர்க்கும் வினைக்கும் இடையில் பொருத்தமான ஒரு சொல்லோ, பல சொற்களோ வருதல் இடைப் பிற வரல் எனப்படும்.

## 2. வினா வகை

1. ஆசிரியன், "இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது?" என்று கேட்பது அறிவினா. (அறிவினா–விடை அறிந்து கேட்கும் வினா).

2. மாணவன், "இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது?" என்று கேட்பது அறியா வினா (அறியா வினா - விடை தெரியாமல் வினவுவது).

3. "மரக்கட்டையோ? மகனோ?"—ஐயவினா.

4. "பொன் உளவோ? மணி உளவோ?"—கொளல்வினா. (கொளல் வினா - வாங்கும் கருத்தோடு விடுக்கும் வினா).

5. "அழகனுக்கு ஆடை யில்லையோ?"—கொடை வினா. (கொடை வினா - கொடுக்கும் எண்ணத்தோடு விடுக்கும் வினா).

6. "கண்ணா, உண்டனையோ?"—ஏவல் வினா. (ஏவல் வினா - உண்ணவில்லை யெனின், 'சாப்பிடு' என ஏவுதல்). இவ்வாறு வினா அறுவகைப்படும்.

## 3. விடை வகை

விடை - பதில்.

1. "வஞ்சிக்கு வழி யாது?" என்ற கேள்விக்கு 'இது' எனல் சுட்டு.

2. "கண்ணா, இது செய்வாயோ?" என்ற கேள்விக்குச் 'செய்யேன்' எனல் மறை. (எதிர் மறை).

3. "கண்ணா, இது செய்வாயோ?" என்ற கேள்விக்குச் 'செய்வேன்' என்பது நேர்.

4. "கண்ணு, இது செய்வாயோ?" என்னும் கேள்விக்கு, "நீ செய்" என்பது ஏவல்.

5. மேல் தரப்பட்ட கேள்விக்கு, "செய்வேனோ?" என்பது வினுதல்.

6. 'உடம்பு நொந்தது'-உற்றது உரைத்தல்.

7. 'உடம்பு நோம்'—உறுவது கூறல்.

8. 'மற்றையது செய்வேன்'—இனமொழி.

இவ்வாறு விடை எட்டு வகைப்படும்.

## 4. அடைமொழி

1. ஒன்றனைச் சிறப்பிக்கவரும் மொழி அடைமொழி என்பது. இது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறினை உணர்த்தி நிற்கும்.

(1) நெய்க்குடம்—பொருள் அடை.
(2) குள நெல்—இட ,,
(3) கார்த்திகை விளக்கு—கால ,,
(4) பூ மரம்—சினை ,,
(5) செந்தாமரை—குண ,,
(6) குறுங் கூலி—தொழில் ,,
↓
(குறுகல்)

'நெய்க்குடம்' என்பதற்குத் 'தயிர்க்குடம்' என்பது இனமாகும். இவ்வாறே மேலுள்ள ஒவ்வொன்றுக்கும் இனமுண்டு. இவ்வாறு வருவன 'இனமுள்ள அடைமொழிகள்' எனப்படும்.

2. இங்ஙனம் கூறப்பெற்ற அடைமொழிகள் இனத்தைத் தருதலோடு, அவ்விடத்திற் பொருந்து

மாயின் இனமல்லாததையும் தரும். உதாரணங்களைக் கீழே காண்க.

(1) பாவம் செய்தான் நரகம் புகுவான்—இதனால், இவ்வாக்கியம், 'புண்ணியம் செய்தான் சொர்க்கம் புகுவான்' என இனத்தைத் தருவதோடு, 'அவன் இது செய்யின் இது வரும் என்னும் அறிவிலி' என்னும் இனமல்லாததையும் தந்தது.

(2) மேலைச்சேரிச் சேவல் அலைத்தது—என்றமையால், கீழைச்சேரிச் சேவல் அலைப்புண்டது என இனத்தைத் தருவதேயன்றி, அச்சேவலையுடையவர்க்கு வெற்றி கிடைத்தது என்னும் இனம் அல்லாததையும் தந்தது.

(3) (i) வேற்கை முருகன்—'வேல்' என்னும் அடைமொழி 'கை' யென்னும் சினையையும், 'முருகன்' என்னும் முதலையும் விசேடித்தது.

(ii) பழக்குலை வாழை—இதில் 'பழம்' 'குலை' இரண்டும் சினைகள். இவ்விரண்டு அடையும் 'வாழை' யென்னும் முதலை விசேடித்துவந்தன.

(iii) கருநெடுங்கண்— இதில் 'கருமை', 'நெடுமை' என்னும் இரண்டு அடைகளும் 'கண்' என்னும் சினையை விசேடித்து வந்தன.

## 5. பொருள்கோள்

பொருள் கோள் : பொருள் கொள்ளும் முறைமை; இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களாலும் செய்யப்படும் செய்யுட்களில் பொருள் கொள்ளுதற்கு ஏற்ற முறையில் எழுவாய் பயனிலைகள் அமைந்து இரா. அவற்றைப் பொருள் கொள்ளும் வகையில்

அமைக்கும் முறைமையே பொருள் கோள் எனப் படும். கோள் - கொள்ளுதல்.

இப்பொருள்கோள் எட்டு வகைப்படும்.

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."

இவ்வாறு ஆற்று நீர் ஒழுக்குப்போல நெறிப்பட்டு, அடிதோறும் பொருள் முடிந்து ஒழுகும் பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள் கோள் என்று பெயர் பெறும்.

2. மொழி மாற்றுப் பொருள்கோள்

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

• இதில் 'ஆழ' என்னும் பயனிலைக்குப் பொருத்த மான 'அம்மி' என்னும் மொழியினை 'மிதப்ப' என்னும் பயனிலைக்கும், 'மிதப்ப' என்னும் பயனிலைக்குப் பொருத்தமான 'சுரை' என்னும் மொழியினை 'ஆழ' என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியிருத்தல் காண்க. மேலும் 'நீத்து' என்னும் பயனிலைக்குப் பொருத்தமான 'முயல்' என்னும் மொழியினை 'நிலை' என்னும் பயனிலைக் கும், 'நிலை' என்னும் பயனிலைக்குப் பொருத்தமான 'யானை' என்னும் மொழியினை 'நீத்து' என்னும் பயனிலைக்கும் மாற்றிக் கூறியவாறும் காண்க. இங்ஙனம் வழங்குதல் மொழி மாற்றுப் பொருள்

கோள் எனப்படும். அம்மி ஆழ, சுரை மிதப்ப என்று நாம் இயைத்துப் பொருள் கொள்ளவேண்டும்.

### 3. நிரல் நிறைப் பொருள்கோள்

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

இச்செய்யுளில் வெஃகா முதலிய மூன்று கோவில்கள் ஒரு வரியிலும், அக்கோவில்களில் பெருமான் இருக்கும் நிலைகள் மூன்று மற்றொரு வரியிலும் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன. இவ் விரண்டினையும் இதற்கு இது பொருந்தும்—திருமால் வெஃகாவில் நின்றான், பாடகத்தில் இருந்தான், ஊரகத்தில் கிடந்தான்—என்று முறையே பொருள் கொள்ளுதல் நிரல்நிறைப் பொருள்கோள் எனப் படும்.

### 4. பூட்டுவிற் பொருள்கோள்

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணாரம் மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

இப்பாடலில் முதலில் இருப்பது 'திறந்திடுமின்' என்பது; இறுதியிலிருப்பது 'கதவு' என்பது. இவை இரண்டும் தம்முள் பொருள் நோக்குடையவை. இவை இவ்வாறு அமையும்படி வரும் பொருள் கோள் பூட்டுவிற் பொருள்கோள் எனப்படும்.

## 5. தாப்பிசைப் பொருள்கோள்

" உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணுத்தல் செய்யா தளறு."

இப்பாடலில் இடையில் நிற்கும் மொழியாகிய உயிர்நிலை என்பது, ஒழிந்த முதலிலும் கடையிலும் சென்று பொருளைக் கூடும். இத்தகைய பொருள் கோள் தாப்பிசைப் பொருள்கோள் எனப்படும்.

## 6. அளைமறி பாப்புப் பொருள்கோள்

" தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே."

இச்செய்யுளில் ஈற்றில் நின்ற சொல் செய்யுளின் முதலிலும் இடையிலும் சென்று பொருள் தருதலைக் காண்க. இவ்வாறு ஒரு செய்யுளின் ஈற்றில் நிற்கும் சொல் முதலிலும் இடையிலும் சென்று பொருள் கொள்ளுதல் அளைமறி பாப்புப் பொருள்கோள் எனப்படும்.

(அளைமறி பாப்பு - புற்றிலே சுருண்டு கிடக்கும் பாம்பு.)

## 7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

" தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி

அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.''

இப்பாடலில் 'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் (உடையேம்) மாமேனி மேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்' எனக் கொண்டு கூட்டுக.

இவ்வாறு செய்யுள் அடிகள் பலவற்றிலும் உள்ள மொழிகளை எடுத்துப் பொருளுக்கு ஏற்ற இடத்தில் கூட்டும் பொருள்கோள் கொண்டுகூட்டுப் பொருள் கோள் எனப்படும்.

## 8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்

(1) ''நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.''

இப்பாடலில், ''கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்காலீண்டும், விடுக்கும் வினைபுலந்தக்கால் மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம், இஃதறியார் நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்,'' என அடிகளை ஏற்றவிடங்களில் எடுத்துக் கூட்டவேண்டும்.

(2) ''மாறுக் காதலர் மலைமறந் தனரே
ஆறுக் கட்பனி வரலா றுவே
ஏறு மென்றோேள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே.''

இப்பாடலில் ஏதேனும் ஒரு அடியை எடுத்து,

போது

ஏதேனும் ஓர் இடத்தில் கூட்டி உச்சரித்துப் பாருங்கள். பொருளும் ஓசையும் வேறுபடுதலில்லை.

இவ்வாறு பொருளுக்கு ஏற்குமிடத்து எடுத்து நீங்காது கூட்டும் அடியினையுடையதும், ஏதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளில் முதல், இடை, ஈறுகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கூட்டினும், பொருளோடு ஓசைமாட்சியும், ஓசை ஒழியப் பொருள் மாட்சியும் வேறுபடாத அடியினையுடையதும் ஆகிய பொருள்கோள் அடிமறி மாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

பயிற்சி

1. 'இடைப் பிற வரல்' என்பதை உதாரணத்தால் விளக்குக.

2. வினா வகை எத்தனை? ஒவ்வொன்றுக்கும் எடுத்துக் காட்டுத் தருக.

3. விடை வகைகள் யாவை?

4. பொருள் முதலிய ஆறின் அடியாகப் பிறக்கும் அடை மொழிகளைக் கூறுக.

5. எட்டுவகைப் பொருள்கோள்கள் எவை?

6. பொருள்கோள்கள் எட்டனுள் எவையேனும் இரண்டினை விளக்கி உதாரணம் தருக.

# IV. புணர்ச்சி

## 1. மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி

(1) மண் + மீட்சி = மண்மீட்சி
பொன் + வன்மை = பொன்வன்மை

வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வர, ண், ன் இயல்பாயின.

(2) மண் + கடிது = மண்கடிது
மண் + நீண்டது = மண் நீண்டது
மண் + யாது = மண்யாது
உண்டான் + கண்ணன் = உண்டான் கண்ணன்
உண்டான் + வளவன் = உண்டான் வளவன்

அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வர, ண், ன் இயல்பாயின.

இவ்வுதாரணங்களால், (1) ண், ன் வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். (2) அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வந்தாலும் இயல்பேயாகும் என்பது தெரிகிறது.

அவ் + யாவை = அவ்யாவை
இவ் + யாவை = இவ்யாவை
உவ் + யாவை = உவ்யாவை

இவ்வுதாரணங்களால், அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்களிலுள்ள ஈற்று வகரம், இடையினம் வர இயல்பு ஆகும் என்பது தெரிகிறது.

## 2. வினா—சுட்டுக்களின் புணர்ச்சி

1. (1) எ + அணி = எவ்வணி
எ + யானை = எவ்யானை } எகரவினா

(2) அ + அணி = அவ்வணி
அ + யானை = அவ்யானை } அகரச்சுட்டு

(3) இ + அணி = இவ்வணி
இ + யானை = இவ்யானை } இகரச்சுட்டு

(4) உ + அணி = உவ்வணி
உ + யானை = உவ்யானை } உகரச்சுட்டு

2. எ + குதிரை = எக்குதிரை
அ + நாடு = அந்நாடு
இ + வலை = இவ்வலை
உ + வீடு = உவ்வீடு } எகரவினா முச்சுட்டின் முன் மூவினம்

3. அ + இடை = ஆயிடை—செய்யுளில் சுட்டுநீண்டு யகரம் தோன்றியது.

மேல் உதாரணங்களை நோக்க, (1) 'எ' என்னும் வினாச்சொல் முன்னும், அ, இ, உ என்னும் சுட்டுக்களின் முன்னும் வருமொழி முதலில் உயிரும் யகரமும் வந்தால், வகரம் தோன்றும் ; (2) பிற மெய்கள் வந்தால் வந்த அம்மெய்களே மிகும் ; (3) செய்யுளில் சுட்டு நீண்டு இசைக்கும். அப்பொழுது யகரமும் இடையில் மிகும் என்பது தெரிகிறது.

4. அது + சிறிது = அதுசிறிது
இது + பெரிது = இதுபெரிது
அது + கண்டான் = அதுகண்டான்

இவ்வுதாரணங்களால், சுட்டுப் பெயர்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும் என்பது தெரிகிறது.

## 3. செய்யுளுக்கு ஏற்ற சிறப்பு விதிகள் சில

1. (1) குறுத்தாட் பூதம்—'குறுந்தாள்' என்பது குறுத்தாள்' என வந்தது வலித்தல் விகாரம்.

(2) தண்டையின் இனக்கிளி—'தட்டை' என்பது 'தண்டை' என மாறியது மெலித்தல் விகாரம்.

(3) "போத்தரூர் புல்லறிவினூர்."—'பொத்தரூர்' என்பது 'போத்தரூர்' என மாறியது நீட்டல் விகாரம்.

(4) "என்றேன் தியேன்."—'தீயேன்' என்பது 'தியேன்' என மாறியது குறுக்கல் விகாரம்.

(5) "நெல் விளையும்மே."—'விளையுமே' என்பது 'விளையும்மே' என மிகுந்தது விரித்தல் விகாரம்.

(6) சிறியிலை—'சிறிய இலை' என்பது 'சிறியிலை' என மாறியது தொகுத்தல் விகாரம். மேற்சொல்லப்பட்டவை ஆறும் செய்யுள் விகாரங்கள்.

2. (1) மரை யிதழ்—'தாமரை யிதழ்'—முதற் குறை.

(2) ஓதி முதுபோத்து—ஓந்தி முதுபோத்து—இடைக்குறை.

(3) நீலுண் துகிலிகை — நீலம் — கடைக் குறை.

இம்மூன்றும் முன்னவைபோலச் செய்யுளுக்கே உரிய விகாரங்கள்.

3. அ+இடை=ஆயிடை—செய்யுளில் சுட்டு நீண்டது; யகரமும் தோன்றியது.

4. கரு—இது செய்யுளில் குற்றெழுத்தை யடுத்த 'ஆ' என்னும் உயிர் குறுக, அக்குறுகலுடன் உகரம் பெற்றுக் 'கனவு' என்றாகும். சில இடங்களில் இம்மாறுதல்களில்லாமல் 'கரு' என்றே நிற்றலு முண்டு.

5. அது + அன்று = அதான்று—'அது' என்னும் சுட்டுப்பெயர்முன் வரும் 'அன்று' என்னும் குறிப்பு வினைமுற்று, செய்யுளில் முதல் நீளும் என்பது இவ்வுதாரணத்தால் தெரிகிறது.

## 4. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி

1. நின் + புறம் காப்ப = நிற்புறம் காப்ப (ன்—ற் ஆனது)

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாக உள்ள எழுத்து விகாரப்பட்டது.

2. மண் + சுமப்பாய் = 'மட் சுமப்பாய்' என வருவதற்குப் பதிலாக 'மண் சுமப்பாய்' என இயல்பாக நின்றது.

3. (1) மகனை + பெற்றாள் = மகனைப் பெற்றாள்—உருபு விரிந்தது.

(2) மகன் + பெற்றாள் = மகற் பெற்றாள்—உருபு தொக்கது.

உயர் திணையிடத்து ஐ உருபு விரிந்தும் தொக்கும் வரும்.

4. (1) பெண்ணை + பெற்றாள் = பெண்ணைப் பெற்றாள்—உருபு விரிந்தது.

(2) பெண் + பெற்றாள் = பெண் பெற்றாள்—உருபு தொக்கது.

**பொதுப் பெயரிடத்து ஐ உருபு விரிந்தும் தொக்கும் வரும்.**

## பயிற்சி

1. அவ் + கடிய, இ + ஞானம், அவ் + யாறு, பொன் + தகடு, மண் + மீட்சி, மண் + கொடிது, பொன் + சிறிது, பொன் + யாது—இவற்றைப் புணர்த்தி விதி கூறுக.

2. கீழ்வருவனவற்றைப் புணர்த்தி விதி கூறுக :—
எ + அணி, அ + யானை, இ + குதிரை, அ + இடை, இது + சிறிது.

3. கீழ்வருவன எவ்வாறு புணர்ந்தன? விதி கூறுக :
மகப்பெற்றான், மட்சுமந்தான், நிற்புறம் காப்ப, பெண்ணைப் பெற்றான்.

4. செய்யுளுக்குரிய வலித்தல் முதலிய விகாரங்களை உதாரணம் கொண்டு விளக்குக.

# V. யாப்பு

## 1. சீர் பிரித்துத் தளை கூறுதல்

நான்கு, ஐந்தாம் படிவங்களில் அசை, சீர், தளை இவற்றைப் பற்றி அறிந்தீர்கள் அல்லவா? சீர்கள் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனப் பலவகைப்படும்.

| | |
|---|---|
| முயற்சி | திருவினை |
| முயற்—சி | திரு—வினை |
| நிரை நேர் | நிரை நிரை |
| புளி மா | கரு விளம் |

இவற்றுள் முயற்சி என்பது நிலைச்சீர்; திருவினை என்பது வருசீர்; நிலைச்சீரின் ஈற்றசையும் வருசீரின் முதலசையும் தம்முள் பொருந்துவதே தளை என்பது. இத்தளை பல வகைப்படும்.

1. (1) மாமுன் நிரை } இவை இயற்சீர் வெண்
விளமுன் நேர் } டளை எனப்படும்.

(2) காய் முன் நேர்—இது வெண்சீர் வெண்டளை எனப்படும். இவை சிறப்பாக வெண்பாவுக்கே உரிய தளைகள்.

2. (1) ஈரசைச்சீரின் இறுதி அசை நேரசையாக இருந்து, வருசீரின் முதலசையும் நேரசையாக இருந்து பொருந்துதல் நேர் ஒன்றிய ஆசிரியத்தளை எனப்படும்.

(2) ஈரசைச்சீரின் இறுதி அசை நிரையசையாக இருந்து, வருசீரின் முதலசையும் நிரையசை

யாக இருந்து பொருந்துதல் நிரை ஒன்றிய ஆசிரியத்தளை எனப்படும்.

இவை யிரண்டும் ஆசிரியப்பாவுக்கே சிறப்பாக உரியவை.

3. காய்ச்சீரின் ஈற்றசை வருசீரின் முதலசை யோடு பொருந்தாதது கலித்தளை எனப்படும்.

4. (1) 'கனி' என்று முடியும் வஞ்சியுரிச் சீரின் ஈற்றசை வருசீரின் முதலசையோடு பொருந்து தல் ஒன்றிய வஞ்சித்தளை எனப்படும்.

(2) மேற்சொன்னவாறு பொருந்தாதது ஒன்ரு வஞ்சித்தளை எனப்படும்.

இவ்விவரங்கள் ஐந்தாம் படிவத்திலேயே கூறப் பட்டுள்ளன. ஆயினும் நினைவுக்காக இங்கு மீண்டும் கூறப்பட்டன. இவற்றை நினைவிற் கொண்டு, பின் வரும் செய்யுட்களிலுள்ள சீர்களைப் பிரித்துத் தளை கூறத் தெரிதல் வேண்டும்.

" உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்."

இச்செய்யுளைக் கீழ்வருமாறு அடி அடியாக எழுதி, அசை பிரித்துத் தளை கூறவேண்டும்.

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| (1) | உள்ளங் | குளிர | வுரோமஞ் | சிலிர்த்துரையும் |
| | உள்-ளங் | குளி-ர | வுரோ-மஞ் | சிலிர்த்-துரை-யும் |
| | நேர் நேர் | நிரை நேர் | நிரை நேர் | நிரை நிரை நேர் |
| | தே மா | புளி மா | புளி மா | கரு விளங் காய் |

இயற்சீர் வெண்டளை   இ. வெ. தளை   இ. வெ. தளை

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| (2) | தெள்ளவிழி | நீரரும்பத் | தன்மறந்தாள்— | புள்ளலைக்கும் |
| | தன் - ளவி - ழி | நீ - ரரும் - பத் | தன்-மறந்-தாள் | புள்-ளலைக்-கும் |
| | நேர் நிரை நேர் | நேர் நிரை நேர் | நேர் நிரை நேர் | நேர் நிரை நேர் |
| | கூ விளங்காய் | கூ விளங்காய் | கூ விளங்காய் | கூ விளங்காய் |

வெண்சீர் வெண்டளை   வெ. வெ. தளை   வெ. வெ. தளை   வெ. வெ. தளை.

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| (3) | தேந்தா | மரைவயல்சூழ் | தில்லைத் | திருநடஞ்செய் |
| | தேந்-தா | மரை-வயல்-சூழ் | தில்-லைத் | திரு-நடஞ்-செய் |
| | நேர் நேர் | நிரை நிரை நேர் | நேர் நேர் | நிரை நிரை நேர் |
| | தே மா | கரு விளங்காய் | தே மா | கருவிளங்காய் |

வெ.வெ.தளை   இ.வெ.தளை   வெ.வெ.தளை   இ.வெ.தளை

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| (4) | பூந்தா | மரைதொழுத | பொன் |
| | பூந்-தா | மரை-தொ-ழு-த | பொன் |
| | நேர் நேர் | நிரை நிரை நேர் | நேர் |
| | தே மா | கரு விளங் காய் | 'நாள்' |

வெ. வெ. தளை   இ. வெ. தளை   வெ. வெ. தளை

இவ்வெண்பா 'நாள்' என்னும் வாய்பாட்டால் முடிந்தது.

இவ்வாறு உங்கள் பாடநூற் செய்யுட்பகுதியில் உள்ள வெண்பா முதலிய நால்வகைப் பாக்களிலும் இருக்கும் சீர்களைப் பிரித்துத் தளைகூறப் பழகுதல் வேண்டும்.

## 2. எதுகை—மோனை வகைகள்

**1. எதுகை—**

" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் ".

முதலடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்தும் இரண்டாம் அடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்தும் ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடை எனப்படும்.

**2. மோனை—**

" கடுங்கை வயலுழவர் காலைத் தடிய."

இவ்வாறு ஓரடியிலுள்ள சீர்களில் ஏதேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களின் முதல் எழுத்து ஒன்றிவருதல் மோனைத் தொடை எனப்படும்.

இவ்வெதுகை, மோனைகள் பல வகைப்படும். அவற்றைக் கீழே காண்க :

**1. எதுகை வகை—**

(1)

" வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டில்

"இடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை."

இவ்வாறு அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுத்தல் அடி எதுகைத் தொடை எனப்படும்.

(2) ஓரடியில் முதல் இரு சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணையெதுகை எனப்படும்.

(3) அடியின் முதற்சீரிலும் மூன்றும் சீரிலும் உள்ள இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

(4) அடியின் முதற்சீரிலும் இறுதிச் சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ எதுகை எனப்படும்.

(5) அடியின் முதல் மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

(6) அடியின் இரண்டாம் சீர் ஒழிந்த ஏனைய மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

(7) அடியின் மூன்றும் சீர் ஒழிந்த ஏனைய மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரல் கீழ்க் கதுவாய் எதுகை எனப்படும்.

(8) அடியின் நான்கு சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுத்தல் முற்று எதுகை எனப்படும்.

## 2. மோனைத் தொடை வகை

மேற்சொன்னவாறே மோனைத் தொடையும் எட்டு வகைப்படும். அவற்றைக் கீழே காண்க :

(1) " மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கம்பு
மாலை வந்த வாடை
மாயோள் இன்னுயிர்ப் புறத்தன்றே."

இவ்வாறு அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுத்தல் அடிமோனை(த்)தொடை எனப்படும்.

(2) அடியின் முதலிரண்டு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

(3) அடியின் முதற் சீரிலும் மூன்றும் சீரிலும் உள்ள முதல் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு மோனை எனப்படும்.

(4) அடியின் முதற் சீரிலும் இறுதிச் சீரிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ மோனை எனப்படும்.

(5) அடியின் முதல் மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை மோனை எனப்படும்.

(6) அடியின் இரண்டாம் சீர் ஒழிந்த ஏனைய மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

(7) அடியின் மூன்றும் சீர் ஒழிந்த மற்ற மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரல் கீழ்க் கதுவாய் மோனை எனப்படும்.

(8) அடியின் நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும்.

## 8. கட்டளைக் கலித்துறை

"முற்றும் உணர்ந்த முதுக்குறை வாளர்க்கு முன்னி
[யொன்று
பற்றும் வகையெவ ரேதெரிப் பாரவர் பண்பின்வழி
மற்றும் அறிந்து நடப்பதல் லால்வடி வேற்கரவா
எற்று மணித்திரை முந்நீர் முதிர்ந்த இருநிலத்தே."

இவ்வாறு கட்டளைக் கலித்துறை,

(1) ஐஞ்சீர் அடிகள் நான்கைப் பெற்றுவரும்;

(2) மாச்சீர், விளச்சீர், நேர்நடுவாகிய காய்ச் சீர்களை முதல் நான்கு சீர்களாகப் பெறும்; ஈற்றுச் சீர் நிரைநடுவாகிய காய்ச்சீரே பெறும்;

(3) முதல் நான்கு சீர்கள் வெண்தளை பெறும்.

(4) நான்காம் அடி ஈற்றில் ஏகாரம் பெறும்;

(5) நான்கடியும் ஒரே எதுகை (விகற்பம்) பெறும்.

(6) நேரசையை முதலாக உடைய அடிக்குள் ஒற்று நீக்கி 16 எழுத்துக்கள் இருக்கும்; நிரை அசையை முதலாக உடைய அடிக்குள் ஒற்று நீக்கி 17 எழுத்துக்கள் இருக்கும். இங்ஙனம் கட்டளை (அளவு) பெறலால் இக் கலித்துறைச் செய்யுள் கட்டளைக் கலித்துறை எனப்படும்.

## 4. பா இனங்களின் பொது இலக்கணம்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களுக்கும் தனித்தனியே துறை, தாழிசை, விருத்தம் என்பன இனங்களாக உள்ளன. இம்மூன்றுமே பா இனம் என்பன. இவற்றின் பொது இலக்கணத்தைக் கீழே காண்க.

### 1. வெண்பா இனம்

1. "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

இவ்வாறு தம்முள் அளவொத்த இரண்டு அடிகளையுடையதாய் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாய் வருவது வெண் செந்துறை எனப்படும்.

2. (1) "பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்றாய்."

இது செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத்தளை தட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்து வந்தது. இது குறள் தாழிசை எனப்படும்.

(2) "நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்."

இவ்வாறு மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடியால் முடிவது வெண்டாழிசை எனப்படும்.

" ஆவா வென்றே யஞ்சினர் ஆழ்ந்தார்—ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒருசாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றார்—ஒருசாரார்."

இவ்வாறு மூன்றடியாலும் நான்கடியாலும் முற்றுப்பெற்று, அடிதோறும் ஒரு சொல்லைத் தனிச் சொல்லாகப் பெற்று வருவது **வெளி விருத்தம்** எனப்படும்.

## 2. ஆசிரியப்பா இனம்

1\. " கொன்றார்ந் தமைந்த முருமுகத் தெழினிறக்
குருதிக் கோட்டின விருந்தாட் பெருங்கைக்
குன்றுமென வன்றுமெனக்
குமுறு நின்றன கொடுந்தொழில் வேழம்."

இவ்வாறு நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவது **ஆசிரியத் துறை** எனப்படும்.

2\. " கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி."

இவ்வாறு மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவது **ஆசிரியத் தாழிசை** எனப்படும்.

3\. " பையர வி[illegible]ழுங்கப் பட்ட
பசுங்கதிர் மதிய மொத்து
மெய்யெரி துயரின் மூழ்க
விதிர்விதிர்த் துருகி நையு

மையிருங் குழலி ரோடன்
மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டுங் காணுள்
காளையுங் காலிற் சென்றான்.''

இவ்வாறு ஆறு சீர்களை உடையதாயும் அதற்கு மேற்பட்ட சீர்களை உடையதாயும் வரும் அடிகள் நான்கு ஒத்து முடிவது ஆசிரிய விருத்தம் எனப் படும். மேலே தரப்பட்ட விருத்தம் அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எனப்படும்.

## 3. கலிப்பா இனம்

1. ''யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்;
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.''

இவ்வாறு ஐந்து சீர்களைக் கொண்ட நான்கு அடிகள் ஒத்து வருதல் கலித்துறை எனப்படும்.

2. ''வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தில் எழால்வாழி வெண்டிங்காள்;
கேள்வரும் போழ்தில் எழாலாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்!''

இவ்வாறு ஈற்றடி மிகுந்து, ஏனைய அடிகள் மூன்றும் ஒத்துவருதல் கலித்தாழிசை ஆகும்.

சில கலித்தாழிசைகள் ஈற்றடிக்கு ஏனைய அடி ஒவ்வாது வரவும் பெறும். இரண்டு அடியாய், ஈற்றடி மிக்கு, ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வரும் கலித்தாழிசையும் உண்டு.

3. "* வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலின் ஒண்சுட ராழியி னுன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்."

இவ்வாறு அடிதோறும் நான்கு சீர்களையுடைய தாய் நான்கு அடிகள் வருதல் **கலி விருத்தம்** எனப் படும்.

## (5) வஞ்சிப்பா இனம்

(1) " மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய் !"

இவ்வாறு இரண்டு சீர்களைக் கொண்ட அடிகள் நான்காய் ஒரு பொருள்மேல் ஒன்றாய் வருவது **வஞ்சித்துறை**.

(2) இரு சீரடி நான்காய் ஒரு பொருள்மேல் மூன்று செய்யுட்கள் அடுக்கி வருதல் **வஞ்சித் தாழிசை** எனப்படும்.

(3) " சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்,
நீல வுண்கணிவள் வாழுமே."

இவ்வாறு மூன்று சீர்களைக் கொண்ட அடிகள் நான்கு வருதல் **வஞ்சி விருத்தம்** எனப் படும்.

### பயிற்சி

1. " உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்."

இப்பாட்டிலுள்ள சீர்களைப் பிரித்துத் தளை கூறுக.

2. " பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

இப்பாடலிலுள்ள எதுகை, மோனைகளைக் குறிப்பிடுக.

3. ஒரூஉ எதுகை, ஒரூஉ மோனை, கூழை எதுகை, கூழை மோனை—இவற்றுக்கு உதாரணங்கள் தருக.

4. " குமரன் நகைத்துக் குருத்தினில் குத்தினான் ", " விர வலராய் வாழ்வாரை வெல்வாய் ", " ஆயர்வா யேயறிவை ஆருயிரை ஈரவோ ?", " மகிழ்ந்திடுவார் முன்னர் மலரும் "— இவற்றில் வந்துள்ள பலவகை எதுகைகளையும் மோனைகளையும் எடுத்துக்காட்டுக.

5. கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் யாது ?

" தொழுதும் வணங்கியும் மாலயன் தேடிய சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணம் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாம்செய் எனப்பெற்ற வன்முரசேர்
றெழுது மலருநற் றூரெம் பிரானம்பி ஆரூரனே."

இப்பாடலில் கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் அமைந்துள்ளதை விளக்குக.

6. நான்கு பாக்களையும் சேர்ந்த தாழிசைகளின் இலக்கணத்தைக் கூறி, ஏதேனும் ஒரு தாழிசைக்கு உதாரணம் தருக.

7. " கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே."

இஃது எப்பாவின் துறைக்கு உதாரணம் ?

8. வஞ்சித்துறைக்கும் வஞ்சித்தாழிசைக்கும் உள்ள வேறுபாடு யாது ?

# VI. அணி

## 1. பிறிது மொழிதல் அணி

"உண்ணிலவு நீர்மைத்தாய் ஓவாப் பயன் சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே
ஓங்கியதோர் சோலை யுளது."

இச்செய்யுள் ஒரு வள்ளலுக்கும் ஒரு சோலைக்கும் பொருந்தும்படி அடையைப் பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழியப்பட்டுள்ளது.

(1) மனத்தில் நல்ல குணமுடையதாய், பலர்க்கும் உதவிசெய்து அருளுடையதாகி விரிந்த முகத்தையும் கண்ணோட்டத்தையும் உடையதாய், பிரிதற்கரிய சாயலோடு கூடி நிற்பது என ஒரு வள்ளல்மீது ஏற்றிப் பொருள் உரைக்கலாம்.

(2) நடு உண்டாகிய நீரை யுடையதாய், மாறாது பல வளங்களைக் கொடுத்து வண்டுகளைத் தாங்கிய குளிர்ந்த மலர்களை யுடையதாய், மதுச்சோர்ந்து நிழல் உடையதாய் ஓங்கி நிற்பது என ஒரு சோலைக்குப் பொருள் கூறலாம்.

இவ்வாறு கவி தான் கருதிய பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வேறொன்றைச் சொல்லுதல் பிறிது மொழிதல் என்னும் அணியாகும்.

## 2. கருத்துடை அடைகொளி அணி

" தேவர்க்கு மரிய ரூருந் தேவனே யன்ப ராவார்
யாவர்க்கு மெளிய ரூரு மீசனே வேந்த ரூனைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலியாளாய்
ஏவற்செய் வாரைக் காணே னேழையே னினியென் செய்கேன்."

இச்செய்யுளில், கூலியாள் கிடைக்கப் பெருத வந்தி என்ற கிழவி சிவபெருமானை வேண்டிக் கொள்வது கூறப்படுகிறது.

இச்செய்யுளில் நான்காவது அடியைக் கவனிக்க: வந்தி தன்னை 'ஏழையேன்' என்கிருள். இதனில், "தனக்குச் செல்வம் இருக்குமானுல், அதனைக் கொண்டு எளிதில் ஒரு கூலியாளை வருவித்துக்கொள்ளலாம்; அச்செல்வம் இல்லாது காரணத்தால் அல்லவா துன்பப்பட வேண்டியுள்ளது," என்ற கருத்துப் பொதிந்துள்ளது காணப் படும். அதனுல் இது கருத்துடை அடைகொளி அணி எனப்படும்.

# VII. பொருள் இலக்கணம்

ஐந்தாம் படிவத்தில் அகப்பொருள், புறப்பொருள் பற்றிய செய்திகள் சில கூறப்பட்டன அல்லவா? அவற்றை நினைவிற் கொண்டு, கீழ்வரும் விவரங்களைக் கவனியுங்கள்.

## 1. அகப்பொருள்

அகப்பொருள் இலக்கணத்தில் மூவகைப் பொருள்கள் கூறப்பட்டுள. அவை (1) முதற்பொருள், (2) கருப்பொருள், (3) உரிப் பொருள் என்பன. அவை பற்றிய சில விவரங்களை இங்குக் காண்க.

### (1) முதற் பொருள்

நிலமும் பொழுதும் முதற் பொருளென்று சொல்லப்படும்.

1. நிலம்—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவகைப்படும்.

(1) குறிஞ்சி—மலையும் மலைசார்ந்த இடமும்

(2) முல்லை—காடும் காடுசார்ந்த இடமும்

(3) பாலை—முல்லையும் குறிஞ்சியும் திரிந்த பொட்டல் வெளி

(4) மருதம்—வயலும் வயல்சார்ந்த இடமும்

(5) நெய்தல்—கடலும் கடல்சார்ந்த இடமும்

2. பொழுது—(1) பெரும்பொழுது (2) சிறு பொழுது என இருவகைப்படும்.

(1) பெரும்பொழுது ஓராண்டிற்குரிய ஆறு பருவங்கள். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி,

இளவேனில், முதுவேனில். ஒவ்வொரு பெரும் பொழுதும் இரண்டு மாதகால அளவையுடையது.

(2) சிறுபொழுது—(1) வைகறை, (2) காலை, (3) நண்பகல், (4) எற்பாடு, (5) மாலை (6) யாமம் என ஆறு வகைப்படும்.

(1) வைகறை - விடியற்காலம் ; (2) நண்பகல் உச்சிப்பொழுது ; (3) எற்பாடு - சூரியன் மறையும் பொழுது ; (4) மாலை - நிசியின் முன்னும் எற் பாட்டின் பின்னுமுண்டாகிய காலம் ; (5) யாமம் - இடையிரவு.

1. கூதிர், முன்பனி என்னும் பெரும்பொழுது களும் யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சித் திணைக்கு உரிய பொழுதுகள்.

2. வேனில், பின்பனி என்னும் பெரும் பொழுதுகளும் நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைத்திணைக்கு உரியவை.

3. கார் காலமும் மாலைக் காலமும் முல்லைத் திணைக்கு உரிய பொழுதுகள்.

4. ஆறு பெரும்பொழுதுகளும் விடியற் கால மும் மருதத்திற்கு உரிய பொழுதுகள்.

5. ஆறு பெரும் பொழுதுகளும் எற்பாடு என்னும் சிறுபொழுதும் நெய்தற்கு உரி பொழுதுகள்.

இவ்வாறு விரித்துரைக்கப்பட்ட ஐவகை நிலங் களும் பெரும்பொழுதுகள் ஆறும் சிறுபொழுதுகள் ஆறும் அகப்பொருள் இலக்கணத்தில் முதற் பொருள் என்று சொல்லப்படும்.

## (2) கருப்பொருள்

ஒவ்வொரு நிலத்திலும் உள்ள (1) தெய்வம், (2) உயர்ந்தவர், (3) தாழ்ந்தவர், (4) பறவை, (5) விலங்கு, (6) ஊர், (7) நீர், (8) பூ, (9) மரம், (10) உணவுப் பொருள்கள், (11) பறை, (12) யாழ், (13) பண், (14) தொழில் என்னும் 14 வகையின கருப்பொருள் எனப்படும்.

**1. குறிஞ்சிக் கருப்பொருள்—**

தெய்வம் - முருகன் ; உயர்ந்தோர் - பொருப்பன், சிலம்பன், வெற்பன், கொடிச்சி, குறத்தி ; தாழ்ந்தோர் - குறவர், கானவர், குறத்தியர் ; பறவை - கிளி, மயில் ; விலங்கு - புலி, கரடி, யானை, சிங்கம் ; ஊர் - சிறுகுடி ; நீர் - அருவி நீர், சுனை நீர் ; பூ - வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட் பூ ; மரம் - சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் ; உணவு - மலை நெல், மூங்கில் அரிசி, தினை ; பறை - தொண்டகப்பறை ; யாழ் - குறிஞ்சி யாழ் ; பண் - குறிஞ்சிப் பண் ; தொழில் - வெறியாடல், மலை நெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.

**2. பாலைக் கருப்பொருள்—**

தெய்வம் - துர்க்கை ; உயர்ந்தோர் - விடலை, காளை, மீளி, எயிற்றி ; தாழ்ந்தோர் - எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் ; புள் - புறா, பருந்து, எருவை, கழுகு ; விலங்கு - செந்நாய் ; ஊர் -

குறும்பு ; நீர் - நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு ; பூ - குராஅப்பூ, மராஅப்பூ ; மரம் - உழிஞை, பாலை, ஓமை, இருப்பை ; உணவு - வழிப்பறி பொருள், பதியிற் கவர்ந்த பொருள் ; பறை - துடி ; யாழ் - பாலையாழ் ; பண் - பஞ்சுரம் ; தொழில் - போர் செய்தல், பகற் சூறையாடுதல்.

3. முல்லைக் கருப்பொருள்—

தெய்வம் - திருமால் ; உயர்ந்தோர் - குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி ; தாழ்ந்தோர் - இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் ; புள் - காட்டுக் கோழி ; விலங்கு - மான், முயல் ; ஊர் - பாடி ; நீர் - குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர் ; பூ - குல்லைப் பூ, முல்லைப் பூ, தோன்றிப் பூ, பிடவம் பூ ; மரம் - கொன்றை, காயா, குருந்தம் ; உணவு - வரகு, சாமை, முதிரை ; பறை - ஏறங்கோட் பறை ; யாழ் - முல்லையாழ் ; பண் - சாதாரி ; தொழில் - சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல், அவற்றை அரிதல், கடா விடுதல், கொன்றைக் குழலூதல், கால் நடைகளை மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல்.

4. மருதக் கருப்பொருள்—

தெய்வம் - இந்திரன் ; உயர்ந்தோர் - ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி ; தாழ்ந்தோர் - உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் ; புள் - வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா ; விலங்கு - எருமை, நீர்நாய் ; ஊர் - பேரூர், மூதூர் ; நீர் - யாற்று நீர், கிணற்று

நீர் குளத்து நீர் ; பூ - தாமரைப் பூ, கழுநீர்ப் பூ, குவளைப் பூ ; மரம் - காஞ்சி, வஞ்சி, மருதம் ; உணவு - செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி ; பறை; நெல்லரி கிணை, மண முழவு ; யாழ் - மருதயாழ் ; பண் - மருதப்பண் ; தொழில் - விழாச் செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளங் குடைதல், புது நீராடல்.

5. நெய்தற் கருப்பொருள்—

தெய்வம் - வருணன் ; உயர்ந்தோர் - சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி ; தாழ்ந்தோர் - நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் ; புள் - கடற்காகம் ; விலங்கு - சுறுமீன் ; ஊர் - பாக்கம், பட்டினம் ; நீர் - உவர் நீர்க்கேணி, கவர் நீர் ; பூ - நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பப்பூ ; மரம் - கண்டல், புன்னை, ஞாழல் ; உணவு - மீன், மீனையும் உப்பையும் விற்றுப்பெற்ற பொருள்கள் ; பறை - மீன்கோட்பறை, நாவாய்ப் பம்பை ; யாழ் - விளரியாழ் ; பண் - செவ்வழிப்பண் ; தொழில் - மீன் பிடித்தல், உப்புண்டாக்கல், அவை விற்றல், மீனுணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல்.

## (3) உரிப்பொருள்

மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு நிலத்துக்கும் உயிர்நாடியாக உரிமை பூண்டு நிற்கும் பொருள் உரிப்பொருள் எனப்படும்.

| நிலம் | | உரிப்பொருள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 2. | பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| 3. | முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 4. | மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 5. | நெய்தல் | புலம்பலும் புலம்பல் நிமித்தமும் |

## 2. புறப்பொருள்

### (திணைகள்—சுருக்கமாக)

பழந்தமிழர் போரிட்ட முறைகளைப் புலவர் ஏழு திணைகளாக வகுத்துள்ளனர். ஒவ்வொரு திணையிலும் பல துறைகள் கூறப்பட்டுள்ளன. அவ்வேழு திணைகளின் விவரங்களை ஒருவாறு ஈண்டுக் காண்க

1. பகைவர் நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் வேற்றரசன் தன் வீரர்களை முதலில் ஏவி அந்நாட்டுக் கால்நடைகளைக் (படையெடுப்புப் போரில் அவை இறந்து படாமலிருக்க வேண்டுமென்னும் கருத்தால்) கைப்பற்றுவது வழக்கம். இது வெட்சித் திணை எனப்படும். இப்போருக்குரிய வீரர் வெட்சிப் பூவைச் சூடிக்கொள்ளுதல் மரபு.

2. கால்நடைகளைக் கைப்பற்ற வந்த வீரர்களை அந்நாட்டு வீரர்கள் எதிர்த்துப் போரிடலும், கால்நடைகளை மீட்டுக்கொண்டு வருதலும் கரந்தைத் திணை எனப்படும். இப்போருக்குரிய வீரர் கரந்தைப் பூவைச் சூடிக்கொள்ளுதல் மரபு.

3. ஓரரசன் தன் மாற்றான்மேல் படையெடுத்துப் போதல் வஞ்சித்திணை எனப்படும். அவனும்

அவன் வீரரும் வஞ்சிப்பூவைச் சூடிக்கொள்ளுதல் மரபு.

4. படையெடுத்து வந்த அரசனைப் படையெடுக்கப்பட்ட அரசன் எதிர்த்தல் காஞ்சித்திணை எனப்படும். இப்போரில் ஈடுபட்டோர் காஞ்சிப் பூவைச் சூடுதல் மரபு.

5. அரசன் பகைவனது கோட்டைமதிலை வளைத்துப் போரிடலும், உள்நுழைய முயலுதலும் அம் முயற்சியில் போரிடலும் உழிஞைத்திணை எனப்படும். இம்முயற்சியில் ஈடுபட்டோர் உழிஞைப் பூவைச் சூடுதல் மரபு.

6. முற்றுகையிடப்பட்ட அரசனும் வீரரும் முற்றுகையிட்டோருடன் கோட்டைக்குள்ளிருந்த போர்புரிதல் நொச்சித்திணை எனப்படும். இப் போரில் ஈடுபட்ட வீரர் நொச்சிப்பூவைச் சூடுதல் மரபு.

7. இருதிறத்துப் படைகளும் பொருதல் தும்பைத்திணை எனப்படும். இதில் ஈடுபட்டவர் தும்பைப் பூவைச் சூடுதல் மரபு.

8. போரில் வெற்றிபெற்ற அரசனுடையதும் வீரரதுமாகிய வெற்றியைச் சிறப்பித்துப் பாராட்டுதல் வாகைத்திணை எனப்படும். வெற்றி கொண்டாடுவோர் வாகைப்பூவை அடையாளமாகச் சூடிக் கொள்ளுதல் மரபு.

நீங்கள் தொல்காப்பியப் புறத்திணை இயலிலும், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலிலும், இத்திணைகளைப் பற்றிய விவரங்களையும் இவற்றின் உட்பிரிவுகளாகிய துறைகளைப் பற்றிய செய்திகளையும் நன்கறியலாம். அவற்றைப் படித்துப் பயன்

பெறுக; போர்ச்செயல்களுக்கும் இலக்கணம் வகுத்த நம் முன்னோரின் அறிவு ஆற்றல்களை எண்ணி மகிழ்க.

### பயிற்சி

1. முதற்பொருள் என்பன யாவை? விளங்கக் கூறுக.
2. கருப்பொருள் என்பன இன்னவை எனக் கூறுக.
3. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்கள் எவை?
4. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் யாவை?
5. ஒவ்வொரு திணைக்கும் உரிய யாழ் எது? பண் எது?
6. ஒவ்வொரு திணைக்கும் உரிய தெய்வம் யாது?
7. ஒவ்வொரு திணைக்கும் உரிய உரிப்பொருள் யாது?
8. போருக்குரிய ஏழு திணைகள் எவை?
9. போர்திணைகளின் துணையைக்கொண்டு பண்டைக் காலப் போர் முறைகளை விளக்குக.

## தேர்வுக்குரிய வினாக்கள்

1. ஐகாரக் குறுக்கம் என்பது யாது? உதாரணத்தால் விளக்குக.

2. தனி ஔகாரத்துக்கும், 'மௌவல்' என்பதிலுள்ள ஔகாரத்துக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

3. " மருளினும் எல்லாம் மருண்ம் "
" தரும் வளவன் "
இவற்றிலுள்ள மகரத்திற்கும் தனி மகரத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

4. ஆய்தக் குறுக்கம் என்பதனை நன்கு விளக்குக.

5. ஆ, ஊ, ஈ, க, த, ப, ய, ழ, ள, ல, ற—இவை எவ்வாறு பிறக்கும்?

6. ண, ன—இவை எவ்வெவ்வெழுத்துக்களோடு மயங்கும்?

7. உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் — இவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

8. ஓரெழுத்தொரு மொழி என்பது யாது? அவற்றுள் ஆறினைக் கூறிப் பொருள் கூறுக.

9. இலக்கணை என்பதனை உதாரணத்தால் தெளிவுறுத்துக.

10. ஐகார ஈற்றுப் பொதுப் பெயர் விளி வேற்றுமையில் அடையும் மாறுதல்களைக் கூறுக.

11. கீழ்வரும் முதல் வேற்றுமைப் பெயர்கள் விளிவேற்றுமையில் எவ்வாறு வரும் என்பதனை எழுதிக் காட்டு.

நம்பன், ஐயன், வாயிலான், குழையாள், அடிகள், தமர், தோன்றல், சேய்.

12. கீழ்வரும் அஃறிணைப் பெயர்களும் விரவுப் பெயர்களும் விளிவேற்றுமையில் அடையும் மாறுதல்களைக் கூறுக:—

அலவன், சாத்தன், கிளிகள், மக்கள்.

13. ஆண்பாற் பெயர் விகுதிகள் எவை?

14. அரசி, பிறர், நல்லன, நல்லவை—இவை எவ்வெப்பால் பெயர் விகுதிகள்?

15. பலர்பால் வினைமுற்றுக்கள் எவை?

16. ஒன்றன்பால் வினைமுற்றுக்கள் யாவை?

17. சினைவினை, முதல்வினை, ஆக்கவினை—இவற்றை உதாரணங்களால் தெளிவுறுத்துக.

18. அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள் எப்பொருள்களில் வரும்? உதாரணம் தருக.

19. முன்னிலை அசைச் சொற்கள் யாவை?

20. இடைப்பிறவரல் என்பதை நன்கு விளக்குக.

21. அறுவகை வினாக்கள் யாவை?

22. உடம்பு நொந்தது, உடம்பு நோகும், மற்றையது செய்வேன்—இவை எவ்வகை விடைகள்?

23. 'அடைமொழி' எவற்றை உணர்த்தி நிற்கும்? உதாரணம் தருக.

24. எண்வகைப் பொருள்கோள்கள் எவை? அவற்றுள் ஒன்றினை விளக்கி, உதாரணம் தருக.

25. 'ண்', 'ன்'—இவற்றின் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வந்தால் எவ்வாறு புணரும்? உதாரணம் தருக.

26. கீழ்வருவனவற்றைப்புணர்த்தி விதி கூறுக:—
அவ் + கடிய, அவ் + யாவை, இ + யானை,
அ + இடை, அது + சிறிது, எ + யானை.

27. செய்யுள் விகாரங்கள் ஆறினையும் உதாரணம் தந்து விளக்குக.

28. மரையிதழ், ஓதிமுதுபோத்து, நீலுண்துகிலிகை—இவை எவற்றிற்கு உதாரணங்களாகத் தரப்பட்டன?

29. சேர்த்து விதி கூறுக:—நின் + புறம்காப்ப, மண் + சுமப்பாய், மகன் + பெற்றான்.

30. ஒவ்வொரு பாவுக்கும் உரிய சீர், அல்லது சீர்கள் எவை?

31. " நாட்டந் தடுமாறச் செய்வாய் நலந்திகழத்
தீட்டறிய பாவை திரு முகம்—காட்டுமால்
கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர
வண்டுசூழ் செந்தா மரை."

(1) இவ்வெண்பாவிலுள்ள சீர்களைப் பிரித்து வாய்பாடு கூறுக.

(2) இதில் அமைந்துள்ள தளைகளைச் சுட்டுக.

(3) நேரடிக்கும் சிந்தடிக்கும் இச்செய்யுளிலிருந்து உதாரணம் தருக.

32. எண்வகை எதுகைத் தொடைகளைக் கூறுக.

33. எண்வகை மோனைகளின் பெயர்களைக் கூறி, எவையேனும் இரண்டிற்கு உதாரணம் தருக.

34. கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் யாது? செய்யுள் தந்து விளக்குக.

35. வெண்டாழிசை, ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை—இவற்றின் இலக்கணம் கூறுக.

36. வெளிவிருத்தத்திற்கும் கலிவிருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

37. பிறிதுமொழிதலணியை உதாரணத்தால் விளக்குக.

38. ஐவகை நிலங்களுக்குமுரிய பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகளைக் கூறுக.

39. ஐவகை நிலங்களுக்குமுரிய ஊர், யாழ், பண், பறை யாவை?

40. போருக்குரிய திணைகள் ஏழினை விளக்கி வரைக.